A496

# யாழ்ப்பாண இராச்சியம்

## ஒரு சுருக்க வரலாறு



**சி. பத்மநாதன்**

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

A. 496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AH 96

வி. சிவசாமி.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# யாழ்ப்பாண இராச்சியம்

## ஒரு சுருக்க வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# யாழ்ப்பாண இராச்சியம்

## ஒரு சுருக்க வரலாறு

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

11767.5.C

சி. பத்மநாதன்
முன்னாள் வரலாற்றுத் துறை பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் & பேராதனைப் பல்கலைக்கழகம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு
கலாநிதி சி. பத்மநாதன் எழுதியது ©

பதிப்பு: 2011

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550 மி. அஞ்சல்: kumbhlk@gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06

Kingdom of Jaffna : A Concise History
by Dr. S. Pathmanathan

2011 © S. Pathmanathan

Published by Kumaran Book House
No. 39, 36th Lane, Colombo -06, Tel. - 011 2364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
No. 39, 36th Lane, Colombo -06

வெளியீட்டு எண்: 495

ISBN 978-955-659-308-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

'யாழ்ப்பாண இராச்சியம் : ஒரு சுருக்க வரலாறு' என்னும் இந்நூல் ஒரு தொகுப்பு நூல். அதன் நூலாசிரியரான பேராசிரியர் சி.பத்மநாதன் வெவ்வேறு காலங்களில் எழுதிய ஆறு கட்டுரைகள் இதில் அடங்கி யுள்ளன.

நவீன கால வரலாற்று ஆய்வு நெறிமுறைகளுக்கமைந்த புலமை நோக்கில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை இந்நூலாசிரியரே முதன் முதலாக எழுதினார். அதன் பயனாக லண்டன் பல்கலைக்கழகம் அவருக்கு 1969 இலே கலாநிதிப்பட்டம் வழங்கியது. ஆங்கிலத்தில் எழுதிய அந்நூல் 1978ஆம் வருடம் வெளியிடப்பட்டது. ஆரியச்சக்கர வர்த்திகள் காலத்து யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாக முறை பற்றியும் அந்த இராச்சியத்திற்குச் சிறப்பாகவுள்ள நாணய முறை பற்றியும் விரிவான கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். இப்பொழுது அவை யாவும் கிடைத்தற்கரிதாகி விட்டன.

இந்நூலில் அடங்கிய கட்டுரைகள் இங்கு இதுவரை குறிப்பிட்டன வற்றிலிருந்து வேறுபட்டனவாகும். இந்நூலின் பிரதானமான பகுதியான யாழ்ப்பாண இராச்சியம் என்னும் ஐந்தாம் இயல் எமது வெளியீடான 'இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்' என்னும் நூலில் (2002) ஒரு பகுதியாக அமைந்தது. அதில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை மிகச் சுருக்கமாகவும் அதன் அரசியல், பொருளாதார முறைகளைச் சற்று விரிவாகவும் ஆசிரியர் விளக்கியுள்ளார். போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் ஆவணங்களிலுள்ள குறிப்புகள் பொருத்தமான இடங்களிலே பயன்படுத்தப்பட்டுள்ளன.

'இலங்கையிற் சைவசமயம்: ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் 1250- 1600' என்பது இந்நூலின் ஆறாவது இயலின் தலையங்கம். அது 'சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்' என்ற பெயரிலே தங்கம்மா அப்பாக்குட்டி மலரில் வெளிவந்த (1985) கட்டுரையின் மறுபிரசுர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும். இக்கட்டுரையில் யாழ்ப்பாண இராச்சியத்தில் ஏற்பட்ட சமய, இலக்கிய வளர்ச்சிகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் உற்பத்தி பற்றிய முன்னைய கருத்துகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பது பேராசிரியரின் சிந்தனையாகும். பொலன்நறுவை இராசதானியின் வீழ்ச்சியோடு ஒரு மத்தியமயமான ஆட்சி முறையின் அழிவில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி இராச்சியங்களும் எழுச்சி பெற்றன என்ற கருத்தை இப்பொழுது முற்றாக நிராகரிக்கும் ஆசிரியர் பூர்வீக காலம் முதலாக ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்களும் அவை தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார முறைகளும் அவற்றின் எழுச்சிக்கு அடிப்படையானவை என்ற சிந்தனைக்கு இந்நூலில் வலி சேர்க்கின்றார். இரண்டாவது முதல் நான்காவது வரையான அத்தியாயங்கள் அந்தப் பின்னணி பற்றியவை.

இரண்டாம் அத்தியாயம் கி.மு. முதல் ஐந்து நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுபற்று, பூநகரிப் பிரதேசம் ஆகியவற்றிலே பெருங்கற் பண்பாடு பரவியமை, ஆதியான குடியிருப்புகள் தோன்றியமை, கந்தரோடை மத்திய வியாபார நிலையமாகி நகரமாக வளர்ச்சி பெற்றமை போன்றன பற்றியதாகும். மூன்றாம் இயல் நாக நாடு என்னும், அரசு எழுச்சி பெற்றமை, அங்கு சைவம், பௌத்தம் ஆகியன பரவியமை, அவற்றால் ஏற்பட்ட பன்னாட்டுப் பண்பாட்டு தொடர்புகள் என்பனவற்றை விளக்கும் பாங்கில் அமைந்துள்ளது. நான்காம் இயலில் பெருமளவிலே கிடைத்துள்ள நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு, பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் இடையிடையே அரசர்கள் தோன்றி ஆட்சி புரிந்துள்ளனர் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய சிந்தனை மரபில் ஒரு திருப்பமாக இந்நூல் அமைகின்றது. இதிற் புதிய சிந்தனைகள் சான்றாதாரங்களுடன் நிறுவப்படுகின்றன. இத்தகைய சிறப்புவாய்ந்த இந்நூலை வெளியிடுவதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

- குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பதிப்புரை | v |
| 1. அறிமுகம் | 1 |
| 2. தொல்லியலும் பூர்வீக வரலாறும் | 18 |
| 3. நாகநாடும் அதன் சமயநெறிகளும் | 45 |
| 4. யாழ்ப்பாணத்தில் அரச பாரம்பரியம் | 72 |
| 5. யாழ்ப்பாண இராச்சியம் | 103 |
| 6. இலங்கையில் சைவ சமயம்: ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் (1250-1620) | 165 |
| பின்னிணைப்பு யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள்: குல விருதுகளும் சின்னங்களும் | 187 |
| உசாத்துணை | 195 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# அறிமுகம்

இலங்கையின் தூர வடக்குப் பகுதியான யாழ்ப்பாணக் குடாநாடு புவியியல் அடிப்படையிலே தனிப்பண்புகளைக் கொண்ட ஒரு நிலப்பகுதியாகும். அதன் தென்பால் அமைந்த கடலேரி யாழ்ப் பாணக்குடாநாட்டை இலங்கையின் பெருநிலப் பரப்பிலிருந்தும் பிரிக்கின்றது. அது ஆனையிறவில் ஒரு மிகவும் சிறிய ஒடுக்கமான நிலப்பகுதியின் மூலம் தெற்கிலுள்ள நிலங்களோடு தரைவழியாக இணைந்துள்ளது. இக்குடாநாடு கடலினாற் சூழப்பட்டுள்ளதால் அங்கு காணப்படும் சுவாத்திய நிலைகள் இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளவற்றிலிருந்து குறிப்பிடத்தக்களவிலே வேறுபட்டதாகும். பகல் வேளையில் வெப்பம் மிகுந்துள்ள காலப்பகுதியிலும் இராக்காலம் குளிர்ச்சியாகவிருக்கும். இலேசான குளிர்ச்சியான கடற்காற்று வீசு வதால் இந்நிலை ஏற்படுகிறது. ஆறுகள் இல்லாத பொழுதிலும் நில மட்டத்தின் கீழ் முருகைக் கற்பாறைகளிலே படிந்திருக்கும் நீரினைப் பயன்படுத்திக் கொள்வதால் செறிவான குடியிருப்புகள் ஆதி வரலாற்றுக் காலம் முதலாக அங்கு அமைந்திருந்தன. கிணறுகள் மூலமாக நீரினைப் பெற்றுப் பயன்படுத்தும் முறையினை அங்கு குடியேறிய ஆதி வாசிகள் உருவாக்கினார்கள். தோட்டப் பயிர்ச்செய்கைக்கு வேண்டிய மட்டுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத்துக்கும் அம்முறை ஆதாரமாய் அமைந்தது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் அதனையடுத்துள்ள தீவுபற்றிலும் ஆண்டுதோறும் சராசரி 50 அங்குல மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. வட கிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் காலத்தில் வருடத்தின் இறுதியான மூன்று மாதங்களிலும் போதிய மழை பெய்வதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்பயிர்ச்செய்கை அங்கு வாழும் மக்களின் பிரதானமான ஒரு தொழிலாகிவிட்டது. ஏறக்குறைய மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு மழை வெள்ளம் தேங்கி நிற்கும் வகையிலே பள்ளமான வயல்களைப் புராதன காலங்களில் உருவாக்கினார்கள். நெல்லுற்பத்தி போதாமை யால் மேட்டுநிலங்களிலும் தோப்புகளிலும் வரகு, தினை, சாமை, குரக்கன் முதலிய தானியங்களை உற்பத்தி செய்தனர். நெல்வயல் களைப் புலம் என்றும் மேட்டு நிலங்களைப் பிட்டி என்றும் குறிப்பிடுவது நெடுங்கால வழமை.

பனை மரங்கள் இப்பிரதேசத்திலே இயற்கையாகவே பெருமளவில் உற்பத்தியாகின. பனம் பொருட்கள் அண்மைக்காலம் வரை இப்பிரதே சத்தில் வாழ்ந்த மக்களின் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெற்றி ருந்தன. உணவுப் பொருட்கள், வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள், வீட்டுப்பாவனைக்கும் வயல் வேலைகளுக்கும் பொதுப் பணிகளுக்கும் வேண்டிய உபகரணங்கள், பாவனைப் பொருட்கள் முதலியன அத்தகையனவாகும். வரட்சிக் காலங்களில் பனையோலை மந்தைகளுக்குத் தீனியாகப் பயன்படுத்தப்பட்டது. வீடு, வேலி என் பவற்றின் பழவோலைகளை தோட்ட நிலங்களிலும் வயல்நிலங் களிலும் உரமாகப் பயன்படுத்தினார்கள். பனை மரங்கள் நிறைந்த நாடு என்பதால் ஈழம் என்ற பெயர் உருவாகியது. காலப்போக்கில் இலங்கை முழுவதையும் அப்பெயர் குறித்தது.

யாழ்ப்பாணம் தீவுபற்று என்பவற்றைச் சூழ்ந்த கடற்பரப்பு மீன் வளம் நிறைந்த பகுதி. அதனால், இப்பிரதேசத்தவரிடையே வேளாண் மைக்கு அடுத்த பிரதான தொழிலாக மீன்பிடித் தொழில் மரபு வழியாக இடம்பெற்றுள்ளது. கப்பல் கட்டுதல், கப்பலோட்டுதல் ஆகிய தொழில் களும் பழங்காலம் முதலாக வளர்ச்சியடைந்தன.

இலங்கைப் பிரதேசங்களில் மன்னாரைப் போல யாழ்ப்பாணமும் தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் அமைந்த பகுதியாகும். அதனால் பண்பாட்டு உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் தென் னிந்தியச் செல்வாக்கு, குறிப்பாகத் தமிழகத்தின் செல்வாக்கு, மிகுந் தளவில் ஏற்படுவது இயல்பாகும். அந்தச் செல்வாக்கு படையெடுப்புக் களினால் ஏற்படவில்லை. படையெடுப்புக்கள் பெரும்பாலும் மாதோட்டம் வழியாக நிகழ்ந்தவை. அவை அநுராதபுரம், பொலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னறுவை ஆகிய இராசதானிகளின் மீது ஏற்பட்டவை. இலங்கையிலே தமிழர் வாழும் வட,கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட தமிழர் குடியிருப்புகள் தென்னிந்தியப் படையெடுப்புகளின் விளைவானவை என்ற கருத்து நவீன கால இலங்கை வரலாற்றில் ஏற்பட்டுள்ள தடுமாற்றமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட புராதன குடியேற்றங்களைப் பற்றித் தமிழ் நூல்களிலோ மகாவம்சத்திலோ எதுவிதமான குறிப்புகளும் இல்லை. தொல்பொருள் அகழ்வாய்வுகள் கந்தரோடையில் 1967ஆம் ஆண்டில் நடைபெற்றமைக்கு முன்பு எதுவிதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. ஆயினும் விமலா பெக்லியின் தலைமையிற் பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகத்து அருங்காட்சியகத்தினர் நடத்திய அகழ்வாய்வுகளின் பயனாகத் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மக்களே கந்தரோடையின் ஆதியான குடியிருப்புகளை உருவாக்கினார்கள் என்பது தெளிவாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழத்து வரலாற்றுத்துறையினர் 1980இல் ஆனைக்கோட்டையில் நடத்திய அகழ்வாய்வுகளும் பொன்னம்பலம் இரகுபதி கந்தரோடை, காரைநகர், வேலணை, நாகர்கோயில், மண்ணித்தலை போன்ற இடங் களிலே மேற்கொண்ட மேலாய்வுகளும் இதனை மேலும் உறுதி செய்தன. அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் தீவு பற்றினதும் ஆதியான குடியிருப்புகள் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மக்களோடு தொடர்புடையவை என்ற வரலாற்றுண்மை வெளிப்பட்டது. இங்குள்ள ஆதியான குடியிருப்புகள் இற்றைக்கு 2,400 வருடங் களுக்கு முன் உருவானவை என்பது தெரியவந்துள்ளது. இந்த வருடம் (2011) கந்தரோடையிலும் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலும் முறைப் படியான தொல்லியல் அகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றிலே பெருமளவிலான தொல்பொருட் சின்னங்கள் கிடைத் துள்ளன. இவற்றின் மூலம் முன்னைய அகழ்வாய்வுகளின் விளைவாக ஏற்பட்ட கருத்துகள் மேலும் வலுப்பெறுகின்றன. கந்தரோடையில் ஏற்பட்ட குடியேற்றத்தின் உற்பத்தி மேலும் இரண்டு நூற்றாண்டு களினாற் (கி.மு. 2400) பின் தள்ளப்படுகின்றது. அது ஒரு பெரு நகரமாகிவிட்டது என்பது தெரிய வந்துள்ளது. அது வியாபார மத்திய நிலையமென்ற வகையிற் சர்வ தேசப் பரிமாணத்தை கொண்டிருந்தமை தெரியவந்துள்ளது. அதனையடுத்து, அதற்கு நிகரான நகரமொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியானமை கோட்டையில் நடைபெற்றுள்ள அகழ்வுகளின் மூலம் உணரப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தீவுபற்றிலும் ஆதியான குடியேற்றங் களைப் பெருங்கற் பண்பாட்டு மக்களே ஏற்படுத்தினார்கள். விவ சாயமும், தொழில்முறைகளும், கடல்வளங்களைப் பயன்படுத்தும் முறைகளும் வளர்ச்சியடைவதற்கு அவர்களே பொறுப்பாகவிருந்தனர். பயிர்ச்செய்கை முறையும் நிலங்களை, அவற்றின் வளங்களுக்கு ஏற்ப வகைப்படுத்திப் பயன்படுத்தும் முறையும் வாணிபமும் வளர்ச்சி யடைந்தன என்பதை இப்பொழுது தொல்லியற் சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது. கரையோரங்களில் மீன் பிடித்துறைகளும் கடல் வழிப் பிரயாணங்களில் ஏற்படும் வணிகக் கப்பல்கள் வந்து பொருட் களைக் தரையிறக்கிவிட்டு செல்லக்கூடிய துறைமுகங்களும் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட சில நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்து விட்டன.

அக்காலத்தில் யாழ்ப்பாணக் கரையோரங்களிலும் தீவு பற்றினைச் சூழ்ந்த கடற்பரப்பிலும் பெருமளவிற் சங்குகள் உற்பத்தியாகின. இந்திய துணைக்கண்டத்தின் பல பகுதிகளிற் சங்கினைச் சில தேவை களுக்குப் பயன்படுத்தினார்கள். அதை ஒரு மங்கலப் பொருளாகக் கருதியமையால் வீடுகளிலும் கோயில்களிலும் சங்கினைப் புனித சின்னமாக வைத்திருந்தனர். ஆராதனைகளிலும் சமய விழாக்களிலும் சங்கூதுவது ஒரு உபசாரமாகியது. படைகள் போருக்கு ஆயத்தமாகி அணிவகுத்துச் செல்லும்போது முரசமும் சங்கநாதமும் ஒலித்தன. குருஷேத்திரப் போரில் கிருஷ்ணரும் அருச்சுனனும் முறையே பாஞ்ச சன்னியம், தேவதத்தம் ஆகிய சங்குகளை ஒலித்தனர். ஆந்திர தேசத்துப் புராதனமான பௌத்தப் பள்ளிகளின் தலங்களிலே சாசனம் எழுதிய வலம்புரிச் சங்குகள் சில கிடைத்துள்ளன. பாரத தேசத்திலே சங்கவளை, சங்கவடம் போன்ற ஆபரணங்களை ஆண்களும், பெண் களும் அணிவது வழக்கம். அஜந்தா ஓவியங்களில் இவை போதிசத்து வரதும் பிறரதும் சிறப்பான ஆபரணங்களாக விளங்குகின்றன. சங்கு களை ஏற்றுமதி செய்வதன் மூலமாக அதிக வருமானங் கிடைத்தது. வாணிபத்தின் மூலம் செல்வம் பெருகுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. காவிரிப்பூம் பட்டினத்தில் இறக்குமதியான அரும்பொருட் களில் ஈழத்துணவு பற்றியும் சொல்லப்படுகின்றது. கடியலூர் உருத்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனாரின் காலத்தில் ஈழம் என்பது இலங்கையின் வடபகுதியினை மட்டுமே குறித்ததென்று கருத இடமுண்டு. உணவுப்பொருட்களாகிய பனங்கட்டி, கற்காரம் போன்றவற்றை அவர் ஈழத்துணவு என்று குறிப்பிட்டிருக்கலாம்.

ஈழம் என்னும் பெயர் எவ்வாறு உருவாகியதென்பது இங்கு கவனித்தற்குரியது. அது இலங்கையினைக் குறிக்கும் பெயராகத் தமிழ் மொழியில் வழங்குவது. கி.பி. முதலாம் நூற்றாண்டிற்கு உரியதான பட்டினப்பாலையில் அதனைப் பற்றிய முதலாவது குறிப்பு வருகின்றது. எனவே, அந்நூல் எழுதப்பட்ட காலத்தில் ஈழம் என்னும் நாட்டுப் பெயர் தமிழகத்தில் நன்கு அறிமுகமாகிவிட்டது என்று கொள்ள முடிகின்றது. தமிழ்சாசன வழக்கில் பல்லவர் காலத்திலேயே ஈழம் பற்றிய மிகப் பழைய குறிப்பு வருகின்றது. அது ஈழம்பூட்சி என்ற கூட்டுமொழியில் இடம்பெறுகின்றது. ஈழம்பூட்சி என்பது ஒரு வகையான வரி. அது கள்ளினை உற்பத்தி செய்வோர் மீதான வரி. அவர்களை ஈழவர் என்று குறிப்பிட்டனர். 'தெங்கும் பனையும் ஈழவர் ஏறப்பெறாதாராகவும்' என்று சில நிலமானியங்கள் தொடர்பாகச் சாசனங்களிற் குறிப்புண்டு. அண்மையில் மேனாட்டுப் பேராசிரியர் ஒருவர் ஈழம் என்னும் பெயர் பற்றி மேற்கொண்ட ஆழமான ஆய்வின் மூலம் அது தமிழ் மொழிப்பெயர் என்பதும் பனையோடு தொடர்புடையது என்பதும் தெளிவாகியுள்ளது. இந்தக் கருத்தினை நாம் 35 வருடங்களுக்கு முன்பு முன்வைத்தபொழுது தமிழ்ப் பேராசிரியர் சிலருக்கு அது நகைப்பிற்குரியதாக இருந்தது.

கடல்கோளினால் ஏழ்பனை நாடு என்னும் நிலப்பகுதி அழிந்து விட்டது என்ற கருத்து பழந்தமிழ் நூலாசிரியர் ஐதிகமாக அறிந்தவொரு விடயமாகும். எனவே, யாழ்ப்பாணத்திலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் பெருங்கற் பண்பாட்டு மக்கள் குடியிருப்புகளை ஏற்படுத்திய பொழுது அங்கு பனை மரங்கள் மிகுதியாகக் காணப்பட்டதால் அவற்றை ஈழம் என்று குறிப்பிட்டனர். சேது சமுத்திரம் என வழங்கும் கடற்பரப்பின் கரைகளிலும் வாழ்ந்தவர்கள் ஈழம் என்பதை ஒரு நாட்டுப் பெயராகப் பயன்படுத்தினார்கள் என்று கருதலாம்.

ஆதியில் ஏற்பட்டிருந்த குடியிருப்புகள் குறுநில அரசுகளாகி, அவை காலப்போக்கிலே நாகநாடு என்னும் பரந்த நிலப்பகுதியாகின. அதனைத் தமிழ் நூல்கள் நாகநாடு என்று குறிப்பிடுகின்றன. 'மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம்' அதனை நாகதீப என்று குறிப்பிடுகின்றது. அது ஒரு தனி அரசாக நிலைபெற்றது. மிகுந்தலையிலுள்ள கல்வெட்டொன்று அதன் அரசனைத் தீபராஜ என வர்ணிக்கின்றது. நாகநாட்டிலே பல தலை முறைகளாக அரசர் அரசு புரிந்தனர். பல்லவரும் புராதன காலத்துச் சோழரும் நாகநாட்டு அரசகுலத்தவரோடு மணத்தொடர்பு கொண்டிருந்தமை பற்றிய ஐதிகம் தமிழ் நூல்களிற் பதிவாகியுள்ளது. நாக வம்சத்தவர் வெளியிட்டுள்ள சில நாணயங்களும் கிடைத்துள்ளன.

இலங்கையின் பல பாகங்களில் நாகர் பரவியிருந்தனர். சிற்றரசுகள் பலவற்றின் உருவாக்கத்தில் நாகர் பங்குகொண்டிருந்தனர். ஆயினும் காலப்போக்கிலே தென்னிலங்கையில் இனக்கலப்பு, பண்பாட்டுச் சங்கமம், மொழிமாற்றம் என்பனவற்றின் மூலமாக நாகர் தங்கள் அடையாளங்களை இழந்தனர். வடக்குப் பகுதியில் மட்டும் அவர்களின் செல்வாக்கு நெடுங்காலம் நிலைபெற்றது. ஒரு கலப்புப் பண்பாடாகிய பெருங்கற்பண்பாட்டுச் சமூகத்தில் நாகர் ஒரு பிரதான பிரிவினராக இருந்திருக்க வேண்டும். தமிழ்மொழி வழங்கிய அச்சமூகத்தில் நாகரின் தனித்துவமான பண்புகள் காலப்போக்கில் மறைந்துவிட்டன. நாகநாட்டிலே பௌத்த சமயம் பரவத் தொடங்கியது. அது தேரவாதச் சார்புடையது என்று கருதப்படுகின்றது. அங்கு வளர்ச்சியுற்ற பௌத்த மரபில் ஆந்திர தேசத்துப் பௌத்த சமயச் செல்வாக்கு மிகுந்தளவில் ஏற்பட்டது. நாகநாட்டிலே பெருங்கற்பண்பாட்டுக்குரிய ஈமக்கல்லறைகளைப் பௌத்தசமய சிந்தனைகளின் அடிப்படையிற் சிற்றுருவத் தூபிகள் போல் மாற்றியமைத்தனர் என்பதற்குக் கந்தரோடையிற் செறிந்து காணப்படும் சிறிய தூபிகள் உதாரணமாகும். உருவத்தில் அவற்றைப் போன்ற சிறிய தூபிகள் இலங்கையில் வேறெங்கும் காணப்படுவதில்லை. அமராவதி, நாகார்ஜுன கொண்ட போன்ற ஆந்திரநாட்டுத் தலங்களில் மட்டுமே அவை காணப்படுகின்றன. உயிர் நீத்த சங்கத்தாரின் சடலங்களை அடக்கஞ் செய்த குழிகளின் மேலே கல்லறைகளுக்குப் பதிலாகத் தூபி போன்ற அமைப்பினை அமைத்தனர். அண்ட வடிவம் நிர்வாணத்தின் அடையாளமாகும்.

இவ்விடத்தில் அநுராதபுர இராச்சியத்திற்கும் நாகநாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் எவ்வாறிருந்தன? என்பதைக் கவனிப்பது அவசியமாகின்றது. அதனைப்பற்றிப் பேராசிரியர் இந்திரபாலா மேல் வருமாறு கூறுவார்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இலங்கையின்) தூர வடக்கிலுள்ள நிலப்பகுதியில், யாழ்ப்பாண மாவட்டம், வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகள் ஆகியனவற்றை உள்ளடக்கிய பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிகளைப் பற்றி, இப்பொழுது கிடைக்கும் (இலக்கிய) மூலங்களிலிருந்து எதனையும் அறிய முடிய வில்லை. பாளி மொழியில் அமைந்த மகாவம்சம் பிரதானமாக அநுராதபுர மன்னர்களின் வரலாற்றைப் பதிவு செய்வதால், அநுராதபுர மன்னனின் ஆட்சிப் புலத்துக்கு வெளியே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொற்பமான விபரங்களையே கொண் டுள்ளது. தங்கள் இராசதானியிற் சில சமயங்களிற் பிரச்சினைகள் ஏற்பட்டபொழுது அநுராதபுர அரசர்கள் மலைநாட்டிற்கோ (மலய) தெற்கிலுள்ள இராச்சியத் திற்கோ (ரோஹண) ஓடினார்கள். அப் பிரதேசங்களைப் பற்றி மகாவம் சத்திலே சில குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஏழாம் நூற்றாண்டுவரை, இலங்கையின் தூர வடக்குப்பகுதி பற்றி, மகாவம்சத்திலே, எதுவிதமான பெறுமதி வாய்ந்த குறிப்புங் காணப்படவில்லை.

ஏழாம் நூற்றாண்டு முதலாக, மலய, ரோஹண என்னும் பிரிவுகளோடு மேதிகமாக மூன்று நிலப்பிரிவுகளைப் பற்றிய குறிப் புகள் மகாவம் சத்தில் வருகின்றன. அவை உத்திர - தேஸ (வடக்கு நிலப்பகுதி), பசின-தேஸ (கிழக்கு நிலப்பகுதி), தக்கிண-தேஸ (தெற்கு நிலப்பகுதி) என்பனவாகும். இந்நிலப்பகுதிகளில் அடங்கிய பிரதேசங்களையோ அவற்றின் எல்லைகளையோ நிச்சயிப்பதற்கு வழியில்லை. அவை அநுராதபுர இராச்சியத்தின் மையப்பகுதிக்கு வெளியே தெற்கு, கிழக்கு, வடக்குத் திசைகளில் அமைந்திருந்த வரையறையற்ற நிலப் பகுதிகளாகும். அவற்றின் மேல் அநுராதபுர மன்னர்கள் மேலாதிக்க உரிமை பாராட்டினார்கள். அந்த நிலப் பகுதிகளை நிர்வாகஞ் செய்வ தற்கு, அரசன் தனது குடும்பத்தவர்களை நியமித்தான். அரசபதவிக்கு உரிமையுடைய இளவரசனைத் தெற்கிலுள்ள பகுதிக்குப் பொறுப்பாக நியமிப்பது வழக்கம்.கிழக்கிலுள்ள பகுதியைப் பரிபாலனஞ் செய்வ தற்கு இளவரசன் ஒருவனை நியமித்தமை பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றபொழுதிலும் வட நிலப்பகுதிக்கு அவ்வாறு எவரையும் நியமித்தமை பற்றிய குறிப்பெதுவுங் காணப்படவில்லை.

வடக்கு நிலப்பகுதி பற்றி மகாவம்சத்தில் அரிதாகக் காணப்படும் குறிப்புகளை ஆராயுமிடத்து, அந்தப் பகுதி ஏனையவற்றிலிருந்தும் வேறுபட்டிருந்தமை நன்கு புலனாகின்றது. அங்கு மீண்டும் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**யாழ்ப்பாணத்தில் தொல்லியல் இடங்கள்**

1. வெற்றியரசன் கோட்டை (நெடுந்தீவு), 2. திகழி, 3. நயினாதீவு, 4. வேறப்பிட்டி, 5. சத்திரத்தை, 6. கும்புறுப்பிட்டி, 7. சாட்டி, 8. அல்லைப்பிட்டி, 9. மண்ணித்தலை, 10. கௌதாரிமுனை, 11. திருவடிநிலை, 12. திசைமளுவை, 13. காட்டுப்புலம், 14. ஆனைவிழுந்தான், 15. கந்தரோடை, 16. கலையோடை, 17. முள்ளி, 18. ஆனைக்கோட்டை, 19. அராலி கிழக்கு, 20. பூம்புகார், 21. நல்லூர், 22. இருபாலை, 23. கோப்பாய், 24. கல்வளை, 25. பங்குனிப்பிட்டி, 26. வேரக்காடு, 27. கச்சாய், 28. வல்லிபுரம், 29.வலிகண்டி, 30. நாகர்கோயில், 31. கருமணல்கும்மி, 32. தாளையடி - செம்பியன்பற்று, 33. வெற்றிலைக்கேணி, 34. தட்டன்கோடு, 35. மண்டலை, 36. கோயில்வயல், 37. நித்தியவெட்டை, 38. குயவன்பிட்டி, 39. பப்பரவப்பிட்டி, 40. மண்டாக்கல் ஆறு, 41. பாலாவிக்குளம்

(மூலம்: P. Ragupathy, *Early Settlements in Jaffna: An Archaeological Survey.*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அநுராதபுர மன்னர்களால் அவற்றைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

(இராசதானியில்) அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பியவர்களும் அதற்கெனக் கிளர்ச்சி புரிந்த இளவரசரும் அங்கு இலகுவாக ஆதரவு பெற்றனர். முன்னைய நூற்றாண்டுக்குப் பின் படையெடுத்துவந்த தென்னிந்தியப் படைகள் அப்பகுதிக்குச் சென்று, அங்கே தங்கியிருந்து, தம் நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு அநுராதபுரம் நோக்கிச் சென்றன. அந்தப் பகுதியிலுள்ள சூழ்நிலை அநுராதபுர மன்னர் களுக்குச் சாதகமானதன்று என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இவற்றோடு மேலதிகமாக வேறு சில விடயங்களையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. நாகதீபம் என்று கொள்ளப்படும் பிரதேசத்தில் ஏற்பட்ட எந்தவொரு குடியிருப்புப் பற்றியும் மகாவம்சம் குறிப்பிடவில்லை. அங்கு ஆதியிலிருந்து நாகர் வாழ்ந்தனர் என்பதை அதிலே காணப்படும் நாக மன்னர்களின் தகராறு பற்றிய புனைகதை உணர்த்துகின்றது. அநுராதபுர மன்னரில் எவனாவது ஒருவன் இலங் கையின் தூர வடக்குப் பகுதிக்குப் படையெடுத்துச் சென்றமை பற்றிய எந்தவிதமான குறிப்பும் மகாவம்சத்தில் இல்லை. அநுராதபுர மன் னர்கள் அங்குள்ள ஆட்சியாளரோடு மணத்தொடர்புகளை ஏற்படுத்திய தாகவும் மகாவம்சம் குறிப்பிடவில்லை.

மஹல்லகநாகன், அக்கபோதி போன்ற மன்னர்கள் பௌத்த சமயத் தலங்களில் மேற்கொண்ட திருப்பணிகள் சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் உள்ளன. பௌத்த சமயம் தொடர்பான திருப்பணிகளை அரசியலாதிக்கத்தின் அடையாளமாகக் கொள்ள முடியுமா என்பது சிந்தனைக்குரிய விடயமாகும். ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்திலே அநுராதபுர அரசரிற் சிலர் தூர வடபகுதியிலே தங்கள் மேலாதிக்கத்தை தற்காலிகமாக ஏற்படுத்தியிருத்தல் கூடும். ஆனால் அடிப்படையான பின்னணி பற்றி மகாவம்சம் எதனையும் குறிப்பிடவில்லை. எவ்வாறாயினும் நாகநாடு அநுராதபுர இராச்சி யத்தில் அடங்கிய பகுதியாக இணைக்கப்பட்டமைக்கு எதுவித ஆதாரமு மில்லை.

வல்லிபுரம் பொன்னேட்டை வசபனது காலத்து ஆவணமென்று கொள்ளுமிடத்தும் நாகதீவு ஒரு தனிப் பிரிவாக, அங்குள்ள பிரதானி ஒருவனின் பொறுப்பில் விடப்பட்டிருந்தமை கவனித்தற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகநாட்டிலே ஆறாம் நூற்றாண்டிற்குப் பின்பு பௌத்தம் நலிவுற்ற மைக்கு சமுதாய மாற்றங்களே அடிப்படையான காரணங்களாகும். அக்காலப் பகுதியிலே தமிழகம் முழுவதிலும் பௌத்த நிறுவனங் களின் வளர்ச்சி குன்றியமை இங்கு கவனித்தற்குரியதாகும். நாக நாட்டிலே பௌத்த சமயம் பரவி வளர்ச்சியுற்ற காலத்தில் சைவ சமயமும் பரவியிருந்தது என்று கொள்வதற்கான காரணங்கள் உண்டு. பெருங்கற்பண்பாட்டுக் காலத்திற்குரிய படைகளிலே திரிசூலத்தின் வடிவம் காணப்பட்டமை குறிப்பிடற்குரியது. ஆனைக்கோட்டை முத்திரையிற் காணப்படும் இரண்டு குறியீடுகளையும் திரிசூலத்தின் குறிகளாகக் கொள்ள முடிகின்றது. அவற்றையொத்த வடிவங்கள் அகுறுகொடையிற் கிடைத்த பிராமி எழுத்துப் பொறித்த நாணயம் ஒன்றிலும் வேறு சில புராதனமான நாணயங்களிலுங் காணப்படு கின்றன. முருக வழிபாடு அம்மன் வழிபாடு என்பன கிறிஸ்து சகாபத்தின் ஆரம்ப காலம் முதலாகவே அறிமுகமாகிவிட்டன என்று கொள்ளலாம். சமய வழிபாடுகளைப் பொறுத்தவரையில் பழந்தமிழ் நூல்களில் வர்ணிக்கப்படும் தமிழகத்து வழிபாட்டு நெறிகள் ஈழத்திலும் வழமையாகிவிட்டன என்று கருதலாம். அதற்கு லக்ஷ்மீ நாணயங்களிற் காணப்படும் அடையாளங்கள் சான்றாகும்.

பல்லவர் காலத்தில் இலங்கையின் வடபகுதிக்கும் தென்னிந்தி யாவிற்குமிடையில் மிகுந்தளவிலே வாணிப, கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டன. பல்லவர்களின் நாணயங்கள் பல இடங்களிலே கிடைத் துள்ளன, ஆயினும் இலங்கையின், வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்டிருந்த அளவில் யாழ்ப்பாணத்திற் பல்லவரின் செல்வாக்கு ஏற்பட்டமைக்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. சோழப் பேரரசரின் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டிருந்த காலத்திலே தமிழகத்தின் செல்வாக்கு ஈழத்திலே பெருமளவில் ஏற்பட்டது. அது அரசியல், மொழி, சமய நெறிகள், வாணிபம் என்னும் பல துறைகளிலும் ஏற்பட்டிருந்தது. முதலாம் இராசராசன் கி.பி. 993 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றினான். ஈழம் சோழப் பேரரசின் மண்டலங் களில் ஒன்றாகியது. அதனை ஈழமான மும்முடிச் சோழமண்டலம் என்று சோழர் குறிப்பிட்டனர். அதற்குரிய நிர்வாக ஏற்பாடுகளும் இராசராசனது காலத்தில் உருவாக்கப்பட்டன. தென்னிந்திய மண்டலங் களிற் போல ஈழத்திலும் வளநாடு என்னும் இறைவரி நிர்வாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளைச் சோழர்கள் உருவாக்கினார்கள். அவர்களின் ஆட்சி தொடர்பான சாசனங்கள் முதலான தொல்பொருட் சின்னங்கள் மாதோட்டம், பொலன்னறுவை, பதவியா, கந்தளாய், திருகோண மலை ஆகிய இடங்களில் உள்ளதைப் போன்று யாழ்ப்பாணத்திற் கிடைக்கவில்லை. கோயில்கள் சாசனங்கள் போன்றவை அங்கு காலப்போக்கில் அழித்துவிட்டன.

சோழராட்சி இலங்கையில் ஏற்பட்டிருந்த காலத்தில் சோழர் காலப் பண்பாட்டின் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்படுவது இயல் பானதாகும். சோழராட்சியில் குளம், கால்வாய், கோயில் என்பன பற்றிய பணிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிப் பகுதியிலும் நடைபெற்றமை பற்றிய ஐதிகங்கள் உண்டு. அவை தொண்டமான், பல்லவராயன் என்னும் பிரதானிகள் தொடர்பானவை. மாவிட்டபுரம் கோயில், கீரிமலைச் சிவன்கோயில் என்பன பற்றிய கதைகளுமுண்டு. இரண்டாவது சோழ இலங்கேஸ்வரனாகிய இராசேந்திரன் காலத்தில் இராசேந்திரன் குளம் உருவாக்கப்பட்டது என்பதும் அவனது அதி காரிகளில் ஒருவனாகிய பல்லவராயன் கட்டு என்னும் அணையினை அமைத்தான் என்றும் கருதுவதற்கு இடமுண்டு. இன்னாட்களில் ஊடகங்கள் மூலம் விளம்பரமாகிவிட்ட மண்ணித்தலைச் சிவாலயம் சோழர் கலைப்பாணியில் அமைந்தது என்பது குறிப்பிடற்குரியது.

அகழ்வாய்வுகளிலும் மேலாய்வுகளிலும் பெருந்தொகையான சோழரின் காசுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்துப் பொருளா தாரத்திலும் வாணிபத்திலும் சோழர் காலத்திலே பெருவளர்ச்சி ஏற்பட்ட மைக்கான அறிகுறிகள் தெரிகின்றன. அந்தநிலை பொலன்னறுவைக் காலத்திலும் தொடர்ந்து நிலைபெற்றது. ஆறாம் பாராக்கிரமபாகுவின் ஆட்சி யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருந்தமைக்கு அவனது நயினாதீவுக் கல்வெட்டும் பிற்காலச் சோழரின் சாசனக் குறிப்புகளும் சான்று களாகும். அக்காலத்தில் ஊராத்துறை மிக முக்கியமான துறைமுகமாக விளங்கியது. அங்கு வெளிநாட்டு வணிகரின் கப்பல்கள் வந்தன. பொலன்னறுவை இராசதானியின் வெளிநாட்டு வாணிபத் தொடர் புகளில் ஊராத்துறை ஒரு பிரதானமான தளமாக விளங்கியது.

யாழ்ப்பாணத்தின் தனித்துவமான அரசியல் மரபு சோழராட்சியில் அழிந்துவிட்டது. மாகன் பொலன்னறுவையில் ஆட்சி புரிந்த காலத்தில் (1215-1255) யாழ்ப்பாணம், மன்னார், மாதோட்டம், திருகோணமலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியா முதலான பகுதிகள் அவனுடைய ஆதிக்கத்தின் கீழ் அமைந் திருந்தன.

மாகனது ஆட்சிக் காலம் முதலாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டு முழுவதும் பாண்டியரின் மேலாதிக்கம் வட இலங்கையில் ஏற்பட்டது. அக்காலத்திற்குரியன வென்று கொள்ளக்கூடிய பெருந்தொகையான நாணயங்கள் கிடைத்துள்ளன. அவை பல வகைகளைச் சேர்ந்தவை. வெவ்வேறான கோலங்களில் அமைந்த மீனுருவங்கள் அவை எல்லா வற்றுக்கும் பொதுவானவை. அவ்வுருவங்கள் பாண்டியரின் மேலாட் சியின் அடையாளம் போலானவை. ஆனால் இந்த நாணயங்கள் வட இலங்கையில் அரசு புரிந்த வெவ்வேறு குலங்களைச் சேர்ந்த அர சர்களால், ஒரு தொடரச்சியான நெடுங்காலப் பகுதியில் வெளியிடப் பட்டன என்று கொள்ளலாம்.

நீண்டகாலமாக நிலைபெற்ற பாண்டியரின் மேலாட்சியின் விளைவாக வட இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. அவர்கள் நல்லூரில் இராசதானியை அமைத்ததோடு நிர்வாகமுறை ஒன்றையும் உருவாக்கினார்கள். யாழ்ப்பாணக் குடா நாடு, தீவுபற்று, மன்னார், மாதோட்டம், பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை என்பன அவர்களின் நேரடியான ஆட்சியின் கீழ் அமைந்திருந்தன. வன்னியில் ஏழு வன்னிப் பிரிவுகள் இருந்தன. முள்ளியவளை, கருநாவல்பத்து, கருக்கட்டுமூலை, மேல்பத்து, பனங் காமம், தென்னமரவடிப்பற்று, செட்டிகுளம்பற்று என்பன வன்னி யிலிருந்த சிற்றரசுகள். அவற்றிலே வன்னிபம்/வன்னியனார் என்னும் குறுநில அரசர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் ஆட்சியுரிமை பரம்பரை வழியானது. தங்கள் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளில் அரசருக்குரிய எல்லா அதிகாரங்களையும் அவர்கள் பெற்றிருந்தனர். குடியானவர்களிடமிருந்து அரசனுக்குரிய வரிகளையும் ஊழியம் முதலான கடமைகளையும் பெறுவதற்கான அதிகாரிகளை அவர்களே நியமித்தனர். நீதிபரிபாலனமும் அவர்களின் பொறுப்பாகவிருந்தது. ஆயினும் அரசருக்குரிய விருதுகளையும் பட்டப்பெயர்களையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. அவர்களின் அதிகாரத்திற்கும் பதவிக்கு முரிய சீர்வரிசைகள் வன்னிபங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆண்டுதோறும் இராசதானியில் இராச்சியத்தின் பிரதானிகளும் நிர் வாகத்தின் பல்வேறு நிலைகளிற் கடமை புரிந்தோரும் அரசனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலையிலே கூடுவது வழக்கம். அரசனுடைய மேலாட்சிக்கு அடங்கிய தங்கள் நிலைப்பாட்டை அரசனுக்குச் சம்பிரதாய பூர்வமாக தெரிவிப்பதற்கும் திறை செலுத்துவதற்கும் அவர்கள் நல்லூருக்குச் செல்வது வழக்கம். வன்னிபங்கள் யானைகளை அரசனுக்குத் திறை யாகக் கொடுத்தனர். யானைகளை வெளிநாட்டு வணிகருக்கு விற்பனை செய்வதால் மிகுந்த வருவாய் கிடைத்ததாற் பிற்காலத்திற் போர்த்துக் கேயரும் ஒல்லாந்தரும் யானைகளைத் திறையாகப் பெறுவதில் அதிக கவனஞ் செலுத்தினார்கள். அரசனுக்குக் கீழமைந்த பிரதானிகள் அனைவரிலும் வன்னிபங்களே முதன்மையானார்கள். முழு இராச்சி யத்தின் பாதுகாப்பு, குடியானவர்களின் நலவுரிமைகள் என்பன தொடர் பாக தங்களுக்கும் பொறுப்புகள் உண்டென்பதை வன்னிபங்கள் சில சமயங்களில் நிரூபித்துள்ளனர்.

11767.S.C

இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழர் வாழும் பிரதேசங்களிற் பெரும்பாலானவற்றை இணைத்து, அவற்றை ஒரு இராச்சியமாக அமைத்து நெடுங்காலம் நிலைபெறச் செய்தமை ஆரியச்சக்கர வர்த்திகளின் குறிப்பிடத்தக்க சாதனையாகும். பெருங்கற்பண்பாடு பரவியதன் விளைவாகக் கந்தரோடையில் நகரமயமாக்கம் ஏற்பட்டமை பற்றியும் அக்காலத்துப் பன்னாட்டு வாணிபம் பற்றியும் தொல்லியற் சான்றுகள் மூலமாக அறிகின்றோம். ஆனால், அக்காலத்து மன்னர்கள் வரலாற்றிலே முகங்காட்டவில்லை. அவர்கள் நாணயங்களை வெளி யிட்டிருந்த போதும் அவர்களின் பெயர்களை இதுவரை அடையாளங் காணமுடியவில்லை.

இலங்கையின் வடபுலத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை நாகநாடு என்னும் தனி இராச்சியமொன்று நிலவியதென்பதைப் பலவகையான குறிப்புகளினால் அறிய முடிகின்றது. அது நாகர் ஆளும் நாடென்பதால் அதனை நாகதீப என்று குறிப்பிடுவது மாவம்சத் தின் மரபாகியது. ஆயினும் நாகநாட்டு மன்னர்களின் பெயர்கள் சில ஐதிகங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளன. வல்லிபுரம் பொன்னேடு குறிப்பிடும் இஸிகிராய(ன்) என்பவனின் பெயர் ஒரு புறநடையாகும். ஆனால் அவன் வஹய என்னும் மகாராஜன் ஒருவனின் மேலாட்சியின் கீழ் ஆட்சி புரிந்தவன். முற்காலங்களைப் போலல்லாது ஆரியச்சக்கர வர்த்திகளின் ஆட்சிக் காலத்து யாழ்ப்பாண வரலாற்றின் சில அடிப் படையான அம்சங்கள் தெளிவாகத் தெரிகின்றன. தொடர்ச்சியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலம் அரசு புரிந்த மன்னர்களின் பெயர்கள் கிடைத்துள்ளன. அவற்றைப் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவ மாலையிற் பதிவு செய்துள்ளனர். காலத்தால் அதற்கு முற்பட்ட கைலாயாலய மாலை ஆரியச்சக்கரவர்த்திகளின் முதலாவது மன்னனது காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளை இலக்கிய நயத்துடன் வர்ணிக்கிறது. வையாபாடல் யாழ்ப்பாண இராச்சியத்து அரசியல், சமூக நிலைகளை விளக்கும் கருவூலமாகக் கொள்ளத்தக்கது. ச. ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம் போன்ற பூர்வாங்க ஆய்வாளர்களினால் இதனைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனைப் போன்ற நாட்டார் பாங்கிலான மரபுகளைப் பிரதிபலிக்கின்ற நூல்களில் வரன் முறைக்கிரமங்களை எதிர்பார்க்கமுடியாது. அவற்றைப் பயன்படுத்து வதற்கு ஏற்றவொரு அணுகுமுறையினை உருவாக்கவேண்டும். ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திற் பொருளாதாரம் வளம்பெற்றது. பிறநாடுகளோடு அமைந்த வாணிபத் தொடர்புகள் மேலும் வலு வடைந்தன. அதனால் அவர்கள் போதிய வருமானங்களைப் பெற்றனர். அவர்களின் படைபலம் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் அதிகாரம் செலுத்துகின்ற அரசர் மூவரிலும் பொருள் பலத்திலும் படைபலத்திலும் ஆரியச்சக்கரவர்த்தியே மேலானவன், அதனாற் கீழ்நாட்டிலுள்ள ஒன்பது துறைமுகங்களிலும் மலைநாட்டிலும் அவனால் வரி சேர்க்க முடிந்தது என்று சிங்கள வரலாற்று நூலாகிய 'ராஜாவலிய' குறிப் பிடுகின்றது. சமகாலத்து நூலாகிய 'நிக்காயசங்கிரகய' (1369) என்பது இவ்விதமான நிலையை வர்ணிக்கின்றது. ஆரியச்சக்கரவர்த்தி இந் நிலையினை அடைவதற்குத் தென்னிலங்கை மீது நடத்திய படை யெடுப்புகள் பற்றியும் இந்நூல்கள் வர்ணிக்கின்றன.

பதின்மூன்றாம் நூற்றாண்டு முதலாகவே ஒரு வியாபாரப் பொருள் என்ற வகையிற் கறுவா முக்கியத்துவம் பெற்றது. பதின்னான்காம் நூற்றாண்டில் அதிகளவில் அதனை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்தனர். அதன் ஒரு பகுதி அங்கிருந்து மேற்கிலுள்ள தேசங்களுக்கு ஏற்றுமதி யாகியது. கறுவா வியாபாரத்தை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன் 14ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரியச் சக்கரவர்த்தி தென்னிலங்கைமேற் படையெடுத்துச் சென்று தனது மேலாதிக்கத்தை அங்கு ஏற்படுத்திக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1344இல் அராபியப் பிரதானியான இபுன் பற்றூற்றா இலங் கையின் கரையோரத்தையடைந்தபொழுது ஆரியச்சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் செல்ல நேர்ந்தது. அக்காலத்தில் முத்துச் சலாபத்திலே கிடைத்த முத்துக்கள் அவனது முன்னிலையிலே குவியல்களாகக் காணப்பட்டன என்பதையும் கறுவா வியாபாரம் அவனது கட்டுப் பாட்டில் இருந்தமையினையும் இபுன் பற்றூற்றாவின் குறிப்பிலிருந்து அறியமுடிகின்றது. அவனிடம் பெருந்தொகையான வாணிபக் கப் பல்கள் இருந்தன. ஒரு சமயம் ஆரியச்சக்கரவர்த்தியின் நூறு கப்பல்கள் அராபிய தேசமான யெமென் நாட்டை நோக்கிப் பிரயாணம் செய்த மையினை தான் மதுரைக்கரையில் அவதானித்ததாக இபுன் பற்றூற்றா கூறுவார். அது அக்காலத்து அதிசயமான வரலாறு.

ஆரியச்சக்கரவர்த்திகள் எல்லோரும் நாணயங்களை வெளி யிட்டனர். அவற்றுட் பெரும்பாலானவை செப்பு நாணயங்கள். அவர்கள் வெள்ளி நாணயங்களையும் தங்க நாணயங்களையும் வெளியிட்டனர் என்பது அண்மைக்கால கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவந்துள்ளது. இலங்கை நாணயங்களில் அவை பல தனியான சிறப்புக்களைக் கொண்டவை. அவற்றை இராசதானியிலுள்ள அக்கசாலையினர் மிகுந்த வனப்புடன் வடிவமைத்துள்ளனர். சமகாலத்தில் இலங்கையிலுள்ள வேறெந்த அரசர்களும் அவற்றைப் போன்ற நாணயங்களை வெளியிட வில்லை என்பது குறிப்பிடற்குரியது. தென்னிலங்கையிலும் மலை நாட்டிலும் மானிய முறை அம்சங்கள் பொருந்திய பொருளாதார முறை சமகாலத்தில் நிலவியது. ஆனால் அங்குள்ளவற்றைப் போன்ற இயற்கை வளங்கள் இல்லாத பொழுதிலும் யாழ்ப்பாண இராச்சியத்திற் குடியானவர்களின் ஊக்கமும் கடினமான உழைப்பும் வாணிப, வர்த்தக அபிவிருத்திகளும் கணிசமான அளவிலே பணப்புழக்கம் ஏற்படு வதற்கு ஏதுவாக இருந்தன. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் மன்னர் ஆலயங்களுக்கு நன்கொடையாக நில மானியங்களை அன்றிக் காசினையே வழங்கினார்கள். கடைகளிற் சேவை புரிந்தோருக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் வேதனமாகக் காசு கிடைத்தது என்பது இராச்சியத்து முதலியார்கள் 1619ஆம் ஆண்டிலே போர்த்துக்கேய அதிகாரிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் மூலம் தெளிவாகி யுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அரசர்கள் சைவசமயத்தின் மீது அபிமானம் கொண்டிருந்ததோடு வித்தியா விருத்தியிலும் ஈடுபாடு கொண்டிருந்தனர். ஸ்ரீதக்ஷிண கைலாயபுராணத்தின் ஆசிரியரான செகராசசேகரன் இலக்கண, இலக்கியங்களிற் பாண்டித்தியம் பெற்ற மகாவித்துவானாக விளங்கினான். இக்காலத்தில் அரச பாதுகாவலராக அதிகாரம் பெற்றிருந்த அரசகேசரி ஈழநாட்டுப் புலவர் வரிசையில் சிறப்புப் பெற்ற ஒருவராவார். காளிதாசரின் மகாகாவியமான இரகுவம்சத்தை மூலமாகக் கொண்டு இரகுவம்சம் என்னும் தமிழ் நூலைப் பாடினார்.

புராணம், ஆகமம், மருத்துவம், சோதிடம், இலக்கணம், காவியம் முதலான பல துறைகளைச் சேர்ந்த நூல்களின் சுவடிகள் பலவற்றையே வடதேசத்திலிருந்தும் எடுத்துவந்து அவற்றை அரண்மனையிலுள்ள வித்துவான்களைக் கொண்டு ஆராய்வுகளைச் செய்வித்தனர். அதன் விளைவாகச் 'செகராசசேகரம்', 'வைத்தியசிந்தாமணி', 'பரராசசேகரம்' முதலான வைத்திய நூல்களும் சோதிட நூலான 'செகராசசேகர மாலை'யும் எழுதப்பட்டன. இந்நூல்களில் சில வரலாற்றுக் குறிப்புகளும் இடம்பெற்றன.

ஆரியச்சக்கரவர்த்திகள் நல்லூரில் இராசதானியை அமைத்திருந்தனர் என்று கைலாயாயமாலை முதலிய நூல்கள் குறிப்பிடும். அவர்களைச் சிங்கையாதிபன், சிங்கையாரியன், சிங்கைகாவலன் எனவும் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் நல்லூருக்கும் சிங்கை நகருக்குமிடையிலான தொடர்பு மரபு வழியான குறிப்புக்களிலிருந்து தெளிவாகத் தெரியவில்லை. அது ஆய்வுக்குரியவிடயமாகும். சமகாலச் சிங்கள நூல்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் இராசதானியை யாப்பாபட்டுன என்று குறிப்பிடுகின்றன. அது யாழ்ப்பாணப் பட்டினம் என்பதன் சிங்கள வடிவமாகும். விஜயநகரப் பிரதானியான லக்கண்ண தண்டநாயகனின் படையெடுப்பொன்றினைப் பற்றிக் குறிப்பிடும் திருமாணிக்குழி கல்வெட்டிலே யாழ்ப்பாணாயன் பட்டினம் என்னும் இராசதானி குறிப்பிடப்படுகிறது. பிற்காலத்துத் தென்னிந்திய சாசனங்கள் வட இலங்கையிலுள்ள தமிழிராச்சியத்தை யாழ்ப்பாணம் என்றும் யாழ்ப்பாண தேசம் என்றும் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி அதனை ஆட்சிபுரிந்த போர்த்துக்கேயரும் (1619 - 1658) ஒல்லாந்தரும் (1658 - 1796) யாழ்ப்பாணப் பட்டினம் என்ற பெயரைத் தங்கள் ஒலியமைதிகளுக்கேற்ப சிறிதளவான மாற்றத்துடன் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தினார்கள். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் வடமாகாணம் என்ற அமைப்பில் யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகள் அடங்கி விட்டன. இராச்சியம் பற்றிய நினைவுகள் குடியானவர்களிடையே மறையத்தொடங்கிவிட்டன. புதிய நிர்வாக முறையில் யாழ்ப்பாணம் என்ற பெயர் ஒரு நிர்வாக மாவட்டத்தின் பெயராகவும் அதன் தலை நகரின் பெயராகவும் அமைந்துவிட்டது. யாழ்ப்பாண நகரின் உற்பத்தி மிகவும் புராதனமானது என்பதை இப்பொழுது கோட்டைப் பகுதியில் நடைபெறுகின்ற அகழ்வுகளின் மூலம் அறிந்துகொள்ள முடி கின்றது.

யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந் தரதும் காலங்களிற் சில மாற்றங்கள் ஏற்பட்டன. புகையிலை, மிளகாய், மரவள்ளி போன்ற பயிர்களின் செய்கை முறை விவசாயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. கி.பி.1630 - 1650 ஆகிய காலப்பகுதியில் புகையிலை உற்பத்தியின் மூலமாக அரசாங்கத்திற்கு மிகக்கூடிய வருமானம் கிடைத்தது. ஒல்லாந்தர் இயன்றளவில் எல்லா நிலங் களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். வரிகள் அதிகமாக வசூலிக்கப்பட்டதனால் குடியானவர்கள் போதிய நலன்களைப் பெறவில்லை.

அரசியல், நிர்வாகமுறை, சமயவழிபாடுகள், தமிழ்மொழி, இலக்கியநெறி, பயிர்ச்செய்கை, நிலங்களைப் பயன்படுத்தும் முறை, நாணயவார்ப்புமுறை முதலான துறைகளிலே யாழ்ப்பாணத்துக்கு சிறப்பாகவுள்ள மரபுகள் பூர்வகாலம் முதலாக உற்பத்தியாகி மரபு வழியாக நிலவிவந்துள்ளமை குறிப்பிடற்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# தொல்லியலும் பூர்வீக வரலாறும்

### *யாழ்ப்பாணமும் தொல்லியலும்*

இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்பு, 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட யாழ்ப்பாண தீபகற்பத்தின் வரலாறு இருள் சூழ்ந்த ஒன் றாகவே காணப்பட்டது. அக்காலத்து வரலாறு பற்றிய ஆதாரபூர்வமான குறிப்புகள் இலங்கையிலுள்ள தமிழ் நூல்களிற் காணப்படவில்லை. ‘வையாபாடல்’, ‘கைலாயமாலை’, ‘யாழ்ப்பாண வைபவமாலை’ ஆகிய நூல்கள் பிந்திய காலத்தில் எழுதப்பட்டவை[1]. ஆரியச்சக்கர வர்த்திகளுக்கு முற்பட்ட காலத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு அவை பயன்படுவதில்லை. அவற்றிலே இடம்பெறுகின்ற உக்கிர சிங்கன், மாருதப்பிரவல்லி, யாழ்ப்பாடி போன்றவர்களைப் பற்றிய கதைகள், புனைகதைகள். அவை மகாவம்சத்திலுள்ள விஜயன் கதை போன்றவை[2].

ஆதாரபூர்வமானவை என்று கொள்ளக்கூடிய ஐதிகங்களோ குறிப் புகளோ இல்லாதவிடத்து, பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு களில் யாழ்ப்பாண வரலாறு பற்றி எழுதிய தமிழறிஞர்கள் ஆரிய சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட காலத்து யாழ்ப்பாண வரலாற்றைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. எனவே, ‘வையாபாடல்’ முதலிய நூல்களிற் காணப்படும் கதைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நீண்டகால வரலாற்றை, ஆராய்வு நோக்கின்றி, மிகச் சுருக்கமாக எழுதினார்கள். வல்லிபுரம் பொன்னேட்டின் வாசகத்தை விளக்க முற்பட்ட சாசனவியலாளரும் தொல்பொருள் திணைக்களத்தின் பணிப் பாளருமாகிய ஸேனரத் பரணவிதான ஒரு நவமான கதையைச் சொன்னார். வல்லிபுரம் பொன்னேடு வசப மகாராசன் காலத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்லிபுரம் பொன்னேடு

குரியது, அதன் வாசகம் சிங்களமொழியில் அமைந்துள்ளது. எனவே, சிங்களமே அக்காலத்தில் யாழ்ப்பாணத்திற் பேச்சு வழக்கு மொழி யாகும் என்பது அவர் உருவாக்கிய கதையின் சாரமாகும்.[3]

ஆனால் வல்லிபுரம் பொன்னேடு ஒரு கலப்பான பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது தமிழ் கலந்த பிராகிருதம். அதில் ராயன், நாகதீவு ஆகிய தமிழ்ச் சொற்கள் சற்று உருமாறிய கோலத்தில் அமைந்துள்ளன என்று அண்மைக் காலத்து ஆய்வுகளில் வலியுறுத்தப் பட்டுள்ளது.[4]

வஹய மகாராஜனின் மேலாட்சியில் இசிகிராயன் என்னும் பிரதானி நாகதீபத்தில் அதிகாரஞ் செலுத்தியமை இச்சாசனம் மூலமாகத் தெளி வாகின்றது. இசிகிராயன் என்ற பெயரிலுள்ள ராயன் என்னும் அடை மொழி தமிழ் மொழியில் வழமையாகிவிட்ட சொல்லாகும். அது பழந்தமிழ் நூல்களிற் காணப்படுவது. அது, பிரதானிகளுக்கும் குறுநில மன்னருக்கும் உயரதிகாரிகளுக்கும் உரிய பதவிநிலையினைக் குறிக்கும் சொல்லாகும்.[5]

காலநிலை காரணமாக ஏற்பட்ட மனோபாவம் கற்பனைத் திறனைக் கட்டுப்படுத்திவிட்டதாற் பரணவிதான நிதானமின்றியும் ஆராய்வு நோக்கற்றும் வல்லிபுரம் பொன்னேடு பற்றி எழுதிவிட்டார் போலும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் இலங் கையில் ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்கள் பற்றிய பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு முயற்சியும் மிகவும் தவறான முடிபுகளுக்கு வழிவகுத்தது. தொல்லியல் அகழ்வாய்வு களினாற் கிடைக்கும் சான்றுகளின்றிக் குடியேற்றங்களின் உற்பத்தி, நகரங்களின் வளர்ச்சி, உற்பத்தி முறைகள், வாணிபம் போன்ற விட யங்களைப் பற்றி எவரும் உறுதியான முடிபுகளைக் கூறவியலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***விமலா பெக்லியின் அகழ்வாய்வுகள், 1970***

பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லியின் தலைமையிலான குழுவினர், 1970ஆம் ஆண்டிலே, கந்தரோடையில் அகழ்வாய்வு ஒன்றினை நடத்தினார்கள். வெளிநாட்டவர்களின் முயற்சியால் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் அதுவே முதலாவதாகும்.[6]

இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தினரின் அனுசரணையுடன் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பேராதனைப் பல்கலைக் கழகத்து வரலாற்றுத்துறை விரிவுரையாளராகவிருந்த கலாநிதி கா. இந்திரபாலாவும் இதிற் பார்வையாளராகப் பங்கு பற்றியமை குறிப்பிடற்குரியது.

1970இல் நடைபெற்ற அகழ்வாய்வுகளின் பலனாக யாழ்ப் பாணத்துச் சமூகத்தின் உற்பத்தி, அங்கிருந்த பூர்வகுடிகள், அவற்றின் பண்பாட்டுக் கோலங்கள் என்பன பற்றிய வித்துவ பூர்வமான விளக் கத்தில் ஒரு பெரும் திருப்பம் ஏற்பட்டது. அகழ்வின் மூலம் மட் பாண்டங்கள், அன்றாட வாழ்க்கையிற் பயன்படுத்திய கருவிகள், இரும்பு முதலான உலோகப்பொருட்கள், கருவிகள், உயிரினங்கள், தானியங்கள் என்பவற்றின் கூறுகள் போன்றன கணிசமான அளவிற் கிடைத்தன. அவற்றிலும் மிகப் பழைமையானவை கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திற்குரியனவாகும். அகழ்வுகளிற் கிடைத்த தொல் பொருட் சின்னங்களிற் கரும்-செம் மட்கலங்கள் குறிப்பிடற்குரியவை. கந்தரோடையிற் கிடைத்த தொல்பொருட் சின்னங்களுக்கும் தென்னிந் தியாவில் நிலைபெற்ற ஆதி இரும்புக் காலத்தைச் சேர்ந்த பெருங்கற் பண்பாட்டுக் காலச் சின்னங்களுக்கும் இடையில் மிகுந்த ஒற்றுமை இருப்பதை விமலா பெக்லி முதலியோர் அவதானித்தனர்.[7]

யாழ்ப்பாணக் குடியேற்றத்தின் உற்பத்தியும் வளர்ச்சியும் தென்னிந் தியப் பண்பாட்டை மூலமாகக் கொண்டவை என்பது 1970இன் அகழ்வாய்வுகளினாலே தெளிவாகியது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதன் அருகிலமைந்த தீவுகளிலும் இடைக்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைக்கப்பெறாத நிலையிலே ஆதி இரும்புக்காலப் பண்பாட்டின் அம்சமாகிய பெருங்கற் பண்பாடு அங்கு பரவுவதற்குத் தென்னிந்தியாவிலிருந்தும் வந்த, அப்பண்பாட்டிற்குரிய மக்களின் குடியேற்றங்களே ஏதுவானவை என்று கருதமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரகுபதியின் பூர்வாங்கமான ஆய்வுகள்

'யாழ்ப்பாணத்து ஆதிக் குடியேற்றங்கள்' என்னும் நூல் தொல்பொருட் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு, புலமை நோக்கில் முதன்முதலாக நடத்திய ஆய்வு முயற்சியின் பெறுபேறாகும்.[8] அதன் ஆசிரியரான பொன்னம்பலம் இரகுபதி காரைநகர் (சந்திரத்தை), வேலணை (சாட்டி), நாகர்கோயில், கந்தரோடை முதலிய இடங்களில் நடத்திய மேலாய்வுகளிற் கிடைத்த கலவோடுகளையும் பிற தொல்பொருட் சின்னங்களையும் தனது ஆய்விற்கு வேண்டிய பிரதானமான மூலங்களாகப் பயன்படுத்தினார். ஆனைக்கோட்டையில் மணற்கும்பி ஒன்றிலே பெருங்கற் பண்பாட்டுக் காலத்து ஈமக்கிடங்கிற் கிடைத்த வெண்கல முத்திரையும் சிதைவான மட்கலன்களும் அவருக்கு மிகவும் பயன் பட்டன.[9]

முத்திரையிலே தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ள பெயரைக் கோ வேதன் என்று அவரே, முதன்முதலாகச் சரியாக வாசித்துள்ளமையும் குறிப்பிடற்குரியது. கந்தரோடையில் விமலா பெக்லி தலைமையில் நடைபெற்ற அகழ்வாய்வுகளின் பயன்களும் அவருக்குக் கிடைத்தன. தென்னிந்தியாவிலிருந்தும் வந்த பெருங்கற் பண்பாட்டு மக்கள் உருவாக்கிய குடியிருப்புகளே யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடியேற்றங்கள் என்பது இரகுபதியின் ஆய்வுகளின் முடிபாகும்.

யாழ்ப்பாணத்திலே தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இப்பொழுது பரவலாகக் காணப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாகத் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களிலுள்ள தொல்லியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் பலர் வடக்கு நோக்கிச் செல்கின்றனர். சில தலங்களின் ஆய்வுகளைத் தொடங்கியுள்ளனர். அவர்களின் ஆர்வம் பாராட்டுதற்குரியது. ஆயினும், கள ஆய்வுகளின் பெறுபேறுகள் விபரமாக வர்ணிக்கப்பட்டு அறிக்கைகள் வடிவத்தில் வெளியிடப்படுவது அவசியமானது. அகழ்வுகளிற் கிடைக்கும் சின்னங்களும் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள அருங் காட்சியகங்களிற் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு வேண்டிய அனுமதியும் வசதிகளும் ஆய்வாளர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


***மீண்டும் கந்தரோடையில் அகழ்வாய்வுகள் - 2011***

இந்த வருடத்தில், யாழ்ப்பாணத்தில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரு அகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஒன்று கந்தரோடையில் நடைபெற்றது. மற்றது யாழ்ப்பாணத்துக் கோட்டைப் பகுதியில் நடை பெற்றது. இவற்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்து வரலாறு - தொல் பொருளியல் துறையினரும் பங்குபற்றியமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அது ஒரு முன்னேற்றமான அம்சமென்றும் சொல்ல லாம்.

1970இல் விமலா பெக்லி தலைமையிலான குழுவினர் கண்டறிந்த வற்றையே இவ்விரு அகழ்வாய்வுகளிலுங் கண்டுள்ளனர். யாழ்ப்பாண சமூகத்தின் வரலாறு மிகவும் தொன்மையானது, அது கி.மு. 500ஆம் ஆண்டிற்கு முற்பட்டது, இடையறாத தொடர்ச்சியினை உடையது என்பது இப்புதிய அகழ்வாய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது. கந்தரோடையில் அண்மையில் அகழ்வாய்வு செய்யப்பட்ட இடம் ஆதியான குடியிருப்புப் பகுதியாகும். அங்கு கிடைத்துள்ள கல வோடுகளிற் கணிசமான தொகையிலுள்ளவை கரும்-செம் மட்கலங் களின் துண்டங்களாகும். இரும்பு முதலான உலோகப் பொருட்களும் பெருமளவிலான கல்மணிகளும் விலங்குகள், தாவரங்கள் என்ப வற்றின் அம்சங்களும் உணவுப் பொருட்களின் எச்சங்களும் அகழ்வுப் படைகளிற் கிடைத்துள்ளன. குதிரையின் எலும்பு கிடைத்துள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்திலே சாட்டி என்னுமிடத்திலுள்ள பெருங்கற்படைக் காலத்து ஈமக்கிடங்கினை அகழ்வாய்வு செய்தபொழுது அங்கும் குதிரையின் எலும்பினைக் கண்டெடுத்தனர்.[10]

இலங்கையிலே குடிகளாகிவிட்ட பெருங்கற் பண்பாட்டு மக்கள் குதிரை வாணிபத்தில் ஈடுபட்டனர் என்பது இதனாலே தெளிவா கின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே குதிரை வணி கனின் புதல்வர்களான சேன, குத்தக என்னும் தமிழர் இருவரும் அநுராதபுரத்திலே ஆட்சியைக் கைப்பற்றினார்கள் என்பது மகா வம்சக் குறிப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற தொல்பொருள்கள்
(நன்றி: செ. கிருஷ்ணராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதிகால யாழ்ப்பாணக் குடியேற்றம் தென்னிந்தியத் தொடர்புடையது

அண்மையிலே கந்தரோடையில் நடைபெற்ற அகழ்வாய்வுகள் தொடர்பாக, முன்பு தொல்பொருளியல் திணைக்களத்துப் பணிப்பாளர் நாயகமாக விளங்கிய ஸிரான் தெரணியகல மேல்வருமாறு கூறினார்:

> கந்தரோடையிற் புராதனமான குடியிருப்பு நகரம் இருந்துள்ளமை ஆய்விலே தெரியவந்துள்ளது. இலங்கையின் ஏனைய இடங்களில் மக்கள் குடியிருப்புகள் ஆரம்பிக்கபட்ட காலத்திற் கந்தரோடை யிலும் மக்கள் வாழ ஆரம்பித்துள்ளனர் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது.
>
> அகழ்வாராய்ச்சியின்போது மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள், மணிகள், உரோமர் கால மட்பாண்டங்கள், புராதன தென்னிந்திய நாணயங்கள், வட இந்தியாவின் கங்கைப் பகுதிக் குரிய கறுப்பு நிறத்திலான பளபளப்பான மணிகள் என்பன கிடைக்கப்பெற்றுள்ளன.
>
> தென்னிந்தியப் பொதுப் பண்பாட்டுக்கான சான்றுகளே அதிகளவிற் கிடைக்கப் பெற்றுள்ளன. இங்கிருந்த மக்கள் உரோம் போன்ற நாடுகளுடன் அந்தக் காலத்திலே வர்த்தக நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள் என்பதனையும் அறிய முடிகிறது.
>
> இந்த ஆதாரங்கள் மூலம் கந்தரோடையில் 2,500 ஆண்டு களுக்கு முற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதிசெய்ய முடிகின்றது. 'ஆய்வின் போது, காலத்தைத் திட்டவட்டமாகக் கணிப்பிடக்கூடிய தொல் பொருள்கள் கிடைத்துள்ளன. அவற்றை மேலும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்துவதன் மூலம் உறுதியான முடிவுகள் கிடைக்கும். அதற்காக அவற்றை அமெரிக்காவிலுள்ள சர்வதேசத் தொல்லியல் ஆய்வு கூடத்துக்கு அனுப்பியுள்ளோம். ஆறுமாத காலத்தில் அம்முடிவுகள் கிடைக்கப்பெறும்.[11]

அகழ்வாய்வுகளை ஆதாரமாகக் கொண்டு ஸிரான் தெரெணியகல கூறுவனவற்றின் அடிப்படையிலே கந்தரோடையில் ஏற்பட்ட பூர்வீகமான குடியிருப்புகள் பற்றி மேல்வரும் விபரங்கள் தெளி வாகின்றன. கந்தரோடையில் ஏற்பட்ட பூர்வீகமான குடியேற்றம் கி.மு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

500க்கு முற்பட்டது. அது தென்னிந்தியாவில் நிலைபெற்ற பெருங்கற் பண்பாட்டு மக்கள் பரவியமையால் ஏற்பட்டது. குடியிருப்புகள் செறிந் திருந்த கந்தரோடை ஒரு பண்டமாற்று நிலையமாகவும், வர்த்தக நிலையமாகவும் வளர்ச்சி பெற்று, நகரமாகி முன்னேற்றமடைந்தது. அங்கு வாழ்ந்த மக்கள் இந்தியா, உரோமப் பேரரசு, அராபியா, சீனா ஆகியவற்றோடு வாணிப வர்த்தக உறவுகளை ஏற்படுத்தியிருந்தனர். கந்தரோடையின் பூர்வீகம், உற்பத்தி, பன்னாட்டு வாணிபத் தொடர்புகள் என்பன அநுராதபுரம், மாகமை என்பனவற்றுக்கு உரியனவற்றோடு ஒப்பிடக் கூடியனவாகும்.

11767.S.C

### பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் அரும் பொருட்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறையினர் உருவாக்கிய அருங்காட்சியகத்து அரும் பொருள்கள் யாழ்ப்பாணம், தீவுபற்று, கிளிநொச்சி ஆகியவற்றின் பூர்வீக வரலாறு பற்றிய ஆய்வுகளிற் சிறப்பிடம் பெறுகின்றன. அங்குள்ள தொல்பொருள்கள் அனைத்தும் 1990ஆம் ஆண்டு முதலாக நடைபெற்ற மேலாய்வுகளிற் கிடைத்தவை. அவற்றிலே கலவோடுகள் குறிப்பிடத்தக்கவை. அவை பெரும்பாலும் கந்தரோடை, வேலணை, நெடுந்தீவு, பூநகரி, இரணைமடு முதலான இடங்களிற் கிடைத்தவை. அவை வெவ்வேறு காலப்பகுதிகளுக் குரியவை. சில உள்ளூரில் உற்பத்தியானவை. ஏனையவை வெளி நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை. அவை இந்தியா, சீனா, உரோமப் பேரரசின் மாநிலங்கள், அராபியா போன்றவற்றிலிருந்தும் வந்துசேர்ந்தவை.

இவற்றை அண்மைக் காலத்திலே ஜேர்மனியரான தொல்லிய லாளர் இருவர் ஆராய்ந்து அவற்றின் காலத்தைக் கணிப்பிட்டுள்ளனர். தென்னிலங்கையில் அக்குறுகொட, அம்பாந்தோட்டை ஆகிய இடங் களில் அவர்கள் அகழ்வாய்வுகளை நடத்தியுள்ளனர். பல்கலைக் கழகத்து அருங்காட்சியகத்திலுள்ள, இரணைமடு, பூநகரி, சாட்டி, நெடுந்தீவு ஆகிய இடங்களிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கலவோடு களையும் வேறு அரும் பொருட்களையும் ஆராய்ந்த பின்பு, யாழ்ப் பாணத்திலே, கந்தரோடையில் மட்டுமன்றி வேறு பல இடங்களிலும், பூநகரி, கிளிநொச்சி ஆகியவற்றிலும் மிகப் புராதனமான குடியிருப்புகள் இருந்தன என்ற முடிபுக்கு வந்துள்ளனர்.[12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

கந்தரோடையிற் கிடைத்த மட்கலங்களை ஆராய்ந்த வைஸர், கந்தரோடையின் ஆதியான குடியிருப்புகள் கி.மு. 400க்கு முற்பட்டவை என்று கருதுகிறார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வேறு பகுதிகளிலும் இவ்வாறான குடியிருப்புகள் ஏற்பட்டிருந்தன என்பது அவரின் முடிபாகும். பல்கலைக்கழகத்து அருங்காட்சியகத்திலுள்ள தொல்பொருட்களின் அடிப்படையில் அவர் இந்த முடிவுக்கு வந்தார்.[13]

இலங்கையிலே, யாழ்ப்பாணம் முதலான வடபிராந்தியங்களிற் கிடைத்த மிகப் பழைமையான கலவோடுகள் பெருங்கற் பண்பாட்டுக் காலத்திற்கு உரியவை. அக்காலப் பண்பாட்டு மரபுகள் ஏறக்குறைய கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை நிலைபெற்றன. அப்பண்பாட்டின் இறுதியான காலகட்டத்திலே மத்தியதரைக் கடலைச் சூழ்ந்த பகுதிகள் உரோமப் பேரரசாக எழுச்சி பெற்றிருந்தது. உரோமப் பேரரசில் அடங்கிய ஆபிரிக்க, மேற்காசிய தேசங்களிலுள்ள வணிகர்கள் இந்தியாவின் கரையோரப் பட்டினங்களுக்கு வந்தனர். உரோமப் பேரரசிற்கும் தென்னாசிய சமூகங்களுக்கும் இடையிலும் வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டு வலுப்பெற்றன. அவற்றின் அடையாளமாக உரோமப் பேரரசின் பாகங்களில் உற்பத்தியான மட்கலன்கள், சாடிகள், நாணயங்கள் முதலானவை எமது உபகண்டத்தின் பகுதிகளிற் கிடைத்துள்ளன. மாதோட்டம், யாழ்ப்பாணம், பூநகரி ஆகியவற்றிலும் அவை குறிப் பிடத்தக்க அளவிற் கிடைத்துள்ளன. றூலெற்று மட்பாண்டங்கள் என்று கொள்ளப்படுவன உரோமப் பேரரசில் உற்பத்தியானவை. அந்த வகைக்குரிய மட்கலத் துண்டங்கள் கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, சாட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆய்வுகளிலும் கிடைத்தன. அவை பெருங்கற் பண்பாட்டு இறுதிக் கால கட்டத்துக்குரிய படைகளிலும் காணப்பட்டுள்ளன.[14]

தமிழகத்திலே அரிக்கமேடு, வசவ சமுத்திரம், கொடுமணல் போன்ற இடங்களிலும் இலங்கையில் அநுராதபுரத்திலும் அவை அந்த வண்ணமாகக் காணப்பட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து அருங்காட்சியத்திலுள்ள றூலெற்று மட்பாண்டங்களின் கூறுகள் கி.மு. முதலாம் நூற்றாண்டுக்குரியவை என்று ஜேர்மன் ஆய்வாளரான வைஸர் நிர்ணயம் செய்துள்ளார். இந்த அருங்காட்சியகத்தில் உரோம உற்பத்தியான அம்போரா என்ற வகைக்குரிய மதுச்சாடியின் உடைந்த பாகங்களும் உள்ளமை குறிப்பிடற்குரியது.[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***யாழ்ப்பாணத்திலே தமிழ்மொழி பரவியமை***

தமிழ்மொழி பெருங்கற் பண்பாட்டுடன் தொடர்புடையது என்பது வரலாற்றுச் சான்றுகளினால் நிரூபணமாகின்றது. மட்பாண்டங்களிற் பெயர்களை எழுதுகின்ற முறை பெருங்கற் பண்பாட்டுக்குச் சிறப் பாகவுள்ள அம்சமாகும். கொடுமணல், அரிக்கமேடு போன்ற இடங் களில் அகழ்வுகளிற் கிடைத்த, அப்பண்பாட்டுக்குரிய மட்கலங்களிற் தமிழரின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது.

தமிழ்நாட்டிலே காணப்படும் தமிழ்ப் பிராமிச் சாசனங்களும் ஆதியான தமிழ் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களும் பெருங்கற் பண்பாட்டுக் காலத்தின் இறுதிப் பகுதியான கி.மு.300 - கி.பி.200 ஆகிய காலப்பகுதிக்குரியனவாகும். இலங்கை யிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் அதற்கண்மையிலுள்ள பகுதி களிலும் தமிழ் மொழி வழக்குப்பற்றிக் கிடைக்கும் சான்றாதாரங் களைக் குறிப்பிடுவதற்கு முன் பேராசிரியர் கா. இந்திரபாலா மேல் வருமாறு சொல்வனவற்றை இங்கு கவனிப்பது அவசியமாகும்:

> வட இந்தியாவிலிருந்து புதிய பண்பாட்டுச் செல்வாக்குப் பரவிய போது பிராகிருதமும் சமஸ்கிருதமும் பரவியது போல, தென்னிந்தி யாவிலிருந்து ஆ.இ.கா.பண்பாடு பரிவிய போது தமிழும் பரவியது.... ஆதி வரலாற்றுக் காலம் தொடங்கும் கட்டதிலேதான் தமிழ்மொழி தென்னிந்தியாவில் எழுச்சி பெற்றிருந்தது என்று கூறக்கூடிய நிலை காணப்படுகின்றது. வரலாற்றுத் தொடக்க காலத்தில் தூர தென்னிந்தி யாவிலே (தமிழ்நாடு, கேரளம்) பேசப்பட்ட மொழிகளுள் தமிழ் மொழி மேலோங்கி வளரத் தொடங்கியது எனலாம். சங்கச் செய்யுள் களுட் காலத்தால் முற்பட்டவை பொ.ஆ.மு.இரண்டாம் நூற்றாண்டு அளவில் இயற்றப்பட்டவை என்று பொதுவாக ஆய்வாளர் கருதுவர். இதன்படி, இத்தகைய இலக்கியத் தரத்தைத் தமிழ்மொழி அடை வதற்கு முன் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக் கால வளர்ச்சி தேவைப்பட்டிருக்கும் என்று கொண்டால் தமிழின் எழுச்சி பொ.ஆ.மு.ஐந்தாம் நூற்றாண்டளவில் தொடங்கியிருக்கும். அக் காலகட்டமளவில் இலங்கைக்கும் அம்மொழி பரவியிருக்கும் எனலாம்.[16]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மேலும் சொல்வார்:

> இலங்கைத் தீவை இரு பாதிகளாகப் பிரித்து நமக்குக் கிடைக்கும் ஆதி இரும்புக் காலத் தொல்லியல் சான்றுகளை ஆய்வு செய்தால் வடபாதிக்கும் தென்பாதிக்கும் இடையில் சில வேறுபாடுகளைக் காணலாம். தமிழ் நாட்டிலிருந்து பரவிய பண்பாட்டின் முக்கிய கூறுகளாகிய தாழி அடக்கங்கள், கரும்-செம் மட்பாண்டம், இரும்புக் கருவிகள், நெற்பயிர்ச் செய்கை மற்றும் நீர்ப்பாசன வசதி ஆகிய வற்றின் தொல்லியல் சான்றுகள் வடபாதியிற் கூடுதலாகக் காணப் படுகின்றன. தென்பகுதியில் ஒரு சில இடங்களில் மட்டுமே இச் சான்றுகளைக் காணமுடிகின்றது. இப்பண்பாட்டுக் கூறுகள் இலங் கையில் வாழ்ந்த இடைக் கற்கால மக்கள் மத்தியிற் பரவியபோது புலம்பெயர்ந்து வந்தோருடன் இனக்கலப்பும் ஏற்பட்டது எனலாம்.[17]

யாழ்ப்பாணக் குடாநாடு, பூநகரி ஆகிய பிரதேசங்களிலே தமிழ்மொழி பேச்சுவழக்கு மொழியாக இருந்தமைக்கு அங்கு கிடைத்த கலவோடு களிற் பொறித்த எழுத்துகள் சான்றாகின்றன. மட்கலங்களில் அவற்றின் உரிமைக்காரரின் பெயர்களை எழுதுவது வழக்கம். அவற்றைப் பெரும் பாலும் பேச்சு வழக்கான மொழியில் எழுதுவது வழமை. கள ஆய்வுகளிற் கிடைத்துள்ள கலவோடுகளிலே தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள எழுத்துக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது. அத்தகைய கலவோடுகளைக் கண்டெடுத்து ஆய்வு செய்த ப.புஷ்ப ரட்ணம் மேல்வருமாறு கூறுவார்:

> பூநகரியிற் கிடைத்த பெரும்பாலான மட்பாண்ட ஓடுகளில் இரண்டு மூன்று எழுத்துகளும், சில மட்பாண்ட ஓடுகளில் அரிதாக நான்கு எழுத்துகளும் உள்ளன. மட்பாண்டங்களில் எழுத்துப் பொறிக்கப் பட்டமைக்கு அதன் உரிமையாளரின் பெயரையும் இடத்தையும் சுட்டிக் காட்டுவது முக்கிய நோக்கமாக இருக்கலாமென்பதை மட்பாண்டத்தில் இடம்பெற்றுள்ள சில சொற்களை / பெயர்களைக் கொண்டு ஊகிக்க முடிகிறது. பெரும்பாலான எழுத்துக்கள் தமிழ்ப் பிராமியில் உள்ளன. இவற்றிலே தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுரிய ஈ, ம, ற, ன, ள, ழ, போன்ற எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. சில பெயர்கள் 'அன்', 'ன்' என்ற விகுதியோடு முடிகின்றன. இவை ஆட்பெயராக வருவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA


தினால் ஆண்மகனைக் குறிக்க 'அன்' என்ற விகுதி பயன்படுத்தப் பட்டுள்ளதைக் காட்டுகிறது. இந்த அம்சத்தைத் தமிழ்நாட்டில் கொடுமணல், அழகன்குளம், காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களிற் கிடைத்த மட்பாண்டங்களிலும் காணலாம். இவற்றிலிருந்து இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வட்டாரத்தில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந் துள்ளனர் என்பது தெரிகிறது.[18]

தமிழகத்திற் போல இலங்கையிலும் பாத்திரங்களிலும், நாணயங் களிலும் முத்திரைகளிலும் தமிழ்ப் பிராமியிற் பெயர்களை எழுதும் வழக்கம் காணப்பட்டது.[19] அந்த வழக்கம் பல விடங்களிற் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களோடு கலந்து காணப்படுகின்றமை ஒரு குறிப் பிடத்தக்க அம்சமாகும். ப.புஷ்பரட்ணமும், சே.கிருஷ்ணராஜாவும் கண்டெடுத்த தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள எழுத்துக்கள் பொறித்த கலவோடுகள் பெரும்பாலும் அப்பண்பாட்டிற்குரிய கரும்-செம் மட்பாண்டங்களின் துண்டங்களாகும். அவற்றில் ஓரிரு எழுத்துக்களின் அடையாளங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன.

ஐந்து இடங்களில் முழுமையான சொற்கள் கிடைத்தன. அவற்றி லொன்று கந்தரோடையிற் கிருஷ்ணராஜா கண்டெடுத்த 'அபிசிதன்' என்ற பெயர் எழுதிய கலவோடாகும். எழுத்துகள் தமிழ்ப்பிராமி என்பதில் எதுவிதமான ஐயமில்லை. ஈற்றெழுத்து தமிழ்மொழிக்குத் தனியாகவுள்ள 'ன' என்பதாகும்.[20]

'அபிசிதன்' என்பது 'அபிசித' என்ற பிராகிருதச் சொல்லின் தமிழ் வடிவமாகும். அதன் உபயோகத்தை இருவிதமாக விளக்கலாம். ஒன்று, அது எதுவிதமான சிறப்பான காரணமுமின்றிப் பெற்றோர் தங்கள் பிள்ளைக்கு இடப்பட்ட பெயர் என்பதாகும். மற்றது, அது அபிஷித்த என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு நிகரான அபிசித என்ற பிராகிருதச் சொல்லின் தமிழ் வடிவம் என்பதாகும். அவ்வாறாகில் அச்சொல்லில் ஒரு பெருங்கதை அடங்கியுள்ளது. அது ஞானஸ்நானம் பெற்ற ஒருவரின் பட்டப் பெயராகக் கொள்ளத்தக்கது. அந்த வகையில் அது பௌத்த சங்கத்திலுள்ள ஒருவரின் பெயராகும். அபிசிதன் என்னும் பெயர் எழுதப்பட்ட கலவோடு ஒருவரின் பிக்ஷாபாத்திரத்தின் துண்டமாதல் கூடும். அது பிக்ஷாபாத்திரமொன்றின் துண்டமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அபிசிதன்' என்ற பெயர் எழுதிய கலவோடு
(நன்றி: செ. கிருஷ்ணராசா)

கொள்ளப்படுமாகில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலே வாழ்ந்த தமிழர் சிலர் பௌத்தராகிவிட்டமைக்கு அது சான்றாகும். அது மட்டுமன்றி அவர் களிற் சிலர் சங்கத்தாராக இருந்தனர் என்பதும் அதனால் உணரப் படும்.

கந்தரோடையிற் கிடைத்த இன்னொரு கலவோட்டில் ததஹ பத என்ற சொற்கள் எழுதப்பட்டுள்ளன.[21] த(த்)தனுடைய பாத்திரம் என்பது அவற்றின் பொருளாகும். பாத்திரத்தின் உரிமைக்காரனின் பெயர் த(த்)தன் என்பது குறிப்பிடற்குரியது. சொற்றொடர் பிராகிருத மொழியில் அமைந்தது. அம்மொழியில் ஒற்றுக்கள் இரட்டிப்பதில்லை. எனவே தத்த(ன்) என்ற பெயரை தத என்று எழுதியுள்ளனர். ஆனால் இந்தப் பெயர் தத்த என்ற சமஸ்கிருத வடிவமாகில் அது த என்ற த வர்க்க எழுத்துக்களில் மூன்றாவது எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் இங்கு அதற்குப் பதிலாக அவ்வர்க்க எழுத்துக்களில் முதலாம் எழுத்தான த என்பதே காணப் படுகின்றது. எனவே தமிழ் வடிவமான தத்தன் என்பது கலவோட்டிலே த(த்)த என்று எழுதப்பட்டுள்ளது எனக் கருதவேண்டியுள்ளது. தத் தனுடைய கலம் என்பதைப் பிராகிருதத்தில் மொழிபெயர்க்குமிடத்து அது ததஹ பத என்றாகிவிடும். அக்காரணத்தாற் குறிப்பிட்ட சொற்கள் எழுதிய கலவோட்டை தத்தன் என்பவனுடைய பாத்திரத்தின் துண்ட மெனக் கொள்ளலாம். அந்தப் பாத்திரம் எதற்காகப் பயன்படுத்தப் பட்டது என்பது பற்றி எதனையுங் கூறவியலாது. சமகாலத்திலே, தென்னிலங்கையிலே புழக்கத்திலிருந்த கலம் ஒன்றிலே புழைதி முறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதப்பட்டிருந்தது. இவ்வெழுத்துக்கள் பொறித்த கலவோடு கொடவய என்னும் புராதனமான பட்டினத்தின் பகுதியில் அண்மைக் காலத்திற் கண்டெடுக்கப்பட்டது.[22]

தமிழ்ப்பிராமி வடிவங்களில் எழுதிய வாசகம் அடங்கிய நாணய மொன்றும் கந்தரோடையிலிருந்து கிடைத்தது. வடிவங்களின் அடிப் படையில் அது கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்குரியதெனக் கொள்ள லாம். அதிலுள்ள இரண்டு சொற்களைப் பேராசிரியர் வி.சிவசாமி நாகபொலம் என்று வாசித்துள்ளார்.[23]

புகைப்படத்தைப் பார்க்குமிடத்து அவரின் கணிப்புச் சரியான தென்று எமக்குப் புலப்படுகின்றது. அந்தச் சொற்கள் பொறிக்கப்பட்ட அரும்பொருளை நாகர்குலத்து அரசனொருவன் வழங்கிய நாணயம் என்று கருதலாம். அவ்வாறாகில் அந்நாட்களில் இலங்கையின் வட பகுதிகளில் வாழ்ந்த நாகர் தமிழ்மொழி பேசினார்கள் என்றும், அவர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையவர்கள் என்றும் கொள்ளலாம்.

**ஆனைக்கோட்டையிற் கிடைத்த முத்திரை**

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பெருங்கற் பண்பாட்டுத் தலங்களிற் கந்தரோடைக்கு அடுத்த சிறப்பு ஆனைக்கோட்டைக்குரியது என்பது சிலரின் கருத்தாகும். அங்கு கிடைத்த முத்திரை பற்றி கா.இந்திரபாலா மேல்வருமாறு கூறுவார்:

> ஆதி இரும்புக் காலத் தலங்களில் அடுத்ததாக முக்கியத்துவம் பெற்றுள்ள இடம் ஆனைக்கோட்டை எனலாம். இவ்விடத்தில் 1980இல் முக்கியமான ஒரு சவ அடக்கமும் பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன. இங்கு அடக்கம் பெற்றுள்ளவர் ஒரு குறுநிலத் தலைவனாக அதிகாரம் செலுத்தியதுடன், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தமைக்கு அவரது முத்திரை சான்றாக உள்ளது. இதன் அடிப்படையில், இவர் அடக்கம் செய்யப் பட்டுள்ள, ஆனைக்கோட்டைப் பகுதி ஒரு குறுநிலத் தலைவனின் அதிகார பீடமாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. அல்லது, கந்தரோடையில் அதிகார பீடமாகக் கொண்ட குறுநிலத் தலைவன் ஆனைக்கோட்டைப் பகுதியில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான துறை ஒன்றைத் தன் ஆணைக்கு உட்படுத்தி யிருக்கலாம்.[23]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துகள் முத்திரையிலுள்ள எழுத்துக்களின் விளக்கத்தை அடிப் படையாகக் கொண்டவை. முத்திரையில் இரண்டு வரிகளில் எழுத் துக்கள் அல்லது குறியீடுகள் போன்ற அடையாளங்கள் தெளிவாகத் தெரிகின்றன. கீழ்வரியில் கோவேத என்று இடமிருந்து வலமாக மூன்று எழுத்துக்கள் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. மேல்வரியில் இடமிருந்து வலமமாக திரிசூலம் போன்ற இரு குறியீடுகளும் வெட்டப் பட்ட நிலையிற் காணப்படுவதைப் போன்ற ஒரு எழுத்தின் கூறும் தெரிகின்றன.

இம்முத்திரையிலுள்ள எழுத்துக்களைப் பற்றி முதன்முதலாக விளக்கமளித்துள்ள பேராசிரியர் கா. இந்திரபாலா மேல்வருமாறு எழுதினார்:

> பிராமியில் எழுதிய சாசனத்தில் மூன்று எழுத்துக்களும் ஒரு அநுஸ்வாரமும் காணப்படுகின்றன. முதலாம் எழுத்தின் எல்லா அம்சங்களையும் மிக அவதானமாகக் கவனிக்குமிடத்து அவை தொடக்கத்திற் சில பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றபொழுதிலும் அவை மிக நெருக்கமாக, ஒரு சிறிய இடத்தில் எழுதப்பட்டுள்ளன. முதலாவது எழுத்தை வாசிக்க முற்படுமிடத்துச் சில கஷ்டங்கள் இருப்பினும் அதன் எல்லா அம்சங்களையும் கூர்ந்து அவதானிக்கு மிடத்து அது கோ என்ற உயிர்மெய் எழுத்தென்பது தெரிகின்றது. இரண்டாம் எழுத்தை வே என்றும் அடயாளங் காணமுடிகின்றது. த என்னும் எழுத்தின் மேல் ஒரு புள்ளியோ அநுஸ்வாரமோ தெரிகின்றது. இச் சொல்லினை இரண்டு விதமாக அடையாளப் படுத்தலாம். அது அநுஸ்ரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதனைத் த விற்கு முன்ன தாகக் கொண்டால் சாசனத்தைக் கோ வேந்த என வாசிக்கலாம். அநுஸ்வாரத்தைத் த விற்குப் பின்னுள்ள தாகக் கொண்டால் வாசகத்தை கோவேந்தன் எனக் கொள்ளமுடியும். எவ்வாறாயினும் அது திராவிட மொழியிலுள்ளதாகும். இரண்டு வாசகங்களும் ஒரே விதமானவை.[24]

இந்த விளக்கத்திலே அடிப்படைப் பிரச்சினைகள் உண்டு. ஒன்று அனுஸ்வாரம் பற்றியது, இரண்டாவது ஆனைக்கோட்டை முத்தி ரையில் இருமொழிச் சாசனம் எழுதப்பட்டுள்ளது என்ற சிந்தனை. முத்திரையிலே கோவேதன் என்ற பெயர் திராவிட (தமிழ்) மொழியில் அமைந்துள்ளது என்று பேராசிரியர் கா.இந்திரபாலா சொல்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை முத்திரை
(மூலம்: P. Ragupathy, *Early Settlements in Jaffna: An Archaeological Survey.*)

பொருத்தமானது. அது மறுப்பதற்குரியது மன்று. ஆனால் அனுஸ்வாரம் பற்றியும் இருமொழி வாசகம் பற்றியும் அவர் கூறும் விளக்கங்கள் அவ்விதமானவை போலத் தெரியவில்லை. வாசகம் தமிழில் அமைந்திருப்பின் புள்ளியை அநுஸ்வாரமாகக் கொள்ளவியலாது. அநுஸ்வாரம் சமஸ்கிருத மொழி வழக்கிலுள்ளது. தமிழ்மொழி ஆவணங்களில் அது இடம்பெறுவதில்லை. இலக்கண நூலாசிரியர்களும் அதனைப் பற்றிச் சொல்வதில்லை. தொல்காப்பியம் புள்ளி இட வேண்டிய இடங்களைப் பற்றியே குறிப்பிடுகின்றது. அனுஸ்வாரம் பற்றியோ அதனைப் போன்ற வேறொன்றைப் பற்றியோ அவர் குறிப்பிடவில்லை. கோ என்னும் எழுத்துக்குப் பின்னால் வரும் சொல்லை வேந்தன் என்று கொள்வது எவ்வாறு பொருந்தும்? ஒரே பொருளுடைய இரு சொற்களை இரண்டு சொற்களை மட்டுங் கொண்ட வாசகத்திற் பயன்படுத்தினார்கள் என்று கொள்ளமுடியாது. எனவே கோ என்பதை பதவியினைக் குறிக்குஞ் சொல்லாகவும் வேதன் என்பதை முத்திரையின் உடைமைக்காரனது பெயராகவும் கொள்வதே பொருத்தமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கமாகும். கோ என்பது தொடக்க நிலையில் குறுநிலப் பிரிவுகளின் அதிபருக்குரிய பதவிப்பெயராக வழங்கியது. பிற்காலங்களில் அரசரையும் சக்கரவர்த்திகளாயினோரையும் கோ என்று அவர்களின் ஆவணங்கள் குறிப்பிட்டன.[25]

கோ வேதன் என்ற தொடரில் வரும் இரண்டாவது சொல்லான வேதன் என்பது ஒருவனின் இயற்பெயராதல் வேண்டும். தென்னிலங்கையில், அகுறுகொட என்னும் இடத்திலே கிடைத்த, தமிழ்ப்பெயர்கள் பொறித்த நாணயங்களையும் இங்கு கவனிப்பது அவசியமாகின்றது. அவற்றிலே திஸ, பரத திஸ, உதிரன், மகாசாத்தன், கஜபன், திஸபுரதா(ட்)ட நாகரசந் என்ற பெயர்களே எழுதப்பட்டுள்ளன.[26]

பொதுவாக நாணயங்கள், முத்திரைகள், மோதிரங்கள், மட்கலன்கள் என்பவற்றிலே உரிமைக்காரரின் பெயர்களையும், சில சமயங்களில், அவற்றோடு மேலதிகமாகப் பதவிப்பெயர்களையும் எழுதுவது வழமை.[27] ஆகையால் ஆனைக்கோட்டை முத்திரையிலுள்ள கோ வேதன் என்னும் சொற்களில் வேதன் என்பதை ஒருவனின் இயற்பெயராகவும் கோ என்பதை அவனுக்குரிய பதவிப் பெயராகவும் கொள்வது ஒரு பொருத்தமான முடிபாகும்.

கோ வேதன் என்ற வாசகத்தை எவ்வாறு உறுதிப்படுத்தலாம் என்பதும் விசாரத்திற்குரியதாகும். முத்திரையிலுள்ள மேல்வரியிற் காணப்படும் சித்திரங்களைச் சித்திர எழுத்துகளாகக் கொள்வது வெறுங் கற்பனையாகும். அவற்றில் வலமிருந்து இடமாகவுள்ள இரண்டு வடிவங்களும் குறியீடுகளாகவே கொள்ளத்தக்கவை. கேரளத்திலுள்ள எடகல் என்னுமிடத்திற் கடும்மி புத சேர என்ற வாசகத்தைத் தொடர்ந்து திருசூலம் போன்ற அடையாளம் அமைந்துள்ளது. அதனைத் தமிழ் நாட்டுத் தொல்லியல் துறையினர் ‘பனைமரம்’என்று கொள்ளத்தக்க குறியீடு என்று குறிப்பிட்டுள்ளனர்.[28]

ஆனைக்கோட்டை முத்திரையில் குறியீடுகள் மேல்வரியிற் காணப் படுகின்றபொழுதிலும் அவற்றைச் சாசனத்தின் இறுதியான வடிவங்கள் என்று கொள்வது பொருத்தமாகும். சாசனம் கீழ் வரியிலுள்ள வலப் பக்கத்து முதலெழுத்துகளுடன் ஆரம்பமாகின்றது. வலமிருந்து இடமாக வாசிப்பதன் மூலமே கோ வேத என்ற சொற்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. மேல் வரியைச் சாசனத்தின் தொடர்ச்சியாகக் கொண்டு இடமிருந்து வலமாக நோக்குமிடத்து அவ்வரியிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலெழுத்தைத் தமிழுக்குச் சிறப்பெழுத்தான ன வின் அடையாளம் என்று கொள்வதில் எதுவித சிரமமும் இல்லை. உலோகத் துண்டத்தின் எல்லைப்புறமான கோணத்தில் அது அமைந்திருப்பதால் எழுத்திற் குரிய ஒரு வளை கோட்டினை அதில் எழுத முடியவில்லை. இவ் வண்ணமாகச் சாசனத்தை நோக்குமிடத்து கோ வேதன் என்ற வாசகம் உறுதியாகின்றது. அதனையடுத்து அமைந்துள்ள வடிவங்கள் இரண்டும் எடகல்லிற் காணப்படும் சாசனத்திற் போலக் குறியீடுகளாக வருகின்றன. அவற்றைக் கோ வேதனின் பதவிக்குரிய இலச்சினைகள் என்று கருதலாம்.

ஆனைக்கோட்டை முத்திரையினை அடிப்படையாகக் கொண்டு கோ வேதன் வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்பதை எம்மாற் பரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அவனைப் பெருமகன் ஒருவனாகக் கொள்ள முடிகின்றது. கோ என்னும் அடைமொழி அவனது பெயரோடு இணைத்துள்ளதால் அவன் சிற்றரசனொருவன் என்பதை ஒப்புக் கொள்ளமுடியும்.

அந்த நிலையிலே, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனை அடுத்துள்ள தீவுபற்றிலும் ஆதி இரும்புக் காலத்திற்குரியதென்று கொள்ளப்படும் பெருங்கற் பண்பாட்டு மக்கள் ஏற்படுத்திய குடி யிருப்புகள், காலப்போக்கிலே, சிற்றரசுகளாக உருவாகத் தொடங்கி விட்டன என்பதற்கு ஆனைக்கோட்டையிற் கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த முத்திரையும் வேறு சின்னங்களும் தகுந்த ஆதாரங் களாகும்.

இறுதியாகப் பரமன்கிராயிற் கிடைத்த கலவோடொன்றிலே எழுதப் பட்டுள்ள வேளான் என்னும் சொல்லின் முக்கியத்துவத்தை இங்கு பரிசீலனை செய்வது அவசியமாகின்றது. அதனைப் பற்றி ப.புஷ்ப ரட்ணம் மேல்வருமாறு விளக்குகிறார்:

> தமிழ் நாட்டிலுள்ள கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாய்வின் போது பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய இரு மட்பாண்ட ஓடுகளில் வேள் என்ற சொல் பெறப்பட்டுள்ளது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் வேளிர் ஆட்சியின் தோற்றத்தைத் தொடர்புபடுத்தக் காரணமாக அமைகிறது. அண் மையில் இக்கட்டுரை ஆசிரியரால் வடஇலங்கையில் பூநகரி வட் டாரத்திலுள்ள பரமன்கிராய் என்ற இடத்தில் மேற்கொண்ட கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஆய்வின்போது பெருங்கற்கால மட்பாண்ட ஓடொன்றில் வேள் என்ற சொல் பெறப்பட்டது. இம்மட்பாண்ட ஓடு உடைந்த நிலையிற் காணப்படுவதனால் இதை ஒரு முழுச் சாசனமாகக் கொள்ளமுடிய வில்லை. ஆனால் இதில் எஞ்சியுள்ள எழுத்துக்களைக் கொண்டு இச்சாசனத்தை வேள் அல்லது வேளா என வாசிக்கமுடிகின்றது. தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளர்களில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் இதை வேளான் என வாசித்து, சங்ககாலத்தை ஒத்த வேளிர் அல்லது வேளார் கி.மு. 3-2 ஆம் நூற்றாண்டில் பூநகரியில் வாழ்ந்ததை இச்சாசனம் உறுதிப்படுத்துவதாகக் கூறியுள்ளார்.[29]

கலவோட்டிலுள்ள எழுத்துக்களை மகாதேவன் வேளான் என்று அடையாளங் கண்டுள்ளமையினை ஒப்புக் கொள்வதைத் தவிர்க்க முடியாது போலவே தோன்றுகின்றது.

### ஆதிகாலப் பொருள் வளமும் பண்பாடும்

யாழ்ப்பாணத்தின் பூர்வகாலக் குடியிருப்புகள் கி.மு. ஆறாம் நூற்றாண் டிற்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை என்பது தொல்பொருட் சின்னங்கள் மூலம் தெளிவாகின்றது. இக்காலத்துச் சின்னங்களிற் பெரும்பாலானவை தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சங்களைப் பெருமளவிலே கொண்டவை. யாழ்ப் பாணத்திலும் தீவுபற்றிலும் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. அங்கு வருடம் முழுவதும் நீர் பாயும் ஆறுகளோ நீரோடைகளோ அமைந்திருக்கவில்லை. இயல்பாக அமைந்த நன்னீர் ஏரிகளும் இல்லை. கோடை காலத்தில், மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நீர் நிலைகள் எல்லாம் வற்றிவிடும். மனிதரும், விலங்குகளும், பறவைகளும் அருங்கோடைப் பருவத்தில் அங்கு வாழக்கூடிய இயற்கைச் சூழல் காணப்படவில்லை. கற்கால மக்கள் நிலத்தை வெட்டிக் கிணறுகளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. இரும்புக் கருவிகளின் புழக்கத் தையும் உற்பத்தியினையும் அறிந்த மக்களால் மட்டுமே அங்கு குடியேறி வாழ முடிந்தது. நிலத்தை ஆழமாக வெட்டிக் குளங்களையும், கிணறுகளையும் உருவாக்குவதன் மூலமே ஜீவாதாரமான நீரினைப் பெற்றுக்கொள்ளலாம். அதில் அனுபவம் பெற்ற தென்னிந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலிருந்த பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் யாழ்ப்பாணத்திலும் தீவுபற்றிலும் பரவியபொழுது, வருடம் முழுவதும் நீரைப் பெறக்கூடிய வகையிலே சிறு குளங்களையும், கிணறுகளையும் உற்பத்தி செய்ய முடிந்தது. அவர்களை அண்டி அங்கு விலங்குகளும், பறவைகளும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையின் ஏனைய பிரதேங் களிலிருந்தும் மந்தைகளும் வீட்டு வளர்ப்புக்குரிய பறவைகளும் அங்கு கொண்டுசெல்லப்பட்டன. இயல்பாகவே மந்தை வளர்ப்புக்கு வேண்டிய புற்றரைகள் காணப்பட்டன. இயற்கை வளங்களை வாழ்க்கை ஆதாரமாகப் பயன்படுத்தக்கூடிய ஆற்றலை அம்மக்கள் கொண்டி ருந்தனர். ஆரம்பத்திலே கடல் வளங்களைப் பயன்படுத்தும் நோக்கத் துடனேயே பெருங்கற் பண்பாட்டு மக்கள் அங்கு சென்றிருக்க வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடும் தீவுபற்றும் கூடுதலாகச் சோழ மண்டலக் கரைக்கு அண்மையில் இருப்பதால் வேதாரணியம், கீழக்கரை முதலான இடங்களிலிருந்தே கூடுதலான மக்கள் அங்கு சென்றிருக்கவேண்டும்.

இலங்கையின் வடமேற்குக் கரையோரத்திலும் வடகிழக்குக் கரையோரத்திலும் குடியேறிய பெருங்கற் பண்பாட்டு மக்களும் அவர்களின் பிற்சந்ததியினரிற் சிலரும் வடக்கிலுள்ள வளங்களைப் பற்றி அறிந்த பின் அங்கு சென்று குடியிருப்புகளை ஏற்படுத்தியிருக் கலாம். எனினும், பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் கடல் வழியாக நெடுந்தீவு, வேலணை, காரைதீவு என்பவற்றை அடைந்து, அங்கிருந்து குடாநாட்டுப் பகுதிகளை அடைந்தனர். அங்கு வல்லிபுரம், நாகர் கோயில், குடத்தனை, வெற்றிலைக்கேணி, அரி யாலை, யாழ்ப்பாணம் ஆகிய கரையோரப் பகுதிகளிலும் கந்தரோடை முதலான உள்ளூர்ப் பகுதிகளிலும் அம்மக்களின் ஆதியான குடி யேற்றங்கள் ஏற்பட்டன. இவற்றுள் 21ஆம் நூற்றாண்டுக்கு முன்பு கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் மட்டுமே அகழ் வாய்வுகள் நடைபெற்றன. 1970இல் கந்ரோடையில் நடைபெற்ற அகழ்வாய்வுகளைப் பற்றிய ஆய்வறிக்கை வெளிவரவில்லை. இந்த வருடம் கந்தரோடையிலும் யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியிலும் பாரிய அளவில் அகழ்வுகள் நடைபெற்றன. அவற்றைப் பற்றிய அறிக்கைகள் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற நூற்றாண்டில் மேலாய்வுகள் மூலமும் பல பூர்வகாலக் குடியிருப்பு மையங்களிற் கணிசமான அளவிற் கலவோடுகளும் அவற்றின் காலத்திற்குரிய வேறு சின்னங்களும் கிடைத்துள்ளன. இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்திற் பரவிய பெருங்கற் பண் பாட்டு அம்சங்களைப் பெரும்பாலும் அகழ்வுகளிற் கிடைத்த தொல் பொருட்கள் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். பெருங்கற்பண் பாட்டுச் சின்னங்கள் பெரும்பாலும் ஈமச்சடங்குகளோடு தொடர் புடைய கல்லறைகள், தாழிகள் முதலானவற்றிலிருந்தும் குடியிருப்புப் பகுதிகளிலிருந்தும் கிடைப்பவை. யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்திலே தான் இரண்டு குடியிருப்புப் பகுதிகளில் ஆய்வுகள் நடைபெற்றன. அதற்கு முற்பட்ட அகழ்வாய்வுகள் ஈமத் தலங்களில் நடை பெற்றவை.

பெருங்கற் பண்பாட்டு மக்கள் பொதுவாக இறந்தோரின் சடலங் களைப் புதைக்கும்பொழுது அவர்கள் அன்றாட வாழ்க்கையிற் பயன்படுத்திய உபகரணங்களைச் சடலத்தோடு புதைக்கும் வழக்க முடையவர்கள். இறந்தோரின் ஆவிகளுக்கு உணவுப் பண்டங்களைப் படைக்கும் வழக்கம் அவர்களிடையே காணப்பட்டது. ஈமக்கிடங்குகள், கல்லறைகள், தாழிகள் என்பவற்றிற் கிடைத்த பொருட்களின் மூலம் அவர்களின் வாழ்க்கைமுறை, பொருளாதாரம் என்பன பற்றிய அடிப் படை விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

பெருமளவிலே மட்பாண்டங்களின் பகுதிகள் வெவ்வேறான கோலங்களிற் கிடைத்துள்ளன. அந்த மட்பாண்டங்களும் பல வகைப் பட்டவை. அவற்றுட் சில உள்ளூர் உற்பத்திப் பொருட்கள். வேறு சில வெளிநாடுகளில் உற்பதியானவை, அவை வாணிபத்தின் மூலம் வந்து சேர்ந்தவை. அக்காலத்தில் மட்பாண்டங்கள் பல தேவைகளுக்குப் பயன்பட்டன. அவற்றை உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தினார்கள். உணவினை உண்பதற்கும் நீர் முதலிய பானங்களைக் குடிப்பதற்கும் உரிய கலன்களாகப் பயன்படுத்தினார்கள். உணவுப்பொருட்கள், தானியங்கள், எண்ணெய் முதலியவற்றைப் பேணுவதற்குரிய கொள் கலன்களாகவும் அவை பயன்பட்டன. அவை ஏராளமாகத் தேவைப் பட்டதால் அவற்றின் உற்பத்தி ஒரு முக்கியமான தொழிலாக வளர்ச்சி யடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கற் பண்பாட்டுக்கால மட்பாண்டங்களிற் கரும்-செம் மட்பாண்டங்கள் சிறப்பானவை. அவற்றை உற்பத்தி செய்யும் முறை அப்பண்பாட்டிற்குரிய சிறப்பம்சமாகும். யாழ்ப்பாணத்தில், இந்த வகையான மட்பாண்டங்களை உற்பத்தி செய்யும் மரபு கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை நிலைபெற்றது. பெருங்கற் பண்பாட்டு மக்கள் குடியிருப்புகளை ஏற்படுத்தியிருந்த பகுதிகளிற் கலவோடுகள் செறிந்து காணப்பட்டமையால் மட்பாண்ட உற்பத்தி ஒரு பிரதான தொழிலாக அவர்களின் மூலமாக வளர்ச்சியடைந்ததென்று கருதலாம்.

ஈமத்தலங்களிற் கிடைத்த மட்கலங்களிற் பல வகையான விலங்குகளின் எலும்புகளும் கடற்பிராணிகளின் எச்சங்களும் காணப்பட்டன. பல சாதி மாடுகள், எருமை, ஆடு, செம்மறி ஆகியவற்றின் எலும்புகள் பெருமளவிற் கிடைத்துள்ளன. அக்கால மக்கள் அவ்விலங்குகளின் மாமிசத்தை உண்ணும் பழக்கமுடையவர்கள் என்பது அவர்களின் ஈமப்படையல்கள் மூலம் தெளிவாகின்றது. மந்தை வளர்ப்பு அவர்களின் பொருளாதாரத்தில் ஒரு பிரதானமான அம்சம் என்பது உணரப்படுகின்றது. பால், தயிர், மோர், நெய் முதலானவற்றையும் அதன் மூலம் அவர்களாற் பெற்றுக்கொள்ள முடிந்தது. வயல் நிலங்களை உழுவதற்கும் வண்டிகளை இழுப்பதற்கும் அவர்கள் மாடுகளைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். அவர்களின் மந்தைகள் பூர்வீகத்தில் எங்கு உற்பத்தியானவை என்பது வருங்கால ஆய்வுகளின் மூலம்தான் தெரியவரும்.

பொதுவாக இலங்கையில் நெல் முதலிய தானியங்களின் உற்பத்தியும் வெள்ளாமை முறையும் பெருங்கற்காலப் பண்பாடு பரவியதன் விளைவாகவே அறிமுகமாகின. அதற்கு முன் இங்கு வாழ்ந்த இடைக்கற்கால மக்களாகிய குறிணிக் கற்கால மக்கள் பயிர்ச்செய்கையிலும் தானிய உற்பத்தியிலும் ஈடுபடவில்லை. யாழ்ப்பாணத்திலே, பிற்காலத்தில் வயல்கள் சூழ்ந்த பகுதிகளிற் பெருங்கற்பண்பாட்டு மக்களின் குடியிருப்புகள் ஏற்பட்டிருந்தமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாக உரிய தோட்டப் பயிர்ச்செய்கை முறையும் தானிய உற்பத்தி முறையும் கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய மக்களால் உருவாக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை. நிலவளம், தரைத்தோற்றம், காலபருவ நிலை என்பவற்றுக்கு ஏற்ற விதமான ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச்செய்கை முறையினை அவர்களால் உருவாக்க முடிந்தது. யாழ்ப்பாணத்திலே பூர்வ காலத்தில் வாழ்ந்த மக்கள் பலவகை மீன்கள், சுறா, சங்கு, மட்டி, நத்தை, கடலாமை முதலிய வற்றையும் உணவுக்குப் பயன்படுத்தினார்கள். சுறா மீன்களின் முது கெலும்புகளும், பல வகையான மீன்களின் முள்ளுகளும், சிப்பிகளும், ஆமையோடுகளும், நத்தை ஓடுகளும் இக்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைக்கும் இடங்களிற் பெருமளவிற் காணப்பட்டன.

உற்பத்தி முறை வளர்ச்சி பெற்றதால் பண்டமாற்று முறையும் வியாபாரத் தலங்களும் விருத்தியடைந்தன. அவற்றுட் சில நகரங் களாகின. யாழ்ப்பாணத்தின் நடுப்பகுதியில் அமைந்த கந்தரோடை பண்டமாற்று நிலையம் என்ற வகையிலே தனிச்சிறப்புடன் விளங்கியது. ஒரு வாணிபத்தலம் என்ற வகையில் அது சர்வதேசப் பரிமாணத்தைப் பெற்றது. தென்னிந்திய உற்பத்தியுடைய பெருமளவிலான நாண யங்கள் முதலான சின்னங்களும் உரோமரின் காசுகளும், சாடிகளும் அவர்களின் றூலெற்று மட்கலன்களும் அங்கு புழக்கத்தில் இருந்தன. வட இந்தியாவில் உற்பத்தியான, பளபளப்பான மணிகளும் சில மட்கலங்களின் துண்டங்களும் அங்கு கிடைத்தன.

கந்தரோடைக்கு நிகரான நிலையினை அதற்குச் சற்று பிந்திய காலத்தில் உருவான யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியின் முன்னோடி யான குடியிருப்பு அடைந்துவிட்டது. அண்மையில் அங்கு நடைபெற்ற அகழ்வாய்வு பற்றிய அறிக்கை வெளிவருமிடத்து அதனைப் பற்றிய விபரங்கள் வெளியாகும்.

தென்னிந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான வாணி பத்திலும் கடல்வழிப் பாதைகளிலும் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் யாழ்ப்பாணம் அமைந்திருந்தது. அதனால் அங்கு வாழ்ந்தவர்களில் ஒரு பிரிவினரான வணிகர் இலங்கைக்கும் தென்னிந் தியாவிற்கும் இடையிலான வாணிபத்திற்கு பெரும் பங்குகொள்ள முடிந்தது. வெளிநாட்டுப் பொருள்களும் அங்கு வந்து சேர்ந்தன. வாணிபத்தின் காரணமாக நகரங்களிற் பண்பாட்டு பரிவர்த்தனை ஏற்பட்டது. குடாநாட்டிலும் தீவுபற்றிலுமுள்ள பெரும்பாலான மீன்பிடித் துறைகளும் துறைமுகங்களும் அக்காலத்தில் உற்பத்தியானவை. யாழ்ப்பாணக் கடலேரியூடாகத் தென்பகுதியிலுள்ள பூநகரியோடு தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. அதேசமயம், சிறிது பிற்பட்ட காலத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கு நோக்கிச் செல்வதற்கு ஆனையிறவினூடாகத் தரைவழிப் பாதைகள் உருவாக்கப்பட்டன. சில துறைமுகங்கள் தென்னாசியாவில் நடைபெற்ற பிராந்திய வாணிபத்தின் பிரதானமான நிலையங்களாக வளர்ச்சி பெற்றன. சம்புத்துறையிலிருந்து சோழ மண்டலக்கரை வழியாக வங்காளத்துக் கரையோரப் பட்டினம் தாம்ரலிப்தி வரை வணிகக் கப்பல்கள் சென்றன.

தூர தேச வாணிபத்தின் காரணமாகத் தொடர்பு மொழியான பிராகிருதம் யாழ்ப்பாணத்துப் பூர்வகுடிகளிடையே அறிமுகமாகியது. கலவோடுகளிற் காணப்படும் எழுத்துப் பொறிப்புகள் மூலம் தமிழ் பெரும்பாலானோரின் பேச்சுமொழியாகிவிட்டது என்பதையும் அறிய முடிகின்றது. இக்காலத்திலே பௌத்த சமயமும் பரவத்தொடங்கியது. பிந்திய காலத்தில் அது கணிசமான அளவில் வளர்ச்சியடைந்தது.

### அடிக்குறிப்புகள்

1. சி. பத்மநாதன், *ஈழத்து இலக்கியமும் வரலாறும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
2. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Pt.1, Colombo, 1978.
3. S.Paranavitana, "Vallipuram Gold Plate Inscription of Vasabha", *Epigraphia Zeylanica*, Vol . IV: No.29, pp. 220-237.
4. A.Veluppillai, *Buddhism Among the Tamilar in Tamilakam and Ilam*, Chief Editor: Peter Schalk, Vol.I, Uppsala.
5. ஏ.சுப்பராயலு, *தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி*, பகுதி I, சாந்தி சாதனா, சென்னை.
6. "யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தொல்லியல் தலங்களுள் மிகப் பழையது மட்டுமன்றி மிகப் பிரசித்தியுடைய இடம் கந்தரோடை ஆகும். நீண்ட காலமாகக் கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவம் பொதுவாக அறியப்பட்டிருந் தாலும், முதன் முறையாக 1970 இலே தான் முறையான தொல்லியல் அகழ்வாய்வு ஒன்று அங்கு நடத்தப்பட்டது. இந்த ஆய்வு அமெரிக்கப் பென்ஸில்வேனியாய் பல்கலைக்கழகத்து அரும்பொருளகத்தின் தலைமையில் நடத்தப்பட்டது. அறிவியல் அடிப்படையிலான அகழ்வாய்வாக அமைந்தாலும் இந்த ஆய்வின் முறையான அறிக்கை வெளியிடப்படவில்லை." கா.இந்திர பாலா, *இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (பொ. ஆ.மு.300-பொ.ஆ.1200)*, குமரன் புத்தக இல்லம், சென்னை / கொழும்பு, 2006, ப.105.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 1970இல் அமெரிக்காவின் பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகத் தொல்லியல் அரும்பொருளகம் பொம்பரிப்பில் அகழ்வாய்வு நடத்தியது. அது விமலா பெக்லி தலைமையில் நடைபெற்றது. அந்த ஆய்வுகளின் பயனாக ஆதி இரும்புக்காலப் பண்பாடு தென்தமிழ்நாடு வழியாக இலங்கையின் வடமேற்குக் கரைக்கு வந்து, அங்கிருந்து உட்புறமாகப் பரவியது என்பது தெளிவாகியது. கா.இந்திரபாலா, *இலங்கைத்தமிழர்*, பக். 100-101.

   Vimala Begley, "Excavations of Iron Age Burials at Pomparippu", 1970, *Ancient Ceylon* 4; 46 – 96.

8. P. Raghapathy, *Early Settlements in Jaffna: An Archaeological Survey*, Madras, 1987.

9. *மேலது*.

10. சாட்டியில் அகழ்வாய்வுகளை நடத்திய பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் இதனைப் பற்றி எமக்குச் சொன்னார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்து விஞ்ஞானபீட ஆசிரியர்கள் இந்த எலும்பினை விஞ்ஞானபூர்வமாகப் பரிசோதனை செய்து, அது குதிரையின் எலும்பு என்பதை அறிந்துள்ளனர்.

11. கந்தரோடையில் ஆய்வுகள் முடிந்தபின் கலாநிதி ஸிரான் தெணியகல, ஆய்வுகளின் மூலம் கிடைக்கக்கூடிய பெறுபேறுகளைப் பற்றிப் பத்திரிகை யாளருக்கு விளக்கமளித்தார். அவ்வேளையில் இவ் விபரங்களை அவர் வெளியிட்டார். அவற்றைக் 'கந்தரோடையின் பண்பாடு பெருங்கற் காலத்திற் குரியது: 2,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என ஆய்வில் நிரூபணம்' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகையில் 21 ஜூன் 2011 செவ்வாய்க்கிழமை வெளி யிட்டனர்.

12. ப.புஷ்பரட்ணம், 'யாழ்.குடாநாட்டின் 2500 ஆண்டு கால வரலாற்றை வெளிச்சம் போட்டுக் காட்டும் புராதன மட்பாண்டங்கள்', *தினக்குரல்*, ஞாயிற்றுக்கிழமை, 24 ஏப்ரல் 2011.

13. *மேலது*.

14. *தினக்குரல்*, ஞாயிற்றுக்கிழமை, 24.04.2011.

15. *மேலது*.

16. கா. இந்திரபாலா, *இலங்கைத்தமிழர்.....*, பக்.137.

17. *மேலது*, பக்.138.

18. ப.புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2000, பக்.55.

19. சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006, பக். XXIV.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. இந்தக் கலவோட்டை நேரிற் பார்க்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. சே.கிருஷ்ணராஜா அதை எமக்குக் காட்டினார்.

21. இலங்கையில் வாழ்ந்த தமிழரிடையே பௌத்தம் பரவியிருந்தமைக்குப் பிராமிச் சாசனங்கள் சான்றாயுள்ளன. தமிழர் என்று அவற்றிலே குறிப்பிடப் படும் எல்லோரும் பௌத்த சங்கத்தாருக்கு நன்கொடை வழங்கியுள்ளனர். தமிழகத்திலே கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முன் பௌத்தசமயம் பரவி யிருந்தமைக்கான உறுதியான சான்றுகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் இலங்கையிலே கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவிலே தமிழர் பௌத்த சமயத்திலே சேரத் தொடங்கிவிட்டனர். இலங்கையின் ஏனைய இடங்களிற் போல யாழ்ப்பாணத்திலும் இத்தகைய நிலை ஏற்பட்டமை இயல்பாக நடந்த ஒரு மாற்றமாகும்.

22. கலவோட்டிலுள்ள வாசகத்தை, ஐராவதம் மகாவேதன் இந்துப் பத்திரிகையில் 2011 ஜூன் மாதம் தனது விளக்கக் குறிப்புகளோடு வெளியிட்டார். கல வோட்டிலுள்ள சாசனத்திலே, இடப்பக்கத்தில் மூன்று எழுத்துகளிலமைந்த ஒரு சொல்லும், வலப்பத்தில் இரண்டு எழுத்துகளிலமைந்த ஒரு சொல்லுங் காணப்படுகின்றன. இரண்டு சொற்களுக்கும் இடையில் இரண்டு குறியீடுகள் காணப்படுகின்றன. சொற்கள் இரண்டும் கலப்பற்ற தூய தமிழ்ச் சொற்கள். முதலாவது சொல் புராதனமானது, இக்காலத்தில் அது வழக்கற்றுப் போய் விட்டது. இவற்றை ப.புஷ்பரட்ணம் புழைதி முறி என்று சரியாக வாசித்துள்ளார். புழை என்பது உள்ளே செல்லுதல், கடந்து செல்லுதல் என்னும் செயல்களைக் குறிக்கும். முறி என்பது ஒரு துண்டு என்று பொருள்படும். இச்சொற்கள் பொறிக்கப்பட்ட மட்கலம் என்ன தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதை ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். அது கடவுச் சீட்டுக்களை வைக்கும் பாத்திரம். ஏதோவிதமாகக் கடந்து செல்பவர்கள் காசு கொடுத்து அனுமதிச் சீட்டுகளை வாங்கினார்கள் என்று கொள்ளமுடிகின்றது.

23. K. Indrapala, "Anaikkottai Seal", *Early Settlements in Jaffna: An Archaeelogical Survey.*

25. கோ. பரகேசரிவர்மரான இராஜேந்திர சோழற்கு யாண்டு, கோ சிரி சங்க போதிவர்மரான உடையார் ஸ்ரீ விஜயபாகு தேவர்க்கு யாண்டு என்பன தக்க உதாரணங்களாகும். சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்*, பக். 404, 407.

26. ப.புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, பக் 32-33, 74.

27. *தமிழ்-பிராமி கல்வெட்டுகள்*, பதிப்பாசிரியர்: தி.ஸ்ரீ.ஸ்ரீதர், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை, சென்னை, 2006, பக். 83.

28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சி.பத்மநாதன், *இலங்கையித் தமிழ்ச் சாசனங்கள்*, 2006, பக். XIV.

30. பழந்தமிழ் இலக்கியத்திலும், தமிழ்ப்பிராமிச் சாசனங்களிலும் கோ, கோன் என்னுஞ் சொற்கள் குறுநில மன்னர்களையும் அரசரையும் குறிக்கும் பதவிப் பெயர்களாக வருகின்றன. புகளூரிலுள்ள மூன்று கல்வெட்டுகளில் மேல்வரும் வாசகங்கள் உள்ளன:

(1) கோ ஆதன் செல்லிரும் பொறை மகன்

(2) பெருங் கடுங்கோன் மகன் (இ)ளங்

(3) கடுங்கோ (இ)ளங் கோ ஆக அறுத்த கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# நாகநாடும் அதன் சமயநெறிகளும்

**நாகநாடு**

*'அணியிழை! நினக்கோர் அருந்துயர் வருநாள்*
*மணிமேலா தெய்வம் வந்து தோன்றிய,*
*அன்றப் பதியில் ஆரிருள் எடுத்துத்*
*தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்*
*வேக வெந்திறல் நாகநாட்டரசர்*
*சினமாசு ஒழித்து, மனமாசு தீர்த்தாங்கு,*
*அறச்செவி திறந்து, மறச்செவி அடைத்து*
*பிறவிப்பிணி மருத்துவன் இருந்தறம் உரைக்கும்*
*திருந்தொளி யாசனம் சென்று கைதொழுதி'*[1]

'அருமையான பெண்ணே! உனக்குக் கொடிய துயரமொன்று வரும். அது ஏற்படும் நாளில் மணிமேலா தெய்வம் வந்து தோன்றி, உன்னை அவ்விடத்திலிருந்த, காரிருளிலே, எடுத்துச் சென்று, தென்றிசையிலுள்ள தீவொன்றிலே வைக்கும்.'

'அங்கு (தம்மிடையே முரண்பட்ட) பேராற்றல் கொண்ட நாகநாட்டு மன்னர் (இருவரும்) சினம் மறந்து அறவுரைகளைக் கேட்கும் வண்ணமாக, பிறவிப்பிணி என்னும் தீராநோயினைப் போக்க வல்லோனாகிய போதி மாதவன் இருந்து தர்மோபதேசஞ் செய்த 'ஒளிவிளங்கும் பீடத்தைத் தொழுவாயாக'.

இது பௌத்த நூலான மணிமேகலையில் வரும் கதை. அது பல பரிமாணங்களைக் கொண்டது. கதையாக அமைந்துள்ள பொழுதிலும் அதிற் சில வரலாற்று விபரங்கள் அடங்கியுள்ளன. இங்கு நாகநாடு பற்றிச் சொல்லப்படுகின்றது. அது காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலுள்ளது. அங்குள்ள அரசரைப் பற்றிய குறிப்பு கவனித்தற்குரியது. ஆனால் அவர்கள் புத்தபீடிகை பற்றித் தகராறு கொண்டனர் என்பது புனைகதை.

நாகநாட்டரசர்க்குப் புத்தர் பெருமான் இருந்து அறம் போதித்த பீடிகை கடல் சூழ்ந்த தீவொன்றில் இருந்தது. அது மணிபல்லவம் என்று சொல்லப்படுகின்றது. அது தென்றிசையிலே, தமிழகக் கரை யோரத்திலிருந்து முப்பது யோசனை தூரத்தில் உள்ளது என்பது மேல்வரும் வரிகளால் உணரப்படுவது:

*'பூங்கொடி தன்னைப் பொருந்தித்தழீ*
*அந்தரம் ஆறா, ஆறைந்து யோசனை*
*தென்திசை மருங்கில் சென்று, திரையுடுத்த*
*மணிபல்லவத்திடை, மணிமேகலா தெய்வம்*
*அணியிழை தன்னைவைத்து அகன்றது தான் என்'*[2]

கீழே நாகநாட்டின் அயலகம் பற்றியும் மணிமேகலையில் மேல் வருமாறு வர்ணிக்கப்படுகின்றது:

*ஆயிழை தன் பிறப்பு அறிந்தமை அறிந்த*
*தீவதிலகை செவ்வனம் உரைக்கும்,*
*ஈங்கிதன் அயலகத்து இரத்தினத் தீவத்து*
*ஓங்குயர் சமந்தத்து உச்சி மீமிசை*
*அறவியங்கிழவேந்தத்துன் அடியிணையாகிய,*
*பிறவி என்னும் பெருங்கடல் விடுஉம்*
*அறவி நாவாய் ஆங்குளது ஆதலின்,*
*தொழுது வலங் கொண்டு வந்தேன் ஈங்கும்*
*பழுதில் காட்சியிற் நன்மணிப்பீடிகை*
*தேவர்கோன் ஏவலிற் காவல் பூண்டேன்,*
*தீவதிலகை என் பெயர் -இது கேள்*[3]

மணிமேகலை தன் முற்பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தமையினைத் தெரிந்த தீவதிலகை சொன்னாள்: 'இங்கே, இதன் அயலகமான இரத்தின தீவம் உள்ளது. அங்குள்ள மிக உயர்ந்த சமந்தம் என்னும் மலையின் உச்சியிலே, அறக்கடவுளாகிய புத்தர் பகவானின் பாதச்சுவடுகள் உள்ளன. அவை வழிபடுவோரைப் பிறவிப்பிணி என்னும் சாகரத்தி லிருந்து கரைசேர்க்கும் நாவாய் போன்றவை. ஆதலால் அவற்றைத் தொழுது இங்கு வந்துள்ளேன். தேவர்கோன் இந்திரனின் கட்டளைப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பீடிகையினைக் காவல் புரிகின்றேன். என் பெயர் தீவ திலகை.'

மணிமேகலையின் ஆசிரியரும் மகாவம்சத்தின் ஆசிரியரும் ஏறக்குறைய ஏக காலத்தவர். நாகநாட்டு மன்னர் புத்த பீடிகை தொடர் பாகத் தம்மிடையே சமர் புரிந்த கதை இரு நூல்களுக்கும் பொது வானது. அதுவும் பொதுவான பௌத்த இலக்கிய மரபிலுள்ள பழங் கதை யொன்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம். ஈழநாட்டுச் சமகால அரசியல் நிலைகளை மணிமேகலை ஆசிரியரான சாத்தனார் அறிந்திருப்பார் என்று கொள்வது பொருத்தமாகும். அவர் நாகநாடு, இரத்தினதீவம் என்னுமிரு இராச்சியங்களைக் குறிப்பிடுகின்றார்.[4]

இரத்தினக் கற்கள் மிகுதியாகக் கிடைத்ததால் இலங்கையினை இரத்தின தீவகம் என்று வர்ணித்தனர். அது இந்திய வணிகர் மூலமாக ஏற்பட்ட பெயர். மணிமேகலை அப்பெயரினை இலங்கையின் தென் பகுதிக்குரியதாகக் கொள்ளுகின்றது. வடக்கிலே நாகநாடு என்னும் அமைப்பொன்று தோன்றி நிலைபெற்றதால் இரத்தினதீவகம் என்பது அதன் அயலகமாக, தென்னிலங்கை சார்ந்ததாகக் கொள்ளப்படு கின்றது.

நாகநாடு என்பது கற்பனையில் எழுந்தவொரு சிந்தனையன்று, அதனைப் பற்றிய ஐதிகங்கள் புராணமுமன்று. நாகநாடு பற்றிய மணிமேகலையில் வரும் குறிப்புகள் பிற இலக்கியக் குறிப்புகளாலும் தொல்பொருட் சான்றுகளாலும் ஓரளவிற்கு உறுதியாகின்றன. அவற்றை விபரமாக ஆராய்ந்த பேராசிரியர் கா. இந்திரபாலா மேல்வருமாறு விளக்குவார்:

> பொதுவாண்டு 300 அளவில் யாழ்ப்பாண மாவட்டமும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடும் தொடர்ந்தும் நாகநாடு என்று வழங்கி வந்தன. நாகதீபத்தை (நகதிவ - நாகர் தீவகம்) பற்றிய ஒரு சாசனக் குறிப்பு மட்டுமே கிடைக்கின்றது. அது இந்த யுகத்தின் முதல் நூற்றாண்டுகளுக்கு உரியது. ஐந்தாம் நூற்றாண்டுக்குரிய பாளி மொழியிலுள்ள வரலாற்று நூல்களும், உரைநூல்களும், நாக தீபத்தைக் குறிப்பிடுகின்றன. அவற்றிலொன்று இப்பிரதேசத்துக் குறுநில அரசின் அதிபனை தீபராஜ என்று குறிப்பிடுகின்றது. (அது நாகராசனாகிய தீவகத்து அரசனைப் பற்றியதெனக் கொள்ளலாம்.) சமஸ்கிருதமயமான பெயர்களையுடைய அரசர் இருந்த நகரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகபுரம் பற்றியும் சொல்லப்படுகின்றது. இக்குறிப்புகள் முற் காலத்து மரபுகளை அடிப்படையாகக் கொண்டவை போலத் தெரிகின்றன.

கிரேக்க-ரோம வணிகர்கள் இரண்டாம் நூற்றாண்டில் நாக தீபத்தைப் பற்றிய சில விபரங்களைப் பெற்றுள்ளனர். தாம்ரபர்ணி யின் (இலங்கை) பிரதானமான கரையோரப் பட்டினங்கள் பதின்மூன்றினுள் நாகதீபமும் ஒன்றெனக் குளோடியஸ் தொலெமி தனது ஜியியோகிறபியா என்ற பிரசித்தமான நூலிற் குறிப்பிடு கின்றார். கிடைக்கின்ற இலக்கிய, சாசனக் குறிப்புகள் நாகதீபம் பற்றிய வரலாறு ஐயத்திற்கு இடமற்றது என்பதை உறுதிசெய் கின்றன. இலங்கையின் தூர வடக்கிலுள்ள ஒரு பகுதி நாகதீபம் என வழங்கியது என்பதும் அங்கு நாகர் என்போர் வாழ்ந்தமையின் காரணமாக அது உருவாகியது என்பதும் ஒப்புக் கொள்ளக் கூடியன வாகும். முன்பு குறிப்பிட்டது போல, இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட ஆதி இரும்புக்கால மக்கள் நாகராவர் என்று கருதும் ஸிரான் தெரணியகல, அவர்கள் இலங்கையின் வடக்கு, மேற்குப் பகுதிகளில் வாழ்ந்த, வேட்டையாடுதலையும் உணவினை இயற்கை யிலிருந்து சேகரிப்பதையும் வழக்கமாகக் கொண்ட குறுணிக் கற்கால மக்களை அகற்றிவிட்டுக் குடியேறினர் என்றும் கருதுவார்.[6]

நாகர் குறுணிக் கற்கால மக்களுக்குப் பிற்பட்டவர்கள், அவர்கள் இந்த இடங்களிற் பரவியர்கள் என்ற கருத்து அறிவியல் பூர்வமானது. நாகர் பௌத்தசமயம் பரவுவதற்கு முன்பு இலங்கையில் வாழ்ந்தவர்கள் என்பது 'மகாவம்சம்', 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' முதலான நூல்களில் வலியுறுத்தப்படுகின்றது. அவ்வாறாகில் பௌத்தசமயம் பரவுவதற்கு முன்பு, கி.மு.250 இற்கு முற்பட்ட காலத்தில் இலங் கையின் பல பாகங்களிலும் பரவிய பெருங்கற்காலப் பண்பாட்டுக்கும் நாகருக்கும் இடையிலே நெருங்கிய தொடர்பு உண்டென்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

நாகரைப் பற்றிய குறிப்புகள் பல பரிமாணங்களைக் கொண்டவை. சில விடயங்களில் நாக(ர்) என்பது ஒரு இனக்குழுவின் பெயராக வருகின்றது. வேறு சிலவற்றில் அது ஒரு குலப்பெயர் என்று கொள்ளும் வகையிலே காணப்படுகின்றது.[7] இன்னுஞ் சிலவிடங்களில் அது ஒருவரின் தனிப்பெயராக அமைந்துவிடுகின்றது. பிரதானமாகச் சாசனக் குறிப்புகளில் இந்த வேறுபாட்டை உணர்ந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சத்தைப் போல இயக்கரையும் நாகரையும் இலங்கையின் பூர்வகுடிகளாகக் கொள்ளுகின்ற 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' அவர்களுக்கிடையில் ஏற்பட்ட கலப்பினைப் பற்றி மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

*கலிகடந் தெண்ணூறாண்டில் கருதிய இலங்கை தன்னில்*
*வலியவ ரியக்க ரோடு கலந்தவர் மரபென்றாகி*
*நலிவில்லா நிருபஞ் செய்து நகரெலா மிறைகளென்ன*
*ஒலிவள ருகந்த மென்னும் நகரதிலுறைந்தார் நாகர்*[8]

இப்பாடல், ஆதிகாலத்திலே நாகர் உகந்தையில் இராச்சியம் அமைத்து அங்கு வாழ்ந்தனர் என்பதைக் குறிக்கின்றது. இலங்கையில் ஏற்பட்ட அரச உருவாக்கம் நாகருடன் தொடங்கியது என்ற கதையை அது பிரதிபலிக்கின்றது. அரசின் தோற்றம் பற்றிய விசாரத்தில் அக்கதை சிறப்பிடம் பெறக்கூடியது. இலங்கையிலே இரும்பின் உபயோகத்தை அறிமுப்படுத்திய பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களில் நாகர் அடங்கியிருந்தனர் என்று கொள்ள முடிவதால் 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' சொல்லும் கதை அறிவியல்பூர்வமானது என்பது தெளி வாகின்றது. நாகர் இயக்கரோடு கலப்புற்றனர் என்பதும் அவ்வண்ண மானது.

மிகவும் புராதனமான காலத்திலே இலங்கையின் கிழக்குக் கரை யோரப் பகுதியில் நாகர் ஆதிக்கம் பெற்றிருந்த வேறு சிற்றரசுகள் இருந்ததைப் பற்றியும் இந்நூலின் மூலம் அறிகின்றோம். தேசத்துக் கோயில் என்று பிற்காலத்திலே பாராட்டப்பெற்ற திருக்கோயிலமைந்த பகுதி நாகர்முனை என்னும் பெயரால் வழங்கியது என்றும் இந்நூல் கூறும். அது உன்னரசகிரி என்னும் இராச்சியத்தில் அடங்கிய பகுதி என்றுஞ் சொல்லப்படுகின்றது.[9] திருகோணமலை, கொட்டியாரம்பற்று என்பனவும் நாகர் பிரதானிகளை அதிபர்களாகக் கொண்ட ஆதிகாலக் குறுநிலப் பிரிவுகள் என்ற கருத்தும் இந்நூலிற் காணப்படுகின்றது. மேலும் 'மணிபுரத்தை அரசு புரியும் நாகர் குலத்துச் சிற்றரசனுடைய மந்திரி' பற்றியும் பூர்வ சரித்திரம் கூறும்.[10]

ஆதியான சிற்றரசுகள் நாகரோடு தொடர்புடையவை என்ற மரபு நாகர் சிலர் வெளியிட்ட நாணயங்கள் மூலமாக உறுதிபெறுகின்றது. பல வருடங்களுக்கு முன்பு, தென்னிலங்கையில், ஹம்பாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்திலுள்ள அகுறுகொட என்னுமிடத்திலே, நிலத்தை வெட்டிய பொழுது, புதையுண்டிருந்த தாழியொன்றிற் பல நூற்றுக்கணக்கான பழங்காசுகள் கிடைத்தன. அவற்றுள் இரண்டில் எழுதப்பட்டுள்ள பெயர்கள் இங்கு குறிப்பிடற்குரியவை. நாகரிற் சிலர் குறுநில அரசராய் விளங்கியமைக்கு அவை ஆதாரங்களாகும். ஒரு நாணயத்திலே சடணாகஸ என்று எழுதப்பட்டுள்ளது. சடைநாகன் என்ற தமிழ்ப் பெயரைப் பிராகிருத மயப்படுத்திச் சடணாக என்று எழுதியுள்ளனர் போலத் தெரிகின்றது.

பிராகிருத மொழியில் நாக என எழுதப்படவேண்டிய சொல் இங்கே ணாக என்று அசாதாரணமாக எழுதப்பட்டுள்ளது. ணாகஸ என்பது நாகனுடையது என்பதைக் குறிப்பதால் இந்நாணயத்தை வெளியிட்டவன் நாகனாகிய அரசனொருவன் என்று கருத முடிகின்றது.

வேறொரு நாணயத்திலே திஸபுர தா(ட்)ட ணாகரசந் என்று எழுதப்பட்டுள்ளது. நாகன் ஒருவனுடைய பெயர் இதிற் காணப் படுகின்றது. அவனது பெயர் தா(ட்)டன். ஒற்று பிராகிருதத்தில் இரட்டிப் பதில்லை என்பதால் தாட(ன்) என்று எழுதியுள்ளனர். அம்மொழியிலே சொற்கள் மெய்யெழுத்தில் முடிவதில்லை என்பதால் தாட்டன் என்ற பெயரின் ஈற்றெழுத்தான னகர மெய் மருவிவிட்டதென்று கொள்ளலாம். தா(ட்)ட நாகன் திஸபுரத்து அரசன் என்பது நாணயத்திலுள்ள வாசகத் தாற் புலனாகின்றது.

வடமாகாணத்திலுள்ள வவுனியா மாவட்டத்தின் தென்னெல்லைப் பகுதியிற் சிற்றரசு ஒன்றை நாகர் உருவாக்கியிருந்தனர். அதனைப் பற்றிய சில விபரங்களை பெரியபுளியங்குளத்துப் பிராமிச் சாசனங்கள் மூலம் அறியமுடிகின்றது. எல்லாமாக அங்கு 35 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.[13] இலங்கையில் வேறெப்பகுதியிலும் இத்தனை அளவிலே பிராமிக் கல்வெட்டுகள் மிகுந்தலை தவிர்ந்த வேறிடங்களிற் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ராஜ(ா) நாகனது மகளும் ராஜா உதியின் மனைவியும் ஆகிய அபி அநுராதி என்பவள் சங்கத் துக்கு குகையினைத் தானம் பண்ணியமை பற்றிய விபரம் நான்கு கல்வெட்டுகளிற் பதிவாகியுள்ளது.[14]

சாசனங் கிடைக்கின்ற பகுதியில் அமைந்திருந்த குறுநிலப் பிரிவில் நாக(ன்) என்பவன் அதிகாரம் பெற்றிருந்ததோடு ராஜா என்றும் பட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையுங் கொண்டிருந்தான். அவனுக்குப் பின் அபி அநுராதியின் கண வனாகிய உதி என்பவன் ராஜா என்னும் பதவியைப் பெற்றான் என்று கருதலாம்.[15] நாகனுக்குப் பின் அவனது மருமகன் பதவி பெற்ற மையால் ஆட்சியுரிமை மருமக்கள் தாய முறையில் அமைந்ததென்று கருதலாம்.[16]

அநுராதிக்குரிய அபி என்னும் அடைமொழி வேறு பல சாசனங் களிலுங் காணப்படுகின்றது. அது அரச குலத்துப் பெண்களுக்குரியது, ஐ (அய்யன்) என்ற தமிழ்ச் சொல்லின் பெண்பால் வடிவமானது.

பெரிய புளியங்குளத்துச் சாசனங்கள் ஒரு கலப்பான பிராகிருத மொழியில் அமைந்தவை. அவற்றிலே வேறெங்கும் காணப்படாத அளவிலே தமிழ்/திராவிட மொழிச்சொற்கள் காணப்படுகின்றன. பருமகன், வேள் என்னுஞ் சொற்கள் சாசனங்களில் இடம்பெற்றுள்ளன. பருமக(ன்) என்ற சொல் எட்டு (8) இடங்களிற் காணப்படுகின்றது.[17] பருமக(ன்) வேள் என்ற தொடர் இரண்டு சாசனங்களிற் காணப் படுகின்றது. ஒரு சாசனம் பருமக(ன்) வேள் என்பவனை அஸ-அடேக (குதிரைகளைப் பராமரிப்போரின் கண்காணி) என்று வர்ணிக்கின்றது. இங்குள்ள நாகரின் அரசில் வாழ்ந்தோரிற் சிலர் குதிரை வணிக ராயிருந்தனர் என்று கருதலாம். குதிரை வாணிபத்திலே தமிழர் பங்கு பற்றினார்கள் என்பதை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அநுராதபுரத்தில் முதன்முதலாக ஆட்சியைக் கைப்பற்றிய தமிழரான ஸேன, குத்தக என்போரைக் குதிரை வணிகனின் மக்கள் (அஸ நாவிகபுதோ) என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. கந்தரோடை, சாட்டி (வேலணை) ஆகியவற்றிலே பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களோடு குதிரை எலும்புகள் அகழ்வுகளிற் கிடைத்துள்ளமையும் இங்கு கவனித்தற்கு உரியதாகும்.

பெரிய புளியங்குளத்துக் கல்வெட்டுகள் இரண்டு (256, 257) தமிழ்வணிகன் விசாகனைக் குறிப்பிடுகின்றன.[19] அவற்றிலொன்றிலே தமேழ என்ற சொல்வடிவம் காணப்படுகின்றது. இங்குள்ள சாசனங்கள் தமிழரைக் குறிப்பிடுவதோடு தமிழர் சமூகப் பிரிவினருள் ஒரு வகை யினரான பரதரையும் குறிப்பிடுகின்றன. அவற்றிலே பரத என்பது ஒரு இயற்பெயராகவன்றிச் சமூகப் பிரிவொன்றின் பெயராகவே அமைந்துள்ளது. பரத உத்தர கஸப, பரத சுமன, பரத அகலிய, பரத மகாதிஸ போன்றனவே அப்பெயர்கள்.[20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத என்னும் வேறொரு சமூகப் பிரிவினைச் சேரந்தவர்களைப் பற்றியும் இச்சாசனங்கள் குறிப்பிடுகின்றன. பத சுமன, பத தரகித, பத தம்மகுத என்போரின் பெயர்கள் காணப்படுகின்றன.[21] பரத(ர்) என்போரையே பத என்று சாசனங்கள் குறிக்கின்றன என்று இலங்கையிலுள்ள அறிஞர் சிலர் கொள்வர்.[22] ஆயினும் அக்கருத்தினை ஒப்புக் கொள்ளவியலாது.

பத(ர்) என்போர் நாகரின் ஒரு பிரிவினர் போலும். பருமக நுகுயவேள, ஸிகரமள, நுகுயமள என்னும் மூன்று பெயர்கள் ஒரு கல்வெட்டில் வருகின்றன.[22] மூவரின் பெயர்களிலும் தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள ள ஈற்றெழுத்தாக அமைந்துள்ளது. எனவே இப்பெயர்களைத் தமிழரின் பெயர்கள் என்று கொள்ளலாம். இவற்றையொத்த பெயர்கள் வேறு கல்வெட்டுகளிற் கிடைக்கவில்லை. அவற்றைக் காலத்தில் வழக்கற்றுப் போய்விட்ட மிகவும் புராதனமான தமிழ் / திராவிட மொழிவழக்கிலுள்ள பெயர்கள் எனக் கருதலாம். அவை சாசனத்திலே பிராகிருத இலக்கண விதிகளுக்கேற்ப மாற்றமடைந்த கோலத்திலே தெரிகின்றன.

ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்துப் பெரிய புளியங்குளத்துச் சாசனங்கள் பௌத்த சமயம் பரவியமையின் காரணமாக ஏற்பட்ட பண்பாட்டுச் சங்கமத்தின் சின்னங்களாக விளங்குகின்றன. அவற்றிலே தமிழரும் தமிழரான பரதரும் குறிப்பிடப்படுகின்றனர். நாகர் என்போரும் தானகாரராக வருகின்றனர். தமிழ்மொழி மூலமான பரு(று)மக, வேள என்னுஞ் சொற்கள் இவற்றிடையே காணப்படுகின்றன. தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள ம, ழ, ள என்னும் எழுத்துக்கள் இச் சாசனங்களில் இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பிராமிக்குச் சிறப்பாகவுள்ள ள கரம் மூவரின் பெயர்களின் இறுதி எழுத்தாகவுள்ளது. சாசனங்கள் எழுதப்பட்ட பிராகிருதத்திலே தமிழ்மொழிக் கலப்பு மிகுதியாக உள்ளது.

சாசனங்கள் எல்லாம் பௌத்தம் தொடர்பானவை. பௌத்த சங்கத்துக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றியவை. அதனால் அவை பொது மொழியாகவும் தொடர்பு மொழியாகவும் வழங்கிய பிராகிருதத்தில் எழுதப்பட்டுள்ளன. ஆனாலும் தமிழ் மொழி பேசுகின்ற, ஒருகலப்புற்ற சமூகத்தில் அந்த மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பாலானோரின் பெயர்களும் பிராகிருதப் பெயர்களாகிவிட்டன. வவுனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவின் தென்பகுதியிலே, பெருங்கற் பண்பாடு பரவியதன் விளைவாக ஏற்பட்ட குடியிருப்புகள் நாகரை அதிபராகக் கொண்ட ஒரு சிற்றரசாக வளர்ச்சி பெற்றமைக்கு இந்தச் சாசனங்கள் சான்றாகும். வன்னியிலும் கிழக்கிலங்கையிலும் பிற்காலங்களிற் பிரசித்திபெற்ற வன்னி இராச்சியங்களுக்கு வரலாற்றுக் காலத்தில் நாகர் உருவாக்கிய சிற்றர சுகள் முன்னோடியானவை.

பெரிய புளியங்குளம் முதலான பலவிடங்களில் நாகர் பல இராச் சியங்களை அமைத்திருந்தபொழுதிலும் யாழ்ப்பாணத்தில் அமைந்த நாகரின் இராச்சியமே பலவகையான சிறப்பினைப் பெற்றது. அங்கும் படிப்படியாகப் பௌத்தம் பரவியது. அது தெற்கிலே அமைந்த இலங் கையின் பகுதிகளிலிருந்தும் ஆந்திர தேசத்திலிருந்தும் பரவியது. அங்கிருந்து பௌத்தம் தமிழகத்திற்கும் பரவியது.

### பௌத்தமும் சைவமும்

யாழ்ப்பாணத்திலும் தீவுபற்றிலும் வாழ்ந்த ஆதிக் குடிகளான பெருங்கற் பண்பாட்டு மக்கள் தென்புலத்தாரை வழிபடும் வழக்கமுடையவர்கள். அது கருத்து நிலையில் வைதீக சமயத்து நம்பிக்கைகளைப் போன்ற தாயினும் அவர்களின் வழிபாட்டு முறை அடிப்படை அம்சங்களில் வேறுபட்டதாகும். உடம்பிலிருந்து ஆவி பிரிந்த நிலையிலும் ஆவி அழிவதில்லை என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை சில புராதன காலத்து நாகரிகங்களிலும் குறிப்பாக எகிப்திய நாகரிகத்திலும் காணப்பட்ட ஓரம்சமாகும். இறந்தவர்களுக்குச் சுவையான உணவு வகைகளையும் அவர்களுக்கு இதமான வேறு பொருட்களையும் படைக்கும் வழக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களிடையே காணப்பட்டது. பௌத்தம், சைவம் போன்ற சமயங்கள் அவர்களிடையே பரவிய பொழுதிலும் அந்தப் பழக்கத்தை அவர்கள் கைவிடவில்லை. இன்றும், மரணச்சடங்குகளில் ஓரம்சமாக அது இலங்கைத் தமிழரி டையிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வழங்குவதை அவதானிக்கலாம்.

கிறிஸ்து சகாப்பத்திற்கு முற்பட்ட காலத்திற் பௌத்தமும் சைவமும் பரவியிருந்தமைக்கான அரிதான சான்றுகள் கிடைத்துள்ளன. அபிசிதன் என்ற பெயர் எழுதிய கலவோட்டினைப் பற்றி முன்னரே கவனித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளோம். கந்தரோடையில் அண்மையில் நடைபெற்ற அகழ்வாய்விலே உலோகத்திலான திரிசூல வடிவமொன்று கிடைத்துள்ளதாக அறிகின்றோம்.[25]

பௌத்த சமயம் பற்றி அறிவதற்கான இருவகை ஆதாரங்கள் கிடைக்கின்றன. அவற்றில் முதலாவது வகையில் உள்ளவை சாசனங்கள்; இரண்டாவது வகையிலுள்ளவை கட்டட அழிபாடுகள், சிற்பங்கள் என்பனவாகும். தென்னிலங்கையிற் கிடைத்தவற்றோடு ஒப்பிடுமிடத்து இவை மிகவும் சொற்பமானவை. யாழ்ப்பாணச் சமூக வரலாற்றின் முதலாவது கட்டத்திலே குடியிருப்புகள் வேலணை, நெடுந்தீவு, காரதீவு என்னும் தீவுகளிலும் குடாநாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள கந்தரோடை, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாண நகரின் கரையோரப் பகுதி என்பவற்றிலும் பூநகரியிலுள்ள மண்ணித் தலையிலும் ஏற்பட்டிருந்தன.

கி.பி. முதலாவது நூற்றாண்டு முதலாக இக்குடியிருப்புகள் ஏனைய இடங்களிலும் பரவத் தொடங்கின. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை அவை தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. குடாநாட்டின் கிழக்குப் பகுதியிலும் இக்காலகட்டத்திற் குடியிருப்புகள் உருவாகியிருந்தன. குடாநாட்டு உற்பத்தி முறையினதும் வாணிப முறையினதும் மத்திய நிலையமாகிவிட்ட கந்தரோடை மேலும் இக்காலப் பகுதியில் வளர்ச்சியடைந்தது. கி.மு. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குரிய தொல்பொருட் சின்னங்களில் உரோமரின் உற்பத்தியான அறிற்றைன் (Arretine), றூலெற்று (Rouletted ware) என்னும் இருவகையான மட்கலங்களும் கந்தரோடை, யாழ்ப்பாணக்கோட்டை ஆகியவற்றிலே பெருந்தொகையிலும் வேறிடங்களிலே கணிசமான அளவிலும் கிடைத்துள்ளன.[26]

தென்னிந்தியாவிற்கும் இரத்தின தீவகத்திற்கும் இடையிலான வாணிபத்தில் ஒரு முக்கிய தளமாக விளங்கிய நாகநாடு பன்னாட்டு வாணிபத்தின் மூலமாக வளம் பெற்றது. அது தூரதேசத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. பௌத்த சமயம் பரவியமை அந்த விளைவுகளில் ஒன்றாகும். இக்காலப் பகுதிக்குரிய பௌத்த சின்னங்கள் கந்தரோடை, திருவடிநிலை, திசைமளுவை, வேலணை, நெடுந்தீவு, புங்குடுதீவு, அரியாலை ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன.[27]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண சமூக வரலாற்றின் மூன்றாவது காலகட்டமாகிய ஐந்தாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையான காலப் பகுதிக்குரிய பௌத்த சின்னங்கள் இளவாலை, கரவெட்டி, வேரத்திடல், பச்சிலாப்பாலை ஆகியவற்றிலே காணப்படுகின்றன.[28]

கந்தரோடையிற் பௌத்த சமய சின்னங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் அடங்கிய படைகளுக்கு மேலாக உள்ளன. அங்கு ஏற்கனவே உருவாகிய குடியிருப்புகளிடையே பௌத்தம் பரவியதென்பதை அவை உணர்த்துகின்றன. கந்தரோடையிலுள்ள பௌத்த சின்னங்கள் தனியான பண்புகளைக் கொண்டவை. அவை அநுராதபுரம், மிகுந்தலை, மாகமை முதலான இடங்களில் உள்ள வற்றைக் காட்டிலும் வேறுபட்டவை. அங்கு சிறிய அளவிலான தூபிகள் பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன.[29] வழிபாட்டுத் தலங்களான சேதியங்களுக்குரிய அமைப்புக் காணப்படவில்லை. அவற்றின் மேற்பாகம் அண்டவடிவமானது. அவை உயிர் நீத்த சங் கத்தாரின் பள்ளிப்படைகளாக அமைக்கப்பட்டவை. பௌத்த சமயக் கோட்பாடுகளுக்கு ஏற்ப, பெருங்கற் பண்பாட்டுக்குரிய ஈமக் கிடங்கு களுக்கு மேலாக அமைந்த கட்டுமான முறையினை மாற்றி விட்டனர் போலத் தெரிகின்றது. இவற்றைப் போன்ற அண்டவடிவமான கட்டு மானங்கள் ஆந்திர தேசத்து அமராவதி, நாகார்ஜுன கொண்ட போன்ற இடங்களிற் காணப்படுகின்றன. அங்குள்ளவை உயிர் துறந்த சங்கத் தாரின் சடலங்களைப் புதைத்த குழிகள் மேல் அமைந்தவை.

பௌத்த சமயந் தொடர்பான கட்டடங்களை அமைப்பதற்கும், சிற்பங்களைச் செதுக்குவதற்கும் யாழ்ப்பாணத்திற் பவளப்பாறைக் கற்களையும் முருகைக்கற்களையுமே பெரும்பாலும் பயன்படுத் தினார்கள்.[31] அதனால், அங்குள்ள பௌத்த கட்டடங்களும் சிற்பங் களும் பிரதேசக் கலைமரபின் தனித்துவத்தைப் பிரதிபலிக்குஞ் சின்னங் களாக விளங்கின. இக்காலப்பகுதிக்குரிய சாசனங்களில் இரண்டு மட்டுமே பௌத்த சமயந்தொடர்புடையவை. கந்தரோடையிற் கிடைத் துள்ள கலவோடொன்றிற் காணப்படும் அபிசிதன் என்ற பெயரைப் பற்றி முன்பு கவனித்தோம். மற்றைய சாசனம் வல்லிபுரத்திற் கிடைத்த பொன்னேடாகும். இப்பொழுது அது காணாமற் போய்விட்டது. அதனை வாசித்த ஸே.பரணவிதான சாசன வாசகத்தையும் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கந்தரோடையில் காணப்படும் பௌத்த தூவிகள்

(நன்றி: செ. கிருஷ்ணராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மொழிபெயர்ப்பினையும் விளக்கக் குறிப்புகளோடு வெளி யிட்டார்.

அந்தச் சாசனத்தின் வாசகம் மேல்வருமாறு உள்ளது:

1. ஸித்த மஹாராஜ வஹயஹ ராஜேகி அமெதே
2. இஸிகிராயே நகதிவ புஜமெநி
3. புடகர அதெநேஹி பியகுஹ திஸ
4. விஹார கரிதே.[32]

'வெற்றி உண்டாகட்டும். வஹய மஹாராஜனின் காலத்தில் நாக தீவத்தை இஸிகிராயன் என்னும் அதிகாரி ஆளும் காலத்திற் பிய குஹ திஸ பாண்டங்களை வனைவோர் (வாழும்) தலத்திலே விஹா ரத்தைக் கட்டினார்'

இச்சாசனம் பலவிதமான விமர்சனங்களுக்கு இலக்காகியுள்ளது. அதனை விளக்க முற்பட்டவர்கள் மனம் போனவாறு இச்சாசனத்தை விளக்க முற்பட்டுள்ளனர். இதனைப் பற்றிய விசாரங்கள் வித்துவ நெறியிலிருந்து விலகிச் செல்வதற்குப் பரணவிதான பொறுப்பாக விருந்தார். சாசனத்தில் இல்லாத விடயங்கள் அதில் அடங்கியுள்ளதாக அவர் புரிந்து கொண்டார்.[33]

யாழ்ப்பாணத்திற் பௌத்த சமயம் பரவியமை பற்றிய ஆவணம் என்ற வகையில் வல்லிபுரம் பொன்னேடு சிறப்பிடம் பெறுகின்றது. அதிலே குறிப்பிடப்படும் அரசனை அநுராதபுரத்து அரசனாகிய வசபன் என்று அவர் அடையாளங் கண்டார். அந்த முடிபின் அடிப் படையில் இந்தச் சாசனத்தின் வரிவடிவங்கள், இலங்கையிலே பல் வேறிடங்களிற் காணப்படும் இரண்டாம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு களில் உள்ளவற்றை ஒத்தவை என்றார்.[34]

ஆயினும் இந்திய சாசனவியலாளரான யு.ர்.டானி அதற்கு மாறு பட்ட கருத்தினை வெளியிட்டார். அவர் வல்லிபுரம் பொன்னேட்டைப் பற்றி மேல்வருமாறு எழுதுகிறார்:

> இவற்றிடையே, பொன்னேட்டுச் சாசனத்தில் அதற்குச் சிறப்பாக உரிய அம்சங்கள் உண்டு. அதிலுள்ள எழுத்துகளிற் தண்டுகளின் கீழ் வளைவுகள் அழுத்தம் பெற்றிருப்பதோடு இகரக்குறி இடப் புறமாக வளைந்து நீண்டிருக்கின்றது. அ, கு, உ, க என்னும் எழுத்து

PROF. V. SIVASAMY UNIVERSITY ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> களும்(சில சமயங்களில்) க, ம, ய, ர, ல, வ என்பனவும் இக்ஷ்வாகு மன்னர்களின் காலத்துச் சாசனங்களில் உள்ளவற்றைப் போன்றவை. ள என்ற எழுத்தும் அவற்றிலுள்ள மாதிரியே எழுதப்பட்டுள்ளது. அமராவதி, நாகர்ஜுனகொண்ட என்பவற்றின் எழுத்தணிக்கலை இலங்கையிற் செல்வாக்குப் பெற்றது என்பதற்கு இலங்கைச் சாசனங்களில் எமக்கு உறுதியான சான்றுகள் கிடைக்கின்றன. இவற்றின் செல்வாக்கு அங்கு மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்டிருக்கலாம்.[35]

யு.ர்.தானி முன்வைத்துள்ள வாதங்களை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. வேங்கி தேசத்தில் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய சாசங்களின் எழுத்துகளில் முனைப்புப் பெற்ற சிறப்பம்சங்கள் எவ்வாறு கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், வசப மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் இலங்கையை அடைந்திருக்க முடியும்? இதனை ஒருவாறு சமாளிக்க முடியுமாயினும் சாசனத்திலுள்ள வஹய என்ற பெயரை வஸபனுடைய தென்று நிரூபிப்பது இலகுவான காரியமன்று. வசபனது காலத்துச் சாசனங்கள் அவனை மஹாராஜா வஹப என்றே குறிப்பிடுகின்றன. பிராகிருத்திலும் அதன்வழிப் பிறந்த சிங்களத்திலும் ஸ, ச என்னும் எழுத்துகள் ஹ ஆக மாறுவது வழமை. எனவே வஸப என்னும் பெயரிலுள்ள இரண்டாம் எழுத்தான ஸ அவனது காலத்துச் சாசனங் களிற் ஹ என்று எழுதப்பட்டுள்ளது.

வல்லிபுரம் பொன்னேட்டு வாசகத்தில் அரசனின் பெயர் மஹாராஜா வஹய என்றே எழுதப்பட்டுள்ளது. பிராகிருதத்திலோ சிங்களத்திலே ப என்ற எழுத்து ய கரமாக மாறிவிடுவதற்கான உதாரணமில்லை. எனவே, பொன்னேட்டிலே குறிப்பிடப்படும் வஹய என்ற அரசன் வசபனிலிருந்தும் வேறானவன், அவனுடைய காலத்திற்குப் பிற்பட்டவன் என்ற கருத்தை நிராகரிப்பதற்கான வலுவான காரணங் களில்லை. அவன் வட இலங்கையில் ஆட்சியதிகாரம் பெற்றிருந்த ஒரு அரசனாதல் கூடும்.

இஸிகிராய(ன்) என்னும் ஒருவனைப் பற்றியும் வல்லிபுரம் பொன்னேடு குறிப்பிடுகின்றது. அவன் நாகதீவில் நிர்வாகம் புரிந் தவன். அவனது பெயர் பிராகிருதமயமான திராவிட மொழிப் பெய ரென்று கொள்ளத்தக்கது. அதன் பிற்பகுதியான ராய என்பது ராயன் என்பதன் பிராகிருத வடிவம் போன்றது.[36] அதில் ராஜ என்ற சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராகிருத / சமஸ்கிருதச் சொல். இங்கே தமிழ் / திராவிட மயமாகி ராய என்ற வடிவத்தைப் பெற்றுள்ளதென்றுங் கொள்ளலாம்.

வல்லிபுரம் பொன்னேட்டிற் காணப்படும் முக்கியமானவொரு அம்சம் வடகர அதெநேஹி என்பதாகும். அது ஒரு இடம் என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை. இச்சாசனத்தை முதன்முதலாக வாசித்து வெளியிட்ட ஸே, பரணவிதான அது பிராகிருத மொழி மூலமானது என்பதை ஒப்புக்கொண்டு அது திறைசேரி தொடர்பானது என்றும் அது பாண்டாகார[37] ஆஸ்தான என்பதன் மறுவடிவம் என்று விளக்கு கின்றார்.

வடகர பற்றிக் குறிப்பிடுகையிற் பேராசிரியர் வேலுப்பிள்ளை மேல்வருமாறு எழுதுகிறார்:

> வ(ப)டகர என்பது பதகர என்ற பாளி மொழிச் சொல்லுக்குச் சமமானதென்று பரணவிதான கூறுகிறார். ஆயினும், வல்லிபுரம் யாழ்ப்பாணத்தின் வடகரையில் அமைந்திருப் பதால் அது வடகரை என்ற தமிழ்ச் சொல்லின் மாற்று வடிவமாகலாம்.[38]

வ(ப)டகர என்பது ஒரு சமூகப் பிரிவினரின் பெயர் என்று கொள்வதே பொருத்தமானது போல எமக்குத் தோன்றுகின்றது. இதனை யொத்த சொற்கள் வேறு பிராமிச் சாசனங்களிற் காணப்படுகின்றன. அவற்றைக் கவனிப்பது இங்கு அவசியமாகின்றது. தபகர, மணிகர, பணித படகரிக என்னும் சொற்கள் இலங்கைப் பிராமிச் சாசனங்களில் வருகின்றன.

பெரியபுளியங்குளத்திலுள்ள சாசனமொன்று திஸ என்னும் ஒரு வனைத் தபகர என வர்ணிக்கின்றது.[40] அங்குள்ள இன்னொரு கல் வெட்டு புஸ, சுமன என்னுமிருவரை தபகர என்று குறிப்பிடுகின்றது.[41] இச்சானங்களைப் படித்துப் பதிவு செய்த ஸே.பரணவிதான தபகர என்பது செம்புத் தொழிலாளரைக் குறிக்குமென்று விளக்குகின்றார்.[42] அதே அடிப்படையில் மணிகர என்ற சொல் மணிவினைஞரைக் குறிக்கும் என்கிறார்.[42] வல்லிபுரம் பொன்ணேட்டில் வரும் ப(வ)டகர என்ற சொல்லை நோக்குவது பொருத்தமானது. ப(வ)டகர என்பதை பாண்டாகார என்ற சமஸ்கிருதச் சொல்லின் பிராகிருத வடிவமாகக் கொள்ளலாம். எனவே அது மட்பாண்டங்களை உற்பத்தி செய்வோரைக் குறிப்பிடும்.[43] எனவே, வல்லிபுரம் பொன்னேடு மட்பாண்டத் தொழி லாளரின் குடியிருப்பினை ப(ட)கர அதன என்று குறிப்பிடுக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்றும் அவர்கள் வாழ்ந்த இடத்தையே அது குறிப்பிடுகிறதென்றும் கொள்ளமுடிகின்றது. வேறொரு பிராமிச் சாசனத்தின் குறிப்பும் இதற்கு ஆதாரமாகின்றது. குருனாகல் மாவட்டத்துத் தோரவ மயிலாவ என்னு மிடத்திலுள்ள கல்வெட்டொன்றிலே அரசனுடைய பணித ப(வ)டகரிக என்னும் ஒருவனைப் பற்றிச் சொல்லப்படுகின்றது.[44] பணித(ம்) என்பது பாணியைக் குறிப்பதாற் பாணியைச் சேகரிக்கும் பாண்டங் களை உற்பத்தி செய்வோரை இச்சாசனம் பணித ப(வ)டகரிக என வர்ணிக்கின்றது என்பது ஒரு இயல்பான வித்துவபூர்வமான விளக்க மாகும்.[45]

வல்லிபுரம் சாசனத்தைப் பொறுத்தவரையில் அதன் மிக முக்கிய மான ஒரு அம்சம் நகதிவ பற்றிய குறிப்பாகும். நகதிவ என்பது நகதீப என்ற பிராகிருத மொழிச் சொல்லின் தமிழ் / திராவிடமயமான வடிவமாகும். அதிலே க என்பதற்குப் பதிலாக க என்னும் எழுத்தும் ப என்பதற்குப் பதிலாக வ என்பதும் இடம்பெற்றுள்ளன. மணிமேகலை தீவுகளைத் தீவகம் என்று குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரியது. குடாநாட்டின் வடகரையில் அமைந்துள்ள வல்லிபுரம் நகதிவ என்பதில் அமைந்திருப்பதை வல்லிபுரம் பொன்னேடு உணர்த்துவதால் நகதிவ என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டைக் குறித்ததென்று கொள்ள முடி கின்றது. இந்தச் சாசனம் எழுதப்பட்ட காலத்தில் கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுகளில் உருவாகிய சிறிய குறுநிலப் பிரிவுகளெல்லாம் நாகதீவு என்ற விசாலமான பிராந்தியத்தில் இணைக்கப்பட்டுவிட்டன என்று கருத இடமுண்டு. யாழ்ப்பாணம் என்ற பிரதேசத்தின் எல்லைகள் நாகநாட்டின் அமைப்பினை மூலமாகக் கொண்டவை என்றுங் கருதலாம்.

### அமராவதிக் கலை மரபின் செல்வாக்கு

இலங்கையில் ஏற்பட்ட பௌத்த சிற்பக்கலையின் வளர்ச்சியின் முதலாவது கட்டத்திலே அமராவதிக் கலைப்பாணியின் செல்வாக் கினை அவதானிக்க முடிகின்றது. அது நாகநாட்டுத் தலங்களான கந்தரோடை, வல்லிபுரம் ஆகியவற்றிலே சிறப்பாகக் காணப்பட்டது. கந்தரோடையிலுள்ள சிற்றுருவத் தூபிகள் போன்ற கட்டட அமைப்புகள் ஆந்திர தேசத்துப் பௌத்த தலங்களிற் காணப்படுபவை என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடற்குரியது.[45] அமராவதி கலைப்பாணியின் செல்வாக்கு எழுத் தணிக்கலையிலும் பரந்திருந்தது. இக்ஷ்வாகு மன்னர் காலத்து வரிவடிவ முறையின் அம்சங்கள் இலங்கையிலே பல விடங்களிலுள்ள கல்வெட் டுகளிற் காணப்படுகின்றபொழுதிலும் வல்லிபுரம் பொன்னேட்டில் அவை சிறப்பாகத் தெரிகின்றன.

வல்லிபுரத்திலே கண்டெடுக்கப் பெற்ற ஸ்தானக நிலையிலுள்ள புத்தரின் படிவம் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிடைத்த பௌத்த படிமங்களிலே தனிச்சிறப்புடையது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வல்லிபுரம் பெருமாள் கோயில் புனரமைக்கப்பட்ட காலத்திலே, கோயில் வளாகத்திற்கு 50 யார் தூரத்தில் இப்படிமத்தைக் கண் டெடுத்தனர். ஆலயத்தின் சாலையொன்றில் அது 1902ஆம் வருடம் வரை வைக்கப்பட்டிருந்தது. அந்த வருடத்தில் அதனை எடுத்துக் கொண்டுபோய் யாழ்ப்பாணத்திலுள்ள பழைய பூங்காவில், ஓரரச மரத்தின் கீழ் வைத்தனர்.[46] பின்பு, 1906ஆம் ஆண்டில், தாய்லாந்து மன்னர் அப்படிமத்தில் ஈடுபாடு கொண்டிருந்தமையால் அதனை அவருக்குத் தேசாதிபதி ஹென்றி ப்ளேக் நன்கொடையாக வழங் கினார். அதன் பின்பு அவ்விடயந் தொடர்பான நினைவுகள் இலங் கையிலே மறைந்துவிட்டன. இலங்கைவாசிகள் எவரும் அதனைப் பார்க்கும் வாய்ப்பினைப் பெறமுடியவில்லை.

அந்தப் படிமம் இப்பொழுது தாய்லாந்தின் தலைநகரான பாங் கொக்கிலுள்ள வாத் பெஞ்ஜ என்னும் பௌத்த விகாரத்தில் வைக்கப் பட்டுள்ளது.[47] அங்கு பெருமளவிலே போகின்ற மேல் நாட்டு உல்லாசப் பிரயாணிகள் அந்த விகாரத்தைப் பளிங்கு மாளிகை என்று குறிப் பிடுவது வழக்கம். விகாரத்திலுள்ள சங்கத்தாருக்கோ உல்லாசப் பிரயாணிகளுக்கு கலைச் சின்னங்களைப் பற்றி விளக்கும் உதவி யாளருக்கோ இந்தப் படிமத்தைப் பற்றி எதுவும் தெரிவதில்லை. இப்படிமத்தில் அமைந்த உஷ்ணீஷம், முகபாவம், சீவரத்தின் மடிப் புகளின் கோலம் போன்ற அம்சங்கள் அமராவதிக் கலைப்பாணிக்குரிய படிமங்களில் உள்ளவற்றைப் போன்றவை என்று கருதப்படு கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுராதபுரமன்னர்களும் நாகநாடும்**

அநுராதபுர மன்னர்களின் வரலாறு தொடர்பான விபரங்களைக் குறிப் பிடும் மகாவம்சம் அவர்களில் நால்வர் நாகநாட்டிலே புரிந்த திருப் பணிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. முதலாவது குறிப்பு தேவநம்பியதீச னைப் பற்றியது. நாகதீபத்திலே, இறங்குதுறையான ஜம்புகோள விகாரத்தை அவன் கட்டினான் என்று மகாவம்சம் கூறும்.[48] ஜம்புகோ விகாரம் என்ற பெயருடைய நிறுவனம் அமைந்திருந்தமை பற்றிய மரபொன்றினை மகாவம்சம் பதிவுசெய்தல் கூடும். ஆயினும், தேவ நம்பியதீசனின் காலத்தில் (கி.மு. 247-207) அநுராதபுர மன்னனின் அதிகாரம் நாகநாட்டில் ஏற்பட்டிருந்தமைக்கான உறுதியான ஆதாரங் கள் இல்லை. தேவநம்பியதீசனது காலத்திலும் அதற்குப் பிற்பட்ட சில நூற்றாண்டுகளிலும் இலங்கையிலே பல சிற்றரசுகள் இருந்தன. அவற்றின் அதிபர்கள் பலரும் ராஜா என்ற பட்டத்தைப் பெற்றி ருந்தனர்.[49]

தேவநம்பியதீசனின் ஆட்சி அநுராதபுரத்தைச் சூழ்ந்த வடமத்திய பகுதியில் மட்டுமே ஏற்பட்டிருந்தது. மகாவம்ச ஆசிரியர் தனது காலத்து நிலைகளின் அடிப்படையில் சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட அரசியல் நிலைகளைச் சித்திரிக்கின்றார்.[50]

முதலாம் கஜபாவின் பின்பு அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்த மகல்லகநாகன் (கி.பி.136-143) நாகதீபத்தில் சாலிபர்வதம் என்னும் விகாரம் ஒன்றினை அமைத்தான் என்று சொல்லப்படுகின்றது.[51]

ஆனால் அந்த விகாரம் குறிப்பாக இந்தத் தலத்தில் அமைந்திந்தது என்பதைக் குறிப்பிட மகாவம்ச ஆசிரியர் தவறிவிட்டார். கனிட்ட தீஸன் (167-186) நாகதீபத்திற் கோயிலொன்றைப் புனரமைத்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[52] நெடுங்காலஞ் சென்ற பின்பு, மீண்டும் ஒரு முறை, அநுராதபுர மன்னனொருவன் நாகதீபத்திலே செய்த திருப்பணி பற்றி மகாவம்சம் குறிப்பிடுகின்றது.[53] நாகதீபத்தில் இருந்த ஆமலசேதியம், ராஜாயதனதாது விகாரம் என்பன பற்றி அதிலே சொல்லப்படுகின்றது. இரண்டாம் அக்கபோதி (604-614) உண்ணலோமகரம் என்னுங் கோயிலை ராஜாயதனதாது விகாரத்துக்குக் கொடுத்தானென்றும் சத்திராவலி ஒன்றை ஆமலசேதியத்திற்கு வழங் கினான் என்றுஞ் சொல்லப்படுகின்றது. இதன் பின்பு நாகதீபம் பற்றியோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள விகாரங்கள் பற்றியோ எதுவும் மகாவம்சத்திற் சொல்லப் படவில்லை.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப் பாணக் குடாநாட்டிலே வாழ்க்கைத்தரம் சரிவடைந்தமையினைத் தொல்பொருட் சின்னங்கள் குறிக்கின்றன என்று சிலர் கருதுவர்.[54] அக்காலப் பகுதியிற் பலவகையான மட்பாண்டங்கள் புழக்கத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. கரும்-செம் மட்கலங்கள் வழக் கொழிந்தன. இக்காலத்திலே கனதியான விளிம்பு கொண்ட, பாரமான சிவப்புநிற மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. பனையோ லையில் இழைத்த பெட்டி, கடகம் முதலானவை புழக்கத்தில் வந்ததன் காரணமாக மட்பாண்டங்களின் தேவையிற் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கலாம். தென்னிந்தியக் கரையோரங்களிலுள்ள துறைமுகப் பட்டினங்களுடனான வர்த்தகத் தொடர்புகளில், ஒரு கேந்திர நிலையம் என்ற வகையில் மாதோட்டம் முன்னேற்றம் அடைந்தமையால் இந்த மாற்றம் ஏற்பட்டிருத்தல் கூடும்.

இக்காலத்திற் பௌத்த நிலையங்கள் இளவாலை, கரவெட்டி வேரத்திடல், பச்சிலைப்பள்ளி போன்ற இடங்களிலும் அமைந் திருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குப் பகுதியிலும் பௌத்தம் பரவியிருந்தமை இக்காலத்தில் ஏற்பட்ட ஒரு பிரதானமான முன்னேற்ற மாகும். இக்காலத்திற்குரியன என்று அடையாளங் காணப்பெற்ற தொல்பொருள் மையங்களில் இருபது (20) பௌத்தசமயச் சார் பானவை. அவற்றில் ஆறு தலங்கள் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ளவை.[55] தென்னிலங்கையில் நிலைபெற்ற பௌத்தசமயம் சார்ந்த பண்பாட்டுச் செல்வாக்கு இக்காலத்திற் கூடுதலாக ஏற்பட்டது. தமிழ கத்திலும் ஆந்திர தேசத்திலும் பௌத்தம் தளர்ச்சியுற்றுச் சரிவடைந்த காலத்தில் யாழ்ப்பாணத்துப் பௌத்த நிறுவனங்கள் தெற்கிலுள்ள பௌத்த நிறுவனங்களின் ஆதரவை நாடிப் பெற்றன வென்று கருதலாம்.

### சைவசமயம்

சைவசமயம் பரவியுள்ள நாடுகளில் ஒன்றாக இங்கையினைக் கொள்ளும் மரபு திருமூலர் திருமந்திரத்திற் பதிவாகியுள்ளது.[56] ஆயினும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் அங்கு பத்தாம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Prof. V. SIVASAM
UNIVERSITY OF JAFFNA

வரை நிலவிய சைவசமயம் பற்றிய இலக்கியக் குறிப்புகள் இல்லை. எனவே, அங்குள்ள சைவசமய நிலையைப் பற்றி அறிவதற்குத் தொல்பொருட் சின்னங்களில் மட்டும் தங்கியிருக்க வேண்டிய நிலை உண்டு. அண்மையிலே கந்தரோடையில் நடைபெற்ற அகழ்வாய்வு களிலே திரிசூலம் போன்ற உலோகச் சின்னம் கிடைத்தமை பற்றி ஏற்கனவே கவனித்துள்ளோம். அத்துடன் ஆனைக்கோட்டை முத்தி ரையிற் காணப்படும் முத்தலைச் சூலம் போன்ற வடிவிலுள்ள குறியீடுகள் கோவேதன் என்பவனின் இலச்சினையாகக் கொள்ளத் தக்கவை என்ற கருத்தை முன்வைத்தோம். அவற்றைச் சிவசின்னமாகிய திரிசூலமென்று கொள்ளுமிடத்து பூர்வீக யாழ்ப்பாணத்துச் சமய நிலைகள் பற்றிய விசாரம் ஒரு புதிய பரிமாணத்தைப் பெறு கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பூர்வகாலத்தில் ஆட்சியதிகாரம் பெற்ற குறுநிலமன்னர் சைவசமயத்தைச் சார்ந்தவர்கள் என்று கருத முடிகின்றது. அநுராதபுர மன்னர்களைப் பற்றிய மகாவம்சக் குறிப் புகளும் ராஜா என்ற பதவிநிலை பெற்றவர்களைப் பற்றிய சாசனக் குறிப்புகளும் இதற்கு ஒருவகையில் ஆதாரமாகின்றன.

பௌத்தசமயம் பரவுவதற்கு முற்பட்டகாலத்தில் அரசகுடும்பத்தினர் சைவராயிருந்தனர் என்று கொள்வதற்கான காரணமுண்டு.[57] சிவ என்னுஞ் சொல் அரசகுடும்பத்தவர் பலரின் பெயர்களிற் பின்னொட் டாக வருகின்றது. பாண்டுவாசுதேவனின் குமாரரில் ஒருவனின் பெயர் சிவ என்பது குறிப்பிடற்குரியது.[58] கிரிகந்த சிவ என்பவன் அநுராத புரத்தை இராசதானியாக அமைத்த பாண்டுகாபயனின் மாமன்மாரில் ஒருவன்.[59] முடசிவ என்பது தேவநம்பியதீஸனின் தகப்பனுக்குரிய பெயராகும்.[60] எனவே, அநுராதபுரத்தின் ஆதியான அரசர்கள் சிலர் சமய நம்பிக்கைகளைப் பொறுத்தவரையிற் சைவராயிருந்தனர் என்று கருதலாம்.

ஆதி காலத்தில் இலங்கையிற் சைவசமயம் பரவியிருந்தமைக்கு பிராமிச் சாசனங்களிலுள்ள குறிப்புகளும் நாணயங்களில் அமைந் திருக்கும் சின்னங்களும் உறுதியான சான்றுகளாகும். ஏறக்குறைய ஐம்பது பிராமிச் சாசனங்களிற் சிவ என்ற பெயர் காணப்படுகின்றது. அவர்களில் அரசர், இளவரசர், வணிகர் என்போரும் அடங்குவர்.[61]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்த வர்களிடையே சைவசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தமையினை நாணயங்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது.[63] சிவசின்னமாகிய இடபத்தின் உருவம் பொறித்த நாணயங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளிலும் அவற்றுக்குப் பிற்பட்ட காலத்திலும் வெளியிடப்பட்டுள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்ச மாகும்.

லக்ஷ்மி நாணயங்களிற் சைவசமய சின்னங்கள் அமைந்துள்ளமை அண்மைக் கால ஆய்வுகளின் மூலம் தெளிவாகியுள்ளது. தேவதையின் வடிவம் ஸ்தானகக் கோலத்தில் அமைந்துள்ளமை போன்ற வடிவம் தெரிவதால் அவற்றை லக்ஷ்மி நாணயங்களென்று நாணயவியலார் வகைப்படுத்தியுள்ளனர். அவை சிறிய, நீள்சதுரமான செம்புத் தகடுகள் போன்றவை. அவற்றில் எழுத்துகளின் அடையாளந் தெரியவில்லை. குறியீடுகள் சமயச் சார்புடையவை. இந்த வகைக்குரிய நாணயங்கள் கூடுதலாக இலங்கையின் வடபகுதியிலும் குறிப்பாக யாழ்ப்பாணத் திலுங் கிடைத்தன. அவை மிகுந்தளவிலே கந்தரோடையில் மேலாய்வு களிலும் அகழ்வாய்வுகளிலுங் கிடைத்துள்ளன. லக்ஷ்மி நாணயங் களிற் பெரும்பாலானவை நாகநாட்டில் உற்பத்தியானவை என்று கொள்ள முடிவதால் அவை பூர்வ காலத்து யாழ்ப்பாணத்துச் சமயநிலை பற்றிய ஆதாரங்களாகக் கொள்ளத்தக்கவை.

சைவசமய சின்னங்களிற் பிரதானமானதாகிய சிவலிங்கம் லக்ஷ்மி நாணயங்களிற் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கவோர் அம்ச மாகும். சுவஸ்திகமும் அதனோடு இடபமும் ஆவுடையாருடன் கூடிய இலிங்கமும் சில நாணயங்களிற் காணப்படுகின்றன.[64] வேறு சில வற்றில் இலிங்கத்துக்குப் பதிலாகப் பூரண கும்பமும் வேறு சில வற்றிலே சிவனுக்குரிய திரிசூலமும் மழுவும் தெரிகின்றன.[65]

லக்ஷ்மி நாணயங்கள் சிலவற்றின் பின்புறத்திலே சுவஸ்திகத்தின் வலப்பக்கத்திலே கால்களை மடக்கிப் படுத்திருக்கும் நிலையில் இடபத்தின் உருவம் பொறித்த புராதனமான உலோக வார்ப்பு நாண யங்களையும் லக்ஷ்மி நாணயங்களையும் ஆராயுமிடத்து, இலங் கையிலே குறிப்பாக நாகநாட்டில், சைவசமயமும் அதனோடு பிற் காலத்திற் கலப்புற்ற முருகவழிபாடும் பெருஞ் செல்வாக்குப் பெற் றிருந்தன என்பது தெளிவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஷ்மி நாணயங்கள் பல வகையானவை. அவற்றில் ஒருவகை யான நாணயங்களில் மலர்ச்செடி மேல் நிற்கும் நிலையிலுள்ள தேவதையின் வடிவத்தின் அருகில் திரிசூலம், வேல் போன்ற சின் னங்கள் அமைந்துள்ளன.[66] இவ்வாறான படைக்கலங்களை லக்ஷ்மி யோடு தொடர்புபடுத்தும் மரபில்லை. ஆகவே அத்தகையவை தேவ தையின் வடிவங்களாகக் கொள்ளப்படுவதற்கு உரியவை. இலங் கையில் முருகவழிபாடு பரவியிருந்தமைக்கான சான்றுகள் பிராமிச் சாசனங்களிலும் வேறு தொல்பொருட் சின்னங்களிலுங் கிடைக்கின்றன. லக்ஷ்மி நாணயங்கள் சிலவற்றிலே தெரிகின்ற வேலின் வடிவம் முருக வழிபாட்டுச் சின்னமாகக் கொள்ளத்தக்கது.

முடிவாக நாகநாட்டில் வாழ்ந்தவர்களிடையே சைவம், பௌத்தம் ஆகிய சமயநெறிகள் பரவியிருந்தன என்று கொள்ளலாம். சைவசம யத்தின் அம்சங்கள் பழந்தமிழ் இலக்கியமான எட்டுத்தொகை, பத்து பாட்டு நூல்களிற் காணப்படுவனவற்றை ஒத்தனவாகும். முருகனும் கொற்றவையும் அந்நூல்களின் மூலம் அறியப்படும் சமூகத்தின் பிரதானமான தெய்வங்களாகும். புறநானூறு போன்ற நூல்கள் பெயர் சுட்டாது சிவனை வர்ணிக்கின்றன. அம்மன் வழிபாடும் முருகவழி பாடும் காலப்போக்கில் யாழ்ப்பாணத்தில் மேலோங்கி விட்டமை வரலாறாகும். அவை எல்லாச் சமூகப் பிரிவினரிடையிலும் செல் வாக்குப் பெற்றிருந்தன.

பௌத்த சமய நிறுவனங்கள் ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளின் பின் நலிவுற்றன. அக்காலத்தில் தமிழகத்திலும் ஆந்திர தேசத்திலும் பௌத்த சமயத்தின் செல்வாக்கு வீழ்ச்சியுற்றது. பௌத்தம் சார்ந்த தொல்பொருட் சின்னங்கள் யாழ்ப்பாணத்தின் பலவிடங்களிற் காணப் பட்டபொழுதிலும் நாகநாட்டுப் பௌத்த தலங்கள் பிரசித்தி அடைந் தமைக்கான சான்றுகளில்லை. அங்குள்ள பிரசித்தமான சங்கத்தாரைப் பற்றி எதுவிதமான குறிப்புகளும் இல்லை. ஆதிகாலத்தில் அது வணிகரோடும் வாணிபத்தோடும் தொடர்பு கொண்டிருந்தது. பிராந் தியத்து அரசரின் ஆதரவு அதற்குக் கிடைத்தமை பற்றிய ஆதாரங்களும் கிடைக்கவில்லை. சோழரின் ஆதிக்கம் ஏற்பட்டதன் விளைவாக அங்குள்ள பௌத்தம் அழிவுற்றதென்ற சிந்தனை பொருந்தாக் கூற் றாகும். நாகநாட்டுப் பௌத்தத்தின் வீழ்ச்சி அதற்கு பல நூற்றாண்டு களுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டது.அது பிராந்திய சமூகநிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடும் மாற்றங்களோடும் தொடர்புடைய ஒன்றாகும். தேரவாத பௌத்தர்கள் பேச்சு வழக்கற்ற பாளி மொழியில் எழுதினார்கள். அவர்களின் ஆகமங்கள் அம்மொழியிலே பேணப்பட்டன. ஈழநாட்டின் வடபிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கு அம்மொழி அந்நிய மொழி யாகிவிட்டமையும் பௌத்தசமயம் அப்பகுதிகளிலே காலப்போக்கில் வழக்கற்றுப் போனமைக்கு ஒரு பிரதானமான காரணமாகும்.

### அடிக்குறிப்புகள்

1. *மணிமேகலை*, புலியூர்க் கேசிகன், சென்னை, 1954(ஒன்பதாம் பதிப்பு), பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை, வரிகள்: 58-62, பக். 116.
2. *மேலது*, சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை வரிகள்: 10-214, பக். 96.
3. *மேலது*, பாத்திரம் பெற்ற காதை: 19-29, பக். 126.
4. சாத்தனார் நாகநாடு பற்றி மணிமேகலையில் வேறொரு இடத்திற் குறிப் பிடுகின்றார். அது கடல்கோளினால் ஏற்பட்ட சுனாமி பற்றியது. அவர் அந்த நிகழ்ச்சியை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

    தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
    இன்மேற் நாளில், இருநில மாக்கள்
    நின்று நடுக்கெய்த நீணில வேந்தே!
    பூமி நடுக்குறூம் போழ்து, இந்நகர்,
    நாகநன்னாட்டு நானூறு யோசனை,
    வியன்பாதலத்து வீழ்ந்து கேடெய்தும்

    (மணிமேகலை, புலியூர்க் கேசிகன், பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை, வரிகள் : 17-22, பக்.113.)

5. வல்லிபுரம் பொன்னேட்டில் நகதிவ என்ற சொல் வருகின்றது. அங்கே வஹய என்னும் மகராஜனின் காலத்தில் இஸிகிராய(ன்) என்னும் பிரதானி ஆட்சி புரிந்தான். சாசனத்திலுள்ள விபரங்களை நோக்குமிடத்து நகதிவ என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டை உள்ளடக்கிய பிரதேசம் என்பது புலனாகின்றது. அதனையே மணிமேகலை ஆசிரியர் நாகநாடு என்று குறிப்பிடுகிறார்.

    வல்லிபுரம் பொன்னேடு பிராகிருத மொழியில் எழுதப்பட்டதென்பது மொழியியல் வல்லுநரான ஏ.எச். தானியின் கருத்தாகும். பேராசிரியர் வேலுப் பிள்ளை அதற்கு வலி சேர்த்துள்ளார். பிராகிருதத்தில் நகதிப என்று எழுதப் படவேண்டிய சொல் ஒலியமைப்பிலே தமிழ் மயப்படுத்தப்பட்டு நகதிவ என்று இச்சானத்தில் எழுதப்பட்டுள்ளது.

    S.Paranavitana, "Vallipuram Gold Plate of the Reign of Vasabha," *Epigraphia Zeylanica*, Vol.3, pp.229-237; Alvappillai Veluppillai, "A Reply to R.A.L.H.Gunawardana Concerning the Vallipuram Inscription", *Buddhism*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*among Tamils in Pre-Colonial Tamilakam and Iam*, part 1, Uppsala, 2002, pp. 230-238.

6. K.Indrapala, *The Evolution of An Ethnic Identity : The Tamils in Sri Lanka (C.300 B.C.E.To C.1200 C.E)*, Sydney 2005, pp. 172-173.

7. குசலான்மலை, உன்னரசகிரி, பெரியகுளம், கந்தரோடை போன்ற இடங்களிலும் அநுராதபுரத்திலும் நாகர் குலத்தவர் ஆட்சி புரிந்தமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன.

   அநுராதபுரத்தில் நாக என்ற சொல்லைத் தம்பெயரின் பகுதியாகக் கொண்ட மன்னர் பதின்மரின் பெயர்களை மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அவர்களின் பெயர்கள் மேல்வருவனவாகும்:

   1. கல்லாட்ட நாக(50-43, 109-103)
   2. சோரநாக (கி.மு.3-கி.பி.9) 63-51
   3. இளநாக (93-102, 33-43),
   4. மஹல்லக நாக (203-227, 136-143)
   5. குஜ்ஜநாக (196-202, 186-187)
   6. குஞ்சநாக (246-248, 187-189)
   7. ஸிரிநாக I (249-268, 189-209)
   8. அபயநாக (291-299, 231-240)
   9. ஸிரிநாக II (300-302,240-242)
   10. மகாநாக (556-559, 569-571)

8. *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, பதிப்பாசிரியர்கள்: வித்துவான் சா.இ. கமலநாதன், திருமதி.கமலா கமலநாதன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, ப. 3.

9. *மேலது*, ப.16.

10. *மேலது.*

11. ப.புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கிற் இலங்கைத் தமிழர் பண்பாடு*. சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006, ப. XLII.

12. *மேலது.*

13. S.Pranavitana, *Inscriptions of Ceylon*, Volume I, Department of Archaeology, Ceylon, 1970, pp. 27 – 293, Nos.338 - 375.

14. தானத்தை அபி அநுரதி தனியாக வழங்கினாள். அதனால் இந்த நாகர் குலத்தவரிடையே சொத்துரிமைகள் பெண்களுக்குரியதென்று கருத இடமுண்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. *Inscriptions of Ceylon*, Vol.I, p.27: No.338.

16. மாமனும் மருமகனும் இணைந்து சங்கத்தாருக்குக் குகையொன்றினைத் தான மாகக் கொடுத்துள்ளனர். அது மேல்வருமாறு எழுதப்பட்டுள்ளது: மாதுல பாகினியன லெணே அகதஅநகத சதுதிஸ ஸகஸ நியதே. *மேலது*, ப.29, இலக்கம்.369.

17. *மேலது*, சாசனங்கள்: 343, 348, 353, 355, 358, 360. பருமக என்பது சில சமயங்களிற் பறுமக என்றும் எழுதப்படும். பருமகள் என்பது அதன் பெண்பால் வடிவம். அது இதுவரை அடையாளங் காணப்பெற்ற இரண்டு சாசனங்களிலே தெரிகின்றது. அவை இரண்டும் இலங்கையின் வடபகுதியிலுள்ள இடங்களிற் காணப்படுகின்றன. அவற்றிலொன்று வவுனியா மாவட்டத்து ஒருவ பொத்தானையில் உள்ளது.
பருமக என்பது சில சமயங்களிற் பறுமக என்றும் எழுதப்படும்.
நஸத ஜித பருமகள் புஸாய லெணே அகத,சுபருமக(ன்) மித வின் மனைவியும் பருமக ஸத நஸத வின் மகளுமாகிய பருமகள் புஸாவின் குகை. இதிற் கவனிக்க வேண்டிய மூன்று விடயங்கள் உண்டு. அவை பருமகள் என்பது பருமக என்பதன் பெண்பால் வடிவமாய் உள்ளமை, பெண்களுக்கும் அந்தப் பதவி உரித்தானமை, அப் பதவிக்குரிய பெண் சொத்துரிமை கொண்டிருந்தமை என்பனவாகும்.

18. *மகாவம்சம்*, 21 : 10-11.

19. *Inscriptions of Ceylon*, Volume I, p. 28, Nos:356, 357.

20. *மேலது*, சாசனங்கள்: 349, 359, 361, 368, 371.

21. *மேலது*, சாசனங்கள்: 362, 365, 367, 372.

22. *மேலது*, சாசனம் : 353.

23. ராஜ நாக என்பவனின் மகளான அபி அநுராதி குகையொன்றைச் சங்கத்துக்கு வழங்கினாள். பருமக உதியின் புதல்வனான சுடிநாக, உபாஸக நாக என் போரும் குகைகளை வழங்கியுள்ளனர். *மேலது*, சாசனங்கள்: 338, 343, 366.

24. பருமக நுகுய வேள, பருமக அஸ-அடேக வேள. *மேலது*, சாசனங்கள்: 353, 355.

25. A.Veluppillai, "Religions in Yalppanam up to the Thirteenth Century AD" *Lanka*, December, 1990, Uppsala, Sweden, p. 14.

26. Ponnampalam Raghupathy, *Early Selttements in Jaffna: An Archaeological Survey*, Madras, 1987, p. 70.

27. A.Veluppillai, "Religions In Yalppanam........", *Lanka*, December, 1990, p. 14.

28. *Ibid*, p. 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. Ponnambalam Raghupathy, *Early Selttemnts in Jaffna,* ........., p.183.

30. *Buddhism among Tamils in Pre-Colonial Tamil lakam and Ilam,* Part I, Uppsala, 2002, pp. 146-147.

31. A.Veluppillai, "Religions In Yalppanam........", *Lanka,* December, 1990, p. 14.

32. S.Paranavitana, "Vallipuram Gold Palte of the Reign of Vasabha", *Epigrapha Zeylanica,* Vol.IV, Colombo, 1940, pp .229-237.

33. மேலது.

34. மேலது.

35. A.Veluppillai, "Religions in Yalppanam", *Lanka,* December, 1990, p. 18.

36. மேலது, பக். 19.

37. S. Paranavitana, "Vallipuram Gold Palte of the Reign of Vasabha", *Ez,* Vol.IV, pp. 29-237.

38. A.Veluppillai, "Religions in Yalppanam", *Lanka,* December, 1990, p. 20.

39. S. Paranavitana, I*nscriptions of Ceylon,* Vol.I, Nos: 109, 350, 351, 1633, 1035.

40. மேலது, பக். 109.

41. மேலது, பக். 28, சாசன இலக்கம்: 350, 381.

42. மேலது.

43. மணிகர, தபகர என்ற சொற்களுக்குப் பரணவிதான சொல்லும் விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து இதுவே படகர என்பதன் பொருத்தமான விளக்கமாகும்.

44. S.Paranavitana, *Inscriptions of Ceylon,* Vol.I, p. 114: No.1035.

45. Buddhism among Tamils in Pre-Colonial Tamilakam and Ilam, Part 1, Editor –in–Chief: Peter Schalk, Co-Editor: Alvappillai Veluppillai, Uppsala, 2002, p. 249.

46. மேலது, பக். 218, 219.

47. மேலது.

48. *மகாவம்சம்,* 20:25.

49. S.Paranavitana, *Inscriptios of Ceylon,* Volume I, The Department of Archariology, 1970, pp. 1, 3, 27, 30, 389, 43, 35.

50. "Buddhism among Tamils.......", p. 213.

51. *மகாவம்சம்,* 35 : 124.

52. மேலது, பக்.36 : 9.

53. மேலது, பக்.46, 63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. A.Veluppillai, " Religions in Yalppanam: Up to the Thirteenth Centuiry AD", *Lanka*, December 1990, Uppsala, p.15.

55. பச்சிலைப்பள்ளி, என்னும் பெயர் பௌத்தசமயத் தொடர்பின் மூலமாக உற்பத்தியானது என்ற விளக்கம் பொருத்தமானதாகத் தெரியவில்லை. பச் சிலைப் பள்ளி என்பது நவயுகத்தில் உருவாக்கப்பட்ட வடிவம். பச்சிலாப்பாலை என்பதே பொதுமக்களிடையில் வழங்கி வந்துள்ள பெயராகும். பசுமையான மரங்கள், சோலைகள் இல்லாத வனாந்தரம் போன்ற நிலப்பகுதி என்பதால் அது பச்சிலாப்பாலை என வழங்கியது. பாளி மொழியில் அதனைப் பிராசீல பள்ளி என மறுவுருவாக்கஞ் செய்துள்ளனர். பாளி பேச்சு வழங்கற்ற மொழி. மகாவம்சம் போன்ற பாளி நூல்கள் பொதுவழக்கான சிங்கள, தமிழ்மொழி இடப்பெயர்களை உருமாற்றிய வடிவத்திற் குறிப்பிடுகின்றன. ஜம்புகோள பட்டன, மகாதித்த என்பனவும் அவ்வாறானவை. *மேலது*, ப.15.

56. *மேலது*, பக்.

57. சி.பத்மநாதன், *இலங்கையில் இந்துசமயம்*, அகில இலங்கை இந்துமாமன்றம் - குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2005, பக். 4.

58. *தீபவம்சம்*, 10 : 45.

59. *மேலது*, 10:3, செ.குணசிங்கம், *கோணேஸ்வரம்*, பேராதனை, 1973, பக்.27.

60. *மகாவம்சம்*, 11 : 1.

61. சி.பத்மநாதன், *இலங்கையில் இந்துசமயம்*, பக்.4 -7.

62. *மேலது*, பக்.7 - 9.

63. *மேலது*, பக்.7 - 10.

64. *மேலது*, பக்.9.

65. *மேலது*.

66. *மேலது*, பக்.10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# யாழ்ப்பாணத்தில் அரச பாரம்பரியம்

### 1. நாணயங்கள் வழியாகக் கிடைக்கும் மரபுகள்

தனித்துவம் வாய்ந்ததாகக் கொள்ளக்கூடிய வரலாற்றுப் பாரம்பரியம் எல்லாப் பிரதேசங்கட்கும் அமைவதில்லை. (ஆனால்) இலங்கையில், யாழ்ப்பாணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த வரலாற்று இலக்கியங்களில் தனியாக இனங்காணப்பட்டு வந்திருப்பது குறிப்பிடக் கூடியதொன்றாகும். இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களான 'தீபவம்சம்', 'மகாவம்சம்' என்பன இப்பிரதேசத்தை நாகதீப (நாகத்தீவு) என அழைத்துள்ளன. இதன் தனித்துவம் காலப்போக்கில் யாழ்ப்பாண இராச்சியமாகப் பரிணமித்தது. இதற்கெனத் தனியான வரலாற்று நூல்களும் வரலாற்றாசிரியர்களும் வரலாற்றியலும் (Historiography) தோன்றியமையைக் காண்கின்றோம். 'கைலாயமாலை', 'வையாபாடல்', 'யாழ்ப்பாண வைபவமாலை' ஆகியன இத்தகைய, யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட வரலாற்றியல் இலக்கியங்களாகும்.

> யாழ்ப்பாணத்தில் மையங்கொண்ட பண்பாட்டுப் போக்கொன்றின் தொடர்ச்சியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய, மொழி, கல்வி, பண்பாட்டு மறுமலர்ச்சியானது யாழ்ப்பாண வரலாற்றை எழுதுவதிலும் புதியதொரு உத்வேகத்தைத் தந்தது. நூல் முகவுரைகளிலும் சிறு கட்டுரைகளிலும் இவ்வரலாறு எழுதப் பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை ஆகியோரது யாழ்ப்பாண வரலாற்று நூல்கள் இதன் வளர்ச்சியாகவே தோன்றின எனலாம்.[1]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியலாளரும் வரலாற்றாய்வாளருமாகிய பொன்னம்பலம் இரகுபதி இவ்வாறு கூறுவார். இலங்கைத் தமிழரிடையே திருகோண மலை, மட்டக்களப்பு தேசம் ஆகியவற்றில் வாழ்ந்தவர்களும் ஒரு தனித்துவமான பிரதேச பாரம்பரியம் பற்றிய உணர்ச்சி கொண்டவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடற்குரியது. 'கோணேசர் கல்வெட்டு', 'மட்டக் களப்பு பூர்வ சரித்திரம்' என்னும் நூல்கள் தனித்துவமான பிரதேச பாரம்பரியம் பற்றிய மரபுகளின் கருவூலங்களாகும். ஆயினும், அப் பிரதேசங்களில் வாழும் தமிழர் பற்றிய வரலாற்று ஆய்வு முயற்சிகள் முன்னேற்றம் அடையவில்லை.

கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாண வரலாறு பற்றிய ஆதார பூர்வமான குறிப்புகள் எதுவும் 'கைலாயமாலை', 'யாழ்ப்பாண வைபவமாலை' போன்ற தமிழ் நூல்களிற் காணப்பட வில்லை. எனவே, முன்பு இந்நூலிற் கூறியது போல கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்து யாழ்ப்பாணத்து அரசியல் வரலாறு பற்றி விபரமாகவும் உறுதியாவும் கருத்துக்களைப் பதிவு செய்வது கடினமான ஒன்றாகும். இலங்கையின் பிற பகுதிகளில் ஏற்பட்ட வளர்ச்சிகளின் அடிப்படையிலும் கிடைக்கின்ற இலக்கிய சாசனக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டும் இவ்விடயம் பற்றிய ஆய்வினை மேற் கொள்ள வேண்டியுள்ளது. அந்த ஆய்வு முயற்சிகள் இன்றுவரை பூர்வாங்க நிலையிலுள்ளமை குறிப்பிடற்குரியது.

விவசாயத்தையும் பிறதொழில்களையும் அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் குடியிருப்புகள் உருவாகி, அவை கிராமங்களாக வளர்ச்சியடைந்த பின்னரே அரசு தோன்றியது. இலங்கையினைப் பொறுத்தவரையில் அரசின் வளர்ச்சி படிமுறையாக ஏற்பட்ட ஒன்றாகும். கிராமங்கள் உருவாகிய பின் சில / பல கிராமங்களை உள்ளடக்கிய சிற்றரசுகள் உருவாகின. அந்த மாற்றம் ஏற்படுவதற்கு நாகர் காரணமாய் இருந்தனர் போலத் தெரிகின்றது. மட்டக்களப்பு தேசத்தில் ஏற்பட்ட அரச உருவாக்கந் தொடர்பாக 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' நாகரை முன்னிலைப்படுத்துகின்றது. அதிற் காணப்படும் மேல்வரும் பாடல் குறிப்பிடற்குரியது:

*கலிகடந் தெண்ணூறாண்டில் கருதிய இலங்கை தன்னில்*
*வலியவ ரியக்க ரோடு கலந்தவர் மரபொன்றாகி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*நலிவிலா நிருபஞ் செய்து நகரெலா மிறைக ளென்ன*
*ஒலிவள ருகந்த மென்னும் நகரி லுறைந்தார் நாகர்.*[2]

நாகர்கள் வலிபொருந்திய இயக்கரோடு கலப்புற்று, அதன் விளைவாக இரு சாராரும் ஒரே சமூகமாகிவிட்டார்கள்; அவர்கள் (நாகர்) நகரங்களை அமைத்து அவற்றில் ஆட்சி புரிந்தனர்; உகந்தம் என்ற நகரிலே அவ்விதமாக நாகர் வாழ்ந்தனர் என்ற விடயங்களை இப்பாடல் குறிக்கின்றது. இவை கற்பனைக் கதைகளென்று புறக்கணிக்க முடியாதவை. சமூக நிறுவனங்களின் உருவாக்கம் பற்றி மக்களிடையே நெடுங்காலமாக நிலவிவந்த நினைப்புகளை இந்நூல் பதிவு செய்கின்றது. அவ்வாறு கொள்வதற்குப் பிராமிச் சாசனங்களிற் சான்றுகள் காணப்படுகின்றன. முன்பு, வேறிடத்திலே குறிப்பிட்டதைப் போல நாக வம்சத்தவர் ஆட்சி புரிந்தமைக்கு குசலான் மலையிலுள்ள சாசனம் ஆதாரமாகின்றது.[3]

பெரிய புளியங்குளம் அமைந்துள்ள பகுதியில் நாகர் ஆட்சி புரிந்த சிற்றரசு ஒன்றிருந்தது. அங்குள்ள கல்வெட்டொன்று ராஜ நாக என்னும் அரசனைக் குறிப்பிடுகின்றது.[4] நாகர் சிற்றரசுகளில் அதிகாரம் பெற்றிருந்தமைக்குச் சில நாணயங்களிலும் சான்று கிடைக்கின்றது. அகுறுகொடையிற் கிடைத்துள்ள நாணயமொன்றிற் சடணாகஸ என்ற தொடர் ஐந்து எழுத்துகளில் அமைந்துள்ளது.[5] அதனால் நாணயம் சடணாகனுடையது என்று பொருள்படும். சடநாகன் என்பவன் அந்த நாணயத்தை வெளியிட்டவன் என்பது அதனால் உணரப்படும்.[6] வேறொரு நாணயத்தில் சுட ஸம ணாக என்ற வேறொரு நாகராசனின் பெயர் காணப்படுகின்றது. அதன் ஒரு புறத்தில் ஆமையின் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.[7] அதே இடத்திற் கிடைத்த இன்னொரு நாணயத்திலே திஸபுர தாட நாகரசந் என்ற பெயர் காணப்படுகின்றது.[8] தாட நாகன், அரசனொருவன் என்பதும் அவன் திஸபுரத்திலிருந்து அதிகாரஞ் செலுத்தியவன் என்பதும் அதனால் உணரப்படும்.[9]

இலங்கையின் பல பகுதிகளில் நாகர் வாழ்ந்தனர் என்பதைப் பாளி நூல்களும் பிராமிச் சாசனங்களும் குறிப்பிடுகின்றன. அவற்றிலே நாகரிக முன்னேற்றத்திற்கு ஏதுவான செயற்பாடுகளில் நாகர் ஈடுபட்ட பொழுதிலும் அவர்கள் காலப் போக்கில் இனக்கலப்பு, மொழி மாற்றம் என்பவற்றின் காரணமாகத் தங்கள் பூர்வீகமான சமூக அடையாளத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிராமி எழுத்துப் பொறித்த தமிழர் நாணயங்கள்

(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிராமி எழுத்துப் பொறித்த தமிழர் நாணயங்கள்

(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



இழந்துவிட்டனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அவர்களின் அதிகாரம் நீண்ட காலம் நிலைபெற்றது. அதனால் அவர்கள் வாழ்ந்த நிலப்பகுதி நாகநாடு எனவும் நாகதீபம் எனவும் பலவகையான இலக்கியங்களிற் குறிப்பிடப்பெற்றது.[10]

> இலங்கையில் முதன்முதலாக நகரங்கள் தோன்றிமைக்கும் வரலாறு தோன்றியமைக்கும் பெருங்கற் பண்பாடு அடிப்படையாக இருந்தது. இலங்கையின் சில பகுதிகள் பெருங்கற் பண்பாடு என்ற படியினை அடையவேயில்லை. அவை கிறிஸ்தாப்த ஆரம்ப நூற்றாண்டு களிலும் அதற்குப் பின்னரும் குறுணிக்கற் பண்பாடுடையனவாகவே இருந்து, பின்னர் பாய்ச்சலாக வரலாற்றுக் காலத்திற்கு வந்தமைக் கான தடயங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறா யினும் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்த வரையில், குறுணிக் கற் பண்பாட்டிற்குரிய தடயங்கள் எதுவும் இதுவரையும் இங்கு கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் மனிதக் குடியேற்றம் பெருங்கற் பண்பாட்டுடனேயே ஆரம்பமாகின்றது. இவ்வகையில், இப்பிரதேசத் தின் பண்பாட்டு ஆரம்பமே இலங்கையின் ஏனைய பகுதிகளி லிருந்தும் தனித்துவம் வாய்ந்ததாகவே அமைகின்றது.[11]

பெருங்கற் பண்பாட்டு மக்களின் குடியிருப்புகள் பரவியதன் விளை வாகச் சிற்றரசுகள் உருவாகின. காரதீவிலுள்ள குறுநில அரசொன்றைப் பற்றிய குறிப்பு அகித்தி ஜாதகத்தில் உண்டு. ஆனைக்கோட்டையினை மையமாகக் கொண்ட சிற்றரசொன்று உருவாகி இருந்ததென்று கொள்ள முடிகின்றது. பெருங்கற் காலத்துக் குடியிருப்புகள் யாழ்ப்பாணத்திலே பரவியிருந்தன. ஏறக்குறைய பத்துக்கு மேற்பட்ட இடங்களில் அத்தகைய குடியிருப்புகள் ஏற்பட்டிருந்தமைக்கான சான்றுகள் மேலாய்வுகளின் மூலம் கிடைத்துள்ளன.[12]

கந்தரோடையில் அமைந்த குடியிருப்புகள் ஒரு பெரு நகரமாக வளர்ச்சியடைந்தமை பெருங்கற்கால யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும்.

உணவுப் பொருட்கள் பெருமளவில் உற்பத்தியாகின்ற ஊர்களின் மத்தியில் அமைந்ததால் அது ஒரு மத்திய வியாபாரத் தலமாக வளர்ச்சி பெற்றது. பெருங்கற்பண்பாட்டுக் காலத்திற்குரிய மிகப் பரந்தளவிலான குடியிருப்புகளும் கந்தரோடையிற் காணப்பட்டன. தூரதேச வாணிபத் தொடர்புகளும் அங்கு ஏற்பட்டன. தமிழ் நாட்டு மன்னர்கள் வெளியிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயங்களும் உரோமரின் காசுகளும் அவர்களின் அறிற்றைன், ரூலெற்று வகைகளுக்குரிய மட்கலங்களும் வேறு பொருட்களும் கங்கைச் சமவெளியில் உற்பத்தியான பளபளப்பான மணிகளும் மேலாய்வுகளிலும் அகழ்வாய்வுகளிலும் அங்கு பெருமளவிற் கிடைத்துள்ளன.

நகரவளர்ச்சி ஏற்பட்ட தலம் என்ற வகையிலே கந்தரோடை அநுராதபுரம், மாகம என்பவற்றுக்கு நிகரான பழைமை கொண்டது என்பது தொல்லியல் ஆய்வுகளினாற் புலனாகின்றது. வியாபாரத் தலங்களையும் வணிகரையும் அவர்களின் செல்வங்களையும் காவல் புரிவதற்கு வேண்டிய அதிகாரங் கொண்ட அரசியலமைப்பின் தேவையின் காரணமாக அரசொன்று உருவாகியிருத்தல் வேண்டும். அதன் தொடர்பாகப் பொன்னம்பலம் இரகுபதி மேல்வருமாறு சொல்வார்:

> யாழ்ப்பாண இராச்சியத்திற்கு முன்னர் இருந்ததொரு யாழ்ப்பாண அரசுபற்றி இலக்கிய ஆதாரங்கள் அறியத்தரும் செய்தியையும், இவ்வரசு கதிரைமலை என்ற கந்தரோடையைத் தலைநகராகக் கொண்டதென முதலியார் இராசநாயம் முன்வைத்த கருத்தினையும் இங்கு விவரித்த தொல்லியற் சான்றுகள் பலப்படுத்துவனவாகவே தோன்றுகின்றன. கந்தரோடையைத் தலைநகரராகக் கொண்டதொரு குறுநில அரசாவது இங்கு இருந்திருக்கக்கூடும் என்பதை நாம் மேற்கொண்ட யாழ்ப்பாணத்து ஆதிக் குடியிருப்பமைப்பு ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இந்த அமைப்பு பெருங்கற் பண்பாட்டு அடிப் படையில் உருவானதென்பதையும் அவை உணர்த்துகின்றன.[13]

தென்னிலங்கையிற் கிடைத்தது போன்ற பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் வடஇலங்கையிலும் பல ஆண்டுகளுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றின் எழுத்துகள் மிகவும் தேய்வுற்ற நிலையிற் காணப்படுகின்றன. கந்தரோடையிற் கிடைத்த நாணயம் ஒன்றில் ஒரு புறத்தில் ஸ்ரீவத்ஸமும் மறுபுறத்தில் ஏழு பிராமி எழுத்துகளும் காணப்படுகின்றன. அவற்றில் நான்கு எழுத்துகளே தெளிவாகத் தெரிகின்றன. அவற்றைத் தென்னிந்திய நாணயவியலாளர் ஒருவர் உதிபன் என வாசித்துள்ளார்.[14] இதிலே பெயர் தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்டுள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்நாணயங்கள் நாகநாட்டு அரசர் வெளியிட்ட உருப்படிகளாதல் வேண்டும். வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாணயங்களில் நாகபொலம், நாகபூமி என்னுஞ் சொற்களை அறிஞர் சிலர் அடையாளங் கண்டுள்ளனர்.

**லக்ஷ்மீ நாணயங்கள்**

தேவதையின் உருவம் பொறித்த நீள்சதுரமான, நாணயங்களாகப் பயன்பட்ட உலோகத் தகடுகள் பெருந் தொகையில் இலங்கையிற் கிடைத்துள்ளன. அவற்றைப் போன்ற நாணயங்கள் இந்தியாவிற் கிடைக்கவில்லை. எனவே அவை இலங்கையில் உற்பத்தியானவை என்று நாணயவியலாளர் கொள்வர். அவற்றிலே காணப்படும் தேவதையின் உருவங்களை லக்ஷ்மியின் வடிவமொன்று அடையாளப் படுத்தியதால் அந்நாணயங்களை லக்ஷ்மீ நாணயங்கள் என்று குறிப் பிடுவது ஆய்வாளரிடையில் வழமையாகிவிட்டது. அந்நாணயங்கள் நீண்ட காலம் புழக்கத்தில் இருந்தன. அவை புராதன காலக் குடியிருப்பு களின் தொல்பொருட் சின்னங்கள் அடங்கிய படைகளிலும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையுள்ள உரோமர் காலப் பண்பாட்டுச் சின்னங்கள் உள்ள படைகளிலுங் காணப்பட்டன.[15]

லக்ஷ்மீ நாணயங்கள் வடஇலங்கையிலும் தென்னிலங்கையிலும் கிடைத்துள்ளன. 1885இல் 51 நாணயங்கள் அடங்கிய மட்குடமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின் 1917இல், கந்தரோடையில் நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் கிடைத்தன.[16] அதன் பின்பு நல்லூர், வல்லிபுரம், ஆனைக்கோட்டை, பூநகரி, உடுத்துறை, மாதோட்டம் ஆகியவற்றிலும் இந்நாணயங்களைக் கண்டெடுத்தனர். அநுராதபுரம், திஸமாறகம, புத்தளம், சிலாபம், நிந்தவூர் போன்ற இடங்களிலும் அவற்றைக் கண்டெடுத்தனர்.[17] லக்ஷ்மீ நாணயங்களிற் பல செப்புத் தகடுகளில் அமைந்தவை. வேறுபல நாணயங்கள் ஈயம், செம்பு, சிலிக்கன், இரும்பு, நிக்கல் போன்ற உலோகங்களிற் சிலவற்றை வெவ்வேறு அளவுகளிற் கலந்து உருவாக்கப்பட்டவை. இந்நாணயங்களில் அவற்றை வெளியிட்டவர்களின் பெயர்களோ எழுத்துகளோ காணப்பட வில்லை. அவற்றில் அடையாளங்களுங் குறியீடுகளுமே காணப்படு கின்றன. அவை வெவ்வேறு காலங்களிலும் வெவ்வேறிடங்களிலும் உற்பத்தியானவை என்று கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்ஷ்மீ நாணயங்கள்

(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் இந்நாணயங்களைப் பற்றி ஆழமாக ஆராய்ந்த ப.புஷ்பரட்ணம் அவற்றைப் பற்றி மேல்வருமாறு குறிப்பிடு கின்றார்:


> இலங்கையில் தொடக்க காலத்தில் இந்நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்ட போது இவற்றை நாணயமாக எடுக்காது சமயச் சின்னமாகக் கருதப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இவை நகரங்களிலும் வர்த்தக மையங்களிலும் ஏனைய நாணயங்களுடன் கிடைத்ததால் இவை பண்டைய காலத்தில் புழக்கத்திலிருந்த நாணயங்கள் என்பது தெரியவந்தது.
>
> இந்நாணயத்தின் முன்புறத்தில் நிற்கும் நிலையில் பெண் வடிவமும், பின்புறத்தில் பீடத்துடன் கூடிய சுவஸ்திகமும் முக்கிய சின்னங்களாக இடம்பெற்றுள்ளன. ஆனால் நாணயத்துக்கு நாணயம் வடிவமைப்பு, அளவு, எடை, சின்னங்கள் என்பவற்றால் வேறுபடு கின்றது. அண்மையில் பூநகரி வட்டாரத்திலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட நாணயங்கள் பெறப்பட்டன. இவற்றின் வடிவமைப்பு, சின்னங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பதினொரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.[17]

லக்ஷ்மீ நாணயங்கள் சிலவற்றிலே காணப்படும் தேவதையினைக் கொற்றவை என அடையாளங் காணலாம். அவற்றிலே வேல், திரிசூலம் போன்ற படைக்கலங்களின் சின்னங்கள் காணப்படுகின்றன. சில நாணயங்களில் தாமரைத் தண்டிற்குப் பதிலாக வேல், சூலம், குத்துவிளக்குப் போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. பூநகரிப் பகுதியில் அடங்கிய ஈழ ஊர், மண்ணித்தலை ஆகிய இடங்களிற் கிடைத்த நாணயங்களிற் சேவல், வேல்,மயில், நந்திபாதம் போன்ற சின்னங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையிற் கிடைத்த நாணயம் ஒன்றின் பின்புறத்திற் பீடத்தின் மேலமைந்த ஸ்வஸ்திகாவுக்கு வலப்புறமாக ஸ்ரீவத்ஸமும் இடபத்தின் உருவமுங் காணப்பட்டன.[18] லக்ஷ்மீ நாணயங்களிற் பெரும்பாலானவை வட இலங்கையிலுள்ள கந்தரோடை போன்ற வியாபாரத் தலங்களிலிருந்து வணிக சமூகத்தவரால் வெளியிடப்பட்டன வென்று கருதலாம். இது மேலும் ஆராய்ந்து நிச்சயிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மீனுருவம் பொறித்த நாணயங்கள்

வட இலங்கையிலே, குறிப்பாக வன்னிப் பகுதியிற் கிடைத்த நாண யங்களில் ஒரு வகையானவை மீனுருவம் பொறித்த நாணயங்கள். அவை பதின்மூன்றாம் நூற்றாண்டுக்குரியவை என்று கொள்ளப்படு வனவற்றிலிருந்தும் வடிவமைப்பிற் பெரிதும் வேறுபட்டவை. காலத்தால் அவற்றுக்கு மிகவும் முற்பட்டவை. இவற்றைப் போன்ற நாணயங்கள் தமிழ் நாட்டிற் கிடைக்கவில்லை. இவ்வாறான நாணயங் களை அநுராதபுர மன்னர் வெளியிட்டமைக்குச் சான்றில்லை. எனவே இவற்றை வட இலங்கையின் பகுதியொன்றில் ஆட்சி புரிந்த அரச குலத்தவர் வெளியிட்டிருக்கலாம். அவற்றிலே மன்னரின் பெயர்கள் எழுதப்படவில்லை. எழுத்துகளும் வடிவமைக்கப்படவில்லை. அவற்றை யார் வெளியிட்டார்கள்? எங்கிருந்து வெளியிட்டார்கள்? என்ற வினாக்கள் இயல்பாகவே எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காண்பதற்கு வழியில்லை. ஆனாலும், இவற்றின் மூலமாக நாகநாடு என்னும் இராச்சியம் சீர்குலைந்த பின்பும் வட இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணம், வன்னி ஆகிய பிராந்தியங்களில் இராச்சியம் அமைத்து அதனை மன்னர் சிலர் ஆட்சி புரிந்துள்ளனர் என்பது தெரிகின்றது.



மீனுருவம் பொறித்த நாணயங்கள்

(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனுருவம் பொறித்த நாணயங்கள் பெரும்பாலும் சதுர வடிவில் அமைந்த செப்பு நாணயங்களாகும். அவற்றில் விளிம்புக்கு உட்புறமாக, அதன் ஓரத்தில் சிறு வட்டங்களால் அமைந்த வளையம் அமைந்துள்ளது. அதனுள் இரு குத்து விளக்குகளும் அவற்றின் நடுவில் ஒரு மீனுருவமும் வடிவமைக்கப்பட்டுள்ளன.[19] நாணயத்தின் இரு புறங்களிலும் ஒரே மாதிரியான வடிவங்கள் அமைந்திருப்பது இந்நாணயங்களின் சிறப்பம்சமாகும். இவற்றிற் காணப்படும் மீன் சின்னத்திற்கும் பாண்டியரின் குலச் சின்னத்துக்கும் இடையில் எந்த விதமான தொடர்புமில்லை. இந்நாணயங்கள் எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு உரியனவாகலாம்.

அண்மைக்காலத் தொல்லியல் அகழ்வாய்வுகள், கண்டுபிடிப்புகள் மூலமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் பற்றிய மரபு வழிச் சிந்தனைகள் மீள்பரிசீலனைக்கு உள்ளாகிவிட்டன. அந்த இராச்சியத்தின் உற்பத்தி ஒரு நீண்டகால வரலாற்றுப் பின்னணியினையும் மரபுகளையும் அடிப்படையாகக் கொண்டதென்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. யாழ்ப்பாண சமூகத்தின் உற்பத்தி கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட குடியேற்றத்தை அடிப்படையாக் கொண்டது. அது பெருங்கற் பண்பாட்டு மக்கள் பரவியமையால் ஏற்பட்டது. அந்தப் பண்பாடும் இலங்கையிற் பரவுவதற்கு முன்பே ஒரு பல்லினப் பண்பாடு என்ற பரிமாணத்தைப் பெற்றிருந்தது. நாகர், பரதர் முதலானோர் பெருங்கற் பண்பாட்டுச் சமூகத்திலே கலந்துவிட்டனர். அவர்களின் பேச்சுமொழியாகத் தமிழ் விளங்கியபோதும் தொடர்பு மொழியான பிராகிருதமும் அவர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. அப்பண்பாட்டு மக்கள் இரும்பின் உபயோகம், வேளாண்மை, கைத்தொழில்கள், கடல்வழி வாணிபம், நீர்ப்பாசனமுறை முதலியவற்றில் முன்னேற்றம் கண்டிருந்ததால் அவர்களின் பண்பாட்டம்சங்கள் இலங்கையின் ஆதிவாசிகளான குறுணிக்கற்கால மக்களிடையே வேகமாகப் பரவின. பெருங்கற் பாண்பாட்டு மக்களே யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடிகளாவர். அவர்களின் குடியிருப்புகள் காலப்போக்கிலே சிற்றரசுகளாக வளர்ச்சி பெற்றன. அவை காலப்போக்கில் நாகநாடு என்னும் அரசில் இணைந்து கொண்டன. முதன்மை நகரமாக வளர்ச்சி பெற்ற கந்தரோடை நாகநாட்டின் தலைநகரம் என்ற நிலையினை அடைந்தது. பன்னாட்டு வாணிபத்தால் வளம் பெருகியது. அங்குள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்கள் தென்னிலங்கையிலுள்ள சிற்றரசரான நாகரைப் போல நாணயங்களை வெளியிட்டனர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் நாகநாடு சீர்குலைந்தது. அதுவரை யாழ்ப்பாணத்திலே சைவசமயச் சார்புடைய வணிகரும் பிரதானிகளும் பெயர் பொறிக்காத லக்ஷ்மி நாணயங்களை வெளியிட்டனர்.

ஒரு நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் அரசொன்று உருவாகி, அதன் விளைவாக மீனுருவம் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டது.

சிங்கைநகரின் உற்பத்தி பற்றிய கருத்துகளை முன்வைப்பதற்கு யாழ்ப்பாணக் கோட்டையில் நடைபெறும் அகழ்வாய்வுகள் பற்றிய அறிக்கை வெளிவரும்வரை பொறுத்திருப்பது வேண்டற்பாலது. கந்தரோடைக்குப் பின், அதற்கு நிகரான நகரமொன்று யாழ்ப்பாணப் பட்டினப்பகுதியில் அமைந்திருப்பதற்கான சாத்தியமுண்டு. பதின் மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வளர்ச்சிகள் ஒரு நெடுங்கால வரலாற்றின் தொடர்கதையாகும்.

## 2. *கலிங்க மாகனும் சாவகரும்: நாணயங்கள் மூலமாக வெளிப்படும் சில புதிய விபரங்கள்*

பதினான்காம் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பிரசித்தமானவர்கள். அவர்கள் தென்னிலங்கையோடும் தென்னிந்திய இராச்சியங்களோடும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். அவர்களைப் பற்றிய இலக்கிய / சாசனக் குறிப்புகள் சிங்களத்திலும் தமிழிலும் காணப்படுகின்றன. அவர்கள் வழங்கிய நாணயங்கள் பலவகைப்பட்டவை. அவற்றிலே அவர்களின் குலச் சின்னங்களான இடபமும் சேது என்னும் மொழியுங் காணப்படுவதால் அவற்றை இலகுவில் எவரும் அடையாளங் காணலாம்.

யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் நாணயங்களுக்கு, வடிவமைப்பில் முன்னுதாரணமாய் அமைந்திருக்கக்கூடிய நாணயங் களைப் பற்றி இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்பு உறுதியாக எதனையுங் கூறமுடியவில்லை. எனவே, அவற்றின் வடிவமைப் பிலுள்ள அம்சங்களைப் பொலன்னறுவைக் கால அரசர், சோழர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவக மன்னர் வெளியிட்ட நாணயங்கள்
(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

பாண்டியர் முதலியோரின் நாணயங்களின் அடிப்படையிலேதான் விளக்க முடிந்தது.[20] அந்த விளக்கங்கள் அடிப்படையில் இன்றும் பொருத்தமற்றனவாகிவிடவில்லை. ஆயினும் புதிய கண்டுபிடிப்பு களின் மூலம் ஆரியச்சக்கரவர்த்திகளின் நாணயங்களின் உற்பத்தி பற்றிய ஆய்வுகள் ஒரு புதிய பரிமாணத்தை பெறுகின்றன.

வட இலங்கையிலே, குறிப்பாக யாழ்ப்பாணம், மாதோட்டம், பூநகரி ஆகிய பிரதேசங்களிலே புழக்கத்திலிருந்த நூற்றுக்கணக்கான பழங்காசுகளை ப.புஷ்பரத்தினத்தாற் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவற்றைப் பற்றிய சில விபரங்களை அவர் தனது நூல்களிலும் சில கட்டுரைகளிலும் வெளியிட்டுள்ளார்.[21] அவர் இந்நாணயங்களை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

> பிடுல்ப் இங்கு கிடைத்த நாணயங்களை மூன்று பிரதான பிரிவு களாக வகைப்படுத்தியுள்ளார். முதலாவது பிரிவின் நாணயத்தின் முன்புறத்தில் இடம் அல்லது வலப்புறம் பார்த்த நிலையிற் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் காளை; இதற்கு இருபுறமும் குத்துவிளக்கு; இவற்றிற்கு மேலே விளிம்பை ஒட்டிப்பிறைச்சந்திரன். பின்புறத்திற் பீடத்தின் .மேல் கிடையாக அல்லது பக்கவாட்டில் இரு மீன் சின்னங்கள். இவ்வகையைச் சேர்ந்த சில நாணங்களின் முன்புறத்தில் காளை அல்லது தனியொரு மீன் சின்னம் காணப்படுகின்றது. இவை பெரிதாகவும் மிக அழகாகவும் உள்ளன. பின்புறத்திலே ஒன்று அல்லது இரண்டு மீன் சின்னத்துடன் சங்கு, பூரணகும்பம், செண்டு, தாமரைக் கொடி போன்ற பிற சின்னங்களும் இடம் பெற்றுள்ளன. இவை காலவேறுபாட்டை அல்லது நாணயங்களை வெளியிட்ட மன்னர்களுக்கிடையிலான வேறுபாட்டைக் காட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதாக எடுத்துக் கொள்ளலாம். இவ்வகை நாணயங்கள் தமிழகத்தில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. பெரும்பாலும் வட இலங்கைக்குள் கிடைத்திருப்பதாற் குறிப்பிட்ட காலப்பகுதியில் இவை புழக்கத்தில் இருந்ததெனக் கூறலாம்.

இரண்டாவது பிரிவில் வலப்புறம் பார்த்த நிலையில் நிற்கும் குதிரை, இதன் முகத்திற்குக் கீழே பலிபீடம் காணப்படுகிறது. விளிம்பை யொட்டி மேல்புறமாக இடப்புறத்திற் சந்திரனும் மத்தியில் சங்கும் காணப்படுகின்றன. பின்புறத்தில் பீடத்தின் மேல் கிடையாகவுள்ள மூன்று மீன் சின்னங்கள்; இதன் இருபுறமும் குத்துவிளக்குகள் உள்ளன. இவ்வகை நாணயங்கள் சிலவற்றின் பின்புறத்தில் வரும் பீடத்துடன் காணப்படும் மீன் சின்னங்கள் சில நாணயங்களில் கடலினுள் இருக்கும் தாவரப்பட்சியை உண்பது போல வடிவமைக்கப்பட்டுள்ளன.[23]

மூன்றாவது பிரிவில் உள்ளவை சதுரவடிவிலும் வட்ட வடிவிலும் உள்ளன. முன்புறத்தில் தனியொரு மீன் சின்னமும் இருபுறமும் குத்துவிளக்கும் காணப்படுகின்றன. இந்த அம்சமே பின்புறத்திலும் காணப்படுகின்றது.[22]

இங்கு, நான்கு வகைகளைச் சேர்ந்த நாணயங்கள் மூன்று வகையினவாக வர்ணிக்கப்படுகின்றன. பிடுல்ப் முதலாவது வகையிலுள்ளவை என்று கருதும் நாணயங்கள் உண்மையில் வெவ்வேறு அம்சங்களைக் கொண்ட இரு வேறு பிரிவுகளுக்குரியவை. அவற்றில் ஒரு வகை ஒரு புறத்திலே இடபத்தின் இலச்சினை பதிக்கப்பட்டவை. ஏனையவை அந்த வடிவம் பதிக்கப்படாதவை.

இந்த நான்கு வகையான நாணயங்களிலும் ஒரு பொதுப்பண்பு உண்டு. அவை யாவும் மீனுருவங்களைப் பெற்றுள்ளன. அவை ஏதோவொருவிதத்தில் மீனுருவத்தைக் குலச்சின்னமாகக் கொண்ட அரசவம்சமொன்றுடன் தொடர்புடையன என்று கொள்ளலாம். எமது அறிவுக்கு எட்டியவரையில் அது பாண்டிய வம்சமாகத்தான் இருக்க வேண்டும். ஆயினும், இந்த வகைகளைச் சேர்ந்த நாணயங்கள் யாவும் யாழ்ப்பாண இராச்சியத்திலே வெளியிடப்பட்டன என்று கொள்வதற்கு வலுவான காரணம் உண்டென்பதால் அவை பாண்டியரோடு ஏதோ ஒருவகையிலே தொடர்புகொண்டிருந்த அரசர்களால் வெளியிடப்பட்டவை என்று கொள்வதற்கு இடமுண்டு. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சிக் காலம் முதலாகப் பாண்டியர் எழுச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றமையும், சோழரின் இராச்சியம் நிலைகுலைந்ததும் அயல் நாடுகளிலே பாண்டியரின் செல்வாக்கு மேலோங்கியதும் இக்காலத் தமிழக வரலாற்றின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.[23]

யாழ்ப்பாண இராச்சியத்து நாணய முறையின் உற்பத்தி, வடிவமைப்பு, தொடர்ச்சி என்பவற்றைப் பொறுத்தவரையில் இதுவரை கவனித்தவகைகளில் முதலாவது வகையில் உள்ளவையே மிகவும் முக்கியமானவையாகும். அவற்றிலே காணப்படும் இடபம், அதனருகில் அமைந்த குத்துவிளக்குகள், மேலே, இடப்புறத்தில் விளிம்பின் ஓரமாக அமைந்த அம்சங்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் காசுகள் பலவற்றிலுங் காணப்படுகின்றன.[24]

இடபமும் மீனுருவமும் பொறித்த நாணயங்களுக்கும் பொலன்னறுவை இராசதானியில் ஆட்சி புரிந்த மன்னர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இருக்கவியலாது. அந்த நிலையில் மீனுருவம் பொறித்த நாணயங்களை 12ஆம், 13ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணம், பூநகரி என்பன அடங்கிய இலங்கையின் வடபகுதியில் அதிகாரம் பெற்றிருந்த ஆட்சியாளர்களே வெளியிட்டிருக்க வேண்டும்.

மீனுருவங்கள் காணப்படும் நாணயங்களில் இடபத்தின் வடிவம் அமைந்தவை, அது இல்லாதவை என்ற இரு வகைகள் உண்டு. குதிரையின் உருவம் பொறித்த இன்னொரு வகையான காசுகளும் உண்டு. குதிரை சில சமயங்களில் அஸ்வமேத யாகஞ் செய்து அதிபரசர் நிலையினைப் பெற்றமையின் அடையாளமாகவுங் கொள்ளத் தக்கது. இந்நாணயங்களைப் பற்றி ஆராய்வு செய்கின்றபொழுது இரண்டு அடிப்படையான விடயங்களைக் கருத்திற் கொள்ளவேண்டும். அவற்றிலொன்று ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் அவற்றுக்கும் எந்த விதமான நேரடியான தொடர்பும் இல்லை என்பதாகும். மற்றது அவை ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திற்கு முற்பட்டவை என்பது. அவ்வாறாகில் அவை 13ஆம் நூற்றாண்டிற்கு உரியனவாகலாம். அந்தக் காலம் இலங்கையின் வட, வடகிழக்குப் பகுதிகளில் மாகனும் அவனுக்குப் பின்பு சாவகனும் ஆட்சி புரிந்த காலம். அது தென்னிந்தியாவிலே பாண்டியரின் எழுச்சிக்காலம்.

இதுவரை இங்கு குறிப்பிட்டவற்றை விட இன்னுமொருவகை நாணயங்கள் கிடைத்துள்ளன. அவை மிக அரிதாகக் கிடைத்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் ஒரு புறத்தில் கால்களை மடக்கிப் படுத்திருக்கும் இடபத்தின் கோலமும் அதன் இரு பக்கங்களிலும் குத்துவிளக்குகளும் காணப் படும். இடபத்தின் கீழ் மூன்று கோடுகள் தெரிகின்றன. மேலே இடபத்தின் தலையின் உயரத்தளவில், அதன் பின்புறமாக நாணயத்தின் விழிம்பினை அண்டிப் பிறைச்சந்திரனின் வடிவம் அமைக்கப் பட்டுள்ளது.[25]

நாணயத்தின் மறுபக்கத்தில் ஸ்ரீ சாகவந் என்று தேவநாகரியில் எழுதப்பட்டுள்ளது. பொலன்னறுவைக்கால அரசர்கள் எல்லோரும் தங்கள் பெயர் பொறித்த காசுகளை வெளியிட்டனர். அவர்களின் பெயர்களும் தேவநாகரத்தில் எழுதப்பட்டிருக்கும். ஆனாற் சாகவன் என்பது அரசனின் பெயரன்று. அது ஒரு நாட்டின் பெயர் வழியாக வந்த சொல். சாகவந் என்பது ஜாவக என்ற சமஸ்கிருத / பிராகிருதச் சொல்லின் உருமாறிய வடிவமான தமிழ்ச்சொல். ஜாவக என்பது தமிழில் சாவகம் என்று சொல்லப்படும். ஜாவக தேசத்தவனைச் சாவகன் என்று குறிப்பிடுவது வழமை. ஈழத்திலே 13ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ஒருவனைப் பாண்டியரின் சாசனங்கள் சாவகன்/சாவன் என்று குறிப்பிடுகின்றன. ஈழத்தில் அரசு புரிந்த சாவகனின் அக்கசாலையினர் சாவகன் என்பதைச் சரியாக உச்சரிக்க முடியாமையால் அதனை சாகவன் என்று எழுதியுள்ளனர்.

சாவகனின் ஆட்சி இலங்கையின் வட, வடகிழக்குப் பகுதிகளில் எவ்வாறு ஏற்பட்டது என்பதை விளக்குவது அவசியமாகின்றது. இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்து (1236 -1271) நிகழ்ச்சிகளை விளக்குமிடத்து பாளி, சிங்கள இலக்கியங்கள் ஜாவகனாகிய சந்திர பானுவின் படையெடுப்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவை இரு வேறு காலகட்டங்களில் நடைபெற்றன. சாவகரின் முதலாவது படையெடுப்பு இரண்டாவது பாராக்கிரமபாகுவின் 11ஆம் வருடத்தில் (1247) நடைபெற்றது. அதனைப் பற்றி மகாவம்சம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

> அரசனுடைய 11ஆம் வருடத்தில் ஜாவகரின் அரசனாகிய சந்திரபானு என்பவன் கொடிய ஜாவகப் படையோடு வந்தான். தாம் புத்தர் பிரானைப் பின்பற்றுபவர்களென்று கபடமாகச் சொல்லிக் கொண்டு வந்து சேர்ந்தனர். பயங்கரமான சர்ப்பங்களைப்போல நச்சம்பு களுடன் ஜாவக சேனையில் அடங்கிய படைவீரர் எல்லாத் துறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வழியாகவும் வந்து, தம்மிடம் அகப்பட்டவர்களைப் பிடித்துத் துன்புறுத்தி, பெருஞ்சினங் கொண்டு இலங்கையை அழித்தார்கள். மாகன் முதலானோரால் துன்புறுத்தப்பட்ட இலங்கையினை மீண்டும் ஜாவகர் அழித்தனர். அந்நாட்களில் அரசன் தனது மருமகனாகிய வீரபாகுவின் தலைமையில் ஜாவகருக்கு எதிராகப் படை வீரர்களை அனுப்பினான். இராகுவை ஒத்தவனாகிய வீரபாகு சந்திரபானுவைப் போரில் அழித்தான்.[26]

வீரபாகு சாவகனுக்கு எதிராகப் போர்புரிந்து பெற்ற வெற்றியை மகாவம்சம் மிகவும் மிகைப்படுத்திச் சொல்லுகின்றது. வீரபாகுவினாற் சந்திரபானுவை அழிக்க முடியவில்லை. இரண்டாம் பாராக்கிரம பாகுவின் இராச்சியத்திலிருந்து மட்டுமே சாவகப் படைகளை அவனாற் துரத்த முடிந்தது. அந்த இராச்சியத்தில் இலங்கையின் வடக்கிலும் வடகிழக்கிலுமுள்ள பகுதிகள் அடங்கியிருக்கவில்லை. அப்பகுதிகளிற் சந்திரபானு தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. அங்கிருந்து சந்திரபானு மீண்டும் பாராக்கிரமபாகுவோடு போர் தொடக்கினான். அதனைப் பற்றி மகாவம்சம் மேல்வருமாறு வர்ணிக் கின்றது:

> அச்சமயத்தில், முன்பு கடும் போரிலே தோல்வியுற்ற அரசனாகிய சந்திரபானு, சோழ, பாண்டிய நாடுகளிலும் வேறிடங்களிலும் பெருந்தொகையான தமிழ்ப் போர் வீரர்களைச் சேர்த்துக் கொண்டு, ஒரு மகாசேனையோடு மாதோட்டத்திற்கு வந்தான். பதி, குருந்தி முதலான மண்டலங்களிலுள்ள சீனரைத் தன் வசப்படுத்திக் கொண்டு சுபகிரிக்கு வந்தான். அங்கு பாசறை அமைத்துக்கொண்டு, தூதுவர்கள் மூலம் மேல்வருமாறு செய்தியனுப்பினான். திரிசீஹளத்தை நான் கைப்பற்றுவேன். அதனை உன்னிடம் விடமாட்டேன். எனவே அதனையும் முனிவரினுடைய தந்துதாது, பிக்ஷாபாத்திரம் ஆகிய வற்றையும் ஆட்சியதிகாரத்தையும் என்னிடம் நீ ஒப்படைக்க வேண்டும். அல்லாவிடில் போருக்கு ஆயத்தமாக வேண்டும்.[27]

இளவரசர்களான விஜயபாகு, வீரபாகு என்போர் சந்திரபானுவின் மகாசேனையோடு போர் புரிந்து அதனை நிலைகுலையச் செய்தனர் என்று சொல்லப்படுகின்றது. பாதுகாப்பற்ற சந்திரபானு களத்தலிருந்து ஓடிவிட்டான். ஆயினும் அவனது அரச சுற்றத்து அழகிய பெண் களையும், யானைகள், குதிரைகள், வாள் முதலான பெருமளவிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதங்கள் முதலானவற்றையும் நிதியத்தையும் வெற்றி முரசுகளையும் கொற்றக்குடை முதலான சின்னங்களையுங் கைப்பற்றி அவற்றை விஜயபாகு அரசனிடம் அனுப்பி வைத்தான் என்று சொல்லப் படுகின்றது.[28]

இவ்வாறாகக் கடுஞ் சமர்புரிந்து, அதில் வெற்றி பெற்றதும் பிரதேசத்தைக் கைப்பற்றி, இலங்கை முழுவதையும் ஒன்றாக அவன் இணைத்தான் என்பது மகாவம்சக் குறிப்பு.[29]

விஜயபாகு சந்திரபானுவைத் தோற்கடித்ததன் பயனாக இலங்கை முழுவதையும் ஒன்றிணைத்தான் என்ற குறிப்பு ஆதாரமற்றது; அது பிழையானது. எனவே, போரினைப் பற்றி மகாவம்சம் கூறும் விபரங்கள் பெரும்பாலும் மிகைபாடானவை என்று கருதலாம். சந்திரபானு போரிலே தோற்றுவிட்டான் என்பதும் தோல்வியின் விளைவாக அவன் தனது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கு பின்வாங்கிச் சென்றான் என்றும் கொள்வதே ஒரு பொருத்தமான முடிபாகும். அது பாண்டியரின் சாசனக் குறிப்புகளால் உறுதியாகின்றது.

ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது ஆட்சிக் காலத்திலே (1251-1268) பாண்டியரின் ஆதிக்கம் உன்னதமான வளர்ச்சியை அடைந்தது. அவன் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றினான் (1256). சோழமண்டலத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றியிருந்த ஹொய்சாளர் அதனை இழந்தனர். கண்ணனூர், ஸ்ரீரங்கம் என்பவற்றில் அதிகாரம் பெற்றிருந்த சோமேஸ்வரன், ராமநாத(ன்) என்போர் அவற்றை விட்டுக் கர்நாடகத்துக்கு ஓடினார்கள். மூன்றாம் இராசேந்திர சோழனுடைய ஆட்சி அழிவுற்றது. பாண்டியரின் ஆதிக்கம் பரவிய மையால் நெல்லூரிப் பட்டினத்துத் தெலுங்குச் சோடர் காகதீயர், செவுணர் மீதும் அதன் தாக்கம் ஏற்பட்டது.[30]

ஜடாவர்மன் சுந்தரபாண்டியனது காலத்துப் பாண்டியரின் சாச னங்கள் இலங்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப் பிடுகின்றன. அக்காலத்தில் இலங்கையுடன் பாண்டியர் ஏற்படுத்திய தொடர்புகளைப் பற்றி மகாவம்சம் எதனையுங் குறிப்பிடவில்லை. அவற்றை அந்நூலாசிரியர் அறிந்திருக்கவில்லை என்றுங் கருதலாம். ஜடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஸ்ரீரங்கம் கல்வெட்டு அவனை இலங்கை மீது படையெடுத்த இரண்டாம் இராமன் என்று வர்ணிக் கின்றது.[31] அவன் இலங்கை அரசனைத் தேற்கடித்தமை பற்றித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புட்குளி கல்வெட்டிலே கூறப்பட்டுள்ளது. சுந்தரபாண்டியனுடைய மெய்க்கீர்த்தி, அவனது ஐந்தாம் ஆட்சியாண்டு முதல் துலங்கொளி மணியும் சூழிவேளமும் இலங்கை காவலனை இறைகொண்டருளி என்ற குறிப்பினைக் கொண்டுள்ளது.[32] ஈழத்தரசன் ஒருவனிடமிருந்து மிக ஒளி பொருந்திய மணிகளையும் யானைகளையும் பாண்டியர் திறையாகக் கொண்டனர் என்பது இக்குறிப்பினால் உணரப்படும். அரசனுடைய பெயர் சொல்லப்படவில்லை. ஆயினும், பாண்டியர் எந்த அரசனை இவ்வாறு குறிப்பிட்டனர் என்பது மேலாலே விளக்கப் படுவனவற்றாலே தெளிவுபெறும்.

சுந்தரபாண்டியனின் இளைய சகோதரனும் துணையரசனுமாகிய வீரபாண்டியன் இக்காலத்தில் நடைபெற்ற பாண்டியரின் படை யெடுப்புகள் பலவற்றுக்குத் தலைமை தாங்கினான். பாண்டியரின் ஆதிக்கம் பெருவளர்ச்சி அடைவதற்கு அவனது சாதனைகளே ஏதுவாக இருந்தன என்றும் கருதலாம். வீரபாண்டியனது (1253-1273) பத்தாம் ஆண்டு முதலாக வெளியிடப்பட்ட அவனது மெய்க்கீர்த்தியிற் சோணாடும் ஈழமுங் கொண்டு சாவகன் முடியும் முடித்தலையும் கொண்டருளிய வீரபாண்டிய தேவர்க்கு... என்னுங் குறிப்பு அமைத்துள்ளது.[33] வீரபாண்டியன் சோழநாடு, ஈழம் ஆகியவற்றின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைக் கைப்பற்றினான், சாவகன் என்பவனுடைய முடியினையும் முடித்தலையினையுங் கொண்டான் என்பன இதனாற் புலனாகின்றன. இதுவே, சாவகனைப் பற்றிப் பாண்டியர் சாசனங்களில் வரும் முதலாவது குறிப்பாகும். சாவகன் முடிபுனைந்த அரசனொருவன் என்பதும் போரிலே அவனை வீரபாண்டியன் கொன்று விட்டான் என்பதும் வீரபாண்டியனின் சாச னக் குறிப்பால் உணரப்படும் விடயங்களாகும்.

சாவகன் ஈழத்து அரசன் என்பதும் அவனுக்கெதிரான போர் ஈழத்தில் நடைபெற்றது என்பதும் வீரபாண்டியனுடைய வேறொரு மெய்க்கீர்த்தி வடிவத்தின் வாசகத்தினால் உணரப்படுகின்றது. குடுமியான் மலையிலுள்ள வீரபாண்டியனது மெய்க்கீர்த்தி அவனது ஈழப்போரினைப் பற்றி ஓரளவு விரிவாக மேல்வருமாறு வர்ணிக் கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உரைகெழு....... பல அரைசியல்*
*வழக்கம் நெறிப்பட நாட்டு(ங்)*
*குறிப்பினுள்......ட்டிசைந்திருப்*
*பாதஞ்செ....திருந்த மந்திரி சரணமை திகழ்ந்தினிது*
*நோக்கி முரண்மிகு சிறப்பின்*
*ஈழ மன்னர் இலகுவரிலொருவனை*
*வீழப் பொருது விண்மிசையேற்றி*
*உரிமைச் சுற்றமும் உய்குலம்*
*புக்குத் தருமையாண்மையு பல*
*வகைப் புரவியும் க(ன)மனித்தேரும்*
*சீனவடமும் நாகத்தோடும்*
*நவமணிக்குவையும் ஆடகத் திரியும் அரி*
*ஆசனமும் முடியுங்கட்கமும் முழுமணியாரமும் கொடியுங்*
*குடையும் குளிர் வெண்கவரியும்*
*முரசுஞ் சங்கமும் தனமும் முத(லாய)*
*அரைசு கெழுதாயம்-அடையவாரி*
*காணா மன்னவர் கண்டு கண்டு*
*ஏங்க கோணமாமலையினுந் திரிகூட*
*கிரியினும் உருகெழு கொடிமிசை*
*இருகயலெழுதி ஏனை வேந்தனை*
*ஆனை திறை கொண்டு பண்டேவல்*
*செய்யாதிகல் செய்திருந்த*
*சாவன்மைந்தன் நலமிருந்திறைஞ்ச*
*திருக்கோணம் அலை வரப்படன்*
*கழித்து வழங்கி அருளி முழங்கு*
*களிறேறி பார்முழுதறிய ஊர்வலஞ்*
*(செ)(ய) வித்து தந்தை மரபென*
*நினைப்பிட்டரை சிட மதித்து*
*ஆனூர் புரிக்கு விரையச்*
*செல்கென (வி) டைகுடுத்தருளி*[34]

இதிலே இலங்கையில் வீரபாண்டியன் நடத்திய போர் தொடர்பாகப் பல விடயங்கள் சொல்லப்படுகின்றன. சாசனத்தின் சிலவிடங்களில் எழுத்துகள் சிதைவுற்றதால் வாசகத்தின் சில அம்சங்களிலே பொருள் தெளிவாகத் தெரியவில்லை. சாசனத்தின் மொழி நடையும் வழமைக்கு மாறாகச் சில இடங்களில் வட்டார வழக்கான நடையில் அமைந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. ஆயினும் சாசனத்திருந்து மேல்வரும் விடயங்களை அறிய முடிகின்றது:

1. வீரபாண்டியன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்று, அங்குள்ள அரசனொருவனைப் போரிலே கொன்றான்.

2. போரில் மாண்ட மன்னனின் அரச சின்னங்களான அரியாசனம், முடி, வாள், கொடி, குடை முதலானவற்றையும் சீனவடம், நாகத்தோடு முதலான பெறுமதி மிக்க அணிகலன்களையும் அவனது படையிலுள்ள யானை, குதிரைகளையும் பாண்டியரின் படை கைப்பற்றி விட்டது.

3. வீரபாண்டியன் தானடைந்த வெற்றியின் அடையாளமாக இணைக்கயல்களின் உருவங்களை திருகோணமலையிலும் திரிகூடகிரியிலும் பொறித்தான்.

4. திருகோணமலையிலே பாண்டியராசன் தங்கியிருந்த சமயத்தில் முன்பு அடங்காது, பகைமை கொண்டு போர் புரிந்த சாவகனின் மைந்தன் பணிந்து வேண்டிக் கொண்டதால், தந்தையினுடைய இராச்சியம் மகனுக்குரிமையாகும் என்பது அரசியல் நெறி என்ற உணர்வினால் அவனுக்கு வீரபாண்டியன் ஆட்சியதி காரம் வழங்கினான். அவனுக்கு அரசருக்குரிய சின்னமான வீரக்கழலினை அணிந்து, அவனை யானை மேல் ஏற்றி, ஊர்வலம் செய்வித்து அதன் பின்பு அவனுடைய ஊருக்குச் செல்லுமாறு அனுப்பினான்.

5. வீரபாண்டியன் போர் முடிந்த பின் செய்த ஏற்பாடு திருகோண மலையிலே நடைபெற்றதென்று சாசனக் குறிப்பால் உணரப் படும். அந்நாட்களிலே திருகோணமலை சாவக மன்னரின் தலைநகராக அமைந்திருத்தல் கூடும்.

6. இலங்கை அரசன் வேறொருவனிடமிருந்து வீரபாண்டியன் ஆனைகளைத் திறையாகப் பெற்றான். அவன் இரண்டாம் பாராக்கிரமபாகுவாதல் வேண்டும் என்பது ஒரு ஊக மாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் அரசு மகனுக்குரியது என்று கருதிய வீரபாண்டியன் அதன் மீதான உரிமையினையும் அரசனுக்குரிய அதிகாரங்களையும் சாவகன் மைந்தனுக்கு வழங்கியதால் சாவகர் இலங்கையின் ஒரு பகுதியைக் கைப்பற்றி அங்கு இராச்சியம் ஒன்றை உருவாக்கியிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

சாவகனுக்கு எதிராகப் படையெடுத்தமைக்கான காரணத்தை வீரபாண்டியனின் சாசனம் நேரடியாகக் குறிப்பிடவில்லை. அவனுடைய நாட்டைக் கைப்பற்றி, அதனைப் பாண்டிய இராச்சியத்தின் ஒரு நிர்வாகப் பிரிவாக அமைத்துக்கொள்ளும் நோக்கம் பாண்டியரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருப்பின் சாவகனின் மைந்தனுக்குப் போரின் பின் அரசபதவி கிடைத்திருக்காது. ஈழத் தினைப் பொறுத்தவரையில் அவர்களது குறிக்கோள் மேலாட்சியாகும். சாவகன் பாண்டியரின் மேலாதிக்கத்தை ஒரு கால கட்டத்தில் ஏற்றுக் கொண்டானாயினும் பின்பு, தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டதும் பாண்டியரின் மேலாதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டான். அவனைப் பண்டேவல் செய்யாதிகல் செய்திருந்த சாவன் என்று குடுமியான்மலைச் சாசனம் குறிப்பிடுகின்றமையும் இதனை உணர்த்து கின்றது.

சந்திரபானு, கி.பி.1247ஆம் ஆண்டளவிலே பாராக்கிரமபாகுவிற்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்பு தோல்வியில் முடிந்த பின் இலங்கையின் வேறொரு பாகத்தின் மீது கவனஞ் செலுத்தினான். மாகனது ஆட்சியில் அமைந்த பகுதிகளில், குறிப்பாகத் தமிழர் வாழ்ந்த பகுதிகளில் அவன் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். அந்த முயற்சியில் அவன் பாண்டியரின் ஆதரவையும் நாடிப் பெற்றிருக்கலாம். பாண்டியருக்குத் துலங்கொளி மணியுஞ் சூழி வேளமும் திறையாகக் கொடுத்த இலங்கை காவலன் இவனேயாதல் வேண்டும். 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியின் ஆரம்பத்திலே சந்திரபானு என்னும் ஜாவகன் இலங்கையரசன் என்னும் நிலையை அடைந்து விட்டான். அவன் நாணயங்களை வழங்கியிருப்பின் அவற்றிலே பாண்டியரின் மேலாதிக்கத்தைக் குறிக்கும் சின்னங்கள் இடம்பெற்றிருக்கும் என்று கருதலாம். இடபத்தின் உருவம் ஒரு புறத்திலும் மறுபுறத்தில் இரு மீன்களின் வடிவமும் பொறித்த நாணயங் களிற் சிலவற்றை சந்திரபானு வெளியிட்டான் என்று கருதலாம். பின்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஈழத்திலே இராச்சியம் ஒன்றை அமைத்து வலுப்பெற்றதும் பாண்டியரின் மேலாதிக்கத்தை நிராகரித்தும், அவர்களுக்குத் திறை செலுத்தாதும் ஆட்சி புரிந்தான் எனக் கருத முடிகின்றது. அவ்வாறான ஒரு சூழ்நிலையில் சாகவன் என்ற சொல் பதிக்கப்பட்ட நாணயங்களை வழங்கினான் என்று கொள்வது ஒரு பொருத்தமான முடிபாகலாம். சாகவன் என்ற மொழி அமைந்த நாணயங்கள் மிக அரிதாகவே கிடைத்துள்ளன. அவை யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகளில் மட்டுமே கிடைத்துள்ளன. சாவகனின் வீழ்ச்சியோடு அவற்றின் உற்பத்தி தடைப்பட்டுவிட்டது. அதன் பின்னர் முன்பு போலவே ஒரு புறத்தில்இடபத்தின் உருவமும் மறுபுறத்தில் மீன் வடிவங்களும் பொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம்.

**3. கந்தசுவாமியின் பெயரால் நாணயங்கள்**

*இலகியசகாப்த மெண்ணூற்றெழுபதா மாண்டதெல்லை*
*அலர் பொலிமாலைமார்பனாம் புவனேகவாகு*
*நலம்மிகும் யாழ்ப்பாணத்துநகரி கட்டுவித்துநல்லைக்*
*குலவியகந்தவேட்குக் கோயிலும் கட்டுவித்தானே*[35]

இது கைலாயமாலையில் அனுபந்தமாவுள்ள ஒரு தனிப்பாடல். இதற்கும் கைலாயமாலையிலே சொல்லப்படும் விடயங்களுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. கைலாயமாலை சிங்கையாரியன் குலத்து முதலரசன் நல்லூரில் இராசதானி அமைத்தமை, கைலாயநாதர் கோயிலை நிர்மாணித்தமை, இராச்சியத்தில் நிர்வாகந் தொடர்பான ஏற்பாடுகளைச் செய்தமை முதலான விடயங்களை வர்ணிக்கின்றது.[36] அந்நூலின் பிரதிகளிலே இணைந்துள்ள தனிச்செய்யுள் புவனேகபாகு என்னும் பட்டப்பெயர் கொண்ட அரசனைப் பற்றியது.

புவனேகபாகு என்னும் பெயருடைய அரசர் பலர் இலங்கையில் ஆட்சி புரிந்தனர். அவர்களிற் கோட்டை அரசனாகிய ஆறாம் புவனேகபாகுவே யாழ்ப்பாணத்து வரலாற்றுடன் தொடர்புடையவன். அவன் முடிசூடிக்கொள்வதற்கு முன் செண்பகப்பெருமாள் என்னும் பெயர்கொண்டவன். சிங்கள நூல்கள் அவனைச் சப்புமல் குமார என்று குறிப்பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செண்பகப்பெருமாளும் அவனுடைய இளைய சகோதரனாகிய அம்புலாகல குமாரனும், தகப்பன் இறந்த பின்பு, தாயாரோடு ஆறாம் பராக்கிரமபாகுவின் அரண்மனையில் வாழ்ந்தனர். சிறந்த போர் வீரனாகிய செண்பகப்பெருமாளைச் சேனாதிபதியாக அரசன் நியமித்தான்.[37] இலங்கையிலுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றின் மீதும் தனது மேலாண்மையை ஏற்படுத்துவது பாராக்கிரமபாகுவின் நோக்கமாய் இருந்தது. எனவே யாழ்ப்பாணத்தின் மீது இரு தடவை கள் செண்பகப்பெருமாள் படையெடுத்துச் சென்றான். முதலாவது முயற்சி தோல்வியில் முடிந்தது. இரண்டாவது படையெடுப்பில் யாழ்ப்பாண இராசதானியை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றிக் கொண்டான். யாழ்ப்பாணத்து அரசனாகிய கனகசூரிய சிங்கையாரியன் தனது மனைவி மக்களோடு தென்னிந்தியாவிற்கு ஓடிவிட்டான். கி.பி. 1450 முதலாகப் 17 வருடங்கள் செண்பகப்பெருமாள் நல்லூரில் இராசப்பிரதிநிதியாகவிருந்து ஆட்சி புரிந்தான்.[38] அவன் அரியாச னத்திலிருந்து அரசப்பிரதானிகளைச் சபை கூட்டிச் சீர்வரிசைகளோடு ஆட்சி புரிந்தான் என்று 'கோகிலசந்தேஸய' என்னும் சமகாலச் சிங்கள நூல் நயம்பட வர்ணிக்கின்றது.[39]


கோட்டை அரசனின் சேனாதிபதியாகச் சென்று யாழ்ப்பாணத்தைச் செண்பகப்பெருமாள் கைப்பற்றியபோதும் அந்த இராச்சியத்தின் தனித்துவம் தொடர்ந்தும் புதிய ஆட்சியாளர்களினாற் பேணப்பட்டது. அது கோட்டை இராச்சியத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை. யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள அதிகாரிகள், பிரதானிகள் என்போரின் மூலம் அங்குள்ள தேசவழமைப்படியே பரிபாலனம் நடைபெற்றது.[40] செண்பகப்பெருமாள் அங்கு பௌத்த சமயத்தின் பாதுகாவலனாக வன்றிச் சைவசமயத்தின் ஆதரவாளனாகவும், பாதுகாவலனாகவும் விளங்கினான். அதனால் யாழ்ப்பாண தேசத்தவர் அவனுடைய ஆட்சியை ஒப்புக்கொண்டனர். அவன் நல்லூரிலே கந்தசுவாமி கோயிலைக் கட்டினான் என்ற விபரம் பழைய மரபொன்றினை அடிப்படையாகக் கொண்டது எனக் கருதலாம். இன்றுவரை கந்தசுவாமி கோயிலிற் படிக்கப்படும் கட்டியம் அவனைப் புகழ்ந்துரைக்கின்றது. அது அவனை "சோடஸ மகாதான கஜவல்லிமகாவல்லி ஸமேத ஸ்ரீ ஸுப்ரமண்ய பாதராவிந்தவந்தித ஸ்ரீ சங்கபோத புவநேகபாஹு" என்று வர்ணிக்கின்றது.[44] இந்த மரபு கைலாயமாலையிலே காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச் செய்யுளினின் குறிப்பினை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

கி.பி. 1467இல் கோட்டையில் ஆறாம் பராக்கிரமபாகு இறந்துவிட்டதும் செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்திலுள்ள படைகளை அழைத்துக்கொண்டு தென்னிலங்கையை நோக்கிச் சென்றான். கோட்டையிலே அரச பதவி பெற்றிருந்த பழைய அரசனின் மகள் வழிப்பேரனைக் கொன்றுவிட்டு அங்கு அரசனாக முடிசூட்டிக் கொண்டான்.[42] சிங்கள சங்கே எனும் பெருங் கலவரம் அங்கு உண்டானது. அக்காலத்தில் தென்னிந்தியாவில் மதுரை, தஞ்சாவூர் சமஸ்தானங்களின் அதிபர்களின் ஆதரவு பெற்ற கனகசூரிய சிங்கையாரியன் யாழ்ப்பாணத்திற்கு வந்து அங்கு மீண்டும் அதிகாரம் பெற்றான்.

யாழ்ப்பாண அரசர்களின் நாணயங்களினின்றும் வேறுபட்ட அம்சங்கள் பொருந்திய சில நாணயங்கள் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன. அவை மிகவும் அரிதாகத்தான் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலும் பூநகரிப் பகுதியிலும் அவை கிடைத்துள்ளன. அவை இலங்கையில் வெளியிடப்பட்டவை என்பதை ப.புஷ்பரத்தினம் உறுதியாக நிறுவியுள்ளார்.[43] அந்த நாணயங்களின் சிறப்பான அம்சம் மயிலின் உருவம் அமைந்துள்ளமையாகும். அவை இரண்டு வகையானவை. ஒருவகையில் உள்ள நாணயங்களில் ஒருபுறத்தில் மயிலின் உருவந் தெரிகிறது. அதன் மேலே சூரியசந்திரர்களின் வடிவங்கள் காணப்படுகின்றன. பாம்பினைக் கொத்திப் பிடித்திருக்கும் கோலத்தில் மயிலின் வடிவம் அமைந்துள்ளது. நாணயத்தின் விளிம்பினை அடுத்து





மண்ணித்தலை (பூநகரி) இல் கிடைக்கப் பெற்ற
நல்லூர் இராசதானி கால நாணயங்

(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வட்டவடிவமான வளையங்கள் தெரிகின்றன. அவற்றின் நடுவிலே புள்ளிகளால் அமைந்த வளையங் காணப்படுகின்றது. மயில் வலம்புறம் நோக்கிய கோலத்தில் உள்ளது.[44] யாழ்ப்பாண அரசர்கள் வெளியிட்ட சேது நாணயங்கள் சிலவற்றின் அம்சங்கள் இதிலுங் காணப்படுகின்றன. புள்ளிகளாலான வளையங்களும் அதனை உள்ளடக்கியிருக்கும் வளையங்களும், சூரிய, சந்திரரின் வடிவங்களும் சேது நாணயங்களுக்கும் உரிய அம்சங்களாகும்.[45] அந்நாணயங்கள் சிலவற்றிலே இடப்புறம் நோக்கிய கோலத்தில் அமர்ந்திருக்கும் காளையினை நோக்கிய வண்ணமாக மயிலின் சிற்றுருவம் சில சேது நாணயங்களிற் காணப்படுகின்றது.

இந்நாணயத்தின் பின்புறத்திலும் மூன்று வளையங்கள் அமைந் திருக்கின்றன. நடுவிலே, மேலே கந் என்று 15ஆம் நூற்றாண்டுக்குரிய வரிவடிவ வளர்ச்சி நிலையிலுள்ள தமிழ் எழுத்துகள் தெரிகின்றன. கீழே இரண்டு உருவங்கள் தெரிகின்றன. ஒன்று சதுரவடிவம் போன்றது. அதனுள்ளே - என்னும் குறி தெரிகிறது. அருகிலே காணப்படும் உருவத்தை ஒரு கோயிலின் அடையாளமாகக் கொள்ளலாம். அதனை இடைக்குக் கீழமைந்த மனித வடிவத்தின் கோலமாகவுங் கொள்ளலாம். இரண்டாவது வகையிலுள்ள நாணயத்திலே முன்புறத்தில் இடப்பக்கம் நோக்கிய மயிலின் உருவந் தெரிகின்றது. பின்புறத்திலே கந் என்ற எழுத்துகளுக்குப் பதிலாக ஆ என்னும் தமிழ் எழுத்துக் காணப்படு கின்றது. மற்ற எல்லா அம்சங்களும் முதலாவது வகை நாணயத்திலுள்ள வற்றைப் போன்றவை.



வீரபாண்டியன் முனையில் (பூநகரி) கிடைக்கப் பெற்ற
நல்லூர் இராசதானி கால நாணயம்
(மூலம்: பரமு. புஷ்பரட்ணம், இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாணயங்களை யார் வெளியிட்டார்கள்? எப்போது வெளியிட்டார்கள்? எங்கு வெளியிட்டார்கள்? என்ற வினாக்கள் இயல்பாகவே தோன்றும். அவை யாழ்ப்பாண இராச்சியத்தில் வெளி யிடப்பட்டவை என்பதை ப.புஷ்பரட்ணம் தகுந்த காரணங்களோடு விளக்கியுள்ளார்.[46] மற்றைய இரண்டு வினாக்களுக்கான விடைகளைக் காண்பது இலகுவானதன்று. இந்நாணயங்கள் யாழ்ப்பாணத்து இராச தானியின் அக்கசலாசாலையினர் உருவாக்கியிருந்த நாணய வார்ப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் அவற்றிலே காணப்படும் சில பொதுவான அம்சங்களினாற் புலனாகின்றது.[47]

ஆயினும் ஆரியச்சக்கரவர்த்திகளின் அரச சின்னங்களான இடபமும் சேதுவும் இவற்றிலே காணப்படவில்லை. அவை நீக்கப் பட்டுள்ளன. அவற்றுக்குப் பதிலாகவே மயிலின் உருவமும் கந்/ஆ என்ற எழுத்துக்களும் இவற்றில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந் நாணயங்கள் தொடர்பாகக் கவனிக்க வேண்டிய இன்னொரு அம்ச முண்டு. இவற்றை வெளியிட்டவர்கள் சைவசமயத்திற்கு ஆதரவான வர்கள்; ஆனால் இடபத்தின் வடிவத்தைத் தங்கள் குலச்சின்னமாகக் கொள்ள முடியாதவர்கள். அதேசமயத்திலே அவர்கள் சேது என்ப தோடும் தொடர்பற்றவர்கள். இந்த அடிப்படையில் கந் என்ற எழுத்து கள் கந்தசுவாமியினது பெயரையும் ஆ என்ற எழுத்து ஆறுமுக சுவாமியினையுங் குறிப்பனவாதல் வேண்டும். அவ்வாறாகில் இந் நாணயங்கள் கந்தக் கடவுளின் பெயரால் வழங்கப்பட்டவை. அவற்றைச் செண்பகப்பெருமாள் வெளியிட்டானென்று கொள்ள முடிகின்றது. ஆதியான நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அவனே அமைத்தான் என்பது பல நூற்றாண்டுக் காலமாக நிலவிவரும் ஐதிகம் என்பது குறிப்பிடற்குரியது.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து யாழ்ப்பாண தேசத்தவரின் சமயவழிபாட்டு மரபுகளுக்கும் மொழி வழக்கிற்கும் ஏற்றவகையிலே தனது பதவிக்கும் அதிகாரத்துக்கும் உரிய சின்னங் களை அமைத்துக்கொண்டான் என்பது தெளிவாகின்றது. அதுபிர மிக்கத்தக்கவொன்று. அது முடியாட்சிக் காலத்து அரசியல் நெறி புரிந்துணர்வின் வழி ஏற்பட்ட நல்லெண்ணத்தின் அடையாளம். நல்லிணக்கத்திற்கு நல்லதோர் உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகள்**

1. பொன்னம்பலம் இரகுபதி 'பெருங்கற்கால யாழ்ப்பாணம்', கெருடாவில் *அம்பிகை சனசமூக நிலையத்தின் 70ஆம் ஆண்டு நினைவுச் சிறப்பிதழ்*, தொகுப்பாசிரியர் செ.கிருஸ்ணராஜா, 2003, பக்.85.
2. *மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, 2005, பக்.3, செய்யுள் 2.
3. குசலான் *மலைக்கல்வெட்டு 1*, உபராஜநாகன், ராஜா அபயன், அவனது மகன் காமினிதிஸ எனும் மூவரைக் குறிப்பிடுகின்றது.
4. S.Paranavithrana, *Inscription of Ceylon*, 1970, No.389.
5. *மேலது*, சாசனம் 338.
6. நாக என்ற சொல்லை உச்சரிக்குமிடத்துச் சில சமயங்களிற் சிலருக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்த நாணயத்தில் நாக என்பது ணாக என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதும் மரபு சமகாலத்திலிருந்தவர்க்குத் தமிழ் நாட்டில் அழகர் மலைக் கல்வெட்டு இதழும் ணாகன் என்ற பெயரைக் குறிப்பிடலாம்.

   சுடணாகசு என்பதிலுள்ள முதலாவது எழுத்தை 'சு' எனச் சிலர் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட இடத்தின் கீழ் நாணயங்தின் விளிம்பு நெழிந்து சிதைவாகவுள்ளதால் புகைப்படப் பிரதியில் உகரக்குறி அமைந்தாற் போன்ற தோற்றம் காணப்படுகிறது. எவ்வாறாயினும் நாகன் ஒருவன் அரசானகவிருந்து நாணயம் வெளியிட்டான் என்பதே முக்கியமான அம்சமாகும். இலங்கையின் ஆதி வரலாற்றுக்காலத்தில் அரச உருவாக்கத்தில் நாகர் பங்கு கொண்டனர் என்ற கருத்துக்கு இந்நாணயம் வலி சேர்க்கின்றது. பரமு புஷ்பரட்ணம், *இலங்கைத் தமிழரின் பண்டைக்கால நாணயங்கள்*, பவானி பதிப்பகம், புத்தூர், 2001, பக்.47.
7. *மேலது*, பக்.49.
8. *மேலது*, பக்.49.
9. சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழ் சாசனங்கள்*, 2006.
10. K.Indrapala, *The Evolution of and Ethnic Indentity*, pp. 172, 173.
11. பொன்னம்பலம் இரகுபதி 'பெருங்கற்கால யாழ்ப்பாணம்', கெருடாவில் *கிராமியமலர்*, 2003, பக்.86,88.
12. *மேலது*, பக்.92.
13. *மேலது*, பக்.93.
14. பரமு புஷ்பரட்ணம், *இலங்கைத் தமிழரின் பண்டைக்கால நாணயங்கள்*, பக்.57,58.
15. *மேலது*, பக்.90.
16. *மேலது*, பக்.91.

11767 'S.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. *மேலது*, பக்.90.

18. *மேலது*, பக்.91.

19. *மேலது*, பக்.95.

20. S.Pathmanathan, "Coins of Medieval Sri Lanka : The Coins of the Kings of Jaffna", *Spolia Zeylanila*, Vol.35, Parts 1&II, 1980, pp.409-417.

21. முன்புறத்திலே இடபத்தின் உருவமும் பின்புறத்திலே மீனுருவங்களும் பொறித்த நாணயங்களைப் பற்றி ப.புஷ்பரட்ணம் மேல்வருமாறு கூறுவார்: இரு மீன் சின்னங்களைக் கொண்ட நாணயங்களைத் தவிர பிற நாணயங்கள் எவையும் இதுவரை தமிழகத்திற் கிடைத்ததற்குச் சான்றிருப்பதாகத் தெரிய வில்லை. இந்நாணயங்கள் கூட தமிழகத்தில் கிடைத்ததாக இதுவரை வெளிவந்த நாணயங்கள் பற்றிய நூல்களிற் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தனிப்பட்ட சிலர் வேதாரணியம், இராமநாதபுரம் போன்ற இடங்களிற் கண்டு பிடித்ததை எம்மால் உறுதிசெய்ய முடிகிறது. ஆனால் இந்நாணயங்கள் இலங்கையில், குறிப்பாக வடஇலங்கையிற் பரவலாகக் கிடைத்துள்ளன. இதுவரை வட இலங்கையில் கிடைத்த நாணயங்களிற் குறிப்பாக யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட சேது நாணயங்களை விட எண்ணிக்கையில் இவை அதிகமாகும். எமக்குக் கிடைத்த 1200 நாணயங்கள் எடை, அளவு, அமைப்பு, சின்னங்கள் என்பனவற்றின் அடிப்படையில் 30 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவையே பாண்டிய மன்னரால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் காட்டிலும் அங்குதான் கூடுதலாகக் கிடைத்திருக்கவேண்டும். ப.புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, பக்.156.

22. *மேலது*, பக்.153-154.

23. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1, Colombo, 1978, p. 146.

24. S.Pathmanathan, "The Coins of Medieval Sri Lanka", *Spolia Zeylanica*, Vol.35, Parts 1&II, pp. 409-417.

25. ப.புஷ்பரட்ணம், *தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு*, பக்.165.

26. *மகாவம்சம்*, 83:36-42.

27. *மேலது*, 88:66-68.

28. *மேலது*, 88:69-75.

29. *மேலது*, 88:76.

30. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1, p. 146.

31. மேலது, பக்.146: "Indian Antiquary", XXI, pp. 121-122. EI,VII pp.145.

32. K.A.Nilakanta Sastri, *Proceedings of the Eighth All India Oriental Conference*, pp.108; S.Krishnaswamy Ayyangar, *South India and Her Muhammadan Invaders*, p.50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. K.A.Nilakanta Sastri, "Sri Vijaya-Candrabhanu and Vira Pandya", T.B.G.77, pp.252; S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1, p.147.

34. *Inscriptions of the Pudukottai State*, The Commissioner of Museums, Government Museums, Chennai, pp. 236, No:366.

35. பராக்கிரமபாண்டியனை அதிகாரத்திலிருந்தும் அகற்றி விட்டு பொலன்னறுவையைக் கைப்பற்றிய கலிங்கமாகனுக்கெதிராக நடந்த படையெடுப்பொன்று இந்த மிகைபாடான வர்ணனைக்கு அடிப்படையானதாகலாம் என்று முன் குறிப்பிட்டோம். S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1, p. 146; *Annual Report on Epigraphy (ARE)*, for 1932, pp. 69, Para 3.

36. யாழ்ப்பாண மன்னர்கள் கங்கை வம்சத்தோடு கொண்டிருந்த தொடர்பினைப் பலநூல்கள் குறிப்பிடுகின்றன. தக்ஷிண கைலாசபுராணம் செகராசசேகரனை கங்கைநாயகன் என்று வர்ணிக்கின்றது. செகராசசேகரமாலை என்னும் சோதிட நூல் வரோதய சிங்கையாரியனைக் கங்கைநாடன் என்று குறிப்பிடும். பார்க்க: *கண்ணகி வழக்குரை*, பதிப்பாசிரியர் F.X.C. நடராசா, அரசு பதிப்பகம், கொழும்பு, 1965. யாழ்ப்பாணத்து அரசன் ஒருவனைக் காங்கேசன் என்று குறிப்பிடுகின்றது. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1, p. 163.

37. *கைலாயமாலை*, பதிப்பாசிரியர் C.V. ஜம்புலிங்கம்பிள்ளை, சென்னை, 1939, ப.23.

38. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part I (A.D.1250-1450), Colombo, 1978, pp.184 – 200.

39. செண்பகப்பெருமானின் தகப்பன் குதிரைப்படைவீரன்,துளுவதேசத்திலிருந்தும் இலங்கைக்குவந்தவன். அவன் அரசகுலத்தவன். ஆறாம் பாராக்கிரமபாகு பிரதானிகள் வம்சத்துப் பெண்ணொருத்தியை அவனுக்கு மணமுடித்து வைத்தான். அவர்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர். போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான கூத்தோ இவ்விவரங்களைக் குறிப்பிடுகின்றார். *மேலது*, ப.273.

40. *மேலது*, பக்.275-277.

41. *மேலது*, பக்.281.

42. *மேலது*, பக்.282.

43. *மேலது*, பக்.282.

44. *மேலது*, பக்.283.

45. பரமு. புஷ்பரட்ணம், *இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்*, யாழ்ப்பாணம், 2001, பக். 147-155.

46. *மேலது*.

47. S.Pathmanathan, "The Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna," *Spoliazeylanica*, Vol.35, parts I II, pp. 409-41.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

# 5

# யாழ்ப்பாண இராச்சியம்

மத்தியகாலப்பகுதியில் இலங்கையில் அமைந்திருந்த இராச்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பட்டினம் இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது. போர்த்துக்கேய சமய குரவரும் வரலாற்றாசிரியருமான கேறோஸ் பாதிரியார் அதனை மேல்வருமாறு வர்ணிக்கின்றார்:

> கணிசமான அளவுடையதான இந்த இராச்சியம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் அடங்கிவிடவில்லை. அதனருகிலுள்ள நிலங்களும், நாம் கைப்பற்றுவதற்கு முன்பு வன்னியர் என்போரால் ஆளப்பட்டதன் காரணமாக வன்னி என்று சொல்லப்படும் பகுதி களும் அதனைச் சேர்ந்தனவாகும். கடலேரி யாழ்பாணப் பட்டினம் என்னும் பகுதியை ஏனையவற்றிலிருந்து பிரிக்கின்றது. பச்சிலைப் பள்ளியிலுள்ள நிலத்தொடர் மூலமாக மட்டுமே அவை தரை வழியாக இணைக்கப்படுகின்றன. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்னும் பிரிவுகள் யாழ்ப்பாணப் பட்டினத்தில் உள்ளன. அதற்கப்பால் அமைந்துள்ள வன்னிப்பிரதேசம் மன்னார்பக்கம் முதலாகத் திருகோணமலைவரை பரந்துள்ளது. மன்னார்ப் பிரிவின் நிர்வாக ஆதிக்கத்தில் அடங்கிய மாதோட்டத்து நிலங்களுக்குப் பெருங்களியாறு எல்லையாகும். வன்னி பற்று என்னும் பல பிரிவுகளைக் கொண்டுள்ள அது ஒரு பெரும் பிரதேச மாகும்.[1]
>
> இந்த நான்கு மாகாணங்களும் பதின்மூன்று தீவுகளும் யாழ்ப் பாணப் பட்டினம் என்று சொல்லப்பட்டன. வன்னியரின் ஆட்சியின் கீழமைந்த வன்னி என்னும் பகுதியும் இதனைச் சேர்ந்ததாகும். புறச்சமயிகளான யாழ்ப்பாணத்து அரசர் அந்தப் பெரும் நிலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பகுதியைக் கைப்பற்றி அங்கு தமது மேலாதிக்கத்தை நிலை நாட்டினார்கள்....... அந்த நிலப்பகுதி மேற்கிலே கற்பிட்டி, மாதோட்டம் ஆகியனவரையும் பரந்துள்ளது. கிழக்கிலே அது திருகோணமலைப் பகுதியை எல்லையாகக் கொண்டுள்ளது......... 50 கிராமங்களும் அமைந்துள்ள தென்னமரவாடிப் பற்று, 100 கிராமங்களைக் கொண்டுள்ள கரிக்கட்டு மூலைப்பற்று, 90 கிராமங்களைக் கொண்டுள்ள முள்ளியவளைப்பற்று, 30 கிராமங்கள் அமைந்திருக்கும் மேல்பத்து, 70 ஊர்களைக் கொண்ட கருநாவல் பற்று முதலிய மாகாணங்கள் இந்தப் பெருநிலப் பகுதியிலுள்ளன. அவற்றுக்கப்பால் இன்னுமொரு மாவட்டத்துக்குரிய மாதோட்டம், வில்லிபற்று, பொன்னேரிபற்று என்ற பிரிவுகளுமுண்டு. அவற்றிலே 12 கிராமங்கள் உள்ளன. யாழ்ப்பாணப் பட்டனத்தைப்போல இவையுஞ் செட்டிகுளத்தின் ஒரு பகுதியும் கொம்பஞ்ஞீயவின் ஆதிக்கத்தின் கீழ் அமைந்துள்ளன..... ஆறு மாகாணங்களும் முந்நூறுக்குங் குறையாத கிராமங்களும் வன்னியில் உள்ளன. இதுவும் யாழ்ப்பாணப் பட்டினத்திற்குரியனவாகிய செட்டிகுளம், பொன்னேரி, மேல்பற்று ஆகியனவும் ஒட்டுமொத்தமாக 80,000 ஜேர்மன் மைல் சுற்றளவு கொண்டனவாகும். இந்தப் பகுதியானது திருகோணமலையிலிருந்து கற்பிட்டி வரையான ஒரு நேர்கோட்டின் மூலம் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிபடுகின்றது. தீவுகள் நீங்கலாகவுள்ள முழு யாழ்ப்பாணப்பட்டினத்தின் சுற்றளவு 100,000 ஜேர்மன் சதுர மைல்களாகும். இந்த இராச்சியம் 42 வருடங்களுக்கு மேலாகச் சங்கிலி (சியங்கேரி) என்ற, கிறிஸ்தவ மல்லாத சமயம் ஒன்றைச் சேர்ந்த அரசனால் ஆளப்பட்டது. அவன் ஒரு புராதனமானதும் இறைமை கொண்டதுமான அரசவம்சத்தைச் சேர்ந்தவன். அவனுடைய வம்சா வழியினரையும் இராச்சியத்தையும் போர்த்துகேயர் நிர்மூலனஞ் செய்துவிட்டனர்.[2]

இவ்வாறு யாழ்ப்பாணப் பட்டினத்தைப் போர்த்துகேயரிடமிருந்து கைப்பற்றிக் கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தவரும் இலங்கையின் உலாந்தாக்கார தேசாதிபதியுமாகிய பான் கூன்ஸ் கூறியுள்ளமை கவனித்தற்குரியது. அவர் எழுதிய அறிக்கையும் 1658 ஆம் ஆண்டில் எழுதப்பெற்றது. அவரது வர்ணனையும் விபரமானது. அது ஆதாரபூர்வமான செய்திகளைக் கொண்டுள்ளது. அது யாழ்ப்பாண இராச்சியம் பற்றியும் அதன் அரசர்களைப் பற்றியுங் கிடைக்கின்ற மிகவும் பழைய, ஆதாரப்பூர்வமான குறிப்புக்களில் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியத்தை முன்பு பரிபாலனஞ் செய்த இறைமை கொண்ட அரசவம்சத்தைப் பற்றி உலாந்தாக்கார தேசாதிபதி குறிப்பிடு கின்றார்.

இச்சந்தர்ப்பத்திலே அந்த அரசவம்சத்தைப் பற்றி 'யாழ்ப்பாண வைபவமாலை' கூறுவதனைக் கவனிப்பது பொருத்தமானது. அதிலே சேர்க்கப்பட்டுள்ள செய்யுளொன்று மேல்வருமாறுள்ளது:

*திருமருவு யாழ்ப்பாண நாட்டை யாண்ட*
*சிங்கையாரியன் குலத்தைத் தீங்கு செய்து*
*பெருமையுடன் காலயுத்தி யானி மாசம்*
*பிலிப்பனெனும் பறங்கிகிளை யரசை யாண்டு*
*குருநெறியும் மனுநெறியுமில்லா தாக்கிக்*
*கொடுமையுடன் நாற்பஃதாண்டளவும் போக்க*
*உருமருவு முதயகிரி யிரவிபோல*
*வுலாந்தேசு மன்னவன் வந்துதிப்பன்தானே.*[3]

யாழ்ப்பாண நாட்டை ஆட்சி புரிந்த மன்னர்கள் சிங்கையாரியன் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் குலத்தை அழித்துவிட்டு, பிலிப்பன் என்னுந் தளகர்த்தன் தலைமையிலே போர்த்துகேயர் இராச்சியத்தைக் கைப்பற்றினார்கள். பின்பு அதனை ஒரு கிளை இராச்சியமாக அமைத்து ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் தங்கள் கொடுமையான ஆட்சியிலே சைவசமயத்திற்கு இடர் விளைவித்தார்கள். உலாந்தாக்காரரின் வருகையால் அவர்களின் கொடுமைகளினின்றும் விடிவு கிடைத்தது. இவ்வாறான சிந்தனைகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.

சிங்கையாரியன் என்பது யாழ்ப்பாண மன்னர்களின் குலப் பெயராகும். அவர்களின் காலத்தில் எழுந்த நூல்களும் அவர்களின் சாசனங்களும் யாழ்ப்பாண தேசத்து அரசர்களைச் சிங்கையாரியன் என்று குறிப்பிடுகின்றன. சிங்கையாரியன் என்பது சிங்கை, ஆரியன் என்னுஞ் சொற்களின் கூட்டுமொழியாகும். சிங்கை என்பது சிங்கைநகர் என்ற பெயரின் சுருக்கமாகும். அதேபோல ஆரியன் என்பது ஆரியச் சக்கரவர்த்தி என்ற பெயரின் சுருக்கமாகும். சிங்கை நகரான இராச தானியிலிருந்து அரசுபுரிந்த மன்னனைச் சிங்கையாரியன் என்று குறிப்பிடலாயினர். வட இலங்கையிலே பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டிருந்த பாண்டியரின் மேலாதிக்கத்தின் விளைவாக யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

கலிங்க தேசத்து மாகன் ஆட்சிபுரிந்த காலத்திலே (1215-1255) சாவகதேசத்திலிருந்து சந்திரபானு என்பவன் இலங்கை மீது படையெடுத்துச் சென்றான். அவனை விஜேயபாகு, வீரபாகு என்னுஞ் சிங்கள இளவரசர் தோற்கடித்துத் துரத்தினார்களென்று மகாவம்சம் கூறும்.[4] ஆயினும் அவன் தென்னிந்தியப் படைகளின் உதவியோடு மாகன் ஆட்சிபுரிந்த பகுதிகள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டான். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், வடக்கிலுள்ள வன்னிப் பிரதேசத்திலும், திருகோணமலையிலும் சாவகரின் ஆட்சி ஏற்பட்டிருந்தது என்பதை 'திரிசிங்கள கடயிம்பொத' என்ற சிங்கள நூல் மூலமாக அறியமுடிகின்றது. அது 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதென்று கருதப்படுகின்றது. சாவகரின் இராச்சியத்தின் எல்லையிலே தமிழ்ச்சாசனம் எழுதிய தூண்கள் நாட்டப் பெற்றிருந்தன என்று அந்நூல் குறிப்பிடுகின்றமை கவனித்தற்குரியது.[5]

பாண்டியரின் மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்ட சந்திரபானு, தனது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டதும் அவர்களுக்கு விரோத மான செயல்களில் ஈடுபாடு கொண்டான். இலங்கை மீது பாண்டியர் நடாத்திய படையெடுப்புக்களைப் பற்றி அவர்களின் சாசனங்களிலே கூறப்படுகின்றன. சடாவர்மன் சுந்தரபாண்டியனுடைய ஐந்தாம் ஆட்சியாண்டு (1256) முதலாக அவனுடைய மெய்க்கீர்த்தியிலே "துலங்கொளி மணியும் சூழிவேளமும் இலங்கை காவலனை இறை கொண்டருளி" என்னுந் தொடர் வருகின்றது.[6] இது சாவகனைப் பற்றியது என்பது வேறு சாசனக் குறிப்பால் உணரப்படும்.

சுந்தர பாண்டியனின் துணையரசனான வீரபாண்டியனுடைய மெய்க்கீர்த்தியில், அவனது பத்தாவது ஆண்டு முதலாகச் "சோணாடும் ஈழமும் சாவகன் முடியும் முடித்தலையும் கொண்டருளிய" என்ற வாசகம் வருகின்றது.[7] சோழநாட்டையும் ஈழநாட்டையும் வென்று கைப்பற்றியதோடு சாவக அரசனின் முடித்தலையினையும் அவன் கவர்ந்தான் என்பதை இதனால் அறியலாம். சந்திரபானுவைச் சாவ கனென்று சிங்கள நூல்கள் குறிப்பிடுவதால் அவன் மீது பாண்டியர் நடாத்திய படையெடுப்பின் விளைவாகச் சந்திரபானு போரிலே தோல்வியுற்று மடிந்தான் எனக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபாண்டியனுடைய பதினோராம் ஆண்டு முதல் அவனுடைய மெய்க்கீர்த்தியிலே ஈழப்படையெடுப்பினைப்பற்றி விரிவாகச் சொல்லப்படுகின்றது. குடுமியான்மலைச் சாசனத்தில் இலங்கைப் படையெடுப்பினைப் பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன. வீரபாண்டியன் இலங்கைக்குச் சென்று போர்புரிந்து, அந்நாட்டு மன்னருள் ஒருவனைக் கொன்று, அவனுடைய முடிமுதலான அணி கலன்களையும், சிங்காசனம், வெண்கொற்றக்குடை, சாமரம் முதலிய அரசசின்னங்களையும் கவர்ந்தான் என்றும், முன்பு தனக்குப் பகைத் தொழில் புரிந்து, பின்பு பணிந்துவிட்ட சாவகனுடைய மைந்தனுக்கு ஆட்சியுரிமையினை வழங்கி, அவனுக்கு வீரக்கழல் அணிவித்து, அவனை ஆனைமேல் ஏற்றி, அவனுடைய நகருக்குப் போகவிட்டான் என்றும், இலங்கை மன்னருள் வேறொருவனிடமிருந்து யானைகளைத் திறையாகப் பெற்றுக் கொண்டான் என்றும் அச்சாசனம் குறிப்பிடு கின்றது.[8] பின்னர் திருகோணமலையிலுந் திரிகூடகிரியிலும் பாண்டியரின் இலச்சினையாகிய இணைக்கயல்களின் உருவத்தைப் பொறித்து விட்டுத் திரும்பிச் சென்றான் என்றுஞ் சொல்லப்படுகின்றது.[9] இம் மெய்க்கீர்த்தியின் செய்திகளின் மூலம் இலங்கையிலே சாவகர் ஏற்படுத்தியிருந்த இராச்சியத்தைப் பாண்டியர் தமது மேலாதிக்கத்தின் கீழ் அடக்கிவிட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

மாறவர்மன் குலசேகரனின் காலத்திலே(1268-1310) பாண்டியரின் ஆதிக்கம் உன்னத நிலையினை அடைந்தது. அவனுடைய காலத்தில் நடைபெற்ற பாண்டியர் படையெடுப்புக்கள் இரண்டினைப் பற்றிச் சூளவம்சத்திற் குறிப்புண்டு. முதலாம் புவனேகபாகுவின் ஆட்சியின் ஆரம்ப கட்டத்திலே காலிங்கராயன், சோழகங்கதேவன் என்னுந் தமிழ்ப்பிரதானிகள் கடலைக் கடந்து படையெடுத்து வந்தனரென்றும், புவனேகபாகு அவர்களை விரட்டிவிட்டான் என்றுஞ் சொல்லப் படுகின்றது.[10] ஆயினும் அவர்கள் இலங்கையின் வடபாகத்திலே பாண்டியரின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று கருதலாம். பாண்டியப் பிரதானிகளில் ஒருவனாகிய சோழகங்கதேவனையே திருகோணமலைக் கோட்டையிற் கண்டெடுக்கப் பெற்ற சமஸ்கிருத மொழிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது போலத் தோன்றுகிறது. அது வெல்லுதற்கு அரிதான இலங்கையைப் போரிலே வெற்றிகொண்ட தேவ ஸ்ரீ சோடகங்கள் கோகர்ணத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த செயலொன்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. முன்பு சாவகனுக்கு எதிரான போரில் வெற்றிவாகை சூடிய வீரபாண்டியன் கோகர்ண தரிசனம் பண்ணித் திரிகூடத்திலும் திரிகோணத்திலும் ஜயஸ்தம்பங் களை நாட்டினான். அவ்வண்ணமே அவனுக்குப் பின் இலங்கை மீது படையெடுத்துச் சென்ற பாண்டியர் சேனாதிபதியான சோழகங்கதேவன் கோகர்ணத்தைத் தரிசித்து அங்கு சில கருமங்களைப் புரிந்தான்.

***ஆரியச்சக்கரவர்த்தியும் அரசர் பரம்பரையும்***

ஆரியச் சக்கரவர்த்தியின் தலைமையில் இலங்கை மேல் நடைபெற்ற பாண்டியர் படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. முதலாம் புவனேகபாகுவின் ஆட்சி (1271-1282) முடிந்தவுடன் இலங்கையில் நடைபெற்ற பாண்டியர் படையெடுப்பினைப் பற்றிச் சூளவம்சம் மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

> முன்பு பஞ்சமொன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையிற் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானா யினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமுங் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்து விட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் அவன் புகுந்தான். அங்கிருந்த புனித தந்ததாதுவையும் விலைமதிக்க முடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு திரும்பிச் சென்றான். ஆங்கு பாண்டியர்குலம் என்னுந் தாமரைக் கொடியின் மொட்டினை மலர் விக்கின்ற உதயசூரியன் போல் விளங்கிய குலசேகர மன்னனிடம் சம்புத்தரின் தந்தாதுவை ஒப்படைத்தான்[11]

ஆரியச்சக்கரவர்த்தியின் படையெடுப்பின் காரணமாகத் தென்னிலங் கையினுள் அமைந்திருந்த இராச்சியம் நலிவுற்றது. சுபபட்டணம் என்னும் யாப்பகூவ இராசதானி என்னும் நிலையை இழந்தது. அத்துடன் முதலாம் புவனேகபாகுவின் மகனாகிய இரண்டாம் புவனேக பாகுவும் நான்காம் விஜயபாகுவின் மகனாகிய பராக்கிரமபாகுவும் ஆட்சியுரிமை குறித்துப் போர் புரிந்தனர். அதனாற் சிங்கள இராச்சியம் சிறிதுகாலம் பிளவுபட்டது. புவனேகபாகு குருநாகலை இராசதானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரியச்சக்கரவர்த்திகளால் வெளியிடப்பட்ட சேது நாணயம் ஒன்று
(நன்றி: செ. கிருஷ்ணராசா)

யாகக் கொண்டு ஆட்சி புரிந்தான். மூன்றாம் பராக்கிரமபாகு மதுரைக்குச் சென்று பாண்டிய மன்னனிடமிருந்து தந்ததாதுவை வேண்டிப் பெற்ற பின், அதனைப் பொலநறுவையில் வைத்துக் கொண்டு அங்கிருந்து சிறிது காலம் ஆட்சிபுரிந்தான்.[12]

யாழ்ப்பாண இராச்சியத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டமையே மாறவர்மன் குலசேகரன் காலத்துப் பாண்டியர் படையெடுப்புக்களின் பிரதானமான விளைவாகும். ஆரியச்சக்கரவர்த்தி ஒருவன் யாழ்ப்பாணத்திலே அதிகாரம் பெற்றுக் காலப்போக்கில் அரசனாகிவிட்டான். மண்டலாதிபதியாக நியமனம் பெற்றிருந்த ஒருவன், தென்னிந்தியாவிலே பாண்டியரின் ஆதிக்கம் நிலைகுலைந்த சமயத்திலே, சுதந்திரமான இராச்சியமாக யாழ்ப்பாண தேசத்தைப் பிரகடனப்படுத்தியதோடு பரம்பரை முடியாட்சிமுறையினை அங்கு உருவாக்கிக் கொண்டான் என்றுங் கருதலாம்.

மாறவர்மன் குலசேகரன் காலத்துப் பாண்டியர் சாசனங்கள் சிலவற்றிலே ஆரியச்சக்கரவர்த்திகளைப் பற்றிய சில குறிப்புகள் உள்ளன. அவர்கள் இராமநாதபுரத்துச் செவ்விருக்கை நாட்டுச் சக்கர வர்த்தி நல்லூரை இருப்பிடமாகக் கொண்டவர்கள். அவர்களிற் சிலர் பாண்டியரின் அரண்மனை அதிகாரிகளாகவுஞ் சேனாதிபதிகளாவுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமை புரிந்தவர்கள். 'தனிநின்று வென்ற பெருமாள்', 'தெய்வச் சிலையான்' முதலான சிறப்புப் பட்டங்களை அரசரிடமிருந்து விருதுகளாக அவர்களிற் சிலர் பெற்றிருந்தனர்.[13]

யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் பூர்வீகம் பற்றிச் செகராசசேகரமாலையிற் காணப்படும் விபரங்கள் இவற்றை ஒட்டிச் செல்கின்றன. அந்நூலின்படி யாழ்ப்பாணத்து மன்னர்களின் முன்னோர் கள் குலத்தால் மறையவர். அவர்களின் கோத்திரம் காத்தியாயன சூத்திரத்துக் காசிப கோத்திரம். அவர்கள் சேதுகரையிலே இராமேஸ் வரம் என்னும் புனித க்ஷேத்திரத்திலே பூசனை செய்வதற்கென்று அமைக்கப் பெற்ற 512 அங்கத்தவர்களைக் கொண்ட சதுர்வேதிமங்கலத்து மறையவரின் பரம்பரையில் வந்தவர்கள். அவர்களில் ஒருவன் தென்னவரின் அரண்மனையிலே செப்பேட்டுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான அதிகாரியாக விளங்கினான். இன்னொருவன் சேனாதி பதியாகவிருந்து கருநாடராசனாகிய போசலனை அந்தரவல்லி என்னுந் தானத்திலேவென்று வெற்றிவாகை சூடினான்.[14] ஆரியச்சக்கரவர்த்திகள் சேது, விடைக்கொடி, வெண்கொற்றக்குடை, வலம்புரிச்சங்கு ஆகிய வற்றை இராமபிரானிடமிருந்து அரசசின்னங்களாகப் பெற்றவர்கள் என்றுஞ் சொல்லப்படுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்தியின் வம்சத்து யாழ்ப்பாண மன்னர்களைச் சிங்கையாரியன் என்றே தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

செண்பகப்பெருமாளின் படையெடுப்பு நடைபெறுவதற்கு முன் ஆட்சி புரிந்த ஒன்பது மன்னர்களின் பெயர்கள் யாழ்ப்பாண வைபவ மாலையிற் காணப்படுகின்றன. அவையாவன:

1. விசய கூழங்கைச் சக்கரவர்த்தி
2. குலசேகர சிங்கையாரியன்
3. விக்கிரம சிங்கையாரியன்
4. வரோதய சிங்கையாரியன்
5. மார்த்தாண்ட சிங்கையாரியன்
6. குணபூஷண சிங்கையாரியன்
7. செயவீர சிங்கையாரியன்
8. குணவீரசிங்கையாரியன்
9. கனகசூரிய சிங்கையாரியன்.[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து அரசர்களின் இராசதானி முதலாம் சிங்கையாரியனின் காலத்தில் நல்லூரில் அமைக்கப்பட்டது. அவனைச் செய சிங்கை யாரியனென்று கைலாயமாலை குறிப்பிடுகின்றது. அவனுடைய நாமத்தை விசய கூழங்கைச் சக்கரவர்த்தி என்று மயில்வாகனப் புலவர் கூறுவார். மேலும் இராதானியின் உருவாக்கம் பற்றி அவர் மேல் வருமாறு கூறுவார்:

> ...... நல்லூர்ப் பகுதியிலே அரசிருக்கையை ஸ்தாபிக்கக் கருதிச் சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன்முகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டு நாலு மதிலும் எழுப்பி, வாசலும் ஒழுங்காய் விடுவித்து, மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், பூங்காவும், பூங்காவின் நடுவிலே ஸ்நான மண்டபமும் முப்புடைக்கூபமும் உண்டாக்கி, அக்காலத்தில் யமுனா நதித்தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு, நீதிமண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து, தன்னுடன் வந்த காசியிற் பிரமகுல திலகரான கெங்காதர ஐயரும், அன்னபூரணி அம்மாள் என்னும் அவர் பத்தினியும் வாசஞ் செய்வதற்கு அக்கிரகாரமும் உண்டாக்கிக் கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோவிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும், வடதிசைக்குச் சட்டநாதேசுவரர் கோயில், தையல் நாயகியம்மன் கோவில், சாலை விநாயகர் கோவிலையுங் கட்டுவித்துத் திலக வதியார் என்னும் பத்தினியாருடனே கிருகப் பிரவேசஞ் செய்து வாழ்ந்திருந்தான்.[16]

நல்லூரில் அமைக்கப்பெற்ற இராசதானியிலே அரசமாளிகை, அரசாங்க வதிகாரிகள், சேனாவீரர் ஆகியோரின் இருப்பிடங்கள், பூஞ்சோலைகள், யமுனேரி என்னுந் தடாகம், நீதிமன்றம் முதலானவை சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதை மயில்வாகனப் புலவரின் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். மூன்றாம் கயிலாயம் என்னும் படியான பிரமாண்டமானவொரு சிவாலயம் அரண்மனை வாசிகளின் வழி பாட்டுத் தலமாக அரசனால் அமைக்கப்பெற்றது. அக்கோயிலைப் பற்றிய விபரங்களைக் கைலாயமாலை வர்ணிக்கின்றது.[17] ஆரியச் சக்கரவர்த்திகள் இராசதானியின் நாற்புறங்களிலுங் கோயில்கள் பலவற்றை அமைத்தார்கள். நகரத்துக்குப் பாதுகாவலாகக் கோயில்கள் அமைக்கப்பட்டன என்று மயில்வாகனப் புலவர் கூறுவதால் அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலே காவற்றெய்வங்களைப் பற்றிய ஓரைதீகம் நிலவியதென்று கருதலாம். தென்னிலங்கையிலுள்ள இராசதானியிற் போல யாழ்ப் பாணத்திலும் இராசதானியிலே காவற்றெய்வங்களுக்குக் கோயில மைக்கும் வழக்கம் இருந்தது. தெற்கிலே குமாரக்கடவுள், சமன், உபுல்வன், விபீஷணன் ஆகியோருக்குக் கோட்டங்களை அமைத்தனர். யாழ்ப்பாணத்திலே வீரமாகாளி, விநாயகர் ஆகியோரைக் காவற்றெய் வங்களாகக் கொண்டனர். காலக்கிரமத்திலே கந்தசுவாமியையும் இந்தவரிசையிலே் சேர்த்துக் கொண்டனர். அதன் காரணமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உருவாகியது.

யாழ்ப்பாண இராச்சியத்திற்கு உரியதான நிர்வாகமுறை ஆரியச் சக்கரவர்த்திகளினால் உருவாக்கப்பெற்றது. வட இலங்கையில் வாழ்ந்த தமிழருக்குச் சிறப்பாகவுள்ள சமுதாயவமைப்பும், சமூகவழமைகளும், சொத்துரிமைகள் பற்றிய வழமைகளும் அவர்களின் காலத்தில் அழுத்தம் பெற்றன. இராசதானியை அமைத்த முதலாஞ் சிங்கையாரியன் இராச்சிய பரிபாலனந் தொடர்பாக மேற்கொண்ட சில நடவடிக்கை களைப் பற்றிக் கைலாயமாலையிற் குறிப்புள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், தீவுபற்றிலும், வன்னியிலும் நிர்வாகப் பிரிவுகளுக்கும் ஊர்களுக்கும் பொறுப்பான அதிகாரிகளை அவன் நியமித்தானென்று சொல்லப்படுகின்றது.[18] மேல்பற்று, வடபற்று, தென்பற்று, கீழ்ப்பற்று என்னும் பிரிவுகள் பற்றிச் சொல்லப்படுகின்றது.[19] இவற்றைச் சரியாக அடையாளங் காண்பதற்கு ஏதுவான ஆதாரங்கள் இல்லை. மாதாக்கர் என்னும் உயரதிகாரிகளைச் சிங்கையாரியன் இவற்றுக்குப் பொறுப்பாக நியமித்தான் என்று மயில்வாகனப் புலவர் கூறுவார். மாதாக்கர் என்ற பதவிப்பெயர் பேச்சுவழக்கில் மறைந்துவிட்டது. உலாந்தாக்காரரின் ஆவணங்களிலும் அதனைப் பற்றிய குறிப்பில்லை. அது அதிகாரி என்னும் பதவிப் பெயருக்குச் சமமானதென்று அனுமானித்துக் கொள்ளலாம்.

பாண்டியர் படையெடுப்புகள் நடைபெற்ற காலத்திலும், அவற்றைத் தொடர்ந்து ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி அமையப்பெற்ற நாட்களிலும் மாதோட்டம் முதலாக வெருகல்வரை பரந்துள்ள வன்னிப் பகுதியிலே பாண்டி நாட்டுத் தொடர்புடைய பிரதானிகள் அதிகாரம் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது சிங்கையாரியனின் காலத்தில் வன்னியில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிய சில விபரங்கள் வையாபாடல் என்னும் நூலில் அடங்கியுள்ளன. அவற்றை மேல்வருமாறு சுருக்கிக் கூறலாம்:

> யாழ்ப்பாணத்து அரசனுக்கு மணம்முடித்து வைப்பதற்கென்று வன்னியர்கள் இராசகுமாரி ஒருத்தியை மதுரையிலிருந்தும் அழைத்து வந்தார்கள். அவன் வன்னியரை அழைத்து அடங்காப்பற்றுக்குச் சென்று, அதனைக் கைப்பற்றி ஆட்சி புரியுமாறும், யாழ்ப்பாணத்து இராசதானிக்கு ஆண்டு தோறும் திறை செலுத்துமாறும் பணித்தான். வன்னியர்கள் அடங்காப்பற்றுக்குச் சென்று அங்கு நிலை கொண்டார்கள். அதைக் கைப்பற்றுவ தற்கு மேலும் படைத்துணை வேண்டும் என்ற உணர்வால் உடனடி யாகத் தங்களோடு வந்து சேருமாறு மதுரை, மருங்கூர், காரைக்கால், காஞ்சிபுரம், கோவற்பதி, திருச்சிராப் பள்ளி, துளுவை நாடு, தொண்டை மண்டலம் முதலான இடங்களி லிருந்து பல திறத்தாரை அழைத்து வருமாறும் இளஞ்சிங்க மாப் பாணன், அத்திமாப்பாணன், நல்லவாகுதேவன் முதலியோருக்குச் செய்தி அனுப்பினார்கள். இதன் பயனாக இளஞ்சிங்க மாப்பாணன், திடவீரசிங்கன், குடைகாத்தான், மலைநாடன், நல்லவாகு, சிங்கவாகு, நீலாசோதையன், அங்கசிங்கன், கட்டைக்காலிங்கன், கலைக்கோட்டு முடியோன், சொக்கநாதன், வீரசகச்சமணி முடியரசன், காபாலிவீரன், 'சேது திறலரசுபுரியும் வீரன்' முதலானோரும் ஆரியவமிசத்தாரும் கப்பலேறிக் கடல்கடந்து யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தனர்.
>
> அவர்களிலே திடவீரசிங்கன் கரிக்கட்டுமூலைப் பற்றின் அதிபதியானான். நல்லவாகு, மெய்த்தேவன், கறுத்தவாகு, சிங்கமாப்பாணன் ஆகியோர் சான்றாரையும் வலையரையும் துரத்திவிட்டு முள்ளியவளையைக் கைப்பற்றினார்கள். நீலையினார் திசையாண்டாரும் படை சனங்களும் மேல்பற்றிலுள்ள சகரன், மகரன் என்னும் வேட்டுவரின் தலைவர்களைக் கொன்றுவிட்டு அங்கு ஆதிக்கம் பெற்றனர். சிங்கவாகு கிழக்கு மூலை, மேற்குமூலை ஆகிவற்றைக் கைப்பற்றிக் கொண்டு போக்காவன்னியில் இருந்தான். சுபதிட்டு என்னும் அந்தணனும் படையினரும் திரியாய் என்னும் ஊருக்குப் போய் நீலப்பணிக்கனைத் துரத்திவிட்டு அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். காலிங்கன் மலையகத்தார், கன்னார் ஆகியோருடன் சென்று கச்சாயில் வாழ்ந்தான். அங்கசிங்கன் கட்டுக்குளம் பற்றுக்குச் சென்று அங்கு தங்கியிருந்தான். சிங்கவாகு திருகோணமலைக்குப் போனான். மாமுகன் என்பான் தம்பலகாமம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகல் என்பவற்றைக் கைப்பற்றி அவற்றை ஆட்சி புரிந்தான். மயிலன் என்பவன் கொட்டியாரத்திற்கு அதிபதியானான். நீலன், சன்மன் என்போர் முறையே இத்திமடு, நொச்சிமோட்டை ஆகிய வற்றிலிருந்தனர்.

மதுவீரமழுவராயனும். 'அரசாண்ட' மழுவராயனும் அழகாபுரி என விளங்கிய யாழ்ப்பாணத்தில் மன்னனுடன் இருந்தனர். வன்னியர் மூவர் முகமாலையில் இருந்தனர். கோவலர் வமிசத் தோன் தேவராயன், கிளைகாத்தான், கொடிதேவன், கந்தவனத்தான் என்போர் செட்டிகுளத்தில் ஆதிக்கம் பெற்றனர். உத்துங்கராயன் பனங்காமத்தின் அதிபதியானான்.[20]

வையாபாடலின் விபரங்களைப் புரிந்து கொள்வதில் முன்பு ஞானப்பிரகாசர் முதலாயினோருக்குத் தடுமாற்றம் ஏற்பட்டது. அதிலுள்ள விபரங்களை வரலாற்று நிகழ்ச்சிகளோடு பொருத்திப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்காமையால் அந்தத் தடுமாற்றம் அவர் களுக்கு எற்பட்டது. காலவரையறை பற்றிய குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு வையாபாடல் எழுதப்படவில்லை. பல்வேறு காலப் பகுதிகளைச் சேர்ந்த நிகழ்ச்சிகளும் ஏககாலத்திற்குரியனவாக அதிலே சங்கமமாகிவிடுகின்றன. நாட்டார் இலக்கியத்தில் இத்தகைய பண்புகள் இயல்பானவை. வையாபாடல், நாட்டார் வழக்கிலுள்ள கதைகளை அடிப்படையாகக் கொண்டது. அதிலுள்ள வன்னியர் பற்றியகதை கற்பனைக் கதையன்று; அது மரபுவழிக்கதை. ஆசிரியரின் காலத்துச் சமுதாய நிலைகளின் அடிப்படையில் மீளமைக்கப்பெற்று இலக்கிய வடிவம் பெற்ற கதை. எனவே, அதில் முக்கியமான சில வரலாற்றம் சங்கள் உண்டு.

வையாபாடல் வர்ணிக்கும் வன்னியர்கள் பாண்டிநாட்டுத் தொடர் புடையவர்கள். அவர்கள் மதுரை நகரால் வந்தவர்களென்று சொல்லப் படுகின்றது. ஆனால், வன்னிமைப் பதவிப் பெயர் அவர்களுடன் ஆரம்பமாகியதென்று கொள்வதற்கான காரணமில்லை. அது முன்னரே ஏற்பட்ட வொன்று. வையாபாடலிற் கூறப்படும் 'வன்னியர்' குலத்தால் வன்னியரல்லர். வன்னியில் வந்து அதனைக் கைப்பற்றிப் பதவி பெற்றதால் அவர்களுக்கு வன்னியர் என்னுஞ் சிறப்புப் பெயர் உரியதாகியது. பலரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. பெயர்களை வரிசைப்படுத்திப் பார்க்குமிடத்து பட்டியல் நீளமாகவுள்ளது. பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY UNIVERSITY OF JAFFNA

இடப்பெயர்களுஞ் சொல்லப்படுகின்றன. கரிக்கட்டுமூலை, கருநாவல் பற்று, பனைங்காமம், முள்ளியவளை, மேல்பற்று, செட்டிகுளம், தென்னமரவாடி முதலானவற்றைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தோரின் பெயர்கள் சொல்லப்படுகின்றன. இப்பற்றுகள் யாவும் யாழ்ப்பாணப் பட்டினம் என்னும் இராச்சியத்தினுள் அடங்கிய வன்னிப்பிரிவுளாகும். திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள தம்பலகாமம் பற்று, திருகோண மலை, கட்டுக்குளம், கொட்டியாரம் என்ற பிரிவுகளைக் கைப்பற்றிய தலைவர்களின் பெயர்களுஞ் சொல்லப்படுகின்றன.

ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் இப்பகுதிகளில் அவர்களின் செல்வாக்கும் மேலாதிக்கமும் ஏற்பட்டிருந்தமைக்கான சில சான்றுகள் உள்ளன. அவற்றிலே பதவியாவிலுள்ள சமஸ்கிருத மொழிச் சாசனம் குறிப்பிடத்தக்கதாகும். பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குரிய வரிவடி வங்களிலும் கிரந்த எழுத்திலும் அமைந்துள்ள அச்சாசனம் மேல் வருமாறுள்ளது:[21]

1. ஸவஸ்தி ஸ்ரீ (★) வௌத்த தர்மகண்ட விம
2. லகுணோத்துங்க ரத்னத்ராயிக
3. ஸ்திதி (ஹ்) சேதுகுலஹ் (★) காந்தி லக்ஷ்மியு
4. ஜ்(ஜ்வ)லம் ரத்னராஜித கரண்டம்
5. ஸ்ரீமத் ஸ்ரீ லோநாதாஹ்வ (யத)
6. ண்டந(ா) யக காரிதம் ஸ்ரீபதேரிஹ
7. ஸ்ரீ வேளைக்காற நாமாங்கிதம் இத
8. ம் விஹாரம் ரக்ஷிதும் ஸ்தாபிதும் ஸ்ரீ

மங்கலம் பொலிக! புத்த தருமத்தின் ஒப்பிலாத பண்புகளின் சிகரமான மும்மணிகளைச் சேதுகுலம் பற்றியுள்ளது. மணிகளால் அலங்கரிக்கப் பெற்று கரண்டத்தையுடையதான, அழகுடன் பிரகாசிக்கும் இந்த விகாரம் ஸ்ரீபதியில் உலோகநாதன் என்று சொல்லப்படும் தண்டநாயகனால் அமைக்கப்பட்டுள்ளது. (அது) வேளைக்காற விகாரம் எனப் பெயரிடப்பட்டுப் பாதுகாப்பிற்காக (அவர்களிடம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சாசனத்திற் சில முக்கியமான அம்சங்கள் உள்ளன. அதன் ஆரம்பப்பகுதி சேதுகுலம் என்பதனைப் போற்றிப் புகழ்கின்றது. அது

Prof. V. SIVASAMY UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பிரமாண்டமான விகாரம் அமைக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றது. அதற்குக் காரணமாயிருந்தவன் (உ) லோகநாதன் என்னுந் தண்டநாயகன். அவன் வேளைக்காறப் படையொன்றின் நாயகன். விகாரம் வேளைக்காற விகாரம் (இதம் விஹாரம் வேளைக்காற நாமாங்கிதம்) என்று பெயரிடப் பெற்றது. அந்த விகாரம் வேளைக் காறரின் காவலிலும், அவர்களின் பொறுப்பிலும் விடப்பட்டது. விகாரம் அமைந்திருந்த தானமும் பதவியா நகரம் என்பது குறிப் பிடற்குரியது.

சாசனம் சேது குலத்தினைப் போற்றுவதால் அக்குலத்திற்கும் வேளைக்காறப் படையின் நாயகனாகிய உலோகநாத தண்டநாயனுக்கும் இடையில் அமைந்த தொடர்பு உணர்ச்சிபூர்வமானது. அந்தத் தொடர்பினை இருவிதமாக விளக்கலாம். சேது குலம் என்ற வம்ச மொன்றின் மேலாணைக்குக் கட்டுப்பட்ட ஒருவனாக உலோகநாத தண்டநாயகனைக் கருதலாம். அன்றேல் அவன் அந்தக் குலத்தைச் சேர்ந்தவனாதல் வேண்டும். இக்காலத்து இலங்கை வரலாற்றின் அடிப்படையிலே சேது குலம் என்பதை அடையாளங் காண்பது சிரமமற்ற ஒன்றாகும். இலங்கையில் அரசுபுரிந்த மன்னரில் ஆரியச் சக்கரவர்த்திகள் மட்டுமே சேது என்பதோடு தொடர்புடையவர் என்பது இங்கு கவனிக்க வேண்டியதாகும். சேதுகாவலன் என்னுஞ் சிறப்புப் பெயர் அவர்களுக்குரியதாகும். அவர்கள் வெளியிட்ட பெரும்பாலான நாணயங்களிலே சேது என்னும் மொழி பொறிக்கப்பெற்றது. அவர் களின் சாசனங்களிலும் ஸ்வஸ்தி ஸ்ரீ என்பதற்குப் பதிலான மங்கல மொழியாக அது வழங்கியமை குறிப்பிடற்குரியது.[22] சேது என்ப தோடான ஆரியச்சக்கரவர்த்திகளின் தொடர்பு பூர்வீகமானது. அது அவர்கள் யாழ்ப்பாணத்தில் அரசபதவியைப் பெறுவதற்கு முன் ஏற்பட்ட ஒன்றாகும். தேவர் ஆரியச்சக்கரவர்த்தி என்ற பிரதானி யொருவனைக் குறிப்பிடும் மாறவர்மன் குலசேகரனது காலத்துத் திருப்புள்ளானிக் கல்வெட்டிலே சேது திருமுகம் என்னுந் தொடர் மங்கள வசனமாய் அமைந்துள்ளது.[23] பதவியாச் சாசனம் 13 ஆம் நூற்றாண்டுக்கு உரியதென்பதாலும், அக்காலமளவிலே பதவியா அடங்கிய பகுதிகளிலே பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்த காரணத்தினாலும் அதிலே போற்றப்படும் சேதுகுலம் சேது என்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய தலத்தோடு தொடர்பு கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சம் என்பது அனுமானிக்கப்படும். வணிக நகரமாயும் கலாசார மையமாகவும் விளங்கிய பதவியா நகரிலே 11 ஆம் நூற்றாண்டு முதலாக வணிக கணத்தாரின் கட்டுப்பாட்டிலுள்ள படைகளிருந்தன.[24] அவை சில சமயங்களிலே அரசருக்குஞ் சேவை புரிந்தன. பதவியாவி லிருந்த வேளைக்காறப் படையொன்றின் தலைவனான உலோகநாதன் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதரவாளனாக அமைந்திருந்தான் என்பது இச்சானத்தின் மூலமாக உணரமுடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாதிக்கத்தின் கீழமைந்த இராச் சியத்தை தெமளபட்டணம் என்று நம்பொத்த என்ற சிங்கள நூல் குறிப்பிடுகின்றது.[25] அதிலுள்ள குறிப்பின் மூலமாக அந்த இராச்சியம் யாழ்ப்பாணம் முதலாகத் திருகோணமலை வரை பரந்திருந்தது என்பதனை அறியமுடிகின்றது. நாகர்கோயில், கந்தரோடை, தெல்லிப் பழை, மல்லாகம், காரைத்தீவு, முள்ளியவளை, திருகோணமலை, வெல்கம்விகாரை (பெரியகுளம்), இலந்தகொடை முதலான ஊர்கள் அந்த இராச்சியத்தினுள் அடங்கியவை என்று அந்நூலிற் கூறப் பட்டடுள்ளது.[26]

மத்திய காலத்திலே அவற்றின் பூகோள அமைப்பின் காரணமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் பெரும்பான்மையும் அவற்றினூடாக நடைபெற்றன. ஆதிகாலம் முதலாக இலங்கையுந் தென்னிந்தியாவும் ஒரு வர்த்தக வலையமாக இணைந்திருந்தன. அந்த வலையத்திலுள்ள கடல்வழி வாணிபத்திலே இலங்கையின் வடபகுதியிலுள்ள துறைமுகங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன. இலங்கையின் பிரதான துறைமுகப் பட்டினம் என்ற நிலையினை அது இழந்துவிட்ட போதும் கரையோரமான கடற்பிரயாணங்கள் மாதோட்டம் வழியாக நடைபெற்று வந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே குடிசனத்தொகை பெருகிப் பொருளாதார முயற்சிகள் அபிவிருத்தி அடைந்ததன் பயனாக ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, கொழும்புத்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்கள் பெருவளர்ச்சி பெற்றன. வன்னிக்கும் தென்னிலங் கைக்குஞ் செல்லுந் தரைவழியான பாதைகள் கடலேரி வழியாகக் கொழும்புத் துறையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தன. குடாநாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுள்ள துறைமுகங்களினூடாகத் தென்னிந்தியாவுடனும் தென்னி லங்கைப் பகுதிகளோடும், கிழக்கிலங்கையிலமைந்த திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய பிரதேசங்களோடும் வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.

யாழ்ப்பாண இராச்சியத்திற் கிடைத்த யானைகளும் முத்து, சங்கு, சாயவேர் முதலான பொருள்களும் வணிகராலே தென்னிந்தியக் கரையோரங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டன. முத்து, சங்கு ஆகியன மாதோட்டம், மன்னார் ஆகிய துறைமுகங்களினூடாகவே ஏற்றிச் செல்லப்பட்டன. ஆண்டுதோறும் யானைகளை வன்னியரிடமிருந்து திறையாக அரசர் பெற்றனர். யானைகளை விற்பனை செய்வதால் அவர்களுக்கு அதிக வருமானங் கிடைத்தது. பாண்டிய ராட்சிக் காலத்திலே தென்னிந்தியப் பிரதேசம் கடல்வழியான சர்வதேச வாணி பத்தின் மிகவும் பிரதானமான மையமாக விளங்கியது. காயல்பட்டினம் அதன் பிரதானமான நிலையமாக அமைந்திருந்தது. சீனம், சாவகம், வங்கம், குர்ச்சரம், பாரசீகம், யவனதேசம், உரோமாபுரி முதலான தேசங்களிலிருந்தும் வணிகக் கப்பல்கள் அங்கு வந்து சென்றன.[27] சேதுகரையிலே உற்பவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் சர்வதேச வாணிப நிலைகளையும் வாணிபத்தாற் கிடைக்கக்கூடிய பலாபலன்களையும் பற்றி நன்கு அறிந்திருந்தனர். வாணிப நடவடிக்கைகளில் அவர்கள் மிகுந்த கவனஞ் செலுத்தினார்கள்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சர்வதேச வர்த்தகத்தில் இடம் பெற்ற வாசனைச் சரக்குகளிற் கறுவா ஒரு பிரதான பொருளாகியது.[28] உணவுப் பொருட்களுக்குச் சுவையூட்டுவதற்கும் மருந்துப் பொருள் களைத் தயாரிப்பதற்கும் அதனைப் பெருமளவிலே பயன்படுத்தத் தொடங்கினார்கள். அராபிய தேசங்களுக்கும் ஐரோப்பிய நாடு களுக்கும் அது ஏற்றுமதி செய்யப்பட்டது. பாரசீகம், இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலுள்ள சந்தைகளிலும் அது கணிசமான அளவிலே விற்பனையாகியது. இலங்கையில் உற்பத்தியான கறுவா தரம்மிக்க தாகக் கொள்ளப்பட்டது. கறுவா மரங்கள் ஈரவலயத்திலுள்ள காடுகளில் இயல்பாக வளர்ந்தன. எனவே அது அரசனின் உடைமையாகக் கருதப்பட்டது. கறுவாப்பட்டைகளை உரித்து அவற்றைச் சுருளாக்கி, உலர்த்தி அரசாங்கத்தின் களஞ்சியங்களிலே ஒப்படைக்கும் பொறுப்பு இராசகாரியமான சேவையாகும். அது சாளியர் என்னுஞ் சமூகத்தவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாகும்.[28] அவர்கள் பூர்வீகத்திலே தென்னிந்திய நெசவாளர் என்பது ஐதீகம். கறுவா வர்க்கத்தில் ஈடுபாடு கொண்டதாற் பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் கடற்படை கொண்டு தென்னிலங்கை கரையோரங்களினூடாக நடைபெற்ற வாணி பத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

இவுன் பத்தூத்தா இலங்கைக்கு வந்த சமயத்தில் ஆரியச்சக்கர வர்த்தியின் ஆதிக்கம் மேலோங்கிய நிலையிற் காணப்பட்டது. அவன் நூற்றுக்கணக்கான நாவாய்களை வைத்திருந்தான். அவற்றை வாணிபஞ் செய்வதற்குப் பயன்படுத்தினான். ஒரு சமயத்திலே யெமென் தேசத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த அவனுடைய நூறு கப்பல்களைக் கண்டதாக இவுன் பத்தூத்தா கூறுவார்.[29] ஆரியச்சக்கரவர்த்தி முத்துச்ச லாபத்திற்கு அண்மையிலே தங்கியிருந்து முத்துக்குளிப்பை மேற் பார்வை செய்து கொண்டிருந்தான். அவனுடைய துறைமுகங்களில் ஒன்றினூடாகக் கறுவா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. குன்றங்கள் போலக் காட்சியளிக்கும் வகையிலே கரையோரத்திலே கறுவாவினை அடுக்கியிருந்தனர். மலையாளம், தமிழகம் ஆகியவற்றி லிருந்தும் வருகின்ற வணிகர் துணிகள் முதலானவற்றை ஆரியச் சக்கரவர்த்தியிடங் கொடுத்துவிட்டுக் கறுவாவை ஏற்றிச் சென்றனர்.[30] ஆரியச்சக்கரவர்த்தி பாரசீகமொழியிலே பயிற்சி பெற்றிருந்தான். பிறதேசங்களிலுள்ள வாணிபநிலைகளைப் பற்றி அறிந்து கொள்வதில் மிகுந்த ஆர்வமுடையவனாகக் காணப்பட்டான்.[31] பொருளாதார விடயங்களில் ஆர்வங் கொண்ட ஒருவனாகவும் வெளிநாட்டு வாணிபத்திலே நேரடியாகப் பங்கு கொள்வோனாகவும் ஆரியச் சக்கரவர்த்தி காணப்பட்டான். அதன் காரணமாகவே தென்னிலங்கை மீது அவன் தனது கவனத்தைச் செலுத்தினான்.

பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் நிலவிய அரசியல் நிலை குறித்து ராஜாவலிய மேல்வருமாறு கூறுகின்றது:

> பராக்கிரமபாகு மன்னனின் மருமகன் கம்பளையில் இருந்தான். அழகக்கோனார் என்னும் மந்திரி றயிகமத்தில் இருந்தான். ஆரியச் சக்கரவர்த்தி யாழ்ப்பாணப் பட்டினத்தில் இருந்தான். இம்மூவருள்ளும் பின்னவனே படைபலம், செல்வம் என்பவற்றில் முன்னணியில் விளங்கினான். எனவே, கரையோரப் பகுதிகள், மலைநாடு, ஒன்பது துறைமுகங்கள் ஆகியவற்றிலிருந்தும் திறை பெற்றான்.[32]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தி நிசங்க அழகக்கோனார் என்னும் பிரதானி, கம்பளையில் அதிகாரம் பெற்ற பின்பு, ஆரியச்சக்கரவர்த்தி தென்னிலங்கையில் ஏற்படுத்தி யிருந்த மேலாதிக்கத்தை முறியடித்தான். பதினைந்தாம் நூற்றாண்டிலே ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்திற் (1412-1467) கோட்டை இராச்சியம் எழுச்சி பெற்றது. அவனுடைய சேனாபதியான செண்பகப் பெருமாள் என்னுஞ் சபுமல் குமாரன் 1450 ஆம் ஆண்டளவிலே படையெடுத்துச் சென்று யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினான். கனகசூரிய சிங்கையாரியன் நாட்டைவிட்டுத் தென்னிந்தியாவிற்கு ஓடிவிட்டான். செண்பகப்பொருமாள் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பதினேழு வருடங்கள் ஆட்சி புரிந்தான் என்பர்.[33] கோட்டையிலே பராக்கிரமபாகு இறந்தபின் செண்பகப் பெருமாள் தனது படைகளோடு தென்னிலங்கைக்குப் போக நேர்ந்தது. அங்கே பழைய அரசனின் ஏற்பாடுகளை நிராகரித்தும், கலகங்களை ஒடுக்கியும் அவன் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டியநிலை காணப்பட்டது.[34]

செண்பகப் பெருமாள் வெளியேறிச் சென்றதும் கனகசூரிய சிங்கையாரியன் விஜயநகர ராயர்களின் சாமந்தர்களான நாயக்கரதும் பிற தென்னிந்தியப் பிரதானிகளதும் உதவியுடன் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிச் சென்று ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டான்.[35] பதினாறாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்தின் விவகாரங்களிலே போர்த்துகேயர் தலையிட்டனர். முதலாம் சங்கிலியன் காலத்திலே (1521-1561) போர்த்துக்கேயருக்கு எதிரான முயற்சிகள் முனைப்படைந்தன. போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களில் மாயாதுன்னைக்குச் சங்கிலி ஆதரவளித்தான். தென்னிந்திய நாயக்கரின் உதவிகளையும் வன்னியிலுள்ள சிற்றரசரின் உதவிகளையும் அவனாற் பெற்றுக் கொள்ள முடிந்தது.

சங்கிலி பீரங்கியின் உபயோகத்தை யாழ்ப்பாணத்திலுள்ள படைகளுக்கு அறிமுகப்படுத்தினான். அவனை அதிகாரத்திலிருந்து நீக்குவதற்கென்று போர்த்துக்கேயர் திட்டமிட்டு நடாத்திய பெரும்படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. ஆயினும், அவர்கள் மன்னாரை 1560 ஆம் ஆண்டளவிலே கைப்பற்றிக் கொண்டனர். அதனைத் தளமாகக் கொண்டு பிற்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீதான தங்கள் கட்டுப்பாட்டைப் படிப்படியாக வலுப்படுத்திக் கொண்டனர்.[36]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் கட்டமாக அவர்கள் 16 ஆம் நூற்றாண்டின் முடிவிலே தங்கள் மேலாதிக்கத்தை ஏற்படுத்தினார்கள். தமக்கு இசைவானவர்களை அரசபதவியில் இருக்கவிட்டு அவர்களிடமிருந்து திறைகளையுந் தமக்குச் சாதகமான வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வது போர்த்து கேயரின் நோக்கமாயிருந்தது. ஆயினும், யாழ்ப்பாணத்திலுள்ள பிரதானிகளிற் பலர் போர்த்துக்கேயரின் நடவடிக்கைகளையுங் கட்டுப் பாடுகளையும் ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் தஞ்சை நாயக்கரின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தனர்.

கி.பி. 1619 இல் போர்த்துகேயர் படையெடுத்துச் சென்று சங்கிலி குமாரனைக் கைப்பற்றிவிட்டுத் தங்கள் பரிபாலனத்தை ஏற்படுத் தினார்கள். ஆயினும், தஞ்சை நாயக்கரின் தளகர்த்தனான வருணா குலத்தானின் படைகளை அடக்கிய பின்னரே இராச்சியத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை அவர்களாற் திணிக்க முடிந்தது.[37]

போர்த்துக்கேயரின் ஆட்சி ஏறக்குறைய 40 வருடங்கள் நிலவியது. யாழ்ப்பாணப்பட்டினம் ஒரு கிளையரசாக அவர்களால் அமைக்கப் பட்டது. படைத்தலைவன் ஒருவனை அதன் தலைமையதிகாரியாக நியமித்தனர். தென்னிலங்கையிற் போலத் திசாவை என்ற பதவிப் பெயர் கொண்ட ஒருவனைப் பரிபாலனத்திற்குப் பொறுப்பான அதிகாரியாக நியமித்தனர். ஏனைய அம்சங்களிலே முன்னைய வழமைகளின்படியே நிர்வாகமுறை அமைந்திருந்தது. கி.பி. 1658 இல் யாழ்ப்பாணப்பட்டினத்தை உலாந்தாக்காரர் கைப்பற்றிவிட்டனர். அவர்கள் ஏற்படுத்திய நிர்வாக முறை பிரதானமான அம்சங்களிற் போர்த்துக்கேயரின் முறையினை ஒத்திருந்தது. பூர்வீகமான வழமைகளை அறிந்து கொள்வதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் உலாந்தாக்காரர் ஆர்வங் கொண்டிருந்தனர். அதன் விளைவாகவே இலங்கைத் தமிழரின் பழைய வரலாறு, சமூக வழமைகள் என்பன பற்றிய ஆவணங்கள் தொகுக்கப்பட்டு அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றன. அதனாற் சில வரலாற்றுச் சுவடுகள் நிலைபெற்று வந்துள்ளன என்பதும் கவனித் தற்குரிய ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆட்சிமுறை**

யாழ்ப்பாணத்து அரசர்கள் சிங்கையாரியன், சேதுகாவலன், கங்கை நாடன் என்னுஞ் சிறப்புப் பெயர்களையும் பரராசசேகரன், செகராச சேகரன் என்னுஞ் சிங்காசனப் பெயர்களையுங் கொண்டிருந்தனர்.[38] ஆட்சியுரிமையானது தந்தைக்குப் பின் மகன் என்ற படியாக அமைந் திருந்தது.[39] ஆட்சியுரிமை கொண்டவனைப் பட்டாபிஷேகம் பண்ணி முடிசூட்டுவது வழக்கம். சிங்கையாரியன் ஒருவனின் பட்டா பிஷேகத்தைக் கைலாயமாலை விரிவாக வர்ணிக்கின்றது. சோதிடர் நிச்சயித்த சுபவேளையிற் பல்வேறு புனித நதிகளிலிருந்துங் கொண்டு வரப்பட்ட நீரால் அரசனை அமைச்சர்களும் அதிகாரிகளும் நீராட்டினர்.[40] அதன் பின்னர் அலங்காரமான வஸ்திரங்களை அணிவித்து, வீரக்கழல், பதக்கம் பூட்டிய முத்துமாலை முதலானவற்றைப் புனைந்து அவனை அரியணையில் இருத்தினார்கள். மறையவர்கள் மங்கள கீதம் பாட, பல்வகை வாத்தியங்களும் முழங்கப் பாண்டிமழவன் அரசனுக்கு நுதற்பட்டத்தைச் சூட்டினான்.

பட்டாபிஷேகம் முடிந்ததும் அரசன் தானங்கள் பலவற்றை வழங் கினான். முடிசூட்டு விழாக்காலத்தில் இராசதானி விழாக்கோல மாயிருக்கும். அலங்கரிக்கப்பெற்ற வீதிகள் தோறும் வாழை, கரும்பு, கமுகு முதலியவற்றை நாட்டித் தோரணங்கள் அமைத்துப் பூரண கும்பங்கள் வைக்கப்படும். சுற்றமும், சேனையும், உயரதிகாரிகளும் படைசூழ, அரசன் யானை மேலேறி உலாப்போக, அவனை நகரமாந்தர் வாழ்த்துவர்.[41]

ஆரியச்சக்கரவர்த்திகளின் சேனாபலம் குறிப்பிடத்தக்கவொன் றாகும். நிசங்க அழகக்கோனார் என்னுந் தென்னிலங்கைப் பிரதானி போர் ஏற்படுத்திய பொழுது அவனுக்கெதிராக இலட்சக்கணக்கான சேனா வீரர்களை ஆரியச்சக்கரவர்த்தி அனுப்பியிருந்தானென்று, சிங்கள நூல்கள் மிகைபாடாகக் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த காலத்தில் முதலாம் சங்கிலி (கி.பி. 1519-1561) இராசதானியைப் பாதுகாப்பதற்கு 12,000 த்திற்கும் மேலான தொகையினரான போர்வீரர்களை நிறுத்தி யிருந்தானென்று கேறோஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளிலே சேவை புரிவதற்கு அரசர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் படைவீரர்களை வரவழைப்பது வழக்கம்.

ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதியான செண்பகப் பெருமாள் என்னுஞ் சப்புமல் குமாரன் 15 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலே யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்ற போது கருநாடர், கேரளர், தமிழர், துளுவர், வன்னியர், சோனகர் முதலியோர் ஆரியச்சக்கரவர்த்தியின் படையில் இருந்தனரென்று ராஜாவலிய குறிப்பிடுகின்றது.[42] குடியானவர்கள் இராசகாரியமாக இராணுவசேவை புரியும் வழமை யாழ்ப்பாணத்திலே காணப்படவில்லை. எனவே, அரசர்கள் பெரும்பாலுந் தென்னிந்தியாவிலிருந்து போர்வீரர்களை வரவழைத்து அவர்களை இராணுவ சேவையில் ஈடுபடுத்தினார்கள். படைகளிலே சேவகம் புரிந்தவர்களுக்கு வேதனமாகப் பணம் வழங்கப் பட்டது.

போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் அரசாங்கம் ஐரோப்பிய ரையுஞ் சிங்களப் படைகளையுஞ் சேவையில் ஈடுபடுத்தியிருந்தது. ஆரம்பகாலத்தில் 250 போர்த்துக்கேயர் இராணுவத்திலே சேவை புரிந்தனர். காலப்போக்கில் அவர்களின் எண்ணிக்கை 200 ஆகியது.[43] அவர்களுக்குப் பக்கபலமாகச் சிங்களப் படைகளையும் வைத்திருந்தனர். சிங்களப் படைகளிலுள்ளவர்கள் இராசகாரியமாக இராணுவசேவை புரிந்த லஸ்கோரிகளாவர். கண்டி மன்னனோடு தொடர்ச்சியான போர் ஏற்பட்டிருந்த காலத்திலே தென்னிலங்கையில் இருந்து படைகளை வரவழைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே, போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திலே இராணுவசேவை புரிவதற்கெனத் தென்னிந்தியர் களை வரவழைத்தனர். கி.பி. 1640 இல் கிறிஸ்தோவான் திலேசு (Christovao Telles) என்பவனுடைய தலைமையில் 500 படையினரைத் தென்னிந்தியாவில் இருந்து வரவழைத்தனர். யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, மன்னார் ஆகியவிடங்களிலே பலமான கோட்டை களை அமைத்து அவற்றைத் தமது பிரதானமான இராணுவ தளங் களாகப் போர்த்துக்கேயர் பயன்படுத்தினார்கள்.[44]

உலாந்தாக்காரரின ஆட்சியின் ஆரம்பத்திலே யாழ்ப்பாணப் பட்டினத்திலும் அதன் எல்லைப் புறங்களிலும் 408 ஐரோப்பியர்களும் 165 லஸ்கோரிப் படைகளும் இராணுவசேவையில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணத்துக் கோட்டையிலும் அதன் வெளிப்புறங்களிலும் 245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் தங்கியிருந்தனர். ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய வற்றிலே முறையே 32 பேரும் 19 பேரும் நிலைகொண்டிருந்தனர். 10 படைவீரர் பொதுவாக வெளிநிலைகளிலே காவல்புரிந்தனர்.[28] 28 பேர் சிறிய தோணிகளிலே கடமை புரிந்தனர். யாழ்ப்பாணத்துக் கோட்டைக்குள் 210 படையினர் நிலைகொண்டிருந்தனர். யாழ்ப் பாணத்திலே 7 ஆராய்ச்சிகளின் தலைமையில் 165 லஸ்கோரிப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மன்னார், மாதோட்டம், அரிப்பு, கற்பிட்டி ஆகிய தலங்களில் எல்லாமாக 109 லஸ்கோரிப் படைகள் 5 ஆராச்சிகளின் தலைமையிற் சேவை புரிந்தனர்.[45]

1619 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிப் போர்த்துக்கேயர் அதனை ஒரு கிளைராச்சியமாகப் பிரகடனப் படுத்தினார்கள். போர்த்துக்கேய தளகர்த்தன் ஒருவனை (Captain Major) அதன் உயரதிகாரியாக நியமித்தனர். நிர்வாகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கென்று திசாவையாகப் போர்த்துகேய அதிகாரி ஒருவனை அவர்கள் நியமித்தனர். இவர்கள் கொழும்பிலுள்ள தளபதியின் மேற்பார்வையின் கீழே செயல்புரிய வேண்டும். ஆயினும், நடைமுறையில் யாழ்ப்பாணத்திலிருந்த அதிகாரிகள் கோவாவிலுள்ள உயரதிகாரிகளோடு, நேரடியாகத் தொடர்புகொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். 1560 ஆம் ஆண்டிலிருந்து தனிப்பிரிவாகப் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்டிருந்த மன்னார்ப் பிராந்தியம் 1640 இல் மீண்டும் யாழ்ப்பாணப்பட்டினத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

போர்த்துக்கேயரின் ஆட்சியில் முற்காலத்து நிர்வாகமுறையும் நிர்வாகப் பதவிகளும் தொடர்ந்தும் நிலைபெற்று வந்தன. குடிசனங்கள், நிலபுலங்கள், தொழில்துறைகள் முதலியன சம்பந்தமான விபரங்களைத் தோம்புகளில் எழுதும் வழக்கத்தைப் போர்த்துக்கேயர் ஏற்படுத் தினார்கள். தேசவழமையிலே அவர்களாற் சில மாற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. பெற்றோர் தாம் விரும்பியவாறு முதுசொம், சீதனம் என்ற வகைக்குரிய சொத்துக்களைத் தங்கள் பெண்பிள்ளைகளைக் கலியாணம் முடித்துவைக்குஞ் சமயத்திலே அவர்களுக்குச் சீதனமாகக் கொடுக் கலாம் என்றவொரு புதிய ஏற்பாட்டைச் செய்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாந்தாக்காரர் 1658 ஆம் வருடத்தில் யாழ்ப்பாணப்பட்டினம் என்னும் இராச்சியம் முழுவதையும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றி விட்டனர். இலங்கையில் அவர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் அவர்களின் வசமிருந்த மூன்று பெரும் பிரிவுகளில் ஒன்றாக அது விளங்கியது. கொம்மாந்தர் (Commandeur) என்னும் பதவிப் பெயர் கொண்ட படைத்தலைவன் ஒருவனே அதன் உயரதிகாரியாக விளங் கினான். முழு இராச்சியத்தின் பாதுகாப்பிற்கும் நிர்வாகத்திற்கும் அவனே பொறுப்பாகவிருந்தான். இராச்சியத்தில் நிலைகொண்டிருந்த படைகளெல்லாம் அவனுடைய கட்டுப்பாட்டிலிருந்தன. இலங்கை யிலுள்ள ஆட்சிக்குழுவின் (Political Council) அவன் அங்கத்தவனா யிருந்தான். அதிலே தேசாதிபதிக்கு அடுத்த ஸ்தானம் அவனுக்குரியது என்பது குறிப்பிடற்குரிய ஒன்றாகும். தேசாதிபதி கூட்டத்துக்குச் சமூகமளிக்காதவிடத்து, அதற்குத் தலைமை தாங்கும் உரிமை யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தருக்கு உரியதாகும்.

கொம்மாந்தருக்கு அடுத்த மிக முக்கியமான பதவி திசாவை என்பதாகும். அப்பதவிக்கும் உலாந்தாக்காரரையே நியமிப்பது வழமை. கொம்மாந்தர் இல்லாத சமயங்களில் அவனுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் திசாவை கவனிக்க வேண்டும். திசாவையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள் என்பனபற்றித் தேசாதிபதி பான்கூன்ஸ் மேல்வருமாறு எழுதுகின்றார்:

> இந்தியாவுக்குப் பொறுப்பான அதிஉத்தம தேசாதிபதிகள் நாயக ராலும் ஆலோசனைச் சபையினாலும் அங்கீகரிக்கப்பட்ட 1658 ஆம் ஆண்டுக் கட்டளைகளின் பிரதிகளும் அவற்றுக்குப் பின் வெவ்வேறு சமயங்களிற் கொம்மாந்தருக்கு அனுப்பிய கட்டளை களின் பிரதிகளும் திசாவைக்குக் கிடைக்க வேண்டும். அவற்றின் மூலமே தனது கடமைகள் சம்பந்தமான விடயங்களைப் பற்றி அவர் தெளிவாகவும் விபரமாகவும் அறிந்து கொள்ள முடியம்..... 10 பர்தாக்கள் அல்லது 25 கில்டர் பெறுமதிக்குக் குறைவானவை தொடர்பான சகலமான குடியியல் வழக்குகளிலும் தீர்ப்பளிப்ப தற்குத் திசாவைக்கு அதிகாரமுண்டு. யாழ்ப்பாணத்திலே நீதித் தலத்தைச் சேர்ந்த ஒருவரோடும் குடியானவர்களில் மிக வயோதி பரான இருவரோடும் ஆலோசனை பண்ணிய பின்பே தீர்ப்புகளை வழங்க வேண்டும். மாதோட்டத்தில், அங்குள்ள அதிகாரியினதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டங்கட்டிமார் இருவரினதும் ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே தீர்ப்புகளை வழங்க வேண்டும். அதிக தொலையிலுள்ள ஊர்களாயின் அவற்றிலுள்ள மிக வயோதிபரான இருவரோடு தொடர்பு கொண்டு, அவர்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொண்ட பின்பே தீர்ப்பு வழங்க வேண்டும். எண்பது(80) பணத்துக்கு மேலான பெறுமதியுள்ள விவகாரங்கள் தொடர்பான வழக்குகளிற் கொம்மாந்தருக்கு மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கொடுக்க வேண்டும். 25 கில்டருக்கும் அதிகமான பெறுமதியுள்ள விவகாரங்களைப் பொறுத்தவரையில் தீர்ப்புகள் கொம்மாந்தரினாலும் நீதித் தலத்தினாலும் வழங்கப்பட வேண்டும்.....

தேவைப்படுங் காலங்களில் முதலியார், பட்டங்கட்டிமார், பண்டாரப்பிள்ளைகள், தலையாரிகள், வன்னியர் முதலானோரைத் தனக்கு முன்னே சமூகமளிக்குமாறு கட்டளை பண்ணுவதற்கும், குற்றம் இளைக்குமிடத்து அவர்களைத் தண்டிப்பதற்கும் திசாவைக்கு அதிகாரமுண்டு.

நிலபுலங்கள், கிராமங்கள், சேரிகள், அவற்றில் வசிக்கும் சனங்கள் பற்றிய விபரங்களைத் திசாவை நன்கறிந்திருத்தல் வேண்டும். அவற்றைப் பற்றிய பதிவேடுகளை வைத்திருக்க வேண்டும்.

படைபலங் கொண்டு நிலைநாட்டப்பட்டுள்ள கொம்பஞ்ஞீயவின் சட்டப்பூர்வமான இறைமைக்கு எதுவிதமான பாதகமும் ஏற்படாது பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். இக்கடமையானது திசாவையின் பொறுப்பில் உள்ளதால் அவர் திருகோணமலையிலிருந்து கற்பிட்டியின் தென்முனை வரை பரந்துள்ள பரந்த வன்னிப் பிரதேசத்தில் ஆறு மாதங்களுக்குத் தங்கியிருக்க வேண்டும்.

கொம்பஞ்ஞீயவுக்கான வருமானங்களைச் சேகரிப்பது இறைசுவதோரின் கடமையாகும். ஆயினும், அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையுஞ் செய்வதோடு கொம்பஞ்ஞீய ஏமாற்றப்படுவதைத் தடுப்பதற்காகத் தேவையான விசாரணைகளை நடாத்த வேண்டும்.

யாழ்ப்பாணப்பட்டனத்தைச் சேர்ந்த நான்கு மாகாணங்களிலும் வன்னி, மாதோட்டம், முசலி ஆகியவற்றின் கரையோரத்திற்குச் சமீபமாகவுள்ள குடிசனங்களையுடைய ஐந்து தீவுகளிலும் அமைந்துள்ள 42 கோயிற்பற்றுகளுக்கும் பொறுப்பான போதகர் என்ற காரணத்தால், சமயகுரவரின் ஆலோசனையுடன், இயன்றவரையில் எல்லா வழிகளிலும் திசாவை கல்வி விருத்திக்காகப் பாடுபடுதல் வேண்டும். அதன் மூலமாக இந்த நாட்டுக்கு ஆண்டவனின் அருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும். 12,200 பள்ளி மாணவர்கள் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர்.....

விக்கிரக ஆராதனைக்காரரதும் முகம்மதியரதும் மூட நம்பிக்கைகள் யாவும் இந்நாட்டிலிருந்து வேரோடு அகற்றப்படுதல் வேண்டும்.

சுதேசிகள் மத்தியிலே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு இது மிகவும் அவசியமானது என்பதால் எல்லாக் கிறிஸ்தவ தேவால யங்களையும் அவசரமாகக் கட்டிமுடித்து விடவேண்டுமென்று திசாவைக்குக் கட்டளை பண்ணுகின்றோம்.[46]

### பழைமையான நிர்வாகமுறையும் பதவிப் பெயர்களும்

போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பழைமையான நிர்வாகமுறை யினையும் பதவிப் பெயர்களையும் குறிப்பிடத்தக்க மாற்றமின்றிப் பயன்படுத்தினார்கள். எதுவித செலவுமின்றியும் சிரமமின்றியும் சுதேசி களின் ஆதரவோடு இராச்சிய பரிபாலனத்தைச் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தால் அவர்கள் முற்காலத்து வழமைகளையும் மரபு களையுந் தமக்குப் பிரயோசனமுள்ள வரையிலே பேணி வந்தார்கள்.

#### அதிகாரி

தமிழரசர் காலத்திலே அதிகாரி என்னும் பதவியே வன்னியனார் என்பது தவிர்ந்த மற்றைய எல்லா நிர்வாகப் பதவிகளைக் காட்டிலும் உயர்வானதாகும். அதனைப் பற்றிக் கொம்மாந்தர்களில் ஒருவரான சுவார்திகுறூன் தனது அறிக்கையில் மேல்வருமாறு குறிப் பிட்டுள்ளார்:

அது கிறிஸ்தவரல்லாத இராசாக்கள் காலம் முதலாக இருந்து வருகின்றது. அந்த இராசாக்கள் அதிகாரிகள் மூலமாக நாட்டை ஆட்சி புரிந்தனர். மாகாணங்களின் அதிபர்களாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். போர்த்துக்கேயரும் அந்த முறையினைக் கையாண்டனர். அரசன் அவர்களுக்கு வேதனங் கொடுக்கவில்லை. குடியானவர்களே அவர்களுக்குத் தேவையானவற்றைக் கொடுத் தார்கள். ஆனால் காலப்போக்கில் இந்த வழமை மாறிவிட்டது. அதிகாரிகளின் வேதனதுக்காகக் குடியானவர்கள் வரிசெலுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வழக்கந் தோன்றியது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பணத்துக்கு அதிகப்படாமல் இதற்கென வரி செலுத்தினார்கள். ஆரம்பகாலத்திலே கொம்பஞ்ஞீயவும் இந்த வழக்கத்தை அனுசரித்தது. ஆனாற் பின்பு அந்தப் பதவியை ஒழித்துவிட்டனர். மாதோட்டம், பொன்னேரிபத்து ஆகியவற்றுக்கு மட்டுமே அதிகாரிகளை நியமிக்கின்றனர்.
>
> ஆயினும், அதிகாரிவரி தொடர்ந்தும் அறவிடப்படுகின்றது. சென்ற வருடக் கணக்கின்படி மொத்தமாக 1,178 இறையால் அதிகாரிவரியாகக் கொள்ளப்பட்டது. அதனை வெள்ளாளர், சாண்டார், தனக்காரர் ஆகிய சாதியார் மட்டும் செலுத்துகின்றனர். அச்சாதிகளைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அந்த வரியைச் செலுத்த வேண்டும்.[47]

அதிகாரிகள் இருவகையினர். அவர்களில் ஒரு வகையினர் பிரதேச வாரியான நிர்வாகத்திலே தலைமைப் பதவியினையும் பொறுப்புக் களையுங் கொண்டிருந்தனர். மற்றொரு வகையினர் சமூகப் பிரிவுகள் சிலவற்றோடு தொடர்பான பொறுப்புக்களைப் பெற்றிருந்தனர். தச்சர், கொல்லர், வண்ணார், நளவர், கைக்கோளர், கரையார் என்னும் பிரிவினரின் தலைவராக அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் தொடர்பான அரசாங்கப் பொறுப்புக்களையும், அரசாங்கத்துக்கு அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய வரிகள், சேவைகள் என்பவற்றையும் கவனித்தல் அவர்களின் பொறுப்பாகும்.

***முதலியார்***

யாழ்ப்பாண இராச்சியத்து நிர்வாகத்தில் முதலியார் என்ற பதவியினைக் கொண்டிருந்தவர்கள் முக்கியமானவொரு பங்கினை வகித்தனர். சமுதாயச் செல்வாக்கும், இராச்சிய பரிபாலனத்தில் அனுபவமும், அரசினர் மீது விசுவாசமுங் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர் களுக்கே முதலியார் என்னும் பதவி வழங்கப்பட்டது. அரசர்கள் உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான முடிபுகளை முதலியார்களைக் கலந்து ஆலோசித்த பின்பு மேற்கொள்வது வழக்கம்.

சிங்கள மன்னர்களின் நிர்வாக முறையிலும் தமிழ்நாட்டு நிர்வாக முறையிலும் முதலிகள் சில பிரதானமான கடமைகளையும் பொறுப்புக் களையும் மேற்கொண்டிருந்தனர். அதிகாரிகளை நியமிக்கும் வழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தைப் போல, முதலிகளை நியமிக்கும் வழக்கமும் தென்னிந்தியச் செல்வாக்கின் விளைவாகவே இலங்கையில் உண்டானதென்று கொள்ளலாம். சோழர், பாண்டியர் காலங்களிலே தமிழ்நாட்டிலுள்ள முதலியார்கள் படைப்பிரிவுகளின் தலைவர்களாகவும் வழக்காறுகளை ஆராய்ந்து மக்களிடையிலுள்ள தகராறுகளை விளங்கித்தீர்க்கும் தலைவர்களாகவும், அரசினருக்குரிய வரிகளைச் சேகரிப்பதில் ஈடுபடும் தரப்பினராகவும் அமைந்திருந்தனர். இலங்கையிலே, குறிப்பாகத் தமிழர் வாழ்ந்த பிரதேசங்களிலே முதலியார் என்போர் இராணுவ சேவை, பொது நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய மூன்று பிரதான துறைகளிலே பொறுப்புக்களை மேற்கொண்டிருந்தனர். அவர்கள் மூலமாகவே அரசினர் குடியானவர்களோடும் தேசத்திலுள்ள பல்வேறு நிலைகளில் அமைந்த தலைமைக்காரரோடும் தொடர்பு கொள்ள முடிந்தது. அரசரின் அதிகாரத்தை நிலைநாட்டுவதிலும், குடியானவர்களின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொள்வதிலும் அவர்கள் பிரதானமான பங்கினை வகித்தனர். சமுதாயத்திலே அவர்களுக்கு மிகுந்த செல்வாக்குண்டு என்று கருதியதாலும், அராசங்கத்துக்கு விரோதமான கிளர்ச்சிகளை நடாத்தவல்ல சக்தி அவர்களிடமுண்டு என்று கருதியதாலும் போர்த்துக்கேயரும் உலாந்தாக்காரரும் அவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், முதலியார் பதவியை ஒழித்துக் கட்டுவதற்கும் விரும்பினார்கள். ஆயினும், அவ்வெண்ணங்களை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. முதலியார்களின் அனுசரணையுடனும் ஆதரவுடனுமே ஐரோப்பியர் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர்.

1619 இல் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் அதன் வருமானங்களைப் பற்றி முதலியார்களிடமிருந்து ஓர் அறிக்கையை போர்த்துக்கேயர் பெற்றுக் கொண்டனர்.

> "மேலாலே சொல்லப்பட்ட விபரங்கள் எல்லாம் உண்மையானவை என்பதை அத்தாட்சி பண்ணிக் கையொப்பமிட்டு, இந்த அறிக்கைப் பத்திரத்தை இலங்கைத் தீவிலே தளகர்த்தனாகவுள்ள கப்பித்தான் மையோரான பிலிப்பு தொலிவேரா ஆண்டவருக்கு அனுப்பி வைக்கின்றோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லி சவளக்கோன் முதலியார், மனத்துங்க முதலியார், புவிநாதமுதலியார் என்போர் முதலியார்களின் சார்பிலே கையொப்பமிட்டு அறிக்கை எழுதிக் கொடுத்தனர். அது 1619 ஆம் வருடம் ஜூன் மாதம் 6 ஆம் திகதி எழுதப்பட்டது.[48]

உல்லாந்தாக்காரர் யாழ்ப்பாணப்பட்டினத்தைக் கைப்பற்றியதும் நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகியன சம்பந்தமான ஏற்பாடுகளைச் செய்த போது குடியானவர்களுக்கான நீதிமன்றத்தை நிறுவினார்கள். தேசவழமைப் பிரகாரம் முதலியார்கள் பலரையும் அதன் உறுப்பினர்களாக நியமித்தனர். அவர்களைப் பற்றிய விபரங்கள் மேல்வருமாறு அமைந்துள்ளன:

| *பெயர்* | *பதவிக்குரிய பிரிவு* |
|---|---|
| 1. இராசகாரிய முதலியார் | வலிகாமம் பற்று, தீவுபற்று |
| 2. வேரவிலோன் தொஞ்சன் | வலிகாமம் பற்று, தீவு பற்று |
| 3. கனகராய முதலியார் | வடமராட்சி |
| 4. தொம் மனுவேல் சேனாரத்தின முதலியார் (முதலியாரும் இறைசவதோரும்) | வடமராட்சி |
| 5. குஞ்சிய குமார முதலியார் | தென்மராட்சி |
| 6. சேதுகாவல முதலியார் (முதலியாரும் இறைசுவதோரும்) | தென்மராட்சி |
| 7. சேதுராய முதலியார் | பச்சிலைப்பள்ளி |
| 8. தொம் கஸ்பாறு இறைசுவதோர் | பச்சிலைப்பள்ளி |
| 9. சிங்கைகாவல முதலியார் | போர்த்துக்கேயர் வசமுள்ள நிலங்கள். |

தேசாதிபதியின் அறிக்கையில் முதலியார்கள் பற்றி மேல்வரும் விபரங்கள் மேலதிகமாகச் சொல்லப்படுகின்றன.

> மடப்பள்ளி, அகம்படி ஆகிய சாதியாரின் விருப்பத்திற்கு இணங்கியும், அவர்களின் மனத்துன்பங்களைப் போக்குவதற்குமாக அவர்களைச் சேர்ந்த ஒருவரை அவர்களின் முதலியாராக நியமிக்க வேண்டும் என்று கருதப்பட்டது. அந்தப் பதவிக்கு மனப்புலி அந்திராது என்பவரைத் தெரிவு செய்துள்ளோம். அவரை மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகின்றனர் என்பதும், அவர் கொம்பஞ்ஞீயவுக்கு விசுவாச மானவர் என்பதும் எமது கருத்தாகும்.

தேவையான சமயங்களிலே அண்மையில் இருக்க வேண்டும் என்பதாற் பட்டினத்திலே வசிக்க வேண்டுமென்று இந்தப் 16 பேருக்கும் பிரத்தியேகமான கட்டளை கிடைத்துள்ளது. முதலியார்கள், இறைசுவதோர் ஆகியோரில் நான்கு பேரை ஆண்டுதோறும் குடியியல் வழக்குகளை விசாரணை பண்ணும் நீதவான்களாகத் தெரிவு செய்ய வேண்டும். 100 பணத்துக்கும் மேற்படாத பெறுமதி யுள்ள விவகாரங்கள் பற்றிய வழக்குகளை விசாரணை பண்ணுவ தற்கு அவர்களுக்கு அதிகாரமுண்டு. முதலியார்களும் இறைசுவ தோருக்கும் மாதமொன்றுக்கு 10 பணமும் ஒரு பறை அரிசியும் வேதனங் கொடுக்க வேண்டும்....

தமது பொறுப்பிலுள்ள மாகாணங்களின் விவகாரங்களைப் பற்றித் தெளிவாகவும் பூரணமாகவும் அறிந்து கொண்டு, காலாகாலம் அவற்றைப் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அங்கு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றிய கட்டளைகளை அவர்கள் மூலமாகவே அனுப்புதல் வேண்டும். அவர்கள் மூலமாகவே அங்கிருந்து தொழிலாளரதும் கூலியாட்களினதுஞ் சேவைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.[49]

**இறைசுவதோர்**

இறைசுவதோர் என்னும் பதவிப்பெயர் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் வழக்கில் வந்தவொன்றாகும். அரசாங்க வரிகளைச் சேர்க்கும் பொறுப்பு அவர்களுடையதாகும். முதலியார் என்ற பதவிக்குரிய வர்கள் சில சமயங்களிலே இறைசுவதோர் என்னும் பதவிப்பெயரையும் பெற்றிருந்தனர். யாழ்ப்பாணத்திலே மிகவுஞ் செல்வாக்குப் பெற்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இப்பதவியைப் பெற்றிருந்தனர்.[50] 17 ஆம் நூற்றாண்டின் முடிவிலே பதவி பெற்றிருந்த இறைசுவதோர் பலர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தோராவர். கன்னங்கராய் என்னும் ஊரைச் சேர்ந்த தொம் பிலிப்பு சங்கரப்பிள்ளை அவர்களிற் பிரதான மானவர். அவரின் மைத்துனரான முதலித்தம்பி வடமராட்சியில் இறைசுவதோராக நியமனம் பெற்றிருந்தார். சங்கரப்பிள்ளையின் சகோதரர் முறையினரான மண்டலநாயக முதலியார் தென்மராட்சிக்குப் பொறுப்பான இறைசுவதோராகக் கடமை புரிந்தார்.[51] இவர்கள் நிர்வாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலுள்ள பிரதான பதவிகளைத் தங்கள் உறவினருக்குப் பெற்றுக் கொடுத்தார்கள் என்றும் வரிகள் தொடர்பான பல மோசடிகளுக்குப் பொறுப்பாக இருந்தார்களென்றும் உலாந்தாக்கார அதிகாரிகள் முறைப்பாடு செய்தனர்.[52]

இவர்கள் அரசினருக்குரிய தலைவரி, நிலவரி, வாரம், இனவரி (தொழில்வரி), அதிகாரிவரி என்பவற்றைக் குடியானவர்களிடமிருந்து சேகரிப்பதோடு அவர்கள் அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டிய ஊழியம் என்னுஞ் சேவையினையும் நடத்துவிக்க வேண்டும். வடமராட்சி முதலான மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் பல பண்டாரப்பிள்ளைகளை நியமித்தனர். மாகாணத்தின் சுற்றளவு, அதன் சனத்தொகை ஆகியவற்றுக்கு ஏற்றவாறு நியமனம் பெறும் பண்டாரப் பிள்ளைகளின் தொகை அமைந்திருக்கும். 17 ஆம் நூற்றாண்டின் முடிவிலே வடமராட்சியில் 6 பண்டாரப்பிள்ளைகளும், பச்சிலைப் பள்ளியில் 4 பண்டாரப்பிள்ளைகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

குடியானவர்களிடமிருந்து வரிகளைச் சேர்ப்பதற்காக ஊர்களுக்குப் போகுமிடத்துப் பண்டாரப்பிள்ளைகள் உடையார், தலையாரி ஆகிய தலைமைக்காரரைக் கூட்டிக் கொண்டு போவது வழக்கம். வரி கொடு படாதவிடத்து நாட்டு வழமைப்படி குற்றம் புரிந்தவர்களின் உடைமை களை அபாராதமாக எடுத்துக் கொள்வர்.

இறைசுவதோர், பண்டாரப்பிள்ளைகள் ஆகியோருக்கு அரசாங்கக் கணக்கிலிருந்து வேதனம் வழங்கப்படுவதில்லை. ஆயினும், வழமைப்படி குடியானவர்கள் இறுக்கும் வரிகளின் முழுத்தொகையின் ஒருவீதமளவு பணத்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். இந்தக் கட்டணத்தைக் குடியானவர்கள் வரிக்கு மேலதிகமாகச் செலுத்த வேண்டும். இப்படி அதிக பணம் சேருவதில்லை. வடமராட்சியில் 25 இறையாலும் (Rix-dollars) பச்சிலைப் பள்ளியில் 12 இறையாலும் வருடமொன்றுக்கு கிடைத்தன. இச்சிறிய தொகைப்பணத்தையே இறைசுவதோரும் பண்டாரப்பிள்ளைகளும் அவர்களின் கையாட்களும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.[53]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்காணி**

தமிழரசர் காலத்தில் வழக்கிலிருந்த பதவிப் பெயர்களிற் கண்காணி என்பதும் ஒன்றாகும். போர்த்துக்கேயரின் ஆவணங்கள் சிலவற்றிலே அதனைப் பற்றிய குறிப்புண்டு. அப்பதவியினைக் கொண்டிருந்தவர் களின் கடமைகள் ஊர்மட்டத்தில் அடங்கியவை என்று அனுமானித்துக் கொள்ளலாம். உலாந்தாக்காரின் ஆவணங்களிலே அவர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படவில்லை.

தென்னிந்தியச் செல்வாக்கின் விளைவாகவே கண்காணி என்னும் பதவிப் பெயர் இலங்கையிலே பயன்படுத்தப்பட்டது. சோழர் காலத்துக் கல்வெட்டுகளிற் புரவுவரித் திணைக்களத்துக் கண்காணி என்ற சொல் நிலவரி பற்றிய கணக்குகளைப் பரிசோதனை செய்யுந் துறையினையும், அதிலே சேவகம் புரியும் ஊழியரையுங் குறிக்கின்றது. சில சாச னங்களில் 'நாட்டுக் கண்காணி நாயகம் செய்வோர்' என்ற மொழித் தொடர் வருகின்றது. இதிற் 'கண்காணி' என்பது நில அளவை, வரிமதிப்பீடு ஆகியவற்றை மேற்பார்வை செய்யுஞ் சேவைகளைக் குறிக்கின்றது. வேறு சில சாசனங்களில் 'கண்டு கண்காணிச்சு மேல்வாரம் கொள்ளக் கடவதாகவும்' என்ற தொடர் நிலங்களைச் செவ்வனே மதிப்பிட்டு அரசனுக்குரிய பங்கினைச் சேர்க்க வேண்டும் என்ற பொருளைத் தருகின்றது. எனவே, கண்காணித்தல் என்ற பதம் வரி மதிப்பீட்டையும். கண்காணி என்னுஞ் சொல் அம்மதிப்பீட்டை நடத்திய ஒருவரையுங் குறிக்கின்றன என்பது உணரப்படும். இதனால் யாழ்ப் பாணப் பட்டினத்துக் கண்காணிகளும் இறைவரி நிர்வாகத்திலே கடமை புரிந்தவர்கள் என்று கொள்ளலாம்.

கணக்குப்பிள்ளை என்போர் வரவு செலவு பற்றிய கணக்கு களுக்குப் பொறுப்பாக இருந்ததோடு இலிகிதர்களாகவும் கடமை புரிந்தார்கள். 17 ஆம் நூற்றாண்டிலே ஒரு சமயத்தில் வடமராட்சியில் இறைசுவதோராயிருந்த ஒருவரைக் கொம்மாந்தரின் கணக்கப்பிள்ளை யாக நியமித்தார்கள். 'கோட்டை வாசற் கணக்கப்பிள்ளை' என்றவொரு பதவியும் இருந்தது.[54]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உடையார்***

உடையார் என்னும் பதவிப்பெயர் யாழ்ப்பாணத்திலும் வன்னிப் பிரதேசத்திலும் நெடுங்காலமாக வழங்கி வந்துள்ளது. தென்னிந்தியாவிலே அது நெடுங்காலமாக வழக்கிலிருந்தது. உடையவன், கிழான், தலைமகன் என்னும் பொருள்களைக் குறிக்கும் பதமாக அது கொள்ளத் தக்கது. கோயிற் சாசனங்களில் மூலத்தான மூர்த்தியை உடையார் என்று குறிப்பிடுவது வழக்கம். கிராமத் தலைவர் முதலாக முடிமன்னர் வரை பல்வேறு நிலையில் அதிகாரஞ் செலுத்தியவர்களை உடையாரென்று தமிழகத்திலும் கர்நாடகத்திலுங் குறிப்பிட்டனர். இலங்கையைப் பொறுத்தவரையில் உடையார் என்பது கிராமத்தலைவராக தலையாரிக்குச் சற்று மேலான நிலையினைக் குறிக்கும் பதவிப் பெயராகும்.

ஒல்லாந்தர் காலத்துத் தமிழாவணங்களிலே உடையார் பற்றி மேல்வருங் குறிப்புகள் உள்ளன:

> உடையார்களாயிருக்கப்பட்ட பேர்கள் இந்த ராச்சியத்தின் அந்தக் குடியானவர்களிடமாகத் தாங்கள் தலைக்கடமை முதலாக நிலங்கள், தோட்டங்கள், மரங்களுக்கும் வாங்கப்பட்ட கடமைப் பணங் களுக்குத் திட உறுதியான கச்சாத்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது. அந்தப்படியாகத் தானே இறைசுவதோர்மாருந் தங்கள் கீழாகிய உடையார்கள் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட நிலக் கடமை, தலைக்கடமை முதலான பணங்களுக்குத் தாங்கள் ஒப்புக் கொண்ட படிக்குக் கச்சாத்துக் கொடுக்கக் கடனாளியாயிருக் கிறார்கள்.......
>
> உடையார்களாய் இருக்கப்பட்ட பேர்கள் ஊர்களிலும் குறிச்சி களிலும் வந்து சம்பவிக்கப்பட்ட சகலமான களவுக்கும் பொல்லாப் புக்கள், இடையூறுகள் முதலான வகை தப்பிதங்களுக்கும் எதிரிடை யாக நல்ல கட்டளையான காவல் கட்டுடனே அறுக்கை பண்ணிக் கொள்ள வேண்டியது. இதுகளிலே குறைபாடு நடப்பித்தால் தொழிலும் மாற்றி விடுகிறதறியவும்.
>
> இந்தப் பற்றுக்களிலே இறைசுவதோர்மாருக்கும் உடையார் களுக்கும் கடூரமாகக் கற்பிக்கும் வகையாவது, இந்த ராச்சியத்திற் குடியானவர்களுடைய தலைக்கடமை, நிலக்கடமை முதலானதுகள் வருஷத்துக்கு நாலு கந்தாயப்படிக்குக் கார்த்திகை மாதத்திலேயும், மாசி மாதத்திலேயும், வைகாசி மாதத்திலேயும், ஆவணி மாத முதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதியிலேயும் ஒடுக்குவிக்க வேண்டியது. இந்த ஈற்றிற் கந்தாயம் ஆவணயரை மாதத்துக்குள்ளாகக் கொம்பஞ்ஞீயவின் பொக்கிஷத்திலே ஒடுக்கவும் வேண்டியது. இதிற் குறைபாடு நடப்பித்தால் இறைசுவதோர்மார் என்கிலும், உடையார்கள் என்கிலும் தொழில் மாற்றி விடுகிறது அறியவும்.

இந்த ராச்சியத்திலே சகலமான உடையார்கள் கையாட்கள் மற்றுங் குடியானபேர்களுக்கும் இந்தக் கட்டளை கொண்டு திட்டாந்தமாகக் கற்பிக்கிறோம். சுண்ணாம்பறை மறிப்புக் கூடங்களை முறித்தொளித்துப் போன யாதொரு கள்ளர்களை என்கிலும், மற்றும் நாடு புறங்களில் ஊர்களுக்குள்ளாக இருக்கப்பட்ட பொல்லாத இயற்கைக்காரராகிய பேர்களையென்கிலும் இருத்திக் கொள்ளவும் இருக்க இல்லிடங் கொடுக்கவும் யாதொரு உண்பனவு, குடிப்பனவு கொடுத்து நடப்பிக்கவும் நடத்தவும் ஒண்ணாது ஆனால் அப்படிக்கொத்த பேர்களை ஆராய்ந்து பிடித்துவந்து ஒப்புக்கொடுக்க வேண்டியது.[55]

இங்கு மேற்கோளாகக் கையாளப்பட்ட ஆவணக் குறிப்புகளின் அடிப்படையில் உடையார்களின் பொறுப்புகள், கடமைகள் என்பன பற்றி மேல்வரும் அம்சங்கள் தெளிவாகின்றன. உடையார் என்னும் பதவியைப் பெற்றவர்கள் இறைசுவதோரின் கீழ்ப் பணிபுரிந்தவர்கள். அவர்களின் கடமைகளிற் சில இறைவரிகள் சம்பந்தமானவை. தலைவரி, நிலக்கடமை, மேல்வாரம், மரவிறை முதலான வரிகளைக் குடியானவர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். வரிகளைச் செலுத்துவோருக்குப் பற்றுச்சீட்டாகப் பட்டோலை வழங்க வேண்டும். குடியானவர்களிடமிருந்து கிடைத்த இறை கடமைகளை உடையார் இறைசுவதோரிடம் ஒப்படைத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

உடையாரின் மற்றைய பிரதான பொறுப்பு ஊர்காவல் பற்றியதாகும். களவு, கொள்ளை முதலான சமூக விரோதச் செயல்களைப் புரிவோரை அறுக்கை பண்ணுவதும் அமைதியை நிலைநாட்டுவதும் அவர்களின் கடமையாகும். நீதிபரிபாலனத்தில் அவர்கள் உயரதிகாரிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***தலையாரி***

ஊர்களின் தலைமைக்காரரைத் தலையாரி என்று குறிப்பிடுவது முற்கால வழமை. பட்டங்கட்டி, அடப்பனார் என்பன மீனவர், பரவர், கரையார் முதலியோர் வாழ்ந்த ஊர்களின் தலைமைக்காரருக்குரிய பட்டங் களாகும். ஊர் மட்டத்திலுள்ள தலைமைக்காரர் மூலமாகவே அரசாங்க வதிகாரிகள் குடியானவர்களோடு தொடர்பு கொள்வது வழமை. சமூகவழமைகள், ஊர்காவல், இறை கடமைகள், ஊழியம் முதலான விடயங்கள் தொடர்பாக அவர்களுக்குப் பொறுப்புகள் இருந்தன.

தலையாரிகளுக்கு வேதனமாகப் பணங் கொடுக்கும் வழமை யில்லை. அவர்களுக்குச் சீவிதமாக வயற்காணிகள் வழங்கப்பட்டன. பதவி பரம்பரை உரிமையாகியவிடத்து நிலமானியங்களும் அவர் களின் குடும்பத்தினரின் பரம்பரை உடைமைகளாகி விடுவதுண்டு. அடப்பனாரும் பட்டங்கட்டிமாருங் கடற்தொழில் புரிவோரிடமிருந்து ஒவ்வொரு தோணிக்கும் ஒவ்வொரு பணம் அல்லது இவ்விரண்டு பணம் என்றவாறு சேர்த்துக் கொள்வார்கள்.

தலையாரி முதலான பதவிகள் பரம்பரை உரிமையாக இருந்தன. தலையாரி ஒருவன் அரசனுக்கு 60 சக்கரம் காசினைக் கொடுப்பதன் மூலம் தனது பதவியைத் தன் மக்களில் ஒருவனுக்குப் பெற்றுக் கொடுக்கலாம். பிள்ளைகளில்லாத இடத்து அவ்வாறு பணத்தை அரசினருக்குக் கொடுத்து, தனது உறவினருள் ஒருவனைத் தனது பதவிக்குரிய வாரிசாகத் தெரிவு செய்யலாம். அவ்விடத்துத் தலை யாரியும் அவனிடமிருந்து பதவியைப் பொறுப்பேற்பவனும் தனித் தனியாக 60 சக்கரம் காசினை அரசனுக்கு கொடுக்க வேண்டும்.[56]

***வன்னியனார்***

வன்னிபம், வன்னிமை, வன்னியனார் எனப் பலவாறு வழங்கிய பிரதானிகள் வன்னி பற்றுகள் எனப்படும் குறுநிலப் பிரிவுகளின் நாயகராயிருந்தனர். பனைங்காமம், கரிகட்டுமூலை, கருநாவல்பத்து, மேல்பத்து, முள்ளியவளை, தென்னமரவாடி, செட்டிகுளம் என்னும் வன்னிப் பிரிவுகள் யாழ்ப்பாண ராச்சியத்தினுள் அடங்கியன வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிபற்றுகள் சுயாட்சி அமைப்புக்களாய் விளங்கின. வன்னிபங்கள் தங்கள் ஆட்சியின் கீழமைந்த குடியானவர்கள் மீதும், நிலங்கள் மீதும் மன்னன் ஒருவனுக்குரிய உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். தத்தம் பகுதிகளிலே குடியானவர்கள் செலுத்த வேண்டிய எல்லா இறைகடமைகளையுஞ் சேவைகளையும் அவர்களே பெற்றுக் கொண்டனர். அவர்களின் பரிபாலன முறையும் யாழ்ப் பாணத்து மன்னர்களின் பரிபாலன முறையினைப் பெரிதும் ஒத்திருந்தது. அவற்றிலுள்ள பிரதேசவாரியான நிர்வாகப் பிரிவுகளினது பெயர்களும் நிர்வாகப் பதவிப்பெயர்களும் ஒரே விதமானவை. அவற்றிலுள்ள பதவிகளுக்குரிய நியமனங்களை வன்னிபங்களே வழங்கினார்கள். பொது நிர்வாகம், இறைவரி நிர்வாகம், நீதிபரிபாலனம் ஆகிய துறைகளில் எதுவிதமான கட்டுப்பாடுகளுமின்றி அவர்கள் சுயாட்சி அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்து இராசதானியில் வரிசை கூடுஞ் சமயத்திலே வன்னிபங்கள் அதிலே கலந்து கொள்வது வழமை. ஆண்டுதோறும் வரிசை இரு சமயங்களிற் கூடுவது வழக்கம். வன்னிப்பிராந்தியம் தூரத்தில் அமைந்திருந்த படியால் வன்னியர் வருடமொன்றுக்கு ஒரு முறை மட்டுமே இராசதானிக்குச் சென்று மன்னனுக்குத் திறைசெலுத்தி, தங்கள் சிநேகபூர்வமான மனப்பாங்கினையும் விசுவாசத்தினையும் உறுதிப்படுத்துவதோடு தேசத்து விவகாரங்களைப் பற்றி ஆலோசனை கூற வேண்டும் என்பது நியதி.

வன்னிபங்கள் செலுத்திய அதிகாரம் அரசரின் அதிகாரங்களைப் போன்றவை. அரசருக்குச் சமானமான வரிசைகளையும் உரிமைகளையும் அவர்கள் கொண்டிருந்தனர். இராசாதானிக்குப் போகும் சமயத்திலே அவர்களை நிலபாவாடை, வாத்தியங்கள் சகிதமாக வரவேற்பதுண்டு. பிற்காலத்திலே இந்த வழமைகளை உலாந்தக்காரர் புரிந்து கொள்ளா தமையினால் இருசாராருக்குமிடையிலே கசப்புணர்வுகளும் பகைமையும் ஏற்படலாயின. வன்னிபங்கள் அரசருக்கு நிகரானவராயினும் அவர்கள் முடிசூடும் வழக்கமில்லை. நாணயங்களை அவர்கள் வெளியிட்டதாகவும் வரலாறில்லை. இவ்விரு உரிமைகளும் மன்னருக்குத் தனிச்சிறப்பானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி நியமனங்கள் யாவும் வன்னியனாரால் வழங்கப்பட்டன என்பதற்கு நல்ல மாப்பான வன்னியனாரின் நியமனப்பத்திரம் சான்றா யுள்ளது. அதன் முதற்பகுதி மேல்வருமாறு உள்ளது:

> 1781 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதி பனைங்காமப்பற்று அயுதாந்தி வன்னிபம் தொஞ்சுவாங் குலசேகர நல்லமாப்பாண வன்னியனார் அவர்கள் கற்பித்தபடியாவது(:) பனைங்காமப் பற்றுக்குச் சேர்ந்த விளாங்குளம் சாதி வெள்ளாளன் முதலியாரென்கிற பட்டப்பேருங் கிடைக்க வேணுமென்று மிகுந்த எளிதாவுடனே மன்றாடிக் கேட்டபடியால் நாமுஞ் சம்மதித்துச் சொல்லப்பட்ட கந்த உடையானுக்கு திசைவிளங்குநாயக முதலியென்கிற பட்டமுங் கட்டிக் கிளக்குமூலைப் பிரிவுக்குத் தொழிலுங் கற்பித்திருக்கிற படியால்.....[57]

கிழக்கு மூலையிலுள்ள விளாங்குளத்தைச் சேர்ந்த கந்த உடையான் வேண்டிக் கொண்டதன் பிரகாரமாக அவனை முதலியாராக வன்னி யனார் நியமித்தார். முதலியார் என்ற பதவிக்குரிய பட்டப்பேரும் அதற்குரிய அதிகாரமும் நியமனப்பத்திரம் மூலமாக வழங்கப்பட்டன. முதலியாரின் அதிகாரம் பிரதேச அடிப்படையில் அமைந்தவொன் றாகும். கந்த உடையான் பெற்றுக் கொண்ட பதவியும் அதிகாரமுங் கிழக்கு மூலைக்கு மட்டும் உரியவை. அவனுடைய பட்டமும் அதிகாரமும் வன்னிபம் மூலமாகவே கிடைத்தவை. எனவே, இத்தகைய பதவியொன்றிலிருந்து ஒருவரை நீக்கும் அதிகாரமும் வன்னிபத்துக்கு உண்டு என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

**வரிசை**

இராச்சியம் முழுவதிலும் நிர்வாகப் பதவிகளைப் பெற்றிருந்த தலைமைக்காரர் வருடந்தோறும் இருமுறை இராசதானியிற் கூடுவது வழமை. வன்னிகளைப் பொறுத்தவரையில் வன்னிபங்கள் மட்டும் அவ்வாறு செல்லுதல் வேண்டும். அவர்களின் பற்றுகளிலுள்ள நிர்வாக அதிகாரிகள் இராசதானிக்குப் போக வேண்டும் என்ற நியதியில்லை. வன்னிபங்களும் வருடத்தில் ஒரு தடவை மட்டும் போய், திறை செலுத்தி விசுவாசத்தைச் சம்பிரதாயபூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும். மற்றைய பிரதேசங்களைப் பொறுத்தவரையிலே தலைமைக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் அரச சபையின் கூட்டத்திற் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். இவ்வாறு வருடமொன்றுக்கு இரு தடவைகளிற் கூடுங் கூட்டங்களை வரிசை என்று சொன்னார்கள்.

தமிழரசரின் காலம் முடிந்த பின்பு போர்த்துக்கேயரும் உலாந்தாக் காரரும் இந்த வழக்கத்தைப் பின்பற்றினார்கள். உலாந்தாக்கார அதிகாரிகளின் அறிக்கைகளிலே இதனைப் பற்றி மேல்வருமாறு வர்ணித்துள்ளனர்:

> முதலியார்களும் எல்லாச் சாதியார்களின் தலைமைக்காரரும் ஒவ்வொரு வருடமும் இரு தடவைகள் இங்கு வந்து, செய்ய வேண்டிய கருமங்களைப் பற்றி ஆட்சியாளருக்கு ஆலோசனை கூறவேண்டும். ஒவ்வொருவரும் ஏதாவதொன்றை உபகாரமாக கொண்டு வரவேண்டும். தலையாரிகள் கோழிகளைக் கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு சாதியாரும் தந்தந் தொழிலுக்கு அடை யாளமான பொருள்களைக் கொண்டு வருவார்கள். வன்னிநாட்டில் உள்ளவர்கள் வருடத்துக்கு ஒருமுறை இங்கு வரவேண்டும். ஆனால், நெய், கோழிகள் முதலானவற்றை பொறுத்தவரையிலும் இதுவே வழமையாகும். இந்த வழக்கத்தைத் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும். அவர்களுடைய அடக்கத்திற்கு அது ஓர் அடையாள மாகும். அந்த வழக்கம் முற்காலத்தில் இங்கிருந்த அரசர்களாலே ஆரம்பிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் அதைப் பின்பற்றினார்கள். இப்பொழுதும் அது உத்தம கொம்பஞ்ஞீயவினால் அனுசரிக்கப் படுகின்றது.[58]
>
> இறைசுவதோர், முதலியார்கள், தலையாரிகள், ஆராச்சிகள் முதலாயினோர் முழுச் சமுதாயத்தின் சார்பிலும், வருடமொன்றுக்கு இருதடவைகள் வந்து, கோட்டையிலே கொம்மந்தரின் முன்னி லையிலே கூடுகின்ற வைபவம் வரிசை எனப்படும். இது முற்காலத்து இராசாக்களின் காலம் முதலாக நடந்துவரும் வழமையாகும். அவர்கள் தங்கள் பணிவையும் விசுவாசத்தையும் அரசினருக்குத் தெரிவிப்பதற்கும், நாட்டிலே நடைபெறும் விடயங்களைப் பற்றி அறிவிப்பதற்கும், பொதுநலன் கருதிச் சில விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் அந்த வைபவம் பயன்படுகின்றது. இறைமை யாதிக்கம் பெற்றுள்ள கொம்பஞ்ஞீயவுக்கும் நாட்டவருக்கும் அதனால் நன்மை உண்டென்பதால் இந்த வழமை பின்பற்றப்படுதல் வேண்டும்..... கோடைகாலத்தில் ஒரு முறையும் மாரிகாலத்தில் ஒரு முறையும் என்ற விதமாக அது நடைபெறும்.[59]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைகடமைகளும் பொருள்வளங்களும்

போர்த்துக்கேயர் இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் அதன் வருடாந்த வருமானங்களைப் பற்றி முதலியார்களிடமிருந்து அறிக்கை யொன்றைப் பெற்றுக் கொண்டனர். அதிலே வரவு செலவுக் கணக்கு கள் பற்றி மேல்வரும் விபரங்கள் அடங்கியிருந்தன:

### வருமானம்

1. இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள நிலங்களிலிருந்து கிடைக்கும் வரி 9,400 பர்தாக்கள்.
2. தஞ்சாவூர் நாயக்கர்களால் இந்த இராச்சியத்தின் அரசர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மதலக்கோட்டையிலிருந்து கிடைக்கும் வருமானம் 1,500 பர்தாக்கள்.
3. துறைமுகங்கள், கடவுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் 200 பர்தாக்கள்.
4. இந்த இராச்சியத்தின் உட்பகுதிகளிலுள்ள வயல்கள் மூலம் வரும் வருமானம் 500 பர்தாக்கள்.
5. பிறவரிகள் மூலமாகக் கிடைக்கும் வருமானம் 100 பர்தாக்கள் பெறுமதியான பொருள்கள்.
6. யானைகள் மூலமாகவும் அரசாங்கத்திற்கு வருமானமுண்டு. ஆனால், அவற்றைப் பிடிப்பது சிரமம் என்பதாலும், வருடத்துக்கு வருடம் அவற்றின் மூலமான வருமானங்கள் வேறுபடுவதாலும் நிதானமான கணக்கொன்றை இதுபற்றிச் சொல்ல முடியாதென்று முதலியார்கள் அறிவித்தனர்.

### செலவு

1. வருமானமாகக் கிடைக்கும் மொத்தப் பணத்திலிருந்து வருடந்தோறும் 2,800 பர்தாக்கள் முதலியார் முதலிய பதவிகளிலுள்ளவர்களுக்கு வேதனங் கொடுப்பதற்கும், கோயில்களை ஆதரிப்பதற்குஞ் செலவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



2. 1,200 பர்தாக்கள் திறையாகக் கொடுக்கப்படுகின்றது.

3. 4,500 பர்தாக்கள் லஸ்கோரிப் படைகளுக்கும் நாட்டுப்படைகளுக்கும் கூலியாகக் கொடுக்கப்படும்.[60]

இந்த விபரங்களின் அடிப்படையிலே நோக்குமிடத்து யாழ்ப்பாண இராச்சியத்துச் சமுதாயமானது தென்னிலங்கையில் உள்ளதனைக் காட்டிலும் பெரிதும் வேறுபட்டிருந்தது.

கோட்டை இராச்சியத்திலே மானிய சமுதாயவமைப்பின் அம்சங்கள் அழுத்தம் பெற்றிருக்கையில் யாழ்ப்பாணப் பட்டினத்திலே பணப்புழக்கமுடைய பொருளாதாரமுறை உருவாகியிருந்தது. அங்கு அரசனுக்கும் குடியானவர்களுக்கும் இடையிலான தொடர்புகளும், கடமைகளும் நிலம், நிலபோகம், நிலத்தின் மூலமான உற்பத்திப் பொருள்கள் என்பவற்றாற் பந்தப்பட்டிருக்கவில்லை. அந்தத் தொடர்புகள் பணத்தை அடிப்படையாகக் கொண்டனவாய் அமைந்துவிட்டன. முதலியார்கள் முதலான பதவிகளைப் பெற்று அரசாங்க சேவை புரிந்தவர்களுக்கு வேதனமாகப் பணம் வழங்கப்பட்டது. இராசகாரியம் நிலமானியங்களின் மூலமானது என்ற கோட்பாடு காணப்படவில்லை. படைகளுக்கும் பணமே கூலியாக வழங்கப்பட்டது. நிலமானியத்தின் அடிப்படையிலான இராசகாரியமென்று இராணுவசேவை கருதப்படவில்லை. கோயில்களுக்கு ஆதரவாக அரசாங்கத்தின் வருமானங்களின் ஒரு பகுதியான பணம் கொடுக்கப்பட்டமையுங் குறிப்பிடத்தக்கது. நித்திய, நைமித்திக கருமங்களை நடாத்துவதற்கு வேண்டிய போதிய வருமானங்களுடைய நிலங்கள் அவற்றிடம் இருக்கவில்லை என்பதும் இதனால் உணரப்படும்.

அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 60 சதவீதமும், அரசாங்கச் செலவுகளில் 85 சதவீதமும் நிர்வாகசேவை, இராணுவசேவை, ஆலயங்கள் ஆகியவற்றுக்கு உரியவை என்பதும் கவனத்திற்குரியது.[61]

***நிலவரி***

நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நிலவரி, வாரம் என்ற இரு வகையான வரிகள் சேர்க்கப்பட்டன. அரசாங்கத்துக்குரிய வருமானத்தில் மிகக் கூடுதலான பங்கு, 17 ஆம் நூற்றாண்டிலே இவ்விதமாகவே கிடைத்தது. யாழ்ப்பாணப் பட்டினத்தில் விளைநிலங்கள் பெரும்பாலுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் உடைமையாகவே இருந்தன. நிலங்களை வைத்திருப்போர் அவற்றின் வளத்திற்கேற்ப மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு குறிப்பிடப் பட்ட தொகைப் பணத்தை அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்த வேண்டியிருந்தது. அதுவே நிலவரி என்பதாகும். விளைபொருளில் அரசனுக்குரிய பங்கு வாரம் எனப்படும். நிலத்திலே செய்கை பண்ணப் படும் பயிர்கள், ஒவ்வொரு செய்கைப் போகத்திலுங் கிடைக்கக் கூடியதான வெள்ளாமை என்பவற்றின் அடிப்படையிலே காணியாளர் செலுத்த வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

விளைபொருளில் 1/10 பங்கு அரசனுடைய பாகமாக கொள்ளப் பட்டது. மாதோட்டம், வன்னி ஆகிய பகுதிகளிலே தானிய வரியைத் தீர்வை என்று சொல்லுவது வழமை. விதைக்கப்பட்ட அளவு தானியம் மட்டுமே அங்கு தீர்வையாகக் கொள்ளப்பட்டது. நிலத்தை ஆதாரமாகக் கொண்டு விதிக்கப்பட்ட வரிகளில் மனைவரி (மனைகூலி), தோட்டவரி (தோட்டவாயம்), மரவரி (மரவிறை) என்பனவும் அடங்கும். ஒவ்வொரு வீட்டுக்கும், அதன் தன்மைக்கேற்ப, பத்துக்காசுக்கு மேற்படாது வரி கொள்ளப்படும். தமிழகத்துச் சாசன வழக்கில் இதனை வாசல்பணம் என்றும் மனைகூலி என்றுங் குறிப்பிட்டனர். சிங்கள மன்னரின் நிர்வாகத்திலும் புராதன காலம் முதலாக மனைவரி குடியானவரிட மிருந்து சேர்க்கப்பட்டது.

வீட்டைச் சூழ்ந்திருக்கும் வளவுகளில் வாழை, கமுகு, மா, பலா, தென்னை முதலிய புரோசனங்களைக் குடியானவர்கள் உண்டு பண்ணுவது நெடுங்கால வழமையாகும். இவை உண்டாக்கப்பட்டுள்ள நிலங்கள் மீது தோட்டவரி என்பது அறவிடப்பட்டது. பனை, இலுப்பை, வேம்பு போன்ற பயன்தரு மரங்கள் மீது மேலதிகமான வரிகள் அறவிடப்பட்டன. முற்கால வழமைகளைப் பிற்பற்றிப் போர்த்துக் கேயரும் உலாந்தரக்காரரும் அவற்றின் மீதான வரிகளைத் தப்பித மின்றிச் சேகரிக்கும் நோக்கத்துடன் தோம்புகளில் அவற்றைப் பற்றிய நுட்பமான விபரங்களை எழுதுவித்தனர். இலுப்பை, வேம்பு போன்ற மரங்களுக்குரிய இறை கடமையாகக் குடியானவர்கள் தமிழரசர் காலங்களில் எண்ணெய் கொடுத்தார்கள். அது அரண்மனையிலும் கோயில்களிலும் விளக்கெரிப்பதற்குப் பயன்பட்டது. ஐரோப்பியரின் ஆட்சிக்காலத்தில் எண்ணெய்க்குப் பதிலாகக் காசினை வரியாகக் கொண்டனர். இலுப்பை, வேம்பு ஆகியவற்றில் ஒவ்வொரு மரத்துக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே 5 காசும், 1 1/2 காசும் 17 ஆம் நூற்றாண்டில் வரியாகக் கொள்ளப்பட்டன.

**தலைவரி**

யாழ்ப்பாணத்திலே குடியானவர்களிடமிருந்து சேர்க்கப்பட்ட தலை வரியானது தமிழகத்திலே வழக்கிலிருந்த ஆள்வரி, பிள்ளைவரி, பேர்கடமை என்பனவற்றைப் போன்றதாகும். பருவமடைந்த ஆண்கள், பெண்கள் ஆகிய எல்லோரிடமிருந்தும் அது சேர்க்கப்பட்டது. ஒவ்வொருவரும் வருடமொன்றுக்கு ஒவ்வொரு பணம் என்ற வீதமாக அதனைக் கொடுக்க வேண்டும். "தமிழரசர் காலத்தில் ஆண்டொன்றுக்கு 120,000 பணம் தலைவரியாகச் சேர்க்கப்பட்டது. போர்த்துக்கேயர் அதனை இருமடங்காக அதிகரித்து மொத்தமாக வருடமொன்றுக்கு 240,000 பணத்தைத் தலைவரியாகச் சேர்த்தார்கள்."[62]

**அதிகாரிவரி**

இது விஜயநகரப் பேரரசர் காலங்களிலே தமிழகத்திலே சேர்க்கப்பட்ட அதிகாரிக்கம் என்பதைப் போன்றதாகும். மாகாணங்களுக்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகளின் வாழ்க்கைச் செலவிற்கும், அவர்கள் தங்கள் நிர்வாகக் கடமைகளைச் செய்வதற்குமாக இவ்வரி சேர்க்கப் பட்டது. இதனைப் பற்றிக் கொம்மந்தோரான ஸ்வார்திகுறூன் மேல் வருமாறு கூறுவர்:

> "அதிகாரி வரியின் முழுத்தொகை 1,178,31/2 றிக்ஸ் டொலர் வரையாகும். அது, தொழில் வரியைப் போன்று, ஒருவிதமான வேறுபாடுமின்றி எல்லோரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்படும். ஆயினும், வெள்ளாளர், சாண்டார், தனக்காறர் ஆகிய சாதியார் மட்டுமே அதனைக் கொடுக்கின்றனர். அது, இங்கிருந்த பழைய காலத்து மன்னர்களின் நாட்கள் முதலாகச் சேர்க்கப்பட்டு வருகின்றது. அவர்கள் அதிகாரிகள் மூலமாக அரசாங்கத்தை நடாத்தினார்கள். பல்வேறு மாகாணங்களுக்குப் பொறுப்பாக அதிகாரிகளை நிய மித்தார்கள். அந்த முறையினைப் போர்த்துக்கேயருங் கடைப் பிடித்தார்கள். அரசன் அவர்களுக்கு வேதனம் வழங்கவில்லை. அவர்களின் செலவுகளுக்குத் தேவையான பண்டங்களைக் குடியானவர்களே கொடுக்க வேண்டும். காலப்போக்கில் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அதிகாரிகளுக்கு வேதனமாகக் கொடுப்பதற்கு வேண்டிய பணம் மக்களிடமிருந்து வரியாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதற் கென ஒவ்வொருவரும் ஒவ்வொரு பணத்துக்கு மேற்படாத காசினை வரியாகச் செலுத்த வேண்டும்." ஆரம்பத்திலே கொம்பஞ்ஞீயவும் இந்த முறையினைப் பின் பற்றியது. பின்பு, மாதோட்டம், பொன்னேரி ஆகியவற்றைத் தவிர்ந்த பகுதிகளில் அதிகாரி என்போரை நியமிக்கும் வழக்கம் ஒழிக்கப்பட்டது. ஆயினும், அதிகாரி வரி தொடர்ந்தும் இறுக்கப் படுகின்றது. அதைப்பற்றி எவரும் இராச்சியத்திலுள்ள மிகப் பழங் குடிகளானவரென்று கருதுவதோடு, அரசாங்க அதிகாரிகளை ஆதரிப் பதற்குத் தகைமையானோர் என்று கருதி, அதனைத் தங்களுக்கு மட்டுமே வழங்கப்பெற்ற ஒரு கௌரவமாகக் கொள்ளு கின்றனர்.[63]

***இனவரி***

வெவ்வேறு தொழில்களைப் புரிகின்ற ஒவ்வொரு சாதியாரிடமிருந்தும் அரசன் பெற்ற வரி இனவரி (Officie gelden) என வழங்கியது. தச்சர், கொல்லர், கைக்கோளர், கன்னார், பொற்கொல்லர் முதலியோர் இவ் வரியைச் செலுத்தினார்கள். தென்னிந்தியாவிலே நூலாயம், தறிக் கடமை, செக்குக்கடமை போன்ற இனவரிகள் வெவ்வேறு சமூகங் களைச் சேர்ந்தோரிடமிருந்து சேர்க்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இனவரியானது ஒவ்வொருவரிடமிருந்துத் தனித்தனியாகச் சேர்க்கப் படவில்லை. ஒவ்வொரு சமூகத்தவருங் கொடுக்க வேண்டிய தொகை அரசினர் சார்பிலே தீர்மானிக்கப்பட்டு, அது மொத்தமாகவே வசூலிக் கப்பட்டது. சிங்கள நிர்வாகத்திற் காணப்பட்ட வத்த (பாட்டம்) என்ற வரி இதனைப் போன்றதாகும்.

***ஊழியம்***

தேசத்திலுள்ள மக்கள் வரிகளைச் செலுத்துவதோடு, ஊதியம் பெறாது ஊழியம் என்ற சேவையினை அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு ஒவ்வொரு நாள் என்ற அடிப்படை யில் வருஷமொன்றில் 12 நாட்களுக்குச் சேவைபுரிதல் வேண்டும். கோட்டைகள், வாடிவீடுகள். பொதுக்கட்டடங்கள் முதலியவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல், கல்லுடைத்தல், தானியக் களஞ்சியங்களை அமைத்தல், தெருக்கள், பாதைகள் போன்றவற்றை அமைத்தல், குளம், கால்வாய் போன்றவற்றின் வரம்புகளைச் சீரமைத்தல், நிர்வாகக் கடமைகளைச் செய்கின்ற அரசாங்கவதிகாரிகள் பிரயாணம் பண்ணும் போது இரவிலே விளக்குப்பிடித்தல், பொருள்களை ஏற்றிச் செல்ல மாடுகளையும், வண்டிகளையும் கொடுத்தல் போன்றன ஊழியக்காரரின் கடமை களாகும்.

உலாந்தாக்காரரின் ஆவணங்களில் ஊழியம் பற்றி மேல்வருங் குறிப்புகள் உள்ளன:

> வெள்ளாளர், மடப்பள்ளி என்னுஞ் சாதியாரில் ஒவ்வொருவனும் தேசத்துப் புரவலனுக்கு மாதம் ஒரு நாளைக்குச் சேவை புரிய வேண்டும். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுகள் ஆகிய பற்றுகளிலிருந்து நாள்தோறும் 500 பேர் வேலை செய்ய வருகின்றனர். அவர்களில் 120 பேர் ஹம்மென்ஹீல் கோட்டைக்கு அண்மையிலே ஊராத்துறையிலுள்ள தென்னந்தோட்டத்திலும், அம்ஸ்ரர்டாம் தீவிலே அமைக்கப்படவுள்ள மாளிகைக்குத் தேவை யான கல்லு, சுண்ணாம்பு ஆகியவற்றைச் சேகரிக்குந் தொழிலிலும் வேலை செய்கின்றனர். 150 பேர் பருத்தித்துறையிலே கடலோரமாக அமைக்கப்படும் இராணுவத்தளத்திலே பணிபுரிகின்றனர். எஞ்சி யுள்ள 230 பேரும் இங்கு வெடி மருந்துச்சாலைக்கு வேண்டிய புதிய கட்டடத்தைக் கட்டுதல், தென்னம்பிள்ளைகளை உண்டு பண்ணுதல், கொம்பஞ்ஞீயவின் பூந்தோட்டங்களுக்கு நீரிறைத்தல், இங்கும் கொழும்பிலும் உள்ள கோட்டைகளைத் திருத்துவதற்கு வேண்டிய கற்கள், சுண்ணாம்பு ஆகியவற்றைச் சேகரித்தல் போன்ற சேவைகளில் ஈடுபடுகின்றனர். மற்றெல்லாச் சேவைகளையும் நளவரும் பள்ளருஞ் செய்தல் வேண்டும்..... ஊர்களிலுள்ள தச்சருங் கம்மாளரும் மாதத்தில் ஒரு நாளைக்கு இங்கு வருகிறார்கள். அவர்களிற் 15 பேர் தினமும் வருகிறார்கள்.....
>
> கோட்டைகளிலே பாவனைக்குத் தேவையான எல்லாப் பானைகளையும் குசவர்கள் இலசவமாகக் கொடுக்க வேண்டும். அத்துடன், இப்போது புதிதாக அமைக்கப்படும் வெடிமருந்துச் சாலைக் கட்டிடத்திற்குப் போல மேலதிகமான வேலைகளுக்குத் தேவைப்படுமிடத்துச் செங்கற்களை வழங்க வேண்டும். ஓடுகளை அவர்கள் வழங்குமிடத்து அவர்களுக்கு 1000 த்துக்கு 3 பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமாகவும், அத்திபாரங்களுக்குத் தேவையான செங்கட்டிகளுக்கு 1000 த்துக்கு 2 பணம் வீதமாகவுங் காசு கொடுக்கப்படும். கம்மாளர் பட்டடைகளுக்குத் தேவையான கரியினை நாள் தோறும் ஊர்களி லிருந்து கொண்டு வருவார்கள். பச்சிலைப்பள்ளியில் உள்ளவர்கள் பட்டனத்துக்கு வந்து கூலிவேலை செய்யும் வழக்கமில்லை. ஆனால், அவர்கள், அதற்குப் பதிலாக மாதமொன்றுக்கு 1500 பாய்களையும், நாளொன்றுக்கு மண், சுண்ணாம்பு போன்றவற்றைச் சுமந்து செல்வ தற்கு வேண்டிய கடகங்களையும் கொடுக்க வேண்டும்........

கடல்வழியாகவும் ஆற்றுவழியாகவும் நடைபெறும் வேலை களைக் கரையார், பள்ளுவிலிகள் போன்ற கடற்றொழில் புரிவோர் செய்தல் வேண்டும். கடல்வழியான தொழில் புரியுஞ் சோனகரிட மிருந்தும் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.....

வெள்ளாளர், பரதேசி, மலையாளர், அகம்படி, தனக்காறர், சான்றார், இந்தவிதப்பட்ட சாதிகள் ஒவ்வொரு மாதத்தைக்கொரு நாட் கோட்டையிலே வந்து ஊழியஞ் செய்யக் கடனாயிருக்கிறார்கள். இதில் குறைபாடு வந்தால் ஒவ்வொரு நாளைக்கு ஒன்றரைப் பணஞ் சிக்கிறுப்பார்கள் என்கிறதறியவும்...[64]

## வளங்களும் வாழ்க்கை முறைகளும்

யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள வருமானங்கள் பணமாகவே அரசினருக்குக் கிடைத்தன என்பதை இங்கு முன்பு கவனித்தோம். அந்த வருமானங்களிற் பெரும்பகுதி நிலவரியாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதற்குச் சமீபமான தீவுப்பற்றிலும் எதுவிதமான ஆறுகளோ நீர்ப்பாசனஞ் செய்யக்கூடிய குளங்களோ இல்லாத போதும் விவசாயம் முன்னேற்றம் அடைந்திருந்தது. அங்கு அந்நாட்களில் வாழ்ந்த மக்களின் கடின உழைப்பும், நெடுங்கால அனுபவத்தின் அடிப்படையில் அவர்கள் விருத்தி செய்திருந்த பயிர்ச்செய்கை முறையும் விவசாயத்துறையில் ஏற்பட்ட அபிவிருத்திகளுக்கு ஏதுவா யிருந்தன.

பயிர்ச்செய்கைக்குரிய நிலங்களை நெற்காணி, வரகுக்காணி என இருவகையாகப் பாகுபடுத்தும் முறை காணப்பட்டது. நெற்பயிர்ச் செய்கைக்குரிய காணிகளே நெற்காணி எனப்படும். நெல்வயல்களில் வருடத்துக்கு ஒருமுறை மட்டுமே செய்கை பண்ண முடியும். மழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ச்சி காணப்படும் ஆவணி முதல் மாசி வரையான மாதங்கள் நெற்பயிர்ச்செய்கைக்குரிய காலமாகும்.

மட்டக்களப்பிற் போல அதிகமான பலவினங்களைச் சேர்ந்த நெல் செய்கை பண்ணப்பட்டதாகத் தெரியவில்லை. வெள்ளம் தேங்கி நிற்கக்கூடிய பள்ளமான வயல்களில் ஆறுமாதகால நெற்பயிர்களைச் செய்கை பண்ணினார்கள். கார்த்திகை, மார்கழி மாதங்களில் மட்டும் வெள்ளம் நிற்கும் வயல்களில் மூன்று மாத காலத்துக்குரிய பயிர்களைச் செய்கை பண்ணினார்கள். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை இந்த முறை காணப்பட்டது.

வயல் நிலங்களைப் பொறுத்தவரையிற் குடியானவர்கள் இரண்டு முக்கியமான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவற்றிலொன்று போதிய அளவிலே வயல்நிலங்களுந் தோட்டக் காணிகளும் இல்லாதமையாகும். மேலும், வழமைப்படி பெற்றோரின் காணிகள் அவர்களின் பின் பிள்ளைகளிடையே பங்கீடு செய்யப் பட்டமையால் நிலங்கள் சிறு பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. பயிர்ச் செய்கை பருவமழையிலே தங்கியிருந்தமையால் வரம்புகளைக் காணிகளிலே கிரமமாக அமைத்து நீரிணை இயன்றவரையிலே வயல்களிற் தேக்கிக் கொள்ளும் முறையைக் கடைப்பிடித்தார்கள். முன்னாட்களிலே பங்குனி மாதம் வரை வயல்கள் சேறாயும் ஈரமாயும் இருக்கும்.

நெல்வயல்களிலே கோடை காலத்திற் சிறுதானியங்களைச் செய்கை பண்ணுவார்கள். அது சிறுபோகம் என்படும். எள்ளு, பயறு, உழுந்து, குரக்கன் முதலியவற்றை அவ்வாறு செய்கை பண்ணுவதுண்டு. அந்தச் செய்கை வைகாசி மாதத்தில் முடிவடையும். அதுமுதல் அடுத்த மழைக்காலம் வரையும் வயல்கள் வெறுமனே இருப்பதாற் கட்டாக் காலியான ஆடுமாடுகள் அவற்றிலே திரியும்.

மாற்றுப் பயிர்ச்செய்கை முறை, நிலங்களை உரமிட்டு வளம் படுத்துதல் ஆகிய முறைகள் நெடுங்காலமாக வழக்கிலிருந்து வந்துள்ளன. இங்கிலாந்திலே விவசாயப்புரட்சி ஏற்படுவதற்கும் முற்பட்ட காலங்களிலிருந்து தென்னிந்தியாவிலும் வட இலங்கையிலும் மாற்றுப் பயிர்ச்செய்கை முறையினைக் கையாண்டுள்ளனர். அந்தமுறை வயற்காணிகளிலும் தோட்டக்காணிகளிலும் பின்பற்றப்பட்டது. செய்கை பண்ணும் வயல்களுக்குந் தோட்டங்களுக்கும் வருடாவருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரமிடுவதும் பழங்காலம் முதலாக நிலவிவரும் வழக்கமாகும். வீடுவளவுகளிலும் பட்டிகளிலும் வளர்க்கும் ஆடுமாடுகளின் எருவைச் சேகரித்து வைத்து விளைநிலங்களிலே உரமிடுவது வழக்கம்.

அதே போல இலைகுழை, குப்பை கூளம் முதலானவற்றையும் கிடங்குகளிலே போட்டு அவை உக்கிய பின்பு உரமாகப் பயன் படுத்துவர். செய்கை பண்ணும் நிலங்களை இவ்விதமாக உரமூட்டும் முறை இலங்கையிலுள்ள பிறசமூகங்கள் பின்பற்றாத ஒன்றாகும். மாதோட்டம், வன்னி ஆகிய பகுதிகளிலே வயல்நிலங்கள் மிகுந்து காணப்பட்டன. ஓரளவு நீர்ப்பாசனஞ் செய்வதற்கான வசதிகளும் காணப்பட்டன. ஆயினும், நிலங்களைச் செய்கை பண்ணுவதற்கு வேண்டிய போதிய குடியானவர்கள் அங்கு காணப்படவில்லை. மலேரியா போன்ற நோய்களினாலும் அங்குள்ள குடிசனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். செய்கை பண்ணப்படும் புரோசனங்களுக்கும் வனவிலங்குகள் அதிக சேதம் விளைவித்தன. விற்பனை செய்யும் அளவிற்கு அங்குள்ள குடிகள் தானியங்களை உற்பத்தி செய்ய வில்லை. வன்னியில் உற்பத்தியான பருத்தி யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகப் 17ஆம் நூற்றாண்டுக்குரிய ஆவணங் களிற் குறிப்புண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தில் வாழ்ந்த மக்களுக்குத் தேவையான அளவு நெல்லை உற்பத்தி செய்துகொள்ள முடியா திருந்தது. எனவே, தென்னிந்தியப் பிரதேசங்களிலிருந்தும் நெல், அரிசி ஆகியவற்றை இறக்குமதி செய்தனர்.

செம்மண் அடங்கிய நிலப்பகுதிகளிலே வெள்ளம் தங்கி நிற்ப தில்லை. அதனால் அங்கு நெல்வயல்களை அமைத்துக் கொள்ள முடியவில்லை. அங்குள்ள மண் மிகுந்த வளமுடையது. எனவே, தோட்டங்களிற் காய்கறிவகைகளையும், கிழங்கு வகைகளையும், வாழை, பலா, மா, கமுகு, வெற்றிலை முதலியவற்றையும் மிகுதியாக உண்டுபண்ணுவது நெடுங்கால வழமையாகும். அங்குள்ள கிணறுகள் மிகவும் ஆழமானவை. அவற்றிலிருந்து மிக நீளமான பனைமரத் தாலான ஏற்றங்கள் மூலமாகத் தோட்டப்பயிர்களுக்கு நீரிறைப்பது வழமை. இந்த முறை முற்காலங்களிலே தமிழகத்தினின்றுஞ் சென்று யாழ்ப்பாணத்திலே குடியேறியவர்களினால் அங்கு அறிமுகஞ் செய்யப்பட்ட ஒன்றாகும். தோட்டக் காணிகளில் மழைக்காலங்களிலே சாமை, குரக்கன், தினை, வரகு முதலியவற்றைச் செய்கை பண்ணுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்கால வழமையாகும். அங்கு வாழ்ந்தவர்கள் இவற்றையே பெரும் பாலும் தோட்டஉணவு தானியங்களாகப் பயன்படுத்தினார்கள். தோட்டங்களில் உண்டான காய்கறிகளையும் பழவகைகளையுஞ் சந்தைகளிலே உற்பத்தியாளர் விற்பனை செய்தனர். பண்டத்தரிப்பு, சங்கானை, சுன்னாகம், கொடிகாமம் முதலிய இடங்களிலுள்ள சந்தை கள் தமிழரசர் காலம் முதலாகவே அமைந்து வந்துள்ளன. பதினேழாம் நூற்றாண்டுத் தோம்புகளில் இவற்றைப் பற்றிய குறிப்புகள் இருந்தன.

### புகையிலைத் தோட்டங்கள்

புகையிலை வியாபாரத்தின் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானங்கள் பற்றி போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலம் முதலாகக் குறிப்புகள் கிடைக்கின்றன. குத்தகைக்காரருக்கு மட்டுமே புகை யிலையை விற்கவேண்டுமென்று 1635 இலே போர்த்துக்கேயர் கட்டளையொன்றைப் பிரகடனப்படுத்தினார்கள். கி.பி. 1645 இற் புகையிலை விற்பனை மூலம் 5,000 பர்தாக்கள் அரசினருக்கு வரியாகக் கிடைத்தது. இது இராச்சியத்திலிருந்து அவர்கள் வரியாகப் பெற்றுள்ள முழுத்தொகையில் 20% என்பது குறிப்பிட்டத் தகுந்தது.[66] காலப் போக்கிலே புகையிலைத் தோட்டங்களுக்கெனத் தனியான தோம்பு தயாரிக்கப்பட்டது. தேசாதிபதி ஒருவர் யாழ்ப்பாணத்து அதிகாரி களுக்கு எழுதிய அறிக்கையொன்றிலுள்ள மேல்வரும் குறிப்பினால் இது தெளிவாகின்றது:

> முன்னே கூறியதைப் போல வடமராட்சியிலுள்ள நிலங்களை அளவு செய்து அறிந்து கொண்ட விபரங்களைத் தோம்பிலே பதிவு செய்யும் வேலைகள் முடிந்துவிட்டன. சனங்கள் அடிக்கடி முறைப் பாடு செய்து வருவதால் புகையிலைத் தோட்டங்கள் பற்றிய தோம்பினை வரகுக் காணித் தோம்பாக மாற்ற வேண்டும். ஆனால், அவர்கள் புகையிலைச் செய்கையினை ஆரம்பிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட தொகையினை அரசாங்கத்திற்குக் கடமையாகக் கொடுக்க வேண்டும். எனவே, தோட்டங்களை ஒவ்வொரு வருடமும் பரிசோதனை செய்ய வேண்டும். புகையிலையைச் செய்கை பண்ணுவதற்கு அனுமதி பெற்றுக் கொள்ளாத தோட்டங்களின் சொந்தக்காரர் தண்டம் இறுக்க வேண்டும்.[67]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழாம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்துப் பொருளாதாரத்திற் புகையிலை ஒரு முக்கியவிடத்தைப் பெற்றுவிட்டது. கணிசமான எண்ணிக்கையிற் புகையிலைத் தோட்டங்கள் காணப்பட்டன. புகை யிலைச் செய்கை, புகையிலை வியாபாரம், சுருட்டுத்தொழில் ஆகியவை இலாபகரமானவையாகக் காணப்பட்டன. புகையிலையை மலையாள தேசத்திற்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்தார்கள். அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் புகையிலைச் செய்கை மூலங் கிடைத்ததோடு தேசத்திற் பணப்புழக்கமும் அதனால் அதிகரித்தது.

**சாயவேரும் சாயத்தயாரிப்பும்**

யாழ்ப்பாண இராச்சியத்தில் உற்பத்தியாகப் பிறதேசங்களுக்கு ஏற்று மதியான பொருள்களிற் சாயவேர் குறிப்பிடத்தகுந்தது. தமிழரசர் காலம் முதலாகச் சாயவேர் தென்னிந்தியாவிலுள்ள துறைமுகப் பட்டினங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அத்துடன் சாயம் காய்ச்சுதலும் ஒரு குடிசைக் கைத்தொழிலாக அக்காலத்தில் விருத்தி பெற்றிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலுஞ் சாயவேர் பெருமளவில் உற்பத்தியாகியது. சாயவேர் அரசனின் ஏகபோக உரிமையாகக் கருதப்பட்டது. சாய வேரைக் கிளறுவதும், பின் அதனை அரசாங்கத்தின் களஞ்சியங்களில் ஒப்படைப்பதும் ஊழியக்காரரின் கடமையாகும். சாயங்காச்சுவதற்குச் சாயவேரைத் தண்ணீரிற் போட்டு ஊறவிட வேண்டும். நன்றாக ஊறிய பின் நீரை வேறாக்கி அதனை வடித்துப் பாத்திரங்களில் ஊற்றிக் காய்ச்சுதல் வேண்டும். அது குழம்பாகி வந்ததும் பாத்திரத்தை இறக்கி வைத்து, ஆறவிட்டுப் பின்பு பல நாட்களுக்கு வெய்யிலிற் காய வைப்பர். அது காய்ந்து கட்டியாகிவிடும். பின்பு அதனைச் சதுரமான துண்டுகளாக வெட்டிப் பக்குவப்படுத்தி வியாபாரிகளுக்கு விற்பனை செய்வார்கள். சாயம் காய்ச்சுமிடத்துத் தேவைக்கேற்ப வண்ணக் கலவைகளைச் சேர்த்துக் கொள்வர். பொதுவாகப் பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களிலே அந்நாட்களிற் சாயத்தைத் தயாரித்தனர். தேசாதிபதியால் எழுதப்பெற்ற அறிக்கையொன்றிலே சாயவேர் பற்றி மேல்வருங் குறிப்புண்டு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயப் பொருள்கள் மூலம் கொம்பஞ்ஞீயவுக்கு கிடைக்கும் வருமானம் கணிசமானதாகும். மன்னார், காரைதீவு ஆகிய பகுதிகளில் உற்பத்தியானவற்றை இந்த வருடம் கொம்பஞ்ஞீயவின் தேவைகளுக்கென ஒதுக்கியுள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எஞ்சியுள்ளவற்றிலிருந்து 8 மாதங்களில் 2,000 பணம் இலாபங் கிடைத்துள்ளது. யாழ்ப்பாணம், மன்னார், தீவுபற்று ஆகியவற்றிலிருந்து 350 வஹார் வரையான பொருள்கள் கிடைக்கும்.[68] யாழ்ப்பாணத்தின் நான்கு மாகாணங்களிலும் தீவு பற்றிலும் சாயவேரைக் கிளறுவதற்கு வஹார் ஒவ்வொன்றுக்கும் 3 இறையால் வீதம் பணம் செலவாகின்றது. மன்னாரில் 15 இறையால் செலவாகின்றது. அங்குள்ள சாயவேர் தரமிக்கது. காரைதீவிலுள்ளதைக் காட்டிலுஞ் சிறந்தது. காரைதீவில் 5 இறையால் செலவாகின்றது.[69] உலாந்தாக்காரர் சோழமண்டலக்கரையிலிருந்து துணிகளை இறக்குமதி செய்து அவற்றைச் சாயம் பூசுவதற்கென்று சாயக்காரரிடம் ஒப்படைத்தார்கள். சாயக்காரரிடம் பகுந்து கொடுப்பதற்கென்று அரசாங்கத்தின் நிலையங்களில் 1694 நொவம்பர் மாதத்தில் 60,106 இறத்தல் சாயவேர் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.[70]

### நெசவுத் தொழில்

ஆரியச்சக்கரவர்த்திகளிற் சிலர் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதற்கென்று சோழமண்டலம், தொண்டைமண்டலம் ஆகியவற்றிலிருந்து நெசவாளரை வரவழைத்து நல்லூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலுங் குடியிருத்தினார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும், நெசவுத் தொழில் ஒரு பிரதான தொழிலாக யாழ்ப்பாணத்தில் விருத்தி பெறவில்லை. உள்ளூர்ப் பாவனைக்குத் தேவையான புடவைகளில் ஒரு சிறிய அளவினையே இவ்வாறு உற்பத்தி செய்ய முடிந்தது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பெற்ற துணிகளும் சற்றுக் கனதியானவையாகவும் தரங்குறைந்தனவாகவுமே காணப்பட்டன.

ஒல்லாந்தர்கள் கணிசமான அளவிலே நெசவுத்தொழில் விருத்திக்கு ஊக்கமளித்தனர். தென்னிந்தியாவிலிருந்து நெசவாளரை அழைத்து வந்து குடியிருத்த முயற்சிகளை மேற்கொண்டனர். நெசவாளருக்கெனத் தனியான தோம்பினை எழுதி வைத்தனர். யாழ்ப்பாணத்தில் உற்பத்தியான துணிகளை ஜாவா தேசத்துக்கும் ஐரோப்பாவுக்கும் ஏற்றுமதி செய்தனர். உள்ளூரில் உற்பத்தியான துணிகள் மீது 30%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை வரி அரசினரால் வசூலிக்கப்பட்டது. சுவார்திகுறூன் கொம்மாந்தராகவிருந்த காலத்திலே வரிசை கூடிய சமயமொன்றிலே தலைமைக்காரர் செய்த முறைப்பாட்டின் விளைவாக இதனை 20% வீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்தது.

***யானைகள்***

மத்திய காலத்தில் இலங்கையிலுள்ள வனங்களில் யானைகள் பெருகி யிருந்தன. பரந்தன்வெளி முதலாக மாத்தறை வரையுள்ள காடுகளில் அவை உலாவித் திரிவதுண்டு. யானைகள் அரசனின் ஏகபோக உரிமை யாகக் கருதப்பட்டன. வன்னிப் பகுதிகளிலுள்ள வன்னியர் தமது பற்றுக்களிலுள்ள யானைகளைப் பிடித்து அரசருக்குத் திறையாகக் கொடுப்பது வழமை. அடங்காப்பற்று வன்னியர் யானைகளை யாழ்ப் பாணத்து அரசருக்குத் திறையாகக் கொடுத்தனர். அரசனும், பின்பு போர்த்துக்கேயரும் உலாந்தாக்காரரும் அவற்றை வெளிநாட்டு வியா பாரிகளுக்கு விற்பதன் மூலம் அதிகம் வருமானத்தைப் பெற்றனர்.

யானைகளை இந்தியாவிலே பல தேவைகளுக்குப் பயன்படுத் தினார்கள். அவற்றைப் பழக்கிப் போர்களிலே உபயோகப்படுத் தினார்கள். பாரங்களை இழுப்பதற்கும் சிலவிடங்களிலே அவை பயன்பட்டன. கோயில்களில் யானைகளை வைத்திருந்தார்கள். அரசரும் பிரதானிகளும் அவற்றை தங்கள் அரண்மனைகளுக்கும் மாளிகைகளுக்கும் அண்மையில் வைத்துப் பராமரிப்பதோடு அரசர் வைபவரீதியாக உலாப்போகுஞ் சமயங்களிலும் யானைகளைப் பயன் படுத்தினார்கள். திசையாயிரத்து ஐந்நூற்றுவர் முதலான வணிக கணத் தாரின் சாசனங்களிலே விற்பனை நிலையங்களிலுள்ள யானைப் பந்திகள் பற்றிய குறிப்புகளுண்டு. விஜயநகரத்து ராயர்கள், தில்லி சுல்தான்கள், வங்காளத்து நவாபுகள், பாஹ்மனி சுல்தான்கள் முதலிய அரசர்கள் யானைகளை வணிகரிடமிருந்து கொள்வனவு செய்தனர். சோழ மண்டலக்கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வரும் வணிகர் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றனர். அவர்கள் வரும் பொழுது நெல், அரிசி ஆகியவற்றைக் கப்பல்களில் ஏற்றிவருவது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைகளைப் பிடிப்பதற்கும், பழக்குவதற்கும், பராமரிப்பதற்கும் நெடுங்காலத்து வழமையான ஏற்பாடுகள் இருந்தன. மொத்தக்கர், பணிக்கர், தலையர் என்போர் அவற்றோடு சம்பந்தப்பட்டோராவர். அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கப்படும் யானைகளுக்கு வேண்டிய தீனைக் கொடுப்பது தனக்காரரின் கடமையாகும். வன்னியிலிருந்து குடாநாட்டுக்கு யானைகளைக் கடத்திச் செல்லும் நிலத்தொடர் ஆனை யிறவு என்ற பெயரால் வழங்கி வந்தமையுங் கவனித்தற்குரிய தாகும்.

பதினேழாம் நூற்றாண்டின் முடிவிலே உலாந்தாக்கார அதிகாரி களுக்கு அடங்காப்பற்று வன்னியர் திறையாகக் கொடுக்க வேண்டிய விபரங்கள் மேல்வருமாறுள்ளன:[71]

| *வன்னியனாரின் பெயர்* | *நிலப்பிரிவு* | *யானைகள்* |
|---|---|---|
| 1. தொம் பிலிப்பு நல்லமாப்பாணர் தொம் கஸ்பாறு இலங்கை நாராயணர் | அ. பனைங்காமம் பற்று<br>ஆ. பழைய விளாங்குளம்<br>இ. புதுக்குடியிருப்பு | 17<br>2<br>2 |
| 2. தொம் தியோகு புவிநல்ல மாப்பாணர் | அ. கரிக்கட்டு மூலை<br>ஆ. மேலபத்து | 7<br>5 |
| 3. தொம் அம்பலவாணர் | கருநாவல்பத்து | 4 |
| 4. தொம் சேதுகாவல மாப்பாணர் | தென்னமரவாடி | 2 |
| 5. தொம் பெருமையினார் | முள்ளியவளை | 3 1/2 |
| | மொத்தம் | 42 1/2 |

யானை வேட்டைத் தளங்கள், யானைப் பந்திகள் ஆகியவற்றை நன்னிலையில் வைத்திருப்பதில் உலாந்தாக்கார அதிகாரிகள் அதிக கவனஞ் செலுத்தினார்கள். அரசாங்கத்துக்கு ஒப்படைக்கப்படும் யானைகள் 12 நாட்களுக்கு யானைப் பந்தியிலே கட்டி வைக்கப்படும். அதற்குள் அவற்றுக்கு ஏதாவது நேர்ந்தால் அதற்கெல்லாம் ஒப்படைத் தவர்களே பொறுப்பாளிகளாகக் கருதப்பட்டனர். அதற்குப் பின்பு யானை உயிரோடிருந்து சௌக்கியமானதாகக் காணப்படுமிடத்து, அதனை அதிகாரிகள் கொம்பஞ்ஞீயவின் சார்பில் ஒப்புக் கொள்வர். யானையின் உயரத்தை அளந்து கொண்டு அதன் முதுகிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்பஞ்ஞீயவின் இலச்சினை இடப்படும். யானைகள் விற்கப்பட்ட பின் மீண்டுமொரு முறை அவற்றுக்கு இலச்சினை இடப்படும். கொன்செல்யவின் அங்கத்தவர்கள் அனைவரதும் முன்னிலையில் யானைகள் விற்கப்படும். 17 ஆம் நூற்றாண்டின் எட்டாவது தசாப் தத்திலே ஒராமி, உலௌரி, பிர்மால் திம்மரசர் என்னும் நாயக்கர்களே யானைகளைக் கொள்வனவு செய்த பிரதானமான வணிகராவர். அவர்கள் 100,000 பணம் பெறுமதியான யானைகளை 1669 இற் கொள்வனவு செய்தனர்.

**முத்துக்குளிப்பு**

முற்காலங்களிலே பாண்டி நாட்டுக் கரையோரத்திலும் மன்னார்க் கடலிலும் பெருமளவிலே முத்துச் சிப்பிகள் விளைந்தன. அழகு சாதனம் என்ற வகையில் முத்துக்களைப் பலரும் விரும்பினார்கள். செல்வம் படைத்த சமுதாயங்களிலுள்ள பெண்கள் முத்திழைத்த ஆபரணங்களில் அதிக பிரியங் கொண்டிருந்தார்கள். முத்துக்கள் அருமையாகக் கிடைத்தமையால் அவை பெறுமதி மிக்கனவாய் இருந்தன. பண்டைக்காலம் முதலாகச் சர்வதேச வாணிபத்தில் முத்துக்கள் ஒரு பிரதானமான இடத்தைப் பெற்றிருந்தன. புராதன இந்திய இலக்கியங்கள் பலவற்றிலே முத்துக்கள் அரும்பொருளாகவும் மங்கலப் பொருளாகவும் வர்ணிக்கப்படுகின்றன. முத்துச்சலாபத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு மன்னர்களிற் பலர் கவனஞ் செலுத்தினார்கள்.

மன்னார்க்கடலில் நடைபெற்ற முத்துக்குளிப்பின் மூலம் 14 ஆம் நூற்றண்டிலே ஆரியச்சக்கரவர்த்தி மிகுந்த வருமானத்தைப் பெற்றான். 13ஆம், 14 ஆம் நூற்றாண்டுகளில் முத்துக்கள் மிகப் பேரளவிலே உற்பத்தியாகியிருந்தன. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங் கைக்கு வந்த ஜோர்தனஸ் என்னும் வெனீசியப் பாதிரியார் 8,000 படகுகள் மன்னார் கடலிலே முத்துக்குளிப்பில் ஈடுபட்டிருந்த தாகக் குறிப்பிடுகின்றார்.[72] இவுன் பத்துத்தா இலங்கைக்குப் போன சமயத்தில் ஆரியச்சக்கரவர்த்தி முத்துச்சலாபத்திற்குச் சமீபமாகப் பாளையமிட்டி ருந்தான். அவன் முத்துக்குளிப்பை நடாத்துவதில் ஈடுபட்டிருந்தான். அங்கு கடலிற் கிடைத்த முத்துச் சிப்பிகளைச் சிலர் வெய்யிலிற் காயப்போட்டார்கள். வேறு சிலர் சிப்பிகளிலிருந்து பொறுக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்களை அவற்றின் தரத்திற்கேற்ப வகைப்படுத்திய வண்ணமா யிருந்தனர். ஆரியச்சக்கரவர்த்தி இவுன் பத்துத்தாவிடம் சில முத்துக் களைக் காட்டி அவற்றின் தாற்பரியங்களைப் பற்றி விசாரித்தான்.[73]

14 ஆம் நூற்றாண்டில் ஆரியச்சக்கரவர்த்திகள் முத்துக்குளிப்பை ஏகபோகமாக்கித் தாமாகவே நடாத்தி வந்தனர். முத்துக்குளிப்பு சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் நடைபெற்றது. அது நடை பெறும் நிலையங்களிற் படைகளை நிறுத்திக் காவல் புரிய வேண்டிய தேவை காணப்பட்டது. அரசனது அதிகாரிகளின் கண்காணிப்பிலே முத்துக்குளிப்பு நடைபெறுவதற்கு முன் பல சிறிய கட்டடங்களும் குடிசைகளும் அமைக்கப்படும். இம்மாதங்களில் முத்துக் குளிப்போர் பெருந்தொகையானோரும், அதனைக் கண்காணிப்போரும் வியாபாரி களும் அங்கு சென்று கூடுவர். எனவே குடிநீர் வசதிக்காக மாதோட்டத் திலுள்ள குளங்களைச் சுத்தம் பண்ணிப் பேணிக் கொள்ள வேண்டும். மேலும் அரிசி, வெண்ணெய், எண்ணெய் போன்ற உணவுப் பொருட் களை அங்கு தேவைக்கேற்ற அளவுகளிற் சேகரிக்க வேண்டும்.

முத்துக்குளிப்புப் பற்றி அனுபவம் பெற்ற பட்டங்கட்டிகளின் உதவியோடு அரசினரின் அதிகாரிகள் கடலோரங்களைப் பரிசீலனை செய்து, இன்ன இன்ன இடங்களில் முத்துக்குளிப்பை நடத்தலாம் என்று தீர்மானிப்பர். மீனவர்கள் பெருங்கப்பல்களிலே சென்று ஆழமான கடற்பகுதியிற் சேர்ந்ததும், சிறிய தோணிகளிலே கூட்டங் கூட்டமாக இறங்கிச் சென்று முத்துக்குளிப்பில் ஈடுபடுவர். தோணியைச் செலுத்துவதற்கும் இருவரும், முத்துக்குளிப்பதற்கு ஒருவரும், அவரைக் கட்டியுள்ள கயிற்றை இழுத்துப் பிடிப்பதற்கு இருவரும் என்ற படியாக ஒவ்வொரு தோணியிலும் ஐவைந்து பேராகச் செல்வது வழக்கம்.

முத்துக்குளிப்பவனை ஒரு கயிற்றிற்கட்டிக் கடலில் இறக்கு வார்கள். தோணியிலிருக்கும் இருவர் அவனைக் கட்டியுள்ள கயிற்றைப் பிடித்துக் கொள்வர். அவன் முத்துச்சிப்பிகளைத் தனது கூடையில் நிறைத்துக் கொண்டதும், அவர்கள் கயிற்றை இழுத்து, அவனைத் தோணியில் ஏற்றுவார்கள். இவ்வண்ணமாக முத்துக்குளிப்பு முடிந்ததும் முத்துச்சிப்பிகளை வெய்யலிற் காயப்போடுவார்கள். பின்பு முத்துக் களைச் சிப்பிகளின்றும் வேறாக்கி, அவற்றைச் சுத்தஞ் செய்து தரத்திற் கேற்ப வகைப்படுத்துவார்கள். தேறிய முத்துக்களில் அரைவாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்கென்று கொள்ளப்படும். மிகுதியைத் தோணிகளிற் செல்வோர் தம்மிடையே பகுந்து கொள்வர். அவர்கள் தமக்குக் கிடைத்தவற்றை வணிகருக்கு விற்பனை செய்துவிட்டுத் தமக்கு தேவையான உணவுப் பொருட்களையும் உடுபுடவைகளையும் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வர். முத்துக்குளிப்புக் காலத்திலே மாதோட்டத்திலே சனப் புழக்கமும் பண்டமாற்றுங் கணிசமான அளவில் ஏற்படுவதுண்டு. வணிகர் முத்துக்களைத் தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்கு எடுத்துச் சென்றனர். முத்துக்குளிப்புத் தொடர்பான சந்தைகளில் விற்பனையாகிய பொருள்கள் மீதான வரிகள் மூலமாகவும் அரசின ருக்குக் கணிசமான அளவில் வருமானங் கிடைத்தது.

**வாணிபம்**

யாழ்ப்பாண இராச்சியம் இலங்கையிலே கண்டி இராச்சியத்தோடும், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களோடும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது. கிழக்கிலங்கையிலிருந்து நெல், அரிசி ஆகியனவற்றை யாழ்ப்பாணத் துறைமுகங்களுக்குக் கடல் வழியாக வணிகர் ஏற்றிச் சென்றனர். "கண்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலே நாள்தோறும் வியாபாரிகளின் தாவளங்கள் போய்வந்த வண்ணமாயிருந்தன. மிளகு, பாக்கு, மஞ்சள், இஞ்சி, கராம்பு, அரிசி, நெல் போன்றவற்றை கண்டி இராச்சியப் பகுதிகளிலிருந்து வணிகர் தாவளங்களில் ஏற்றிச் சென்றனர். கண்டிக்கும் தென்னிந்தியப் பிரதேசங் களுக்கும் இடையிலான வர்த்தகமும், யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள துறைமுகங்கள் மூலமாகவும் நடைபெற்றது."

யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையிலே மிக நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. மலையாளம், சோழமண்டலக்கரை ஆகியவற்றோடு நடைபெற்ற வாணிபம் யாழ்ப் பாணத்துப் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இருந்தது. அரிசி, புடவைகள் முதலான பிரதானமான பொருள்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த பொருள்கள் அத்தியாவசியமானவை என்பதால் இலங்கை மன்னர்கள் விஜயநகரப் பேரரசருக்குத் திறை செலுத்தினார்கள் என்று வெளி நாட்டவர் சிலர் கருதினார்கள். நுண்ணிய வேலைப்பாடுகள் அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துணிகளும் பட்டுச் சேலைகளும் தென்னிந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பொன், வெள்ளி, வெண்கலம், செம்பு, இரும்பு முதலிய உலோகங்களையும் உலோகப் பொருட்களையும் அங்கிருந்தே பெரும்பாலும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

யாழ்ப்பாண பட்டினத்தின் வர்த்தகம் பற்றிச் சுவார்திகுறூன் மேல்வருமாறு கூறுவார்:

> அதிக முக்கியத்துவம் கொண்டிராத பொருள்களைச் சுதேசி வியாபாரிகள் விற்பனை செய்தனர். அவற்றுட் பல பொருள்கள் இங்கு மட்டுமே காணப்படுவதால், அவற்றை விற்பனை செய்வதன் மூலம் அவர்களுக்குக் கணிசமான இலாபங் கிடைத்தது. உதாரண மாகப் பனம் பண்டங்களைக் குறிப்பிடலாம். அரிசிக்குப் பதிலான உணவாகப் பனங்காய் பயன்படுகின்றது. பனங்காய், பனாட்டு, பனங்கட்டி, கிழங்கு, நார்வடம், பாய், கடகம், ஓலை, மரம் முதலிய பொருள்களைப் பனைகளின் மூலமாகப் பெறமுடிகின்றது. இவை போன்ற சில்லறையான பண்டங்களைச் சோழமண்டலத்திலும் தொண்டை நாட்டிலும் விற்பனை செய்ய முடியும். யாழ்ப்பாணப் பட்டினத்தவர்கள் இவற்றை அங்கு நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடிகின்றது. தேங்காய், தேங்காய் எண்ணெய், பொச்சுக் கயிறு, வேப்பெண்ணெய் முதலானவற்றையும் அவர்கள் அப் பகுதிகளிலும், திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் விற்பனை செய்ய முடிகின்றது. வருடா வருடம் இப்பொருள்களின் விலை ஏறுகின்றது. ஆகவே, முற்காலங்களைக் காட்டிலும் இப்போது அவர்கள் இரண்டு அல்லது மூன்று சதவீதம் கூடுதலான இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. இதனால் பருத்தித்துறையிலிருந்து ஊர்காவற்றுறை வரையான கடல்வழியிற் கப்பற் போக்குவரத்து இப்போ மும்மடங்காக அதிகரித்துள்ளது.

### சுங்கமும் விற்பனை வரிகளும்

மன்னார், மாதோட்டம், அரிப்பு, பருத்தித்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, கச்சாய், கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு ஆகிய துறைமுகங்கள் மூலமாகக் கரையோரமான கடல் வழிப் பிரயாணங்களும் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரமும் நடைபெற்றன. இவற்றுட் காங்கேசன்துறை, கொழும்புத்

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை, ஊர்காவற்றுறை ஆகிய மூன்றும் கூடுதலான முக்கியத்து வத்தைப் பெற்றிருந்தன. காங்கேயன் என்பது யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகளின் சிறப்புப் பெயர்களில் ஒன்றென்பதால் காங்கேசன் துறை என்னும் பெயர் ஆரியச்சக்கரவர்த்தியின் நினைவாக அமைக்கப் பட்டதென்று கருதலாம். ஆரியச்சக்கரவர்த்திகள் இத்துறைமுகத்தை வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளுக்கேற்ற துறைமுகமாக விருத்தி செய்தனர் போலும். நல்லூர் இராசதானியாகிய காலம் முதலாகக் கொழும்புத்துறை முக்கியத்துவம் பெற்றது. இராசதானிக்குச் சமீபத்தில் இருந்தமையாலும் யாழ்ப்பாணத்திற்கும் வன்னிநாட்டிற்கும் இடையே கடலேரி மூலமாகத் தொடர்பு கொள்ளுவதற்கு வேண்டிய வசதிகளைக் கொண்டிருந்தமையாலும் அது ஒரு பிரதானமான துறைமுகமாக அந்நாட்களில் விளங்கியது. குடாநாட்டிற்கும் பூநகரிக்குமிடையிலே பிரயாணிகளின் போக்குவரத்து அதிகமாக நடைபெற்றது. அதிகமான வர்த்தகப் படகுகளும் அங்கு சென்றன. கொழும்புத் துறையிலே சுங்க வரிகளைச் சேர்க்கும் உரிமை குத்தகையாகக் கொடுக்கப்பட்டது. குத்தகைக்காரரே துறைமுகத்தின் அதிகாரியாகவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குச் செல்வோரும், பூநகரியி லிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போவோரும், துறைமுகத்தில் வாழ்ந்த மீனவரும் துறைமுக அதிகாரிக்கு வழமையான கட்டணங்களை இறுக்க வேண்டும். புடவைகள் யாவும் சுங்க வரித்துறையிற் பரிசோதனை செய்யப்பட்ட பின்பே அவற்றை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அனுமதி கிடைக்கும். தனியார்களினாற் சுமந்து கொண்டு செல்லப்பட்ட ஒவ்வொரு பொதிக்கும் அரைமரக்கால் சுங்கவரியாகக் கொள்ளப் பட்டது. பிற துறைமுகங்களிலும் இதுவே வழமை போலும்.

பச்சிலைப்பள்ளிக் கடவைகளிற் சுங்கவரிகளைச் சேர்க்குந் தலங்கள் இருந்தன. அங்கு அதிகாரிகள் பரிசோதனை செய்த பின்பே கடவை கள் வழியாகப் பொருள்களைக் கொண்டு செல்லமுடியும். ஒரு கச்சை புடவைக்கும், 25 அங்கவஸ்திரங்களுக்கும் அரைப்பணம் வரியாகக் கொள்ளப்பட்டது.

கண்டிப்பிரதேங்களிலிருந்து வன்னி வழியாகத் தாவளங்களிலே வியாபாரிகள் குறிப்பிடத்தக்க அளவிற் பொருள்கள் ஏற்றிச் சென்றனர். அதனாற் கடவைகள் மூலமாக அரசினருக்குக் கணிசமான வருவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. அபின், மஞ்சள், கராம்பு, மிளகு முதலிய பொருள்களுக்கு 8 சதவீதம் வரியாகக் கொள்ளப்பட்டது. வன்னியூடாகக் கொண்டு போன பொருள்களில் ஒரு பொதி எருதின் பருத்திச்சுமைக்கு அரைப் பணமும், 6 எருதுகளின் சுமைப்பொதி வரகுக்கு ஒரு பணமும் வரி யாகக் கொள்ளப்பட்டன. பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள் ஆகிய வற்றிலுள்ள குடியானவர்கள் பூநகரி, வன்னி ஆகிய பகுதிகளுக்குப் போய் அங்குள்ள நிலங்களைச் செய்கை பண்ணுவது வழக்கம். அறுவடை முடித்துத் தானியங்களை எடுத்துச் செல்லும் போது அவரவர் இயல்புக்கேற்ப 10 முதல் 12 வரையான லாகம் தானியத்தைக் கடவு களிலே இறைகடமையாகக் கொடுத்தனர்.

தமிழரசர் கால வழமைப்படி நாட்டிலே விற்பனையாகிய துணிகள் எல்லாம் அரசமுத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இலச்சினை பதிக்கப்படாத துணிகளைத் துறைமுகங்கள் மூலமாகவுங் கடவைகள் வழியாகவுங் கொண்டு செல்வதற்கு அனுமதி கிடைப்ப தில்லை. சீலைக்கு முத்திரையிடுவதற்கென வசூலிக்கப்பட்ட கூலி இலாஞ்சினைப்பேறு என்று தமிழகச் சாசனங்களிற் கூறப்படும். எட்டுச் சேலை, நான்கு கச்சி புடவை, இருபத்தைந்து சால்வை ஆகியவற்றுள் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பணம் இலாஞ்சினைப் பேறாகக் கொள்ளப்பட்டது.

நெசவாளரின் வீடுகளிலும் பிறரது வீடுகளிலும் புடவைகளை விற்க முடியாது. அனுமதி பெற்றுக் கொண்ட குறிக்கப்பட்ட பொது விடங்களில் மட்டுமே புடவைகள் விற்பனை செய்ய முடியும். உணவு தானியங்களும் வேறு சரக்குகளும் இறக்குமதியாகுமிடத்தும் விற்பனையாகுமிடத்தும் அரசனின் பாகமாகக் கொள்ளப்பட்ட வரியே தரகு என்பதாகும். தமிழரசற் காலத்திற் பொருட்களை ஏற்றி வருகின்ற நாவாய்கள் துறைமுகத்தை அடையும் போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணம் தரகு இறுப்பது வழக்கம். தேசத்தின் பல்வேறு இடங்களிலுள்ள அங்காடிகளிலும் பட்டனத்திலும் தானியங்கள் விற்பனையாகுமிடத்து அவற்றைக் கொள்வோர் ஒவ்வொரு பணம் பெறுமதியான பொருள் களுக்கும் ஒவ்வொரு பிடி என்ற வகையாகத் தரகு கொடுத்தல் வேண்டும். நாட்டில் உற்பத்தியான பொருள்களையும் இறக்குமதியான பொருள்களையும் விற்பனை செய்வோர் ஒரு பொதுவிடத்திலே அரசினரின் சேவகர் முன்னிலையாக விற்பனை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடிக்குறிப்புகளும் விளக்கவுரைகளும்**

1. *The Temporal and Spiritual Conquest of Ceylon*, Fernao de Queyroz, trans, Father S.G.Perera, Colombo. 1930, p.51.
2. *Rycklof Van Goens, Further instructions for the Commandeur Anthony Pavilioen Commandeur and Council of Jafanpatna, 1658, Memoirs and Instructions from the Governor General and Council of India,* trans, Sphia Pieters, 1908, pp.84-86.
3. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே போர்த்துக்கேயர் படிப்படியாகத் தங்கள் மேலாதிக்கத்தை யாழ்ப்பாணத்தின் மீது ஏற்படுத்திக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டிலே இரண்டாம் சங்கிலிக் கெதிராகப் படையெடுத்துச் சென்று அவனை கைப்பற்றிவிட்டு நாட்டையுங் கைப்பற்றிக் கொண்டனர். பிலிப் தே ஒலிவேரா (Philip de OliveyrA) என்ற தளகர்த்தனே அப்படை யெடுப்புக்குத் தலைமை தாங்கினான்.
4. சூளவம்சம், 83:15-41.
5. *Tri Sinhala Kadaim saha vitti*, ed. A.W. Marambe, Kandy, 1929, p.31; S.Paranavitana, "The Arya Kingdom in North Ceylon", *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society (JCBRAS)*, New Series, 7(2), pp.194-5.
6. C.Rasanayakam, *Ancient Jaffna*, Madras, 1926, p. 338; *Centamil IV*, p.515.
7. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pt.1. Colombo, 1978, p.150.
8. மேலது. ப. 151. *Inscriptions of the Pudukottai State*, Pudukottai, No.366.
9. S.Pathamanathan, *The Kingdom of Jaffna*, pt.1, pp.151-158.
10. *சூளவம்சம்*, 90 : 32
11. *மேலது*, 90 : 43 - 47.
12. S.Pathamanathan, *The Kingdom of Jaffna*, pt.1, p. 160.
13. *மேலது* ப.175.
14. *செகராசசேகரமாலை, சிறப்புப்பாயிரம்.*
15. மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய *யாழ்ப்பாண வைபவமாலை*, பதிப்பாசிரியர்: முதலியார் குல சபாநாதன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995, ப.34 - 44.
16. *மேலது.*
17. *கைலாயமாலை*, பதிப்பாசிரியர் : சா.வே.ஜம்புலிங்கம்பிள்ளை, சென்னை. 1939, ப. 4 - 21.
18. *யாழ்ப்பாண வைபவமாலை*, ப. 28 - 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மேலது.
20. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pt. 1, pp.211 - 214.
21. S.Paranavitana, "A Sanskrit Inscription from Padaviya" , *JCBRAS* (New Series), 8(2), pp. 201- 204.
22. S.Pathmanathan, "The Velaikkara Inscription at Padaviya", *Gnanapragsar Centenary Commemoration Volume*, Colombo, 1975, p.29.
23. *Annual Report on Epigraphy*, No.2, Madras, 1928, p.29.
24. S.Pathmanathan, "The Nagaram of the Nanadesis in Sri Lanka. Circa AD 1000 - 1300", *The Sri Lanka Journal of the Humanaities*, Vol. 9, Nos. 1&2, 1984 (Published in 1987), p.1.
25. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pt. 1, p.205.
26. மேலது.
27. *Foreign Notices of South India from Megasthenes to Mahuan*, Collected and edited by K.A.Nilakanta Sastri, University of Madras, 1939, p. 179.
28. மலையாளத்தைப் பற்றி வர்ணிக்குமிடத்து அங்கு பெருமளவிலே மிளகு, இஞ்சி, கறுவா ஆகியன காணப்பட்டதாக மார்க்கோபோலோ குறிப்பிடுகின்றார். "There is in thid Kingdom a great quantity of pepper, ginger and cinnamon......" இலங்கைத் தீவிலிருந்து பெருமளவிலே கறுவா மலையாளத்துக்கு ஏற்றிச் செல்லப்பட்டதென்று மொன்ரிகோர்வினோ வாசியான ஜோன் கூறுகின்றார். "The Cinnamon tree is of a medium bulk, not very high, and in trunk, bark and foliage is like the laurel: indeed, altogether it resembleth the laurel greatly in appearance. Great store of it is carried forth of the island which is hard by Mabar" *மேலது*, ப. 184, 188.
29. *மேலது*, ப. 269- 270.
30. மேலது.
31 மேலது.
32. *Rajavaliya*, ed.B.Gunasekera, Colombo, 1911, p. 46; *Rajavaliya*, ed. Watuwatte Pemananda Bhikkhu Colombo, 1959, pp. 73 - 75; *Alakesvara Yuddhaya*, ed.A.V.Suravira, Colombo, 1965, p.19.
33. *யாழ்ப்பாண வைபவமாலை*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். 1995இ ப.43-44.
34. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pt. 1, pp.282-3.
35. *யாழ்ப்பாண வைபவமாலை*, 1995, ப.47.
36. C.R.de.Silva, *The Portuguese in Ceylon*, Lake House Investments Ltd, 1969.
37. மேலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. S.Pathmanathan, *The Kingdom of Jaffna*, pp. 179 - 180.

39. *யாழ்ப்பாண வைபவமாலை*, பதிப்பாசிரியர் : குல.சபாநாதன், கொழும்பு 1953. பக் 35 - 46.

40. *கைலாயமாலை*, பதிப்பாசிரியர் : செ.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை, சென்னை, 1939, ப. 6 - 8.

41. *மேலது.*

42. சி.பத்மநாதன். 'ஆட்சிமுறை' (ப 107 - 132), *யாழ்ப்பாண இராச்சியம்*, பதிப்பாசிரியர் : சி.க.சிற்றம்பலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி, 1992, பக.109.

43. Tikiri Abeyasinghe, *Jaffna Under The Portuguese*, Lake House Investments Ltd. Colombo. pp. 20 - 21.

44. *மேலது.*

45. Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylong (1656 - 1665), translated by Sophia Pieters, Colombo, 1908, p.106.

46. *மேலது*, ப. 79 -81.

47. Memoir for the Instruction of the Honourable the political Council of Jaffnapatam, complied and left by Commandeur Hendrick Zwaardecroon on his departure from that kingdom as Commissioner for the coast of Mallabar, Canara and Wingurla, trans, Sophia Pieters, Government Printer, Colombo, 1910, pp. 21 - 22.

48. Tikiri Abeyasinghe, *Jaffna Under The Portuguese*, p.29.

49. Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon (1656-1665), translated by Sophia Pieters, pp. 87 - 88.

50. *மேலது.*

51. *மேலது.*

52. Memoir for the Instruction of the Political council of Jaffnapatam, complied and left by Commandeur Hendrick Zwaardecroon, trans, Sophia Pieters, Government Printer, Colombo, 1910, pp. 24 - 25.

53. Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon (1656-1665), Translated by Sophia Pieters, pp. 123-4.

54. Memoir by Zwaardecroon, p. 25.

55. எழுபத்திரண்டு கட்டளை முதலானவைகள் (பக். 41-73). The Thesawaleme or the Laws and Customs of Jaffna together with the decisions of the various

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

courts by Henry Francis Mutukisna, Ceylon Times, Colombo, 1862, pp. 56 -57 (of the Tamil portion)

56. The Temporal and Spiritual Conquest of Ceylon, pt.I.trans, Fr.S.G.Perera, p.54.

57. S.Gnnapragasar, "Nallamappana Vanniyan and the grant of a Mudaliyarshio", *JCBRAS*, Vol.33 No. 89, 1936, p.127.

58. Memoir for the Honourable Laurens pyl, Chief Commandeur and Provisional Governer of Ceylon, Madura, Negapatam by Ryklof van Goens, trans. Sophia Pieters. Government Printer. Colombo.

59. Memoir for the Instruction of the Political council of Jaffnapatam, complied and left by Commandeur Hendrick Zwaardecroon, trans, Sophia Pieters, Government Printer, Colombo, 1910, pp. 88.

60. Tikiri Abeyasinghe, Jaffna Under The Portuguese, Lake House Investments Ltd. Colombo. 1986 pp. 28 - 29.

61.

62. Instructions from the Governor General and Council of India, p. 86.

63. Memoir for the Instruction of the Political council of Jaffnapatam, complied and left by Commandeur Hendrick Zwaardecroon, trans, p. 22.

64. The Thesawaleme or the Laws and Customs of Jaffna by Henry Francis Mutukisna. 1862. p. 59.

65. Instructions from the Governor General and Council of India, Rycklof van Goens, trans, Sophia Pieters, pp. 115-6.

66. Tikiri Abeyasinghe, Jaffna Under The Portuguese, p.37.

67. Memoir for the Honourable Laurens pyl, Chief Commandeur and Provisional Governer of Ceylon, by Ryklof van Goens, 1679, trans. Sophia Pieters. Government Printer. Colombo, p.27.

68. ஒரு வஹார் 600 இறாத்தல் நிறை கொண்டது.

69. Instructions from the Governor General and Council of India, p. 100.

70. Memoir of Hendrick Zwaardecroon, p. 40.

71. ஒரு குறிக்கப்பட்ட உயரத்திலும் குறைந்த அளவுடைய யானை ஒன்றினைப் பெறுமதி குறித்து அரையென்று கணக்குப் புத்தகங்களில் எழுதினார்கள்.

Short Notes by Geritt de Heere, Governor of the Island of Ceylon, on the chief points raised in these Instructions of Commandar Hendrick Zwaardeccroon, Memoir of Hendrick Zwaardecroon, trans, p. 96.

72. "Between that island and the mainland are taken pearls or marguerites, in such quantity as to be quite wonderful. So indeed that there are sometimes more

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

than 8,000 boats or vessels, for three months continuously (engaged in this fishery). It is astounding and almost incredible, to those who have not seen it, how many are taken", Foreign Notices of South India collected and Editied by K.A.Nilakanta Sastri, University of Madras, 1929. p. 307.

73. "The Sultan of Silan is called Airy shakrauty; and he is powerful on the sea. Once, when I was on the Mabar coast, I saw a hundred vessels of his, great and small, which came there. Then he arranged for my loading and I spend three days with him, treated with great consideration which increased every day. He understood Persian and enjoyed greatly what I related to him regarding foreign kings and their lands. One day I went near him and he had near him a quantity of pearls, brought from the fisheries in his country. His officers separated the valuable ones from the rest. He asked me; Have you seen pearl fisheries in the countries you have travelled in ? "Yes" I replied. "I have seen them in the islanda of Qais and Kish that belong to Ibn Sawwamaly". "I have heard o them," he said and then gave me many pearls and added: "Are there pearls equal to these in that island?". I replied; " I have seen only inferior pearls there," My answer pleased him, and he said: "These pearls are yours." *ibid*, p. 270.

74. இந்த விபரங்கள் வாங் - தா - யுவான் என்னும் சீன மாலுமி எழுதிய குறிப்பிலுள்ளவை. *ibid*, pp. 291-2

75. *Instructions from the Governor General and Council of India*, trans, p.79.

76. *Memoir of Zwaardecroon*, trna., p. 31.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# இலங்கையில் சைவ சமயம்: ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் (1250-1620)

**சைவசமயமும் பண்பாட்டு வளர்ச்சிகளும்**

வடஇலங்கையிலே பதின்மூன்றாம் நூற்றாண்டில் உருவாகியிருந்த தமிழ் இராச்சியத்திற் பாண்டியரின் மேலாதிக்கம் 1255ஆம் ஆண்டளவில் ஏற்பட்டது. காலப்போக்கிற் பாண்டி நாட்டுப் பிரதானிகள் யாழ்ப்பாணத்திலே தங்கள் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொண்டார்கள். ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையில் 1283ஆம் ஆண்டளவில் இலங்கை மீது ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்பின் விளைவாக ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. ஆரம்பத்தில் வடஇலங்கையிலே பாண்டியரின் பிரதிநிதிகளாக நிர்வாகப் பொறுப்புக்களை மேற்கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் தென்னிந்தியாவிற் பாண்டியப் பேரரசு நிலை குலைந்ததும் அரசர்களாக முடிசூடி யாழ்ப்பாணத்திலிருந்து சுதந்திரமாக ஆட்சி புரிந்தார்கள்.[1]

யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கம் பதினான்காம் நூற்றாண்டிலே உன்னதநிலையிற் காணப்பட்டது. மன்னார்க்கடல் முத்துக்குளிப்பு, பாக்கு நீரிணை மூலமான வாணிபம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி அதன் மூலமாக அவர்கள் அதிக பொருள் வருமானத்தைப் பெற்றார்கள். அதன் விளைவாகப் பலம் பொருந்திய படைகளை அவர்களால் வைத்திருக்க முடிந்தது. வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன் ஆகிய மன்னர்களின் காலத்தில் தென்னிலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாதிக்கம் ஏற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. கறுவா முதலான வாசனைச் சரக்குகளின் வாணிபத்தின் மூலமாக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே தென்னிலங்கைமீது ஆரியச்சக்கரவர்த்திகள் படையெடுப்புக்களை நடாத்தினார்களென்று கருதமுடிகின்றது.[2]

பதினான்காம் நூற்றாண்டின் முடிவிலே தமிழகத்தில் விசயநகர ஆட்சி ஏற்பட்டதன் விளைவாக விசயநகரப் பேரரசின் செல்வாக்கு யாழ்ப்பாண இராச்சியத்தில் வலுப்பெற்றது. விசயநகரப் பேரரசர் சிலர் யாழ்ப்பாண அரசர்களிடமிருந்து திறை பெற்றுக்கொள்வதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். பதினாறாம் பதினேழாம் நூற்றாண்டுகளிலே யாழ்ப்பாணம், தஞ்சாவுவூர் நாயக்கரின் மேலாட்சியின் கீழிருந்தது. விசயநகர - நாயக்கர் காலங்களிலே தமிழகத்திற்கும் யாழ்ப்பாண இராச்சியம், ஈழத்து வன்னிமைகள் ஆகியவற்றுக்குமிடையில் அரசியல், சமயம், வாணிபம் போன்ற துறைகளில் நெருங்கிய தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.[3]

ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற குலப் பெயரையுடைய அரசர்கள் யாழ்ப்பாணப் பட்டினம் எனவும் யாழ்ப்பாண தேசம் எனவும் வழங்கிய தமிழ் இராச்சியத்தை ஏறக்குறைய 350 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்தனர். யாழ்ப்பாணக் குடாநாடும் அதனைச் சார்ந்துள்ள தீவுப்பற்றும் மாதோட்டப் பகுதியும் பூநகரி, பல்லவராயன் கட்டு, இலுப்பைக் கடவை போன்ற விடங்களும் ஆரியச்சக்கரவர்த்திகளின் நேரடியான ஆட்சியின் கீழமைந்திருந்தன. அத்துடன் வன்னிபம் என்ற தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழமைந்த வன்னிமைகள் பலவற்றின் மேலும் ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது சுருங்கிய நிலையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைகள் இன்றைய வடமாகாணத்திலுள்ள மாவட்டங்களை அடக்கியனவாயிருந்தன.[4] அங்கு வாழ்ந்த மக்களுள் மிகப் பெரும்பான்மையோர் சைவராயிருந்தனர்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைகளுக்கு வெளியே தொடர்ச்சியான பரந்த பிரதேசங்களிலே பல தமிழ் வன்னிமைகள் அமைந்திருந்தன. திருக்கோணமலை, கொட்டியாரம், கட்டுக்குளம்பற்று, மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, கோறளைப்பற்று, நாடுகாடு முதலிய கிழக்கிலங்கை வன்னிமைகள் அவற்றுட் குறிப்பிடத்தக்கவை.[5] யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்றிருந்த காலத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வன்னிமைகள் யாவுஞ் சிறப்புற்றிருந்தன. கிழக்கிலங்கை வன்னிமைகளுக்கும் யாழ்ப்பாண இராச்சியத்திற்குமிடையிற் கடல் வழியாகவுந் தரை வழியாகவும் நெருங்கிய வாணிப கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. இவ்வமைப்புக்கள் அரசியலின் காரணமாகத் தனித்தும் வேறுபட்டுங் காணப்பட்டபோதும் தமிழ்மொழி வழக்காலும் அதன் இலக்கிய பாரம்பரியத்தினாலும் சைவ சமய மரபுகளின் பயனாகவும் கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான சமய-கலாசார பாரம்பரியத்தையும் ஒருமைப்பாட்டையும் பெற்றிருந்தன. அவற்றிலே வாழ்ந்த சைவர்கள் பின்பற்றிய சமயநெறி தேவார முதலிகளான நாயன்மார் காட்டிய பக்திநெறி. அது மெய்கண்ட தேவர் முதலானோர் வகுத்தருளிய சைவசித்தாந்த சமயநெறி. அது தமிழகத்திலே சோழப் பேரரசிலும் பாண்டிய மன்னரின் ஆட்சியிலும் உருவாகிய ஆலய அமைப்பு முறைகளையும் வழிபாட்டு நெறிகளையும் அடிப்படையாகக் கொண்ட பாரம்பரியம்.

### ஆரியச்சக்கரவர்த்திகளின் சமயாபிமானம் : குலவிருதுகளுஞ் சின்னங்களும்

யாழ்ப்பாண அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகள் சைவ சமயம் மேன்மை பெறுவதற்குப் பல பணிகளைப் புரிந்தனர். அவர்கள் குலத்தால் அந்தணர். அவர்களின் முன்னோர்கள் காத்தியாயன சூத்திரத்துக் காசிப கோத்திரத்துப் 'பஞ்ச கிராம வேதியர்'.[6] அவர்களுள் 'ஐந்நூற்றுப் பன்னிருவர்' இராமேஸ்வரம் கோயிலிலே தேவகன்மிகளாயிருந்தனர்.[7] அவர்களைப் பாசுபத மறையவர்களென்று செகராசசேகரமாலை குறிப்பிடுகின்றது.[8] அத்தகையோரிற் சிலர் அரச சேவையிற் சேர்ந்து உயர் பதவிகளைப் பெற்றதன் பயனாக ஆரியச் சக்கரவர்த்தியென்ற பட்டத்தைப் பெற்றனர்.[9] அவர்களிலொருவன் பாண்டியரின் அரண்மனையிலே செப்பேட்டுத் திணைக்களத்து மந்திரியாக விருந்தான்.[10] ஆரியச்சக்கரவர்த்திகளுட் சிலர் பாண்டியரின் சேனாதிபதிகளாயிருந்தனர். அவர்களுள் ஒருவன் 'தனிநின்றுவென்ற பெருமாள்' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருந்தான். நல்லூரில் வாழ்ந்திருந்த அச்சேனாதிபதிகளின் பிற்சந்ததியினரே யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள். அவர்கள் வடமொழிக் கல்வி விருத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த ஈடுபாடு கொண்ட வைதிக சைவர்களாயிருந்தனர். அரச சேர்க்கையினாலும் பின் அரசபதவியினைப் பெற்றதன் விளைவாகவும் பூர்வாசாரங்களின் தன்மையாலும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற் பாண்டியராட்சியில் உன்னத வளர்ச்சிபெற்ற சைவ சமயத்தின் பேராதர வாளராகவும் அபிமானிகளாகவும் பாதுகாவலர்களாகவும் ஆரியச் சக்கரவர்த்திகள் விளங்கினார்கள்.

ஆரியச்சக்கரவர்த்திகளின் விருதுப்பெயர்களும் அரச சின்னங் களும் சமயச் சார்புடையனவாயிருந்தன. சேதுகாவலன், தேவையர் கோன், கங்கையாரியன், கங்கைநாடன் என்ற விருதுப் பெயர்க ளெல்லாம் அவர்களின் சமயாபிமானத்தை விளக்குவனவாயுள்ளன.[11] செகராசசேகரனொருவனைக் குறித்து ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணத்துச் சிறப்புப் பாயிரம் மேல்வருமாறு சிறப்பித்துக் கூறுகின்றது:

*அந்நாட் டரசன் ஆரியர் கோமான்*
*பொன்னாட் டைந்தரு பொருவரு கருதலன்*
..........................................................
*தென்னிலங் காபுரித் திசைதொறு மருவிய*
*படவரா முடித்தலைப் பார்முழு தாண்ட*
*இடப வான்கொடி எழுதிய பெருமான்*
*சிங்கை யாதிபன் சேது காவலன்*
*கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்*
*பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய*
*தெய்வ மாமுடிச் செகராச சேகரன்*[12]

ஆரியச்சக்கரவர்த்திகளின் குலவிருதுப் பெயர்களிற் சேதுகாவலன் என்பது பிரதானமானது. இராமேஸ்வரம், குமரிமுனைக்கும் இலங் கைக்குமிடையிலான தொடுகடலிலுள்ள 'இராமர் கல்லணை', செவ் விருக்கை நாட்டுக் கடற்கரையான சேதுமூலம், பரிசுத்த நீராடுதுறை யாகிய சேதுஸ்நானம் முதலிய யாவும் சேது என்று குறிப்பிடப்பட்டன. தேவை எனப்படுவதான இராமேஸ்வரத்தைச் சேதுநகர் எனச் சேது புராணம் வர்ணிக்கின்றது. சேதுநகர் காவலன், சேதுமூல ரக்ஷதுரந்தன் என்ற சேதுபதிகளின் விருதுப் பெயர்களுட் சேதுகாவலன் என்பது சேதுதலமாகிய இராமேஸ்வரத்தையும் சேது சமுத்திரத்தினையும் காவல் புரிகின்ற சிறப்பினையுடைய மன்னன் என்பதை உணர்த்துவ தாயுள்ளது.[13] சேது என வழங்கிய தலங்கள் பெரும்பான்மையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டி நாட்டு ஆரியச்சக்கரவர்த்திகளின் பதியாகிய செவ்விருக்கை நாட்டிற்கண்மையிற் காணப்பட்டன. ஆரியச்சக்கரவர்த்தி ஒருவனைக் குறிப்பிடுகின்றதும் மாறவர்மன் குலசேகரனின் ஆட்சிக்குரியதுமான திருப்புள்ளாணி கல்வெட்டிலே சேது திருமுகம் என்ற சொற்றொடர் வருகின்றது.[14] சேது என வழங்கிய திருத்தலங்களைக் காவல் புரிந்தமை யாலும் சேது சமுத்திரத்திலே ஆதிக்கஞ் செலுத்தியமையாலும் செவ் விருக்கை நாட்டிலிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் சேதுகாவலன் என்ற விருதினைப் பெற்றிருந்தனர் எனக் கருதலாம். மேலும் ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம் ஆரியச்சக்கரவர்த்தி ஒருவனை 'உம்பர் வந்திறைஞ் சுஞ்சேது உயர்கரைக் காவல்வேந்தன்' என வர்ணிக்கின்றமையும் இக் கருத்தினை வலியுறுத்துகின்றது.[15]

சேது மந்திரம் என்பதைப் பற்றிய சில குறிப்புக்கள் வைதிக மர பிலுள்ளன. மந்திரங்களிலே மேலானது சேது (மந்த்ராணாம் சேது) என்று சொல்லப்படுகின்றது.[16] யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் சேதுவைத் தங்களுக்குச் சிறப்பாகவுள்ள மங்கல மொழியாகப் பயன் படுத்தினர்கள். சிங்கையாரியனின் கோட்டகமக் கல்வெட்டு 'மங்கலம் பொலிக' எனப் பொருள்படும் ஸ்வஸ்தி ஸ்ரீ என்ற சமஸ்கிருதத் தொடருக்குப் பதிலாகச் சேது என்னும் மொழியினை மங்கல வாக்கிய மாகக் கொண்டுள்ளது. ஆரியச்சக்கரவர்த்திகள் வழங்கிய காசுகளெல் லாம் புறநடையின்றிச் சேது என்னும் மொழி பொறிக்கப்பட்டன வாகவே காணப்படுகின்றன.[17] அவற்றிலே அரசர்களின் இயற்பெயர் களோ குலப்பெயரோ பொறிக்கப்படவில்லை. ஆரியச்சக்கரவர்த்திகள் சேது என்பதை ஒரு மங்கலம் நிறைந்த பரிசுத்தமான செம்பொருளாகக் கருதினார்கள் என்றே கொள்ளமுடிகின்றது. சேது என்பது இந்திய இலக்கிய மரபிலும் இந்து சமய மரபிலும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த புனித தலமாகும். ஆரியச்சக்கரவர்த்திகள் சேதுவைத் தமது ஆவணங் களிலும் அரச முத்திரைகளிலும் மங்கல மொழியாகப் பயன்படுத்தி யமை அவர்கள் தங்கள் பழம்பதியாகிய புண்ணிய தலங்கள் நிரம்பிய இராமேஸ்வரத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டிற்குஞ் சமயாபி மானத்திற்குஞ் சான்றாகும்.

ஆரியச்சக்கரவர்த்திகள் சிவசின்னமாகிய நந்தியின் வடிவினைத் தமது அரச சின்னமாகவும் அரச முத்திரைகளுள் ஒன்றாகவும் பயன் படுத்தியமையும் அவர்களின் சைவ சமயாபிமானத்திற்குச் சிறந்தவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகும். அவர்களின் கொடியிலே நந்தியின் உருவம் வரையப் பெற்றிருந்தது. அம்மன்னருள் ஒருவனை 'இடபவான்கொடி எழுதிய பெருமான்'[18] என ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம் வர்ணிக்கின்றது. வேறொருவனை 'விடைக்கொடியுஞ் சேதுவும் நீள்கண்டிகளொன்பதும் பொறித்து மிகைத்த கோ' எனச் செகராசசேகரமாலை புகழ்ந்துரைக் கின்றது.[19] பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரசகேசரியாற் பாடப் பெற்ற இரகுவம்சம் என்னுங் காப்பியம் சிங்கையாரியன் விடைக் கொடியோன் என்பதை 'மன்று கண்டருளுங் கங்கையாரியன் விடையின வானி' என்ற தொடராலே உணர்த்துகின்றது.[20] முதலாஞ் சிங்கையாரியனை 'அண்டர் நிமிர்ந்தாடும் பரிசுடைத் தாய்க் கொண்ட விடை காட்டுங் கொடியினான்' எனக் கைலாயமாலை குறிப்பிடு கின்றது.[21] ஆரியச்சக்கரவர்த்திகளின் நாணயங்கள் பலவற்றிலே அழகிய கலைவனப்பு மிக்க நந்தியின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் மேற்புறமாகப் பிறையின் வடிவங் காணப்படும்.

### கல்வி மரபுகளும் இலக்கிய வளர்ச்சியும்

சமஸ்கிருத மொழிப் பயிற்சியுந் தமிழ்மொழி வளர்ச்சியில் ஈடுபாடுங் கொண்டிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் கல்விவளர்ச்சிக்குங் கவி வாணருக்கும் ஆதரவுகள் புரிந்தனர். அவர்களுள் ஒருவனை 'கற்றவர் திலகன்'[22] என ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம் புகழ்ந்துள்ளது. யாழ்ப் பாண மன்னர்கள் புலவர்களைக் கூட்டித் தமிழ்ச் சங்கமொன்றினை அமைத்திருந்தனர் என்பது மரபுவழிக் கதையாகும். முதலாம் சிங்கை யாரியனைச் 'சங்கச் சமூகத் தமிழாளன்' எனக் கைலாயமாலை குறிப் பிடுகின்றமை கவனித்தற்குரியதாகும்.[23] அவர்களின் அரண்மனை யிலே வேதத் திருமறைகள், சைவத் திருமுறைகள், ஆகமங்கள், புராணங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், மருத்துவ நூல்கள், சோதிட நூல்கள் ஆகியவற்றின் ஏட்டுப் பிரதிகள் சேர்க்கப்பட்டு இருமொழிப் பயிற்சி பெற்ற அறிஞர்களாலே ஆராயப்பட்டன என்று கொள்ள முடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள் கல்வி வளர்ச்சிக்கும் கவிவாணருக்கும் ஆதரவளித்தனர் என்பதைச் சமகால நூல்கள், தனிப்பாடல்கள் என் பவற்றின் மூலமாக அறிய முடிகின்றது. அவர்களுள் ஒருவன் யானை யையும் மூவாயிரத்தெழுநூறு காசுகளையும் பாவலருக்குப் பரிசிலாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தானென்று செகராசசேகரமாலை குறிப்பிடுகின்றது.[24] செந்தமிழ் வளம் பெறுவதற்காக அரசன், பொன், காளாஞ்சி, கெண்டிகை, பொற் கலம் முதலானவற்றைத் தகைமையுள்ளோருக்குக் கொடுப்பது வழக்கம் என்பதை மேல்வருஞ் செகராச சேகரமாலைச் செய்யுள் தெளிவு படுத்துகின்றது:

*மன்னர் மன்னுசெக ராசசேகரன் மணவை யாரியவ ரோதயன்*
*பன்னு செந்தமிழ் வளம் பெறற்குதவு பரிசிலங்கவர் சித்தியாம்,*
*பொன்னின் மிஞ்சிய காளாஞ்சி கெண்டிகை பொலங் கலன் பிறவு மாம்பரிச்*
*சின்ன முள்ளதொகை யாவுமிவ்விதி சிறந்த றிந்துரை சேயிழயாய்*[25]

ஆரியச்சக்கரவர்த்திகள் கற்றவர்களையுங் கவிவாணர்களையும் போற்றியதால் அவர்களின் புகழ் தமிழகத்திலும் பரவியது. அங்கு பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளிலே சோழர், பாண்டியர் முதலான தமிழ் மன்னர் குலங்கள் அழிவுற்று விஜயநகர ராயர்களின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. அந்நிலையிலே தமிழகத்துப் புலவர்களுட் சிலர் யாழ்ப்பாணத் தமிழரசரின் உதவியை நாடிப் பரிசில் பெற்றார்கள். தமிழ்ப் புலவரொருவர் பரராசசிங்கமென்னும் அரசனிடமிருந்து பொற்பந்தமொன்றினைப் பிரிசிலாகப் பெற்றமையை மேல்வருமாறு பாடியுள்ளார்:

*பொங்குமிடி யின்பந்தம் போயதே யென்கவிதைக்*
*கெங்கும் விருதுபந்த மேற்றதே - குங்குமந்தோய்*
*வெற்பந்தமானபுய வீரபர ராசசிங்கம்*
*பொற்பந்த மின்றளித்த போது*[26]

ஆரியச்சக்கரவர்த்திகளின் தூண்டுதலினாலும் ஆதரவுடனும் சோதிடம், மருத்துவம் ஆகிய துறைகளிலே சில நூல்கள் தமிழில் எழுதப்பட்டன. சமஸ்கிருத நூல்களைக் கற்று அவற்றின் சாராம்சங்களைத் தெளிந்து செகராசசேகரமாலை என்னுஞ் சோதிடநூலும் செகராசசேகரம் என்னும் வைத்தியநூலும் பதினான்காம் நூற்றாண்டில் வரோதயசிங்கையாரி யனின் ஆட்சியில் எழுதப்பட்டன. செகராசசேகரன் என்னும் பட்டப் பெயரைக் கொண்ட அவ்வரசனின் பேராதரவுடன் அவை எழுதப் பட்டதால் அவனை நினைவு கூரும் வண்ணமாக அவை முறையே கெராசசேகரமாலை, செகராசசேகரம் என்று நூலாசிரியர்களினாலே பெயரிடப்பட்டன.[27] வடமொழியிலுள்ள சோதிடமதனைத் தமிழிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் செய்யுமாறு மன்னன் பணித்ததால் அரசகுலத்தவனும் மறைநூல் வல்லுனருமாகிய சோமசர்மா செகராசசேகரமாலையைப் பாடினார் என்பது மேல்வருஞ் செய்யுளினாலே தெளிவாகின்றது:

*தன்கடவுட் சுருதிகளின் மனமெனுஞ்சோ திடமதனைத் தலத்தின் மீது*
*மின்குலவு தென்கலையாற் றருகவென வருள்புரிய விருத்தப் பாவாற்*
*பொன்குலவு செகராச சேகரமா லையைச் செய்தான் பொருந்து மேன்மைத்*
*தொன்குலவு மிராசவிரா மேசனருள் சோமனெனுஞ் சுருதி யோனே.*[28]

விருத்தப்பாவிலமைந்த செகராசசேகரமாலை செந்தமிழ் நடை விரவிய இலக்கிய நயம் பொருந்திய நூலாகும். ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்ச வரலாறு பற்றிய அம்சங்களும் ஆளும் மன்னனாகிய வரோதய சிங்கையாரியனைப் பற்றிய பிரதானமான வரலாற்றுக் குறிப்புக்களும் அரண்மனை வாழ்க்கை, வேளாண்மை, சமுதாய வழக்கங்கள் முதலியன பற்றிய சில செய்திகளும் அதிலே அடங்கியுள்ளன. ஆரியச்சக்கர வர்த்திகளின் காலத்துத் தமிழ் நூல்களிலே ஆயுள்வேத மருத்துவம் பற்றியவை மிகப் பிரதானமானவையாகும். வடமொழியிலுள்ள ஆயுள்வேத நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை இந்திய தேசத் திலிருந்தும் பெற்று, அவற்றிலே ஆராய்ச்சிகளை நடாத்தித் தமிழிலே பல மருத்துவ நூல்களை எழுதுவித்தமை ஆரியச்சக்கரவர்த்திகளின் சிறப்பான சாதனையாகும். செகராசசேகரனொருவன் சத்திர வைத்திய முறையிலும் நாடி சாஸ்த்திரத்திலும் வல்லுநனாக விளங்கினான் என்பதைச் செகராசசேகரம் என்பதிலுள்ள செய்யுளொன்றின் மூலம் அறிய முடிகின்றது. சர்ப்ப சாஸ்திரம், நயன சாஸ்திரம், பரராசசேகரம் என்ற பிற மருத்துவ நூல்களும் யாழ்ப்பாண மன்னர் காலத்திற் குரியனவாகும். தமிழிலுள்ள ஆயுள்வேத மருத்துவ நூல்களுட் செகராசசேகரம் என்பதே மிகப் பழைமையானதென்று கருதப்படுகிறது. பரராசசேகரம் என வெளிவந்துள்ள மருத்துவ நூலானது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்து மருத்துவ நூல்கள் பலவற்றின் தொகுப்பு நூலாகும். அது பதினாறாம் நூற்றாண்டிலே தொகுக்கப்பெற்றது என்று கருதலாம்.

சைவசமயச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டு, ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், திருக்கரசைப் புராணம் ஆகிய மூன்றும் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்திற்குரியவை.[29]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் கல் வெட்டு என்பதைக் கவிராசர் என்ற புலவர் பாடியுள்ளார் என்பது மரபு. அந்நூல் செய்யுள் வடிவிலும் வசன ரூபமாகவும் அமைந்துள்ள பல பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றுட் குளக்கோட்டன், கஜவாகு என்னும் மன்னரிருவரைப் பற்றிய செய்யுள் வடிவிலுள்ள பகுதிகள் கல்வெட்டு எனப் பொதுவழக்கிலே குறிப் பிடப்படும் இலக்கிய வகையைச் சேர்ந்தவை. அவையிரண்டும் வெவ் வேறு புலவர்களாற் பாடப்பட்டிருத்தல் வேண்டும். குளக்கோட்டனைப் பற்றிய பகுதியே கவிராசரின் படைப்பு எனக் கருதலாம். அவர் பதினைந்தாம் அல்லது பதினாறாம் நூற்றாண்டிலே வாழ்ந்திருத்தல் கூடும். வசனரூபமாகவுள்ள பகுதிகள் பாமர மக்களிடையே நிலவிவந்த கதைகளாகும். எனவே கோணேசர் கல்வெட்டு என்ற பெயருடன் அச்சுவடிவம் பெற்று வெளிவந்துள்ள நூலானது பல்வேறு காலப் பகுதிகளில் உருவான வெவ்வேறு பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு நூலாகும். அதிலே இடைச்செருகல்களும் பிற்சேர்க்கைகளும் காலப் போக்கில் இணைத்துக் கொள்ளப்பட்டதாற் கோணேசர் கல்வெட்டுப் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை உருவிலே சிறிது சிறிதாக மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து வந்துள்ளது. கோணேசர் கோயிலின் வளர்ச்சி, அதன் நிர்வாக ஏற்பாடுகள், கோயிற் சேவைகள், நிலமானியங்கள் முதலியன பற்றிய வரலாற்றமிசங்களும் புராணக்கதைகளும் பாமர வழக்கிலுள்ள கதைகளும் அதிலே எதுவித வரையறையுமின்றிக் கலப்புற்றுள்ளன.

ஈழத்துத் தலபுராணங்களிலே தலைசிறந்ததான ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துப் பேரிலக்கியமாகும். அது கோணேசர் கோயிலைப் பற்றிய தலபுராணமாகும். வழிபாட்டு நிலையமென்ற வகையிலுங் கவர்ச்சியான கலைவனப்புமிக்க கோபுரங் களைப் பெற்ற கட்டிடவமைப்பு என்ற வகையிலும் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளையும் ஒன்றிணைத்துச் சமுதாய ஒழுங்குகளையும் நிலைநிறுத்துஞ் சாதனமென்ற வகையிலுங் கோயில் மிகுந்த வளர்ச்சி பெற்றிருந்த காலத்திலே கோயிலை அடிப்படையாகக் கொண்ட தலபுராணம் என்ற இலக்கியப் பிரிவு தமிழ் வழக்கிலே தோன்றியது. புண்ணிய தலங்களுக்குப் பக்தர்கள் பெருந்தொகையினராகக் கூடி யாத்திரை போகின்ற வழக்கம் ஏற்பட்ட காலத்திலே தலச்சிறப்பினை உணர்த்துவதற்காகத் தலபுராணங்கள் எழுதப்பட்டன.[30] பன்னிரண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டிலேயே தமிழகத்து இந்துக்களின் சமய வாழ்க்கையிலே தலயாத்திரைகள் பிரதான அம்சமாகின.

தமிழிலுள்ள தலபுராணங்களுக்குச் சிறப்பாகவுரிய பண்புகளை யெல்லாம் ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. அதன் சொல்வளம், கவிநடை போன்ற அம்சங்கள் பெரிய புராணத்தின் செல்வாக்கினை மிகுதியாகப் பிரதிபலிக்கின்றன. அதன் ஆசிரியரான செகராசசேகரன் புராணம், இதிகாசம், காவியம், தல புராணம் முதலிய இலக்கிய வகைகளைத் துறைபோகக் கற்றிருந்த கவிவாணர் என்பது நூலின் மூலமாக நன்கு புலனாகின்றது. தமிழிலுஞ் சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றிருந்த ஆசிரியர் பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்திருத்தல் கூடும். கோணேசர் கோயிலின் உற்பத் தியையும் வளர்ச்சியையும் விளக்குவதற்குப் பௌராணிக மரபிலுள்ள கதைகளையுங் குளக்கோட்டன் கதையினையும் ஆசிரியர் பயன்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்திச் சுவையும் கவிநயமும் விரவிய தாய் ஸ்ரீ தக்ஷிணகைலாச புராணம் விளங்கியதால் அதன் ஆசிரியரான அரசர் கவிவாணர் சிலரின் புகழ்மாலைகளைப் பெற்றார். சிறப்புப் பாயிரம் பாடிய அரசகேசரி பண்டிதராசரை மேல்வருமாறு புகழ்ந்து ரைக்கின்றார் :

*தென்னிலந் திசைதொறு மருவு*
*மின்னிலங்கியவேல் மேலாம்புயத்து*
*படவரா முடித்தனல் பார்முழுதாண்ட*
*விடலாண் வயமா விளங்கிய கொடியான்*
*சிங்கையாரியன் சேதுகாவலன்*
*கங்கைநாடன் கற்றவர் திலகன்*
*ஆயுள் மறையுடன் அரியசோதிடம்*
*பாய்திரைக் கடலுட் பலவுமுணர்ந்தோன்*
*ஒப்பிலா முத்தமிழோர்ந்த*
*செப்பரும் செகராசசேகரனே.*[31]

தேவையர்கோன் செகராசசேகரனின் வழித்தோன்றலான குமாரசூரியன் என்பவன் தனக்களித்த ஆதரவின் காரணமாகத் தான் பாடியருளிய தலபுராணத்தை ஆசிரியர் அவனுக்குச் சமர்ப்பணஞ் செய்துள்ளமை ஆரியச்சக்கரவர்த்திகள் திருக்கோணேஸ்வரத்திற்கும் அதன் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பீடங்களுக்கும் மறையவர்க்கும் மிகுந்த அளவில் ஆதரவு புரிந்தனர் என்பதை உணர்த்துகின்றது.[32]

**கோயில்கள்**

ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திலே சமகாலத் தமிழகத்திற்போல, இலங்கைச் சைவர்களின் சமுதாய வாழ்க்கையிலுஞ் சமய வாழ்க் கையிலுங் கோயில்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன. வருடாந்த விழாக் களுந் தல யாத்திரைகளும் ஆலய வழிபாட்டின் சிறப்பம்சங்களா யிருந்தன. ஆலயங்களில் ஆராதனைகளும் நித்திய கருமங்களும் விழாக்களும் பெரும்பாலும் வேதாகம முறைப்படி நடைபெற்றன. நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, நயினாதீவு, செல்வச்சந்நிதி, வல்லிபுரம், ஒட்டுசுட்டான், வெருகல், சித்தாண்டி, திருக்கோயில்', கொக்கட்டிச்சோலை ஆகியவிடங்களிலும் பாடல் பெற்ற திருத்தலங் களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றிலும் 'தேசத்துக் கோயில்கள்' என்று கொள்ளத்தக்க வகையைச் சேர்ந்த ஆலயங்கள் அமைந்திருந்தன. வருடாந்த திருவிழாக்களிலும் புனித தினங்களிலும் தூரவிடங்களிலிருந்து மக்கள் பெருந்திரளாகக் கூடி அவற்றிற்குப் போகும் வழக்கமிருந்தது. நவீன போக்குவரத்துச் சாதனங்கள் ஏற்பட்டிருக்காத அக்காலத்தில் திருவிழாக் காலங்களிலே அத்தகைய தலங்களிலே சந்தைகளும் விற்பனை நிலையங்களும் அமைக்கப்படுவது வழக்கம்.

கிராமங்கள்தோறும் சிவன், விநாயகர், முருகன், அம்மன், வைரவர் முதலிய தெய்வங்களுக்குக் கோயில்களை அமைக்கும் முறையும் ஏற்பட்டிருந்தது. ஐயனார், நாகதம்பிரான், பூதராயர், கண்ணகி முதலிய தெய்வங்களையும் மக்கள் வழிபட்டனர். பணப்புழக்கம் பொது மக் களிடையே அரிதாகவிருந்த அக்காலத்தில் வேளாண்மை மூலமாகக் கிடைத்த வருமானத்தையும் மக்களின் சேவைகளையும் ஆதாரமாகக் கொண்டு கோயில் ஏற்பாடுகள் அமைந்திருந்தன. தென்னிந்தியக் கோயில்களின் நிர்வாகமானது பிராமணரின் கட்டுப்பாட்டிலிருந்தது. இலங்கையிலிருந்த சைவக் கோயில்கள் பெரும்பாலும் விவசாயிகள் வகுப்பைச் சேர்ந்த நிலவுடைமையாளரதும் பிரதானிகளினதுங் கட்டுப் பாட்டின் கீழமைந்திருந்தன. விவசாயிகள், குறிப்பாக யாழ்ப்பாணக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயில்
(1930களில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டிலுந் திருக்கோணமலையிலும் வாழ்ந்தவர்கள், இறுக்கமான வைதிகப் போக்கினை கடைப்பிடித்தமை குறிப்பிடத்தக்கது. வழிபாட்டு நிலையமான இந்துக்கோயில் சமுதாயவமைப்புடனும் உற்பத்தி முறையுடனும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்தியிருந்தது. சாதியா சாரங்கள், சமுதாய வழமைகள் என்பனவற்றையும் நிலக்கிழார்களின் சமுதாயத் தலைமையினையும் நிலைநாட்டுஞ் சாதனங்களாகவும் கோயில்கள் அமைந்திருந்தன.

ஆரியச்சக்கரவர்த்திகள் தலைநகரான நல்லூரிலும் பிற ஊர்களிலும் கோயில்களை அமைப்பித்திருந்ததோடு பாடல்பெற்ற திருத்தலங் களிலுந் திருப்பணி வேலைகளை மேற்கொண்டிருந்தனர் என்று கருது வதற் கேதுவான வரலாற்றுக் குறிப்புக்களும் மரபுவழிக் கதைகளுங் கிடைக்கின்றன. முதலாஞ் சிங்கையாரியன் காலத்துக் கோயில்களைக் குறித்து யாழ்ப்பாண வைபவமாலை மேல்வருமாறு குறிப்பிடு கின்றது:

> தன்னுடன் வந்த காசியிற் பிரமகுலதிலகரான கெங்காதர ஐயரும், அன்னபூரணி அம்மாள் என்னும் அவர் பத்தினியும் வாசஞ் செய்வதற்கு அக்கிரகாரமும் உண்டாக்கிக் கீழ்த்திசைக்குப் பாது காப்பாக வெயிலு வந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளி அம்மன் கோயிலையும், வடதிசைக்குச் சட்ட நாதேசுவரர் கோயில், தையல் நாயகி அம்மன் கோயில், சாலை விநாயகர் கோயில்களையுங் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் பத்தினி யாருடன் கிருகப்பிரவேசஞ் செய்து வாழ்ந்திருந்தான்.[33]

இந்நாட்களிலே கைலாயபிள்ளையார் கோயில் என வழங்கும் ஆலயமிருந்தவிடத்திலே கைலாயநாதர் கோயிலென்ற பேராலயத் தினைச் சிங்கையாரியன் அமைப்பித்திருந்தான். அது அரச குடும்பத் தவரின் வழிபாட்டுத் தேவைகளுக்காக அமைக்கப்பட்டது. அக் கோயிலைப் பற்றிய நூலே முத்துராச கவிராசர் பாடிய கைலாய மாலை என்பதாகும். கைலாயநாதர் கோயிலைப் பற்றிய நூலென்ற காரணத்தால் அது கைலாயமாலை என்ற பெயரைப் பெற்றது. கைலாய நாதருக்கும் உமாதேவியாருக்குமென இரு வேறான உயர்ந்த பெருங் கோயில்களையும் அவற்றோடு மூன்று சபைகள், பரிவார தேவர் களுக்கான சிறுகோயில்கள், தேரோடும் வீதி, மடம், அன்னசத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றையும் மிகச் சிறந்த வகையிற் சிங்கையாரியன் அமைப்பித்தான்.[34]

பல நூற்றாண்டுகளாக யாழ்ப்பாணத்திற் பிரசித்தி பெற்று விளங்கும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பதினைந்தாம் நூற்றாண்டிலே புவனேகபாகு என்பவனால் அமைக்கப்பெற்றது என்று கொள்ள முடிகின்றது. அதனைப் பற்றிக் கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் மேல்வருமாறு அமைந்துள்ளது:

*இலகிய சகாப்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை*
*அலர்பொலி மாலைமார்ப னாம்புவ னேக வாகு*
*நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட் டுவித்து நல்லைக்*
*குலவிய கந்தவேட்குக் கோவிலும் புரிவித் தானே.*[35]

புவனேகபாகு என்ற பெயருடைய இருவரைப்பற்றிய ஐதிகங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளன. புவனேகபாகு என்ற பெயருடைய அமைச்சன் ஒருவன் முதலாஞ் சிங்கையாரியனின் காலத்திலே நல்லூரிலிருந்தானென்று கைலாயமாலை குறிப்பிடுகின்றது. 'புவனேகபாகு வென்னும் பேரமைச்சன் தன்னை நலமேவு நல்லூரில் நண்ணுவித்து' என்பது அவனைப் பற்றிய கைலாயமாலைக் குறிப்பாகும்.[36] ஆயினும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அமைப்பித்த புவனேகபாகு இவனல்லன் என்பதையும் கி.பி. 1450ஆம் ஆண்டளவிலே யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபின் அங்கிருந்து ஆட்சி செலுத்தியவனும் ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதியாகவிருந்தவனுமாகிய செண்பகப்பெருமாளே என்று கொள்வதற்குச் சில சான்றுகளுள்ளன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் விழாக் காலங்களிலே இன்றும் படிக்கப்படுவதான சமஸ்கிருத மொழியிலமைந்த கட்டியம் புவனேகபாகு என்பவனை மேல்வருமாறு வர்ணிக்கின்றது:

*சிறீமான் மஹாராஜாதிராஜ அகண்ட பூமண்டல*
*ப்ரதிதிகந்தர விஸ்ராந்த கீர்த்தி:*
*சிறீ கஜவல்லி மகாவல்லிசமேத சுப்பிரஹ்மண்ய*
*பாதாரவிந்த ஜநாதிரூட சோடச*
*மகாதான சூர்யகுல வம்சோத்பவ ஸ்ரீசங்க*
*போதி புவனேகபாகு*[37]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியும் புகழ்ந்துரைக்கும் புவனேகபாகு மகாராஜாதிராஜன் எனவும் சூர்யவம்சத்தவன் எனவும் சிறீசங்கபோதி எனவும் வர்ணிக்கப்பட்டுள்ள மையால் அவன் அரசனென்பதில் ஐயமில்லை. ஆறாம் பராக்கிரம பாகுவின் வளர்ப்பு மகனும் மலையாள வம்சா வழியினனுமாகிய செண்பகப்பெருமாள் கோட்டை இராசதானியில் அரசனாயிருந்த நாட்களில் சிறீசங்கபோதி என்ற பட்டப் பெயரைச் சூடியிருந்தான். அவனுடைய சாசனங்களெல்லாம் அவனைச் சூரியவம்சத்தவன் என்றும் மகாராஜாதி ராஜன் எனவும் வர்ணிக்கின்றமை குறிப்பிடத் தக்கது. அவன் யாழ்ப்பாணத்திலிருந்து அரசுபுரிந்த காலத்திலே ஸ்ரீ சங்கபோதி என்ற பட்டத்தைச் சூடியிருத்தலுங் கூடும். கட்டியம் புவனேகபாகுவைச் சர்ப்பமால் என்றுங் குறிப்பிடுவதாற் செண்பகப் பெருமாளே அதிலே ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என வர்ணிக்கப் பட்டுள்ளான் என்ற கருத்து மேலும் வலியுறுகின்றது.[38] கைலாய மாலையிற் காணப்படுந் தனிச்செய்யுளின் பாடபேதத்தினாலும் இக் கருத்து ஆதாரம் பெறுகின்றது.

*இலகிய சகாப்த மெண்ணூற் றெழுபத்து நான்கி*
*னலர்திரு சங்கபோதி யாம்புவ னேகபாகு*
*நலமுறு யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்துக்*
*குலவிய கந்தனார்க்குக் கோயிலொன் றமைப்பித்தானே.*[39]

ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு பிற்காலத்து மன்னனொருவன் என்பதைப் புரிந்துகொள்ளாமையாற்போலும் முத்துராச கவிராசர் அவனைச் சிங்கையாரியனின் பேரமைச்சனாக மாற்றியுள்ளார். செண்பகப்பெரு மாளின் காலத்து யாழ்ப்பாண நகரம் அழகாபுரிபோன்று 'மதிதோய் நெடுங்கொடி மாடவீதிப் பட்டினம்' என உப்பரிகைகளும் மாட மாளிகைகளும் விசாலமான அலங்கார வீதிகளும் பொருந்திய நகர மாயிருந்ததென்று கோகில சந்தேசய என்னுஞ் சிங்கள நூல் சிறப்பித்துக் கூறுகின்றது. மேலும், அந்நூல் யாழ்ப்பாணத்திலுள்ள இராமர் கோயி லையும் புன்னாலைக் கோயிலையுங் குறிப்பிடுகின்றது. எனவே யாழ்ப் பாணத்திலுள்ள பெருமாள் கோயில்கள் யாழ்ப்பாணத்து அரசர்காலத்தில் உற்பத்தியானவை எனக் கொள்ளலாம்.

இணுவிற் பரராசசேகரப்பிள்ளையார் கோயில், உரும்பராய் கருணா கரப்பிள்ளையார் கோயில் ஆகியவிரண்டும் ஆரியச்சக்கரவர்த்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் அமைந்திருந்த கோயில்களாகும். பரராசசேகரன் என்ற பட்டத்தையுடைய அரசனால் அமைக்கப்பட்ட கோயில் பரராசசேகரப் பிள்ளையார் கோயிலென்று பெயரிடப்பெற்றது எனச் சிந்திக்கலாம். அது பதினைந்தாம் அல்லது பதினாறாம் நூற்றாண்டிலே அமைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

தொண்டைமானாறு என்ற இடப்பெயர் ஏற்படுவதற்குக் காரண னாயிருந்த தொண்டைமான், கருணாகரன் என்ற பெயரினன் என்பதும் அவன் இணுவிலில் வாழ்ந்தான் என்பதும் ஐதிகம். கருணாகரத் தொண்டைமான் உரும்பராயில் அமைப்பித்த கோயில் கருணாகரப் பிள்ளையார் கோயில் என்று குறிப்பிடப் பெற்றது என்பது இராசநாயக முதலியாரின் கருத்தாகும்.[40] இதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதார மெதுவுமில்லை. தொண்டைமான் என்பவன் இலங்கையிலே சோழ ராட்சி அமைந்திருந்த காலத்திலே யாழ்ப்பாணத்திற் கடற்படைத் தளமொன்றினையமைத்து அதிகாரஞ் செலுத்தியிருந்த பிரதானியாதல் கூடும். அவன் கருணாகரன் என்ற பெயரினனோ என்பது ஆராய்வதற் குரியவொன்றாகும். பதினாறாம் நூற்றாண்டிற்குரிய வரிவடிவ அமைப் பிலுள்ள இரு சாசனங்கள் கருணாகரப்பிள்ளையார் கோயிலிலுள்ளன. அவற்றுளொன்று பிரபவ வருஷமாகிய 1567 ஆம் ஆண்டிலே வரையப் பெற்றுள்ளது. அதிலே 'கருணாகரப்பிள்ளையார் கோயில்' குறிப்பிடப்பட்டிருப்பதை இராசநாயக முதலியாரால் அவதானிக்க முடிந்தது.[41] அக்கோயிலுக்குச் சிலர் கொடுத்த தானங்களைப் பதிவு செய்வதே அக்கல்வெட்டுக்களின் நோக்கமாகும்.'திருச்சிற்றம்பலம்; பண்டாரத்தின் உடைமைப் பணம் ரு' என்பது மற்றைய கல்வெட்டின் வாசகமாகும்.[42]

### கோணேசர் கோயிற்றிருப்பணிகள்

பரராசசேகரன், செகராசசேகரன், ஆரியச்சக்கரவர்த்தி என்ற யாழ்ப்பாண மன்னர்கள் மூவர் கோணேஸ்வரத்திலே செய்த திருப்பணிகளைப் பற்றிக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு குறிப்பிடுகின்றது:

> பரராசசேகரன், செகராசசேகரன் என்றிருவர் திருக்கோணமலைக்கு வடமேல்பால் இராச்சியம் பண்ணியிருப்பார்கள். அவர்கள் திருக் கோணமலைப் பெருமைகேட்டு வந்து பாவநாசத் தீர்த்தம் படிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவிகுல திலகராகிய தேவராச குளக்கோட்டு மகாராசனுக்கு இத்தனை ஐசுவரியங்களைக் கொடுத்துத் தடுத்தடிமை கொண்ட கோணநாயகரேயென்று விழுந்தழுது நமஸ்காரம் பண்ணி, அறுபத்து நாலு சிவாலயமுந் தரிசனைபண்ணி ஏழுபட்டு முத்து மாலையும் வைரரத்தினம் பதிப்பித்த தங்கப்பதக்கமுஞ் சாத்துவித்து முத்துக் குடை, பவளக்குடை கொடுத்து வெகுதிரவியமும் அறையிருப்பாக வைத்துக் குருகுலக் கணக்கிலும் பதிப்பித்து நாட்டில் நூல் வாங்கிக் கோயிலுக்கொப்புவிக்கிறதற்கு ஒரு இறை கடமையில்லாத திரி யாயூரும் அதற்கு ஏழு குளமும் ஏழு வெளியுங் கொடுத்து எந்தெந்தக் காலத்துக்கும் திரிக்கு நூல் வாங்கிக்கொடுக்கச்சொல்லித் திட்டமும் பண்ணி ஆதியாகிய கோணநாயகர் பாதாரவிந்தந் துதிசெய்து விடையும் பெற்றுத் தங்கள் நகரஞ் சென்று வெகுநாளிராச்சிய பரிபாலனம் பண்ணிச் சிவபதம் போவார்கள்.

ஆரியகுலராசன், பரராசசேகரன், செகராசசேகரனாண்ட நாட்டை இராச்சியம் பண்ணிவருகிற நாளையிலே திரிகலைநாதர் பெருமை கேட்டுவந்து பாவநாசச்சுனையிற் றீர்த்தமும் படிந்து ஆலயமடங்கலும் பிரதக்ஷணஞ் செய்து திருமுன்னே வந்து இரவி குலதிலகராகிய குளக்கோட்டு மகாராசனைத் தடுத்தாட்கொண்டமை ஸ்ரீ கமலபாதமிதுவோவென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து கனகாபரணமும், நவரத்தின மாலையுஞ் சாத்தித் தங்கக்குடை, பொன்குடையுங் கொடுத்து வெகுதிரவியமுறை முதலிருப்பாக வைத்துக் குருகுலக் கணக்கிலும் பதிப்பித்து கோணநாயகரிடம் விடையும் பெற்றுத் தன்னகரத்துக்குப் போவான்.[43]

கோணேசர் கல்வெட்டு யாழ்ப்பாண அரசர்களைப் பற்றிக் கூறுமிடத்து எதுவித காலவரையின்றியும் வரன்முறையினைத் தலைகீழாக்கியுங் கூறுகின்றது. அதிலே குறிப்பிடப்பெற்ற யாழ்ப்பாணத்தரசர்கள் மூவருள்ளும் 'ஆரியச்சக்கரவர்த்தி' என்பவன் மற்றையவர்களைக் காட்டிலுங் காலத்தால் முற்பட்டவனாதல் வேண்டும். அவன் யாழ்ப் பாணத்தை ஆட்சிபுரிந்த முதலரசருள் ஒருவனாயிருத்தல் வேண்டும். பரராசசேகரன், செகராசசேகரன் என்றவிருவரும் பதினைந்தாம் அல்லது பதினாறாம் நூற்றாண்டினராதல் வேண்டும். மேலும்,கோணேசர் கல் வெட்டினைத் தொகுத்தவர்கள் அம்மூன்று மன்னர்களின் இயற்பெயர் களையுங் குறிப்பிடவில்லை. அவர்களுக்கு ஆதாரமாயிருந்த கர்ண பரம்பரைக் கதைகளிலே அப்பெயர்கள் இடம் பெற்றிருக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கருதலாம். ஆரியச்சக்கரவர்த்தி என்பது யாழ்ப்பாண மன்னர்களின் குலப்பெயராகும். பரராசசேகரன், செகராசசேகரன் என்பன அவர்களின் மாறிவருஞ் சிங்காசனப் பெயர்களாகும். ஆயினும் கோணேஸ்வரத்திற்குச் சென்று திருப்பணிகள் புரிந்த யாழ்ப்பாண மன்னர் மூவருள் ஒருவனை ஆரியச்சக்கரவர்த்தியென்றும் ஏனைய விருவரை அவரவர் பட்டப்பெயராலும் கோணேசர் கல்வெட்டிற்கு மூலமாக ஆவணங்கள் குறிப்பிட்டிருந்தன என்று கொள்ளவேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மன்னரிற் சிலர் கோணேஸ்வரத்திற்குச் சென்று ஆலய தரிசனம் பண்ணித் திருப்பணிகள் சிலவற்றையும் புரிந்தனர் என்பது வரலாற்றம்சங்கள் பொருந்தியவொரு குறிப்பாகவே கொள்ளத் தக்கதாகும். செகராசசேகரனொருவன் சைவசமயம் மேன்மை பெறப் பல பணிகளைப் புரிந்ததினாலும் திருக்கோணேஸ்வரத்திற்குத் திருப்பணிகள் பல புரிந்தமையாலும் சைவரின் அபிமானத்திற்குரியவனாயிருந்தான் என்பதை மேல்வரும் பாடல்கள் உணர்த்துகின்றன:

*அம்புயத்துதரத் தண்ணலமைத்த வாரியர்தங் கோமான்*
*உம்பர்வந் திறைஞ்சுஞ்சேது வுயர்கரைக் காவல்வேந்தன்*
*செம்பொன்மா மவுலிச்சென்னிச் செகராச சேகரன்*
*தும்பையஞ் சடையான்சைவந் தோன்றிடத் தோன்றினனால்*

*தோன்றியகாலை வேதம் தொனித்தன சிவநூற்சைவம்*
*மான்றமர் வெண்ணீறள்ளி யணிந்தனர் அலங்கல்வாகை*
*வான்றனிச் சிங்கைகாவல் மன்னனோர் சிங்கந்தோன்ற*
*போன்றபல் சமயமெல்லாங் கரியென விரிந்துபோன.* [44]

பரராசசேகரன் என்னும் பட்டத்தையுடைய மன்னனொருவன் திருக்கோணமலைக்குச் சென்று ஆலய தரிசனம் பண்ணித் தேர்த் திருவிழா ஏற்பாடுகளைக் கவனித்து நிவந்தங்கள் பல செய்திருந்தான் என்பதைத் திருக்கோணாசல புராணத்திலுள்ள மேல்வருஞ் செய்யுள்கள் உணர்த்துகின்றன:

*அன்ன நாளிடை யாழிசூ ழகன்புவி முழுதுந்*
*தன்ன தாகவே தனிக்குடை நீழலிற் றாங்கு*
*மன்ன னாம்பர ராசசே கரனென்னும் வள்ளல்*
*பொன்னு லாந்திரி கோணமால் வரைதனிற் பொருந்தி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிந்தை யன்பினோ டரனுமை தனைத்தரி சித்தாங்*
*கந்த மின்னிதி பூண்மணி நிபந்தங்க ளமைத்து*
*முந்து சீர்விழாத் தேர்த்திரு நாண்முறை போற்றிச்*
*சொந்த மாநகர் சார்ந்தனன் தொல்குலத் தரசன்* [45]

யாழ்ப்பாணத்தரசர் கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினைப் பற்றி யாழ்ப்பாண வைபவ மாலையுங் குறிப்பிடுகின்றது. அவர்களுளொருவனைப் பற்றி அந்நூலில் மேல்வரும் குறிப்புள்ளது.

"கனகசூரிய சிங்கையாரியன் தன் பிள்ளைகளாகிய பரராசசேகரனையும் செகராசசேகரனையுந் திருக்கோவலூரில் இராச குடும்பத்தவர்பாற் கல்வி கற்கவைத்து யாத்திரை பண்ணும்படி தன் மனைவியுடன் காசி பரியந்தம் திருத்தலந்தோறுஞ் சுற்றித் திரிந்து, திரும்பிக் கோகர்ண சிவாலயத்தில் வந்திறங்கி, அவ்விடத்திலிருந்து சில வருடகாலஞ் சிவராத்திரி விரதம் அனுட்டித்தான்....."[46]

ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திலே திருக்கோணமலையிற் சைவ சமயக் கல்வியும் தமிழ்க் கல்வியும் சிறப்புற்றிருந்தமைக்குப் பண்டித ராசரைப் பற்றிய மேல் வரும் பாடல் தக்கவொரு சான்றாகலாம்:

*நடிக்கும் பரத மியலிசை நாடக நாற்கவிதை*
*நொடிக்குமுன் பாடப்ர பந்தங் கணிதநன் னூல்சிவநூல்*
*படிக்க நிகழ்த்தப் புராணா கமஞ்சொல் பரம்பரையாய்*
*படிக்குந் தமிழ்வல்ல பண்டித ராசன் வரவித்தையே*[47]

பதினைந்தாம் நூற்றாண்டிலே திருக்கோணேஸ்வரத்தில் ஆறு கோபுரங்களிருந்தன என்பதை 'நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் திருக் கோணமலை தலத்தாறு கோபுரம்' என்ற அருணகிரிநாதரின் வாக்கினாலே அறிய முடிகின்றது. பதினேழாம் நூற்றாண்டிலே கோணேஸ்வரம் அதியுன்னத நிலையிலே காணப்பட்டது. அதனைப் பற்றிக் குவேறோஸ் பாதிரியார் மேல்வருமாறு வர்ணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது:

அந்தப் பெரிய துறைமுகத்தின் மேலே நிலத்திலிருந்து கடலினுட் பரந்துள்ள குன்றின் சிகரத்திலே, இலங்கை மன்னர்கள் மூன்று கோபுரங்களை அமைத்திருந்தார்கள். அவற்றுளொன்று மலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியிலும் ஏனையவை அதனிரு பக்கங்களிலும் அமைந்திருந்தன. அங்கு பெருந் திரளான விக்கிரக ஆராதனைக்காரர்கள் கடல் வழியாக வந்து மிகுந்த பக்தியோடு வழிபடுவார்கள். அவர்களின் உரோமாபுரியான அத்தலத்திலே காஞ்சிபுரம், திருப்பதி, திருமலை, ஜகன்னாத் ஆகிய தலங்களிற் காட்டிலும் கூடுதலான யாத்திரிகர்கள் அங்கு வருவார்கள்.[48]

எனவே, திருக்கோணமலை கோணேசர் கோயிலையும் அதன் ஆலய ஏற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டவொரு குறிப் பிடத்தக்க நகரமாக ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாட்சிக் காலத்தில் அமைந்திருந்ததெனக் கருதலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. S. Pathmanathan, *The Kingdom of Jaffna,* Colombo, 1978, p. 234.
2. *மேலது*, ப. 238.
3. *மேலது*, பக். 256 - 257.
4. S. Pathmanathan, 'The Kingdom of Jaffna: Administrative Istituitions', *Proceedings of the Fourth International Conference on Tamil Studies,* Jaffna, 1974, Vol. II, pp. 37-57.
5. S. Pathmanathan, 'Chieftaincies of the Vanni in Sri Lanka: Chieftaincies of the Eastern and Western Littorals', *Paper Presented at the National Conference Seminar, IATR (Sri Lanka),* Batticaloa, 1976.
6. *செகராசசேகரமாலை*, இரகுநாதையர் பதிப்பு, கொக்குவில், 1942, சிறப்புப் பாயிரம், செய்யுள் 4.
7. *மேலது*, செய்யுள் 4 - 5.
8. 'பைந்தொடைப் பாசுபதர்களைந்நூற்றுப் பன்னிருவரை வரவழைத்து', *மேலது*, செய்யுள் 4.
9. பூசனை செய்மி னீரெனக்கருணை புரிந்தவர் தங்களிலிருவர்
காசினி தாங்கும் படிவரங்கொடுத்துக் கமழ்செழுந்துளப மாலிகையு,
மாசறுசுருதியு மாரியவேந்தென் றணிமணிப்பட்டமுங் கொடுத்துத்
தேசுறுகுடையு மொற்றையும்வென்றி திகழ்விடைத்துவசமும் நல்க
*மேலது*, செய்யுள் 5.
10. 'வென்றிதிகழ் மீனவன்முன் செப்பேடங்கத் தழைக்கும் வேத வேந்தும்', *மேலது*, செய்யுள் 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROF. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA



11. சி. பத்மநாதன், 'யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள்: குலவிருதுகளும் சின்னங்களும்', *நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவு மலர்*, யாழ்ப்பாணம், 1974, பக். 7 - 11.
12. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்*, பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் பதிப்பு, பருத்தித்துறை, 1916, சிறப்புப் பாயிரம்.
13. *The Kingdom of Jaffna*, Pt. I, pp. 180 - 181.
14. *மேலது*.
15. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம், திருநகரச் சருக்கம்*, செய்யுள் 108.
16. *A Sanskrit - English Dictionary*, Ed. Monier Williams.
17. S. Pathmanathan, 'The Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna', *Spolia Zeylanica*, Vol. 35, Pts. I & II, pp. 411.
18. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்*, சிறப்புப் பாயிரம்.
19. *செகராசசேகரமாலை*, சிறப்புப் பாயிரம், செய்யுள் 7.
20. S. Rasanayagam, *Ancient Jaffna*, Madras, 1926, p. 296.
21. *மேலது*, ப. 303.
22. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்*, சிறப்புப் பாயிரம்.
23. *கைலாயமாலை*, மயிலங்கூடலூர் பி. நடராசன் பதிப்பு, 1983, கண்ணி, 210, ப. 32.
24. 'அடற்கரி மூவாயிரத்தோ டெழுநூறு பாவலருக்களித்த கோவும்', *செகராச சேகரமாலை*, சிறப்புப் பாயிரம், செய்யுள் 4.
25. *செகராசசேகரமாலை*, பலவினைப் படலம், செய்யுள் 10.
26. *Ancient Jaffna*, p. 360.
27. *செகராசசேகரமாலை*, இ. சி. இரகுநாதையர், கொக்குவில், 1942. *செகராச சேகரம்*, ஞானப்பிரகாச யந்திரசாலை, அச்சுவேலி, 1932.
28. *செகராசசேகரமாலை*.
29. திருக்கரசைப் புராணம் என்பதைக் கரசைப்புலவர் என்பவர் பாடியுள்ளார். அது திருகோணமலையிலுள்ள அகஸ்தியஸ்தாபனம் என்னுங் கோயிலைப் பற்றியதாகும்.
30. சி. பத்மநாதன், 'தமிழ்ப் புராணங்கள்', *இந்துதர்மம்*, 1983.
31. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்*, சிறப்புப் பாயிரம்.
32. தேவையின் மன் செகராச சேகரக் கோவயி னுதித்த சீர்க்குமாரசூரிய னாவியுமுடலு மொத்தளித்த கல்வியின் மேவிய காப்பியம் விமலர்க்காயதே *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம், திருநகரச் சருக்கம்*, செய்யுள் 112.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. *யாழ்ப்பாண வைபவமாலை*, குல. சபாநாதன் பதிப்பு, கொழும்பு, 1953, ப. 26.

34. *கைலாயமாலை*, பி. நடராசன், 1993, பக் 34 - 35; *யாழ்ப்பாண வைபவமாலை*, ப. 34; சி. பத்மநாதன், 'ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்', *இளங்கதிர்*, பேராதனை, 1972 (மறுபிரசுரம்), ப. 13.

35. *கைலாயமாலை*, ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு, சென்னை, 1939, ப. 23.

36. *கைலாயமாலை*, பி. நடராசன், 1983, ப. 24.

37. குல. சபாநாதன், *இலங்கையின் புராதன சைவாலயங்கள்: நல்லூர்க் கந்தசுவாமி*, யாழ்ப்பாணம், 1971, ப. 7.

38. புவனேகபாகுவைப் பற்றி முதலியார் இராசநாயகம் மேல்வருமாறு கூறியுள்ளார்: 'பராக்கிரமபாகுவின் கபட சிந்தையையறியாத செண்பகப் பெருமாள் யாழ்ப் பாணம் போய்ப் பழைய தலைநகர் பாழாய்விட்டமையினால் நல்லூரிலே கி. பி. 1450ஆம் ஆண்டளவில் ஒரு புதுநகர் எடுப்பித்துச் சிறீசங்கபோதி புவனேகபாகு என்னும் சிங்கள நாமத்தோடு பதினேழு வருடங்களாக அரசு செய்து வந்தான்...' *மேலது*, ப. 6.

39. *மேலது*, ப. 7.

40. S. Rasanayagam, *Ancient Jaffna*, p. 266.

41. *Ancient Jaffna*, p. 267.

42. கா.இந்திரபாலா, 'உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள்', *உரும்பராய் கருணாகரப்பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேக விழா மலர்*, 1973, ப. 38.

43. சி. பத்மநாதன், 'தக்ஷிண கைலாசம்' (II), *மதுரம்*, 1982.

44. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம் திருநகரச் சருக்கம்*, செய்யுள் 108 - 109.

45. *திருக்கோணாசல புராணம்*, பதிப்பு, சண்முகரத்தின ஐயர், யாழ்ப்பாணம், 1909, திருப்பணிப் படலம்.

46. *யாழ்ப்பாண வைபவமாலை*, ப. 46.

47. *ஸ்ரீ தக்ஷிணகைலாசபுராணம்*, சிறப்புப் பாயிரம்.

48. *The Temporal and Spiritual Conquest of Ceylon by Fernao de Queyroz*. Trans. by Fr. S. G. Perera, Colombo. 1930, pp. 66 - 67.

(சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், 1985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிணைப்பு

## யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள்: குல விருதுகளும் சின்னங்களும்

யாழ்ப்பாணம், யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணப் பட்டினம் எனப் பலவாறு வழங்கி வந்த தமிழ் இராச்சியம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே எழுச்சி பெற்று 17ஆம் நூற்றாண்டு வரை நிலை பெற்றிருந்தது. தமிழ் மன்னரின் ஆட்சியொழிந்த பின்பும் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிகளிலும் அது ஒரு தனிப் பிரிவாகவே அமைந்திருந்தது. அந்த இராச்சியம் யாழ்ப்பாணக் குடா நாடு, அதற்கருகிலுள்ள தீவுகள், மன்னார், மாதோட்டம், பூநகரி, பல்லவராயன்கட்டு, இலுப்பைக் கடவை, நானாட்டான், முசலிபத்து ஆகிய பகுதிகளையும் வன்னிநாடுகள் சிலவற்றையும் உள்ளடக்கிய தாயிருந்தது. பதினான்காம் நூற்றாண்டிலே திருகோணமலைப் பிர தேசத்தின் மீதும் யாழ்ப்பாண மன்னர் மேலாதிக்கம் பெற்றி ருந்தனர்.

சிங்கை நகர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்த தென்பதைச் செகராசசேகரமாலை, தக்ஷிண கைலாச புராணம் முதலிய நூல்கள் மூலம் அறிய முடிகின்றது. யாழ்ப்பாண மன்னனொருவ னுடைய கல்வெட்டொன்று அந்நகரினைப் 'பொங்கொலிநீர்ச் சிங்கை நகர்' என வர்ணிக்கின்றது. யாழ்ப்பாணப் பட்டினம் என்பது அந்நகரின் மறு பெயராகும். சிங்கள நூல்களும் ஒல்லாந்தர்கால ஆவணங்களும் தமிழ் நாட்டுச் சாசனங்கள் சிலவும் வட இலங்கையில் நிலவிய இராச்சியத்தின் தலைநகரை யாழ்ப்பாணப் பட்டினம் என்றே குறிப் பிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அரசரின் விருதுப்பெயர்***

யாழ்ப்பாணத்து மன்னர்களும் பிற அரசரைப் போலத் தமக்கெனத் தனியான விருதுகள் சிலவற்றைக் கொண்டிருந்தனர். அரசர் தங்குலச் சிறப்பு, தாமாண்ட நாடு, நகரம், பேராற்றல், வெற்றிச் செயல்கள், அறிவு, கலையார்வம் போன்றவற்றையும் புகழுக்குரிய பிற சிறப்பு களையும் குறிக்கும் வண்ணம் பூண்ட சிறப்புப் பெயர்களே விருதுப் பெயர்களென வழங்கிவந்தன. மன்னரின் ஆற்றல், சிறப்பு போன்ற வற்றிற்கேற்ப அவர்களின் விருதுப் பெயர்களும் பலவாகிப் பெருகி யிருந்தன. அவற்றுட் சில ஒரு குலத்தைச் சேர்ந்த அரசர் அனைவர்க்கும் பொதுவானவை. ஏனையவை தனி மன்னற்கே உரித்தானவை.

வளவன், செழியன், தொண்டையர்கோன், காடவர்கோன் என்னும் விருதுகள் முறையே சோழ, பாண்டிய, பல்லவ குலங்களைச் சேர்ந்த அரசர் எல்லோருக்கும் பொதுவானவை. ஆனால் குணபரன், மத்த விலாசன், சத்துருமல்லன் (1ஆம் மகேந்திரவர்ம பல்லவன்), சனநாதன், நித்த விநோதன், நிருபசேகரன் (1ஆம் இராசராசசோழன், 985-1016), பண்டித சோழன், கங்கை கொண்ட சோழன் (1ஆம் இராசேந்திர சோழன், 1012-1044),எல்லாந்தலையானான், கச்சிவளங்கும் பெருமாள் (1ஆம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், 1251-1268) போன்றன தனி மன்னருக்குரிய விருதுப்பெயர்களாகும். இவ்வாறே யாழ்ப்பாண மன்னரும் பல விருதுகளைப் பெற்றிருந்தனர். ஆரியச்சக்கரவர்த்தி, சிங்கையாரியன், காங்கேயன், கங்கைநாடன், சேதுகாவலன் என்பனவே அவ்விருதுகளாகும். அவையெல்லாம் யாழ்ப்பாணத்து அரசரனை வருக்கும் பொதுவான குலவிருதுகளாகும்.

***ஆரியச்சக்கரவர்த்தி***

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே பாண்டியரின் ஆதிக்கம் வட இலங்கையிலே ஏற்பட்டுப் படிப்படியாக வலுப்பெற்று வந்தது. அக்கால கட்டத்தில் இலங்கையின் வடபகுதியில் உருவாகியிருந்த தனி இராச்சியமானது பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வந்தது. கி.பி. 1283ஆம் ஆண்டளவிலே ஏற்பட்ட பாண்டியப் படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணத்திலே ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. தென்பாண்டி நாட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்விருக்கை நாட்டைச் சேர்ந்த அந்தணராகிய ஆரியச் சக்கரவர்த்திகள் மாறவர்மன் குலசேகர தேவரின் ஆட்சியிலே (1268-1310) பாண்டிய நிருவாகத்திலே சேனாதிபதி போன்ற உயர் பதவிகளைப் பெற்றிருந்தனர். அவர்களுள் ஒருவன் முதலாம் புவனேகபாகு (1272-83) இறந்த பின் இலங்கை மேற் படையெடுத்து வந்து சிங்களவரசின் தலைநகராகிய யாப்பாகூவ நகரைத் தாக்கினான். அவனுடைய மரபிலுள்ள அரசர்களே பதினேழாம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாண நாட்டை ஆண்டுவந்தனர். 14ஆம், 15ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சிங்கள நூல்கள் யாவும் யாழ்ப்பாணத்து அரசர்களை ஆரியச்சக்கரவர்த்தி என்றே குறிப்பிடுகின்றன. எனவே, அந்த மன்னர்களனைவரும் அப்பட்டத்தைக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும்.

ஆரியச்சக்கரவர்த்தி என்ற பட்டம் பிராமணர் (ஆரியர்) குலத்தைச் சேர்ந்த உயரதிகாரிகளையே குறித்தது என்பதனைப் பாண்டியர்களின் சாசனங்கள் உணர்த்துகின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டிற் பல அதிகாரிகள் சக்கரவர்த்தி என்ற பட்டத்தினைப் பெற்றிருந்தனர். மாழ(ள)வச் சக்கரவர்த்தி, மறச் சக்கரவர்த்தி, ஏழகச் சக்கரவர்த்தி என்னும் பட்டங்களைப் பெற்றிருந்த அமைச்சர், தண்டநாயகர் போன்ற அதிகாரிகள் பற்றிப் பாண்டியரின் சாசனங்களிலே குறிப்புக்கள் வருகின்றன. இக்குறிப்புக்களை ஆராயுமிடத்து மழவர், மறவர், ஏழகத்தார் ஆகிய சமூகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் சக்கரவர்த்திப் பட்டத்தைப் பெறுமிடத்து முறையே ம(ா)ழவச் சக்கரவர்த்தி, மறச் சக்கரவர்த்தி, ஏழகச் சக்கரவர்த்தி என்று அழைக்கப்பட்டனர் என்பது தெளிவாகின்றது. அதேபோல முன்கூறியவாறு ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் சக்கரவர்த்திப் பட்டம் பெற்ற பிராமண (ஆரியர்) குலத்தைச் சேர்ந்த அதிகாரிகளையே குறிக்கும். அப்பட்டப் பெயர் சோழ நிர்வாகத்திலே காணப்பட்ட பிரம்மாதிராசன், பிரம்மராயன் போன்ற பதவிப் பெயர்களை ஒத்ததாகும்.

மாறவர்மன் குலசேகர தேவரின் காலத்தைச் சேர்ந்த பாண்டி நாட்டுக் கல்வெட்டுக்கள் ஆரியச்சக்கரவர்த்தி யென்பது தனி அதிகாரியொருவனின் பெயராகவன்றி, ஒரு குலத்தின் சிறப்புப் பெயராக வழங்கி வந்ததென்பதை உணர்த்துகின்றன. இலங்கையிலே ஆரியச் சக்கரவர்த்திகள் அதிகாரம் பெற்ற பின்பும் அது அவர்களின் குலச் சிறப்புப் பெயராகத் தொடர்ந்தும் வழங்கி வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சிங்கையாரியன்***

யாழ்ப்பாண அரசரனைவரும் சிங்கையாரியன் என்ற பட்டத்தைக் கொண்டிருந்தனரென்று யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. செகராசசேகர மாலை, தக்ஷிண கைலாசபுராணம் முதலிய நூல்களும் இம்மன்னர்களைச் சிங்கையாரியன், சிங்கைகாவல் மன்னன் என்று வர்ணிக்கின்றன. ஆரியச் சக்கரவர்த்தி யொருவனின் கல்வெட்டு அவனைப் பொங்கொலி நீர்ச்சிங்கையாரியன் என்று குறிப்பிடுகின்றது. சிங்கையாரியன் என்பது சிங்கை நகரிலிருந்து ஆளுகின்ற ஆரியச் சக்கரவர்த்தியினையே குறிக்கும்.

***காங்கேயன், கங்கைநாடன்***

கண்ணகி வழக்குரையின் ஏட்டுப் பிரதிகள் சில யாழ்ப்பாணத்தரசனைத் தேவைமன், காங்கேயன் எனக் குறிப்பிடுகின்றன. தக்ஷிண கைலாச புராணத்தின் பாயிரத்தில் கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன் எனப் புலவர் ஆரியச்சக்கரவர்த்தியை வர்ணிக்கின்றார். செகராசசேகரமாலை பாடிய சோமசர்மனும் ஆரியச்சக்கரவர்த்தியை மேல்வருமாறு புகழ்ந்து ரைக்கின்றார்:

*ஐந்தருவும் நவநிதியும் குலமணியும்*
*பொன்முகிலும் மாவு மொன்றாய்*
*வந்தனைய கொடைக்குரிசில் வரியளிக*
*ளிசைகுலவு வனசத் தாமன்*
*சந்ததமும் தருமநெறி கோடாத*
*தவப்பெருமான் தழைத்த கீர்த்திக்*
*கந்தமலை யாரியர்கோன் செகராச*
*சேகரமன் கங்கை நாடன்*

தாம் கங்கைவமிசத்தைச் சேர்ந்தவர்களென்று உரிமை பாராட்டியதி னாலேயே ஆரியச்சக்கரவர்த்திகள் காங்கேயன், கங்கையாரியன், கங்கைநாடன் என வழங்கலாயினர். கங்கை குலத்தைச் சேர்ந்த அரச மரபுகள் கன்னடத்தின் தென் பிரிவான கங்கபாடியிலுங் கலிங்கத்திலும் நெடுங்காலம் ஆட்சி புரிந்து வந்தன. சோழப் பேரரசர் 10ஆம் நூற்றாண்டின் முடிவிலே கங்கபாடியைக் கைப்பற்றித் தம்மரசுடன் இணைத்த பின் கங்கபாடியிற் கங்கரின் ஆட்சி ஒழிந்தது. எனினும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்க மரபைச் சேர்ந்தவர்கள் சோழரின் படைகளிலும் நிர்வாகத்திலும் சேனாதிபதிகளாகவும் சாமந்தர்களாகவும் பணிபுரிந்தனர். அதன் விளைவாகக் கங்கரின் கிளைமரபுகள் பல தமிழ் நாடெங்கும் பரவலாயின. கங்க மரபைச் சேர்ந்த குறுநில மன்னர் சோழர் காலத்திலே தொண்டை மண்டலத்திலுள்ள பங்கள நாட்டை ஆண்டனர். கங்கரின் கிளை மரபொன்றைச் சேர்ந்த அமராபரணன் சீயகங்கன் என்பவன் மூன்றாங் குலோத்துங்கனுடைய ஆட்சியிலே குறுநில மன்னனாயிருந்தான். பாண்டி நாட்டிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டளவிலே கங்க குலத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் பலரிருந்தனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலே காங்கேயன் என்ற அமைச்சனொருவன் இருந்தான்.

இலங்கையிலும் அரசர் கலிங்க தேசத்துக் கங்கரோடு கொண்ட மணத் தொடர்புகளாற் கீழ்த்திசைக் கங்க மரபைச் சேர்ந்த இளவரசர் பலர் பொலநறுவைக் காலத்தில் வந்திருந்தனர். முதலாம் விக்கிரம பாகுவின் காலத்திலே அணிகங்கன் என்றொரு இளவரசனிருந்தான். மேலும் இரண்டாம் கஜவாகுவின் ஆட்சிக் காலத்திலே சோழ கங்க குமாரனென்ற இளவரசன் பொலநறுவையிலே தங்கியிருந்தான். நிசங்கமல்லனுடைய ஆட்சிக்குப் பின் (1187-96) சோழகங்கன் என்னும் இளவரசன் சிலகாலம் அரச பதவியிலிருந்தான். கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்ற குளக்கோட்டனும் சோழகங்கன் என அழைக்கப்பட்டான். திருகோணமலைக் கோட்டையிலுள்ள வட மொழிக் கல்வெட்டொன்றும் கி.பி. 1222இல் இலங்கைக்கு வந்த சோழ கங்கனொருவனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சோழ கங்கன் என்ற பிரதானிகள் யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பதற்குச் சில இடப்பெயர்கள் சான்றாயுள்ளன. ஆரியச் சக்கரவர்த்திகள் பாண்டியரின் அதிகாரிகளாகவிருந்து பாண்டிநாட்டிலே சேவை புரிந்த நாட்களிலோ யாழ்ப்பாணத்தில் அதிகாரம் பெற்ற பின்போ கங்க குலத்தைச் சேர்ந்தவர்களோடு மணத்தொடர்பு கொண்டிருத்தல் கூடும். ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் பெற்று அரசராகிய பொழுது தாம் பழைமை வாய்ந்தவொரு அரசகுலத்தைச் சேர்ந்தவர்களென்று பெருமை பாராட்ட வேண்டிய சூழ்நிலை தோன்றியது. எனவே, கங்கரோடு ஏதோவொரு வழியிலே தொடர்பு கொண்டிருப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அதனாலே ஆரியச்சக்கரவர்த்திகள் காங்கேயன், கங்கை நாடன் ஆகிய விருதுகளைப் பெற்றிருக்கலாம்.

**சேதுகாவலன்**

ஆரியச்சக்கரவர்த்திகளின் விருதுகளிற் சேதுகாவலன் என்பதும் ஒன்று. செகராசசேகரனொருவனைக் குறித்து 'உம்பர் வந்திறைஞ்சும் சேது உயர்கரைக் காவல் வேந்தன்' எனத் தக்ஷிண கைலாச புராணத்தின் பாயிரத்திலே கூறப்பெற்றுள்ளது. இராமேஸ்வரம், அதற்கும் இலங் கைக்கும் இடையிலான தொடுகடலிலுள்ள 'இராமர் கல்லணை', செவ்விருக்கை நாட்டின் கடற்கரை முதலியன சேது என வழங்கிவந்தன என்பதற்குப் பாண்டியரதும் சேதுபதிகளினதும் சாசனங்கள் சான்றா யுள்ளன. மேலும் சேதுபுராணம் என்ற நூல் சேது நகர் என்றவொரு இடத்தைப் பற்றிக் கூறுகின்றது. சேது என வழங்கப்பெற்ற இடங்கள் யாவும் செவ்விருக்கை நாட்டின் கரையிலே காணப்பட்டன. ஆரியச் சக்கரவர்த்தியைக் குறிப்பிடுகின்ற திருப்புல்லாணிக் கல்வெட்டிலே சேது திருமுகம் என்ற சொற்றொடர் வருகின்றது. சேதுக்கரையினைக் காவல் புரிந்ததினாலோ சேதுவென்னும் திருத்தலங்களைப் பேணி வந்ததினாலோ செவ்விருக்கை நாட்டிலிருந்த ஆரியச்சக்கரவர்த்திகள் சேதுகாவலன் என்ற விருதினைப் பெற்றனர் எனக் கருதலாம். யாழ்ப் பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் அந்த விருதினைத் தம் முன்னோர் களிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்து அரசர் குலம் அழிந்தொழிந்த பின் இராமநாதபுரத்துச் சேதுபதிகள் சேதுகாவலன், சேது மூலரக்ஷ துரந்தரன் என்னும் விருதுகளைப் பெற்றனர்.

***சிம்மாசனப் பெயர்கள்***

இளவரசர் முடிசூடி அரச பதவியைப் பெறுமிடத்துப் பட்டப் பெயர் களைப் பெறுவது வழக்கம். இவற்றை வடமொழி நூல்கள் அபிஷேக நாமம் எனக் குறிப்பிடுகின்றன. யாழ்ப்பாணத்து மன்னர்கள் முடிசூடிய விடத்துப் பரராசசேகரன், செகராசசேகரன் என்னும் பட்டப்பெயர்களைச் சூடினார்கள். இந்த வழக்கம் சோழரதும் பாண்டியரதும் மரபுகளை ஒத்ததாகும். சோழப் பெருமன்னர் முடிசூடியபொழுது இராசகேசரி, பரகேசரி என்று மாறிவரும் சிங்காசனப் பெயர்களைப் பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியரும் அரச பதவியினைப் பெற்றபொழுது சடையவர்மன், மாறவர்மன் என்னும் பட்டப் பெயர்களை மாறி மாறிச் சூடிக் கொண்டனர். அவ்வாறே யாழ்ப்பாண மன்னரின் பட்டப் பெயர்களும் பரராசசேகரன், செகராசசேகரன் என மாறி மாறி வந்தன.

***சின்னங்கள்***

ஒவ்வொரு அரசர் குலமும் தனக்கெனச் சிறப்பாக உள்ள சின்னங் களையும் முத்திரைகளையும் கொண்டிருந்தது. இராச முத்திரைகளைப் பெற்ற ஆவணங்கள், நாணயங்கள் போன்றனவே நிர்வாக அதிகாரி களினாலும் நாட்டு மக்களினாலும் ஆதாரபூர்வமானவையாகக் கொள்ளப்படும். சோழருக்குப் புலி போலவும் பாண்டியருக்கு இணைக் கயல்கள் போலவும் குப்தருக்குக் கழுகு போலவும் ஆரியச்சக்கர வர்த்திகளுக்கு நந்தி சின்னமாக அமைந்தது. ‘விடைக்கொடியும் சேதுவும் நீள் கண்டிகள் ஒன்பதும் பொறித்து மிகைத்த கோவும்’என வரோதய சிங்கையாரியனைக் குறித்துச் செகராசசேகரமாலை செப்பு கின்றது. தக்ஷிண கைலாச புராணத்துச் சிறப்புப் பாயிரமானது சிங்கை யாரியனொருவனைக் குறித்து ‘இடபவான் கொடி எழுதிய பெருமான்’ எனக் குறிப்பிடுகின்றது. எனவே விடையின் வடிவமுஞ் சேது என்ற மொழியும் ஆரியச்சக்கரவர்த்திகளின் இலச்சினைகளாகவும் முத்திரை களாகவும் அமைந்திருந்தன என்பது தெளிவாகின்றது.

விடையின் உருவமே யாழ்ப்பாண மன்னரின் கொடியிலே வரையப் பெற்றிருக்கும். அதன் வடிவமே முத்திரையாகவும் அடை யாளச் சின்னமாகவும் ஆட்சியாவணங்களிலே அழுத்தப் பெற்றது. அம்மன்னர் வழங்கிய காசுகளிலே நந்தியின் வடிவம் அழகுமிக்கதாக அமைக்கப்பட்டிருந்தது. அக்காசுகள் அனைத்திலும் சேது என்ற மொழி தமிழ் எழுத்துக்களிலே பொறிக்கப்பட்டிருக்கும். யாழ்ப்பாண மன்னர் சைவ சமயத்திலே பெரும் ஈடுபாடு கொண்டிருந்தமையினாற் போலும் நந்தியின் வடிவினைத் தமது இராச முத்திரையாகக் கொண்டிருந்தனர். ‘ஸ்வஸ்தி ஸ்ரீ’ என்ற மங்கள மொழிக்குப் பதிலாகச் சேது என்ற மொழியினையே தமது ஆவணங்களிலே ஆரியச்சக்கரவர்த்திகள் பயன்படுத்தினார்கள் என்பதற்குச் சிங்கையாரியனின் கோட்டகமைக் கல்வெட்டுச் சான்றளிக்கின்றது.

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட் டரசன் ஆரியர் கோமான்
இடப வான்கொடி யெழுதிய பெருமான்
சிங்கை யாதிபன் சேது காவலன்
கங்கை நாயகன் கருங்கடற் சேர்ப்பன்
பௌவ மேற்றுயில் பராபரன் சூட்டிய
தெய்வ மாமுடிச் செகராச சேகரன்

(தக்ஷிண கைலாசபுராணம்)

(நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவுமலர் - 1974)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை

## 1. மூல நூல்கள்

### அ. தமிழ் நூல்கள்

*கதிரமலைப்பள்ளு*, பதிப்பாசிரியர் ப.குமாரசுவாமி, சென்னை, 1935.

*கோணேசர் கல்வெட்டு*, (1) சண்முகரத்தின ஐயர், யாழ்ப்பாணம், 1909; (2) கோணேசர் கல்வெட்டு, கவிராசவரோதயன் இயற்றியது, பதிப்பாசிரியர்: பண்டிதர் இ.வடிவேல், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993.

*கைலாயமாலை*, C.V. ஜம்புலிங்கம்பிள்ளை (பதிப்பாசிரியர்), சென்னை, 1939.

*செகராசசேகரம்*, ஞானப்பிரகாச யந்திரசாலை, அச்சுவேலி, 1932.

*செகராசசேகரமாலை*, J.C. இரகுநாதையர் (பதிப்பாசிரியர்), கொக்குவில், 1942.

*தக்ஷணகைலாச புராணம்*, P.P. வைத்திலிங்கதேசிகர், பருத்தித்துறை, 1916.

*ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம்*, பகுதி I, ஆக்கியோன் யாழ்ப்பாணத்து நல்லூர் மகா வித்துவான் சிங்கைச் செகரராஜசேகரன், பண்டிதர் கா.செ.நடராஜர் எழுதிய உரையுடன், சி.பத்மநாதன், (பதிப்பாசிரியர்), இந்துசமய, கலாசர அலுவல்கள் திணைக்களம், கொழும்பு 04, 1994. பகுதி 2, பொருளாக்கம் பண்டிதர் கா.செ.நடராசா (பதிப்பாசிரியர்), சி.பத்மநாதன், வெளியீடு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995.

*திருக்கரசைப்புராணம்*, வ.ஈ. இராசரத்தினம் (பதிப்பாசிரியர்), வேலணை, யாழ்ப்பாணம், 1975.

*திருக்கோணாசல புராணம்*, ஆ.சண்முகரத்தினஐயர் (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணம், 1909.

*திருக்கோணாசல புராணம்*, பண்டிதர் கா.செ.நடராசர் (பதிப்பாசிரியர்), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1997.

*மட்டக்களப்பு மானியம்*, F.X.C. நடராசா (பதிப்பாசிரியர்), அரசு பதிப்பகம், கொழும்பு, 1964.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்*, வித்துவான் சா.இ.இ.கமலநாதன், கமலா கமலநாதன் (பதிப்பாசிரியர்கள்), குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2005.

*வையா*, சா.ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம், 1921.

*வையாபாடல்*, J.N. அருட்பிரகாசம், 1921, K.S. நடராஜா, கொழும்பு, 1974.

*யாழ்ப்பாண வைபவமாலை*, குல சபாநாதன் (பதிப்பாசிரியர்), கொழும்பு, 1953.

## 2. பாளி, சிங்கள நூல்கள்

*கிராசந்தேஸய*, T. சுகதபால (பதிப்பாசிரியர்), அலுத்கம, 1924.

*கோகில ஸந்தேஸய*, P.S. பெரேரா (பதிப்பாசிரியர்), கொழும்பு, 1906.

## நூல்களும் கட்டுரைகளும் *(தமிழ்)*

கா.இந்திரபாலா, 'ஈழநாட்டுத் தமிழ்ச்சாசனங்கள்', *சிந்தனை*, மலர்2 இதழ் 2, பேராதனை, 1968.

கா.இந்திரபாலா, 'யாழ்ப்பாணக் கல்வெட்டுகள்', *சிந்தனை*, மலர்2, இதழ் 4, பேராதனை, 1969.

கா.இந்திரபாலா, *யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்*, கண்டி, 1972.

கா.இந்திரபாலா, 'உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலிலுள்ள கல்வெட்டுகள்'. *உரும்பிராய்க் கருணாகரப்பிள்ளையார் கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேக விழா மலர்*, யாழ்ப்பாணம், 1973.

கா.இந்திரபாலா, 'கந்தளாயிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கல்வெட்டு', *பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர்*, நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, தெல்லிப்பழை, 1975, பகுதி 2, பக்.1-9.

கா.இந்திரபாலா, *இலங்கையில் தமிழர்: ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு (பொ.ஆ.மு 300 - பொ.ஆ.1200)*, குமரன் புத்தக இல்லம், 2006.

சே.இராசநாயகம், *யாழ்ப்பாணச் சரித்திரம்*, யாழ்ப்பாணம், 1933.

க.கணபதிப்பிள்ளை, *ஈழத்து வாழ்வும் வளமும்*, சென்னை, 1962.

செ.குணசிங்கம், *கோணேஸ்வரம்*, பேராதனை, 1973.

சி.கா.சிற்றம்பலம், *ஈழத்து இந்துசமய வரலாறு*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1996.

சி.கா.சிற்றம்பலம், *யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு*, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி.சிவசாமி, 'காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள்', *கலைக்கண்* (மறுபிரசுரம்), வட்டுக்கோட்டை, 1973.

சிவானந்தன், *யாழ்ப்பாணக் குடியேற்றம்*, பகுதி I, கோலாலம்பூர், 1932.

ம.பொ.செல்வரத்தினம், 'நாரந்தனையிற் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் கருவூம்', *பூர்வகலா*, 1973.

சி.பத்மநாதன், 'இரு தமிழ்ச் செப்பேடுகள்-பரராசசேகரனின் சிதம்பரம் மடதடும சாதனப் பட்டையம்', *சிந்தனை*, மலர்3, இதழ்1, பேராதனை, 1970, பக். 52 - 58.

சி.பத்மநாதன், 'இலங்கைத் தமிழ்ச் சாசனங்களும் வரலாற்று ஆராய்ச்சியும்', *இளந்தென்றல்*, தமிழ்ச் சங்கம், கொழும்புப் பல்கலைக்கழகம், 1971, பக். 13-36.

சி.பத்மநாதன், 'அடங்காப்பற்று வன்னிமைகள், 1658-1715'. *பண்டாரவன்னியன் விழா மலர்*, வவுனியா, 1982.

சி.பத்மநாதன், 'ஆரியச்சக்கரவர்த்திகள்: குலவிருதுகளும் சின்னங்களும்', *நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நினைவு மலர்*, யாழ்ப்பாணம், 1974, பக்.7-11.

சி.பத்மநாதன், 'மத்தியகால இலங்கையில் வணிக கணங்களும் வணிக நகரங்களும்' *சிந்தனை*, மலர் 2, இதழ் 2, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1984, பக்.45-78.

சி.பத்மநாதன்,'ஹம்பாந்தோட்டையிற் கண்டெடுக்கப்பெற்ற நானாதேசி வணிகரின் வெண்கல முத்திரை', *சாகித்திய விழா மலர்*, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 1992, பக்.35-39.

சி.பத்மநாதன்,'இலங்கையில் இந்துமதம்: ஆரியச்சக்கரவர்த்திகளின் காலம் 1250 - 1600', *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்*, தங்கம்மா அப்பாக்குட்டி வைரவிழாச் சபை, துர்க்காபுரம், தெல்லிப்பழை, 1988.

சி.பத்மநாதன், 'கோணேசர் கல்வெட்டு: சில ஆராய்ச்சிக் குறிப்புகள்', *கோணேசர் கல்வெட்டு*, பண்டிதர் இ.வடிவேல் (பதிப்பாசிரியர்), இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1993, பக்.1-35.

சி.பத்மநாதன், 'அடங்காப்பற்று வன்னிமைகள் 1658-1715, *சிந்தனை*, தொகுதி 5, இதழ்கள் 1, 2, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1993, பக்.1-12.

சி.பத்மநாதன், 'கைலாய வன்னியனார் மடதர்மசாதனைப் பட்டையம்: சில வரலாற்றுக்குறிப்புகள்', *சிந்தனை*, 5:3, 1993.

சி.பத்மநாதன், 'இலங்கையில் நானாதேசி வணிகரும் வணிக நகரங்களும், தன்மை சாகரப்பட்டினம்', *கைலாசநாதம்*, ப.கோலகிருஸ்ணஐயர் (பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணம், பக்.73-92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.பத்மநாதன், *இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூகவழமைகளும்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2002.

சி.பத்மநாதன், *இலங்கையில் வன்னியார்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2004.

சி.பத்மநாதன், *இலங்கையில் இந்துசமயம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை, 2005.

சி.பத்மநாதன், *இலங்கையில் தமிழ் சாசனங்கள்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006.

## ஆங்கில நூல்களும் கட்டுரைகளும் பிறமொழி நூல்களும்

S. Gunasingham, "Two Inscriptions of Cola Ilankesvaratevar", *Trincomalee Inscriptions Series,* No. I, Peradeniya, 1974.

S. Gunasingham, "A Tamil Inscription at Nilaveli", *The Sri Lanka Journal of the Humanities* Vol. I, No. 1, June 1975, pp. 61 – 71.

S. Gunasingham, "A Tamil Slab Inscription from Mayilawewa (Mayilankulam), Trincomalee District, Sri Lanka, *Trincomalee Inscriptions Series,* No. 3, Peradeniya, 1980.

K. Indrapala, "The Nainativu Inscription of Parakramabahu I", *University of Ceylon Review (UCR),* 21 (1) 1963, pp. 63 – 70.

K. Indrapala, "South Indian Mercantile Communities in Ceylon, Circa 950 – 1250", *The Ceylon Journal of Historical and Social Studies (CJHSS),* New Series (2) pp. 101 – 113.

K. Indrapala, *EpigraphiaTamilica,* Vol. I, Part 1, Jaffna Archaeological Society, 1971.

K. Indrapala, "An Inscription of the Tenth Year of Cola Lankesvara from Kantalay, Sri Lanka", *Senarat Paranavitana Commemoration Volume,* Leiden, E.J. Brill, 1975.

K. Indrapala, "A Tamil Inscription from Nilaveli, Trincomalee District", James *Thevathasan Rutnam Felicitation Volume,* Jaffna Archaeological Society, Jaffna, 1980, pp. 164 – 169.

K. Indrapala, *The Evolution of an Ethnic Identity The Tamils in Sri Lanka (C. 300 B.C.E to C. 1200 CE),* Sydney, 2005.

K. Kanapathypillai, "Mankanai Inscription of Gajabahu II," *UCR,* 20(1), 1962, p. 12– 14.

N. Karashima, "South Indian and Sri Lankan Inscriptions Relating to Merchant Guilds". *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic – Sherds,* Report of the Taisho University, Tokyo, 2002, pp. 11-18.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

N. Karashima (Editor), In Search of Chinese Ceramic-Sherds in India and Sri Lanka, Taisho University Press, Tokyo, 2004.

A. Liyanagamage, *The Decline of Polonnaruwa and The Rise of Dambadeniya*, Colombo, 1968.

Meera Abraham, *Two Medieval Merchant Guilds of South India*, Manohar Publications, New Delhi.

J.P. Lewis, *Manual of the Vanni Districts*, Colombo, 1895.

G.C. Mendis, *The Early History of Ceylon*, Second edition, Calcutta, 1935.

F. Modder, *Mannual of the Puttalam District*, Colombo, 1908.

S. Natesan, "The Northern Kingdom", *University of Ceylon History of Ceylon*, Vol I, Pt II, Colombo, 1960.

C.S. Navaratnam, *Tamils and Ceylon*, 1968.

C.S. Navaratnam, *Vanni and the Vanniyars*, Jaffna, 1960.

C.S. Navaratnam, *A Short History of Hinduism in Ceylon*, Jaffna, 1964.

K.A. Nilakanta Sastri, *The Colas*, 2nd revised edition, Madras, 1955.

K. A. Nilakanta Sastri, *The Pandyan Kingdom*, London, 1929.

K. A. Nilakanta Sastri, *A History of South India*, 2nd (revised) edition, London, 1958.

K. A. Nilakanta Sastri, "The Ceylon Expedition of JatavarmanVira Pandya" *Eighth All - India Oriental Conference Proceedings and Transactions*, 1937, pp. 506 - 526.

S. Paranavitana, "A Tamil Inscription from Palamottai", *EZ*, Vol IV, 1943, pp.191 - 196.

S. Paranavitana, "Two Tamil Pillar Inscriptions from Budumuttava, *EZ*, Vol.3, Humphrey Milford, London, 1943, pp. 302 - 312.

S. Paranavitana, "Polonnaruva Inscription of Vijayabahu I", *EpigraphiaIndica*, 18, pp. 330 - 338.

S. Paranavitana (Editor), *History of Ceylon*, Vol. 1, Pt. 2, University Press Board, University of Ceylon, 1960.

S. Paranavitana, "A Fragmentary Sanskrit Inscription from Trincomalee", *EZ* , Vol. V : 14, pp. 170 - 173.

S. Paranavitana, "Vallipuram Gold Plate Inscription of the Reign of Vasabha", *EZ*, Vol. IV: 29, pp. 229 - 237.

S. Paranavitana, "Ceylon and Malaysia in Medieval Times, *JRASCB (New Series)*, Vol. VII, Pt. 1, pp. 1 - 42.

S. Paranavitana, *Ceylon and Malaysia*, Colombo, 1966.

S. Paranavitana, "The Arya Kingdom in North Ceylon", *JRASCB* (New Series), Vol. VIII, Pt. II, pp. 174 - 224.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Paranavitana, *Inscriptions of Ceylon*, Vol, I Depart of Archaeology, Ceylon, Colombo, 1970.

S. Pathmanathan "Feudal Polity in Medieval Ceylon; An Examination of the Chieftaincies of the Vanni", *CJHSS* (New Series), Vol. II, No. 2, July - Dec. 1972, pp. 111 - 130.

S. Pathmanathan, "The Munnesvaram Tamil Inscription of Parakramabahu VI", *JRASCB* (New Series), Vol. XVIII 1974, pp. 54 - 69.

S. Pathmanathan, "The Velaikkarar in Medieval South India and Sri Lanka", *The Sri Lanka Journal of Humanities,* Vol. II, No. 2, December, 1976, pp. 120 - 137.

S. Pathmanathan, "A Note on the Sanskrit Inscription from Padaviya", *Gnanapragasar Centenary Volume*, 1975, pp. 25 - 31.

S. Pathmanathan, *The Kingdom of Jaffna*, Part 1 (Circa 1250 - 1450), Arul M. Rajendran, Colombo, 1978.

S. Pathmanathan, "Kingship Under the Cholas: Heroic Kingship and the Divine Monarch", *Proceedings 5th International Conference Seminar, IATR*, Madurai, 1982, Volume. 2, Section 6, pp. 93 - 112.

S. Pathmanathan, "The Kingdom of Jaffna: Kingship and Administration", *Proceedings, IATR - 4th Conference Seminar*, Volume 1, ed. S. Vithiananthan, 1974, pp. 37 - 57.

S. Pathmanathan, *The Kingdom of Jaffna,* Part 1 (Circa AD. 1250 - 1450), Arul M. Rajendram, Colombo, 1978.

S. Pathmanathan, "The Coins of Medieval Sri Lanka: The Coins of the Kings of Jaffna", *National Museums of Sri Lanka Research Bulletin - Spolia Zeylanica,* Volume 35, Pts. 142, 1982, pp. 409 - 417.

S. Pathmanathan, "Kingship and Tamil Court Poetry: Chola Inscriptional Preambles", *Professor K. Kailasapathy Commemoration Volume,* Jaffna, 1986.

S. Pathmanathan, "The Vanniyar in Medieval South India", *The Sri Lanka Journal of South Asian Studies* (New Series), No. 2, University of Jaffna, 1987/88 (Published in 1989), pp. 131 - 149.

S. Pathmanathan, "The Nagaram of the Nanadesis in Medieval Sri Lanka Circa A.D. 1000 - 1300", *The Sri Lanka Journal of the Humanities,* Nos. 1 & 2, 1984 (Published in 1987, pp. 121 - 163.

S. Pathmanathan, "The Cities of Medieval Sri Lanka: Centres of Dynastic Power, Religions Authority and Commercial Activity", *Seminar for Asian Studies,* University of Peradeniya, 1982, Discussion Paper No.1; *Sri Lanka Journal of the Social Sciences,*Volume 5, No. 1, June 1982, pp. 11 - 33.

S. Pathmanathan, "Kingship in Sri Lanka, A.D 1070 - 1270: The Dhammic Conception, Divinity of Kingship and the Heroic Ideal", *SLJH,*Volume VIII, Nos. 1 & 2, 1982 (published in 1985), pp. 120 - 145.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Pathmanathan, "The Bronze Seal of the Nanadesis from Hambantota", *Asian Panorama: Essays on Past and Present – A Selection of Papers Presented at the 11th Conference of the International Association of the Historians of Asia*, eds. K.M.de Silva, SirimaKiribamune, C.R.de Silva, 1990, New Delhi, Satguru Publications, pp. 139-153.

S. Pathmanathan, "Vikramabahu II and VikramaSalamevan", *SLJH*, Volume XIX, Nos. 1 & 2, 1990 (Published in 1993), pp. 93 – 101.

S. Pathmanathan, "The Religious Traditions of the Kingdom of Yalppanam: Hinduism", *Lanka*, December, 1990, Editor: Peter Schalk, pp. 43 – 79.

S. Pathmanathan, "Protestant Christianity in Yalppanam", *Lanka*, December, 1990, pp. 120 – 154.

S. Pathmanathan, "Murukan - The Divine Child: The Kantacuvami Temple at Nallur", *Lanka*, December, 1990, pp. 81 – 102.

S. Pathmanathan, "The Town of Vikkirama Calamekapuram in the Twelth Century A.D.", *Tamil Cakittiya Vila Cirappu Malar*, Department of Hindu Religious and Cultural Affairs, Colombo, 1993, pp. 120 – 131.

S. Pathmanathan, "The Tamil Slab Inscription of the Virakkoti at Budumuttava, Nikaweratiya: Urbanization at Magala", *The Sri Lanka Journal of The Humanities*, Vol. XX, Nos. 1 & 2 , 1994, University of Peradeniya, Peradeniya (Published in 1995), pp. 16 – 30.

S. Pathmanathan, *The Laws and Customs of the Tamils of Trincomalee*, New Century Book House, Ambattur, Madras, 1994.

S. Pathmanathan, "The Rajarajapperumpalli and its Endowments", *Prof. V. Sivasamy Felicitation Volume*, Jaffna, 1995.

S. Pathmanathan, "The Manimekalai in its Historical Setting: A Buddhist Woman's Path to Enlightenment", *Proceedings of a Workshop on the Tamil Narrative Manimekalai*, Uppsala University, May 25 – 29, Editor-in-Chief: Peter Schalt, Uppsala, 1997, pp. 35 – 52.

S. Pathmanathan, "The Bronzes in The Jetavanarama Museum of the Cultural Triangle, Anuratapuram: Being Religious and Living Through the Eyes", *Studies in Religious Iconography and Iconology, A Celebratory Publication in Honour of Professor Jan Bergman*, Faculty of Theology, Uppsala University, Published on the Occasion of his 65th Birthday, June 2, 1998, Editor-in-Chief: Peter Schalk,Co-Editor: Michael Stausberg, Uppsala, 1998.

S. Pathmanathan, "Multiple Centres of Authority in Medieval Sri Lanka", *Reflections on a Heritage Historical Scholarship on Pre-modern Sri Lanka*, eds. R.A.L.H. Gunawardana, S. Pathmanathan and M. Rohanadheera, Central Cultural Fund, Ministry of Cultural and Religious Affairs, 2000.

S. Pathmanathan, "Trade and Urbanization in Medieval Sri Lanka: The Nanadesis and the Development of Market Towns, *Reflections on a Heritage....*, pp. 489-514.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Pathmanathan, "The Nakaram of the Nanadesis in Sri Lanka: The Tanmacakara-ppattinam at Viharehinna", *SLJH*, Volumes XXIV and XXV, University of Peradeniya, 1998 – 1900 (Published in 2000), pp. 112 – 132.

S. Pathmanathan, "The Lankatilaka Temple Inscription of a Merchant Community", *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean: Testimony of Inscriptions and Ceramic sherds*, Report of the Taisho University Research Project 1997 – 2000, Edited by Noboru Karashima, Taisho University, 2002, pp. 36 – 47.

S. Pathmanathan, "The Nanadesis in Anuradhapura: A Unique Bronze Image of Virabhadra" *Ancient andMedieval Commercial Activities in the Indian Ocean....*, pp. 48 – 56.

S. Pathmanathan, "Trade and Urbanization in Medieval Sri Lanka: The Virakkoti at Budumuttava", *Ancient and Medieval Commercial Activities in the Indian Ocean*, pp. 62 – 71.

S. Pathmanathan, "The Kingdom of Jaffna before the Portuguese Conquest", *For Such A Time As This – Essays in Honour of Subramaniam Jebanesan*, Jaffna, 2005, pp. 148 – 161.

S. Pathmanathan, *Hindu Temples of Sri Lanka*, Kumaran Book House, Colombo – Chennai, 2006.

S. Pathmanathan, "The Portuguese in Northeast Sri Lanka (1543 – 1658): An Assessment of Impressions Recorded in Tamil Chronicles and Poems" *Maritime Asia 18: Re-exploring the Links, History and Constructed Histories between Portugual and Sri Lanka*, Edited by Jorge Flores, Calouste Gulbenkian Foundation Harrassowitz Verlag, Wiesbaden, 2007, pp. 29 – 48.

C. Rasanayakam, *Ancient Jaffna*, Madras, 1926.

R. Sewell, *A Forgotten Empire*, London, 1900.

G.P.V. Somaratna, *Political History of the Kingdom of Kotte*.

Taylor, William, *Examination and Analysis of the Mackenzie Manuscripts*, Madras, 1938.

Gueyroz, Fernao de, *The Temporal and Spiritual Conquest of Ceylon*, Translated by Fr. S.G. Perera, Colombo, 1930.

Van Goens, *Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylon* (1656 – 1665), Translated by Sophia Pieters, Colombo, 1908.

11767 S.C

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof. V. SIVASAMY
UNIVERSITY OF JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு

## சி. பத்மநாதன்

அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் உருவாக்கம் பற்றிய முன்னைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியோடு ஒரு மத்தியமயமான ஆட்சி முறையின் அழிவில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி இராச்சியங்களும் எழுச்சி பெற்றன என்ற கருத்தை இப்பொழுது முற்றாக நிராகரிக்கும் இந்நூலின் ஆசிரியர் பூர்வீக காலம் முதலாக ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்களும் அவை தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார முறைகளுமே அவற்றின் எழுச்சிக்கு அடிப்படையானவை என்ற சிந்தனைக்கு இந்நூலில் வலு சேர்க்கின்றார். கி.மு. ஐந்து நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண பிரதேசத்தில் பெருங்கற் பண்பாடு நிலவியமை, ஆதியான குடியிருப்புகள் தோன்றியமை, கந்தரோடையானது மத்திய வியாபார நிலையமாகி நகரமாக வளர்ச்சி பெற்றமை, நாக நாடு எனும் அரசு எழுச்சி பெற்றமை, அங்கு சைவம், பௌத்தம் ஆகியன பரவியமை, அவற்றால் ஏற்பட்ட பன்னாட்டு பண்பாட்டு தொடர்புகள் என்பவற்றை இந்நூலில் காணலாம்.

ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய சிந்தனை மரபில் ஒரு திருப்பமாக இந்நூல் அமைகின்றது.



சி. பத்மநாதன் (1940): இலங்கையின் தலைசிறந்த வரலாற்றறிஞர்களில் ஒருவரான இவர் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும் இலண்டன் பல்கலைக்கழகத்திற் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவராவார். நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பல ஆய்வு நூல்களையும் வெளியிட்டுள்ளதுடன் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகவும் விளங்கியவர். யாழ். பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு பல்கலைக்கழகங்களிலும் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக பணியாற்றிய இவர் தற்போது இந்து பண்பாட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் இந்து கலைக்களஞ்சியத்தின் பிரதம பதிப்பாசிரியராகவும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்.

ISBN 978-955-659-308-2

9 789556 593082

விலை ரூபா 490.00

மரன் புத்தக இல்லம்

டயம்: வரலாறு

# 495

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org